
# கிராமப்புறப் பாட்டாளிகளை நோக்கி...



அ. சீனிவாசன்



# கிராமப்புறப்
# பாட்டாளிகளை நோக்கி...

அ. சீனிவாசன்

அன்னம் (பி) லிட்
2, சிவன்கோயில் தெற்குத் தெரு,
சிவகங்கை—623560.

அன்னம்—172

# அன்னம் கிளைகள்

அன்னம் புத்தக மையம்
9, சௌராஷ்டிரா சந்து
மேலமாசி வீதி.
மதுரை—1.

அன்னம் புத்தக மையம்
51/1, தெற்கு உஸ்மான் சாலை,
(சரவணா பர்னிச்சர்ஸ் இரண்டாவது மாடி)
தி. நகர்— சென்னை—17

கிராமப்புறப் பாட்டாளிகளை நோக்கி / © அ. சீனிவாசன் / முதற் பதிப்பு அக்டோபர் 1992 / வெளியீடு அன்னம் (பி) லிட், சிவகங்கை / அட்டை ட்ராட்ஸ்கி மருது / அச்சாக்கம் அகரம் சிவகங்கை / விலை ரூ 40—00

# முன்னுரை

பேராசிரியர் நா. தர்மராஜன்

இந்த நூலைப் படிப்பவர்கள் இதை எழுதிய பேராசிரியர் யார், அவர் எந்தப் பல்கலைக் கழகத்தில் பணியாற்றுகிறார் என்று கேட்பார்கள். ஆகவே இப் புத்தகத்தின் ஆசிரியரான தோழர் அ. சீனிவாசனைப் பற்றிய சில தகவல்களை வாசகர்களுக்குத் தெரிவிக்க விரும்புகிறேன்.

தமிழ் நாட்டில் கம்யூனிஸ்ட் இயக்கத்தை நிறுவிய மாமேதைகளான பி. ராமமூர்த்தி ப. ஜீவானந்தம், பி. சீனிவாசராவ் ஆகியோரை எண்ணற்ற இளைஞர் கள் பின்பற்றினார்கள். அவர்கள் சுதந்திரப் போராட்டத்தில் ஈடுபட்டார்கள், தொழிற் சங்கங் களை அமைத்தார்கள், விவசாயிகளைத் திரட்டினார் கள். இந்த இரண்டாம் தலைமுறையைச் சேர்ந்தவர் களில் ஒருவர் தோழர் அ.சீனிவாசன்.

அவர் இளைஞராக இருந்த பொழுது இந்திய விமானப் படையில் சேர்ந்தார். விடுதலைப் போராட்டத்தை ஆதரித்து விமானப் படையில் வேலை நிறுத்தத்தைத் தூண்டியதாக அவர் மீது குற்றம் சாட்டப்பட்டது. அவர் வேலை நீக்கம் செய்யப்பட்டு தண்டிக்கப் பட்டார்.

பிறகு அவர் தமிழ்நாட்டுக்குத் திரும்பி வந்து சொந்த மாவட்டத்தில் கம்யூனிஸ்ட் இயக்கத்தைக் கட்டினார். அன்றைய இராமநாதபுரம் மாவட்டத்திலும் பிறகு சென்னையிலும், பல தொழிற் சங்கங்களுக்குத் தலைமை தாங்கினார். தீவிரமாகப் போராடுவது அவருடைய இயற்கை. ஆகவே 1950 க்கு முன்னரும், பின்னரும் பலமுறை சிறை சென்றதில் வியப்பில்லை.

அவர் தமிழில் ஆணித்தரமான பேச்சாளர். ஆங்கிலம், தெலுங்கு, மலையாளம் ஆகிய மொழிகளிலும் பேசக் கூடியவர். பொன்குன்றம் வர்க்கி என்னும் எழுத்தாளர் 1968ல் திருச்சியில் கலை இலக்கியப் பெருமன்ற மாநாட்டில் மலையாளத்தில் பேசினார். தோழர் அ.சீனிவாசன் அவருடைய சொற்பொழிவை இலக்கியச் சுவை சிறிதும் குறையாமல் மொழி பெயர்த்தது என் மனதில் பசுமையாக இருக்கிறது.

அவர் 'ஜனசக்தியின்' ஆசிரியராக இருந்த பொழுது பாரதி நூற்றாண்டு விழா மலரையும்(1982) மார்க்ஸ் மறைந்த நூற்றாண்டு அஞ்சலி மலரையும் (1983) சிறப்பாகத் தயாரித்தார். பிரபலமான பத்திரிகைகள் பல உதவி ஆசிரியர்களையும் ஓவியர்களையும் வைத்துக் கொண்டு சுலபமாக சிறப்பு மலர்களைத் தயாரித்து விடுவதுண்டு. ஆனால் கட்சிப் பத்திரிகைகள் பெரிய அளவில் மலர் வெளியிடுவது மிகவும் கடினம். மேற்கூறிய இரண்டு சிறப்பு மலர்களும் தமிழ் நாட்டில் நன்கு பாராட்டப் பட்டன.

1986 ம்ஆண்டில் சென்னைப் பல்கலைக் கழகத்தில் 'ஜீவாவின் இலக்கியப் பணி' என்னும் தலைப்பில் மூன்று சொற்பொழிவுகள் நிகழ்த்தினார்.

அவர் 'மார்க்சிய ஒளி' என்னும் தத்துவார்த்த மாத இதழின் ஆசிரியராக இருந்தார். மார்க்சிய தத்துவத்தை விளக்குகின்ற பல ஆங்கில நூல்களை மொழி பெயர்த்திருக்கிறார். அவருக்கு 1984 ம் ஆண்டில் சோவியத் நாடு நேரு பரிசு வழங்கப்பட்டது.

1984 மற்றும் 1991ம் ஆண்டில் அவர் நாடாளுமன்றத் தேர்தலில் சிவகாசி தொகுதியில் போட்டியிட்டார். இரண்டு சந்தர்ப்பங்களிலும் அனுதாப அலை அவருக்கு எதிராக இருந்தது. எனவே அவர் வெற்றி பெறவில்லை.

இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் தேசிய கவுன்சில் என்று சொல்லப்படுகின்ற உயர்ந்த அமைப்பில் அவர் பல்லாண்டுகளாக உறுப்பினராக இருக்கிறார். (அன்றைய) சோவியத் யூனியன், செக்கோஸ்லோவாக்யா ஆகிய நாடுகளில் அவர் விரிவாக சுற்றுப் பயணம் செய்திருக்கிறார். நான் 1981ல் மாஸ்கோவில் மொழிபெயர்ப்பாளராக இருந்த பொழுது அவரை வரவேற்று உபசரிக்கும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தது.

இந்தியாவிலும் தமிழ் நாட்டிலும் கம்யூனிஸ்ட் இயக்கத்தை நிறுவியவர்க்ள் ஓயாத கட்சிப்பணிகளுக்கு இடையில் புத்தகங்களும் பிரசுரங்களும் எழுதிக் குவித்தார்கள். அவர்களை அடுத்து வந்தவர்கள் கட்சிப் பணிகளிலும் அரங்கப் பணிகளிலும் அன்றாட அரசியல் வேலையிலும் மூழ்கி விட்டார்கள். பொது மக்களுக்குத் தெளிவு ஏற்படுத்துவதற்கு, கட்சியின் உறுப்பினர்களுக்கும் ஆதரவாளர்களுக்கும் வழி காட்டுகின்ற முறையில் எழுதுவதில்லை என்று சிலர் குறை சொல்வதுண்டு (இதற்கு விதிவிலக்காக எழுதுகின்ற கட்சித் தலைவர்கள் உண்டு).

கட்சியின் அரசியல் தீர்மானம் எல்லா பிரச்சினைகளையும் விளக்கி விடுமா? அதைப் படித்தால் முழுத் தெளிவு ஏற்பட்டு விடுமா? அத்தீர்மானத்தின் ஒளியில் நாட்டின் அரசியல், பொருளாதார, சமூகப் பிரச்சினைகளைப் பற்றி புத்தகங்கள், பிரசுரங்கள் எழுத வேண்டும். இது காலத்தின் கட்டாயம். தோழர் அ.சீனிவாசன் இப் புத்தகத்தை எழுதியதன் மூலம் மார்க்சியவாதிகளுக்கு வழிகாட்டியிருக்கிறார்.

''கிராமப்புறப் பாட்டாளிகளை நோக்கி'' என்னும் தலைப்பில் எழுதப்பட்டிருக்கும் இப் புத்தகம் தோழர் அ. சீனிவாசனின் மார்க்சிய சிந்தனையில் கனிந்த பழம். முடிவுரை நீங்கலாகப் பத்து அத்தியாயங்களில் இந்திய விவசாயத்தின் வளர்ச்சியையும் இன்றைய நெருக்கடியையும் விவசாயிகளின் அவல நிலையையும் அவர் விரிவாக ஆராய்ந்திருக்கிறார்.

பண்டைத் தமிழகத்தின் நிலவளம், ஆங்கிலேயர் ஆட்சியில் விவசாயத்தின் வீழ்ச்சி, விவசாயிகளின் உரிமைப் போராட்டங்கள், காங்கிரஸ் நிலச்சீர்திருத்தங்கள், பசுமைப் புரட்சியின் விளைவுகள், கிராமப்புறங்களில் வர்க்கக் கட்டமைப்பு மாற்றங்கள் ஆகிய அத்தியாயங்கள் சிந்தனையைத் தூண்டுகின்றன.

விவசாயிகள் இயக்கமும் புதிய கடமைகளும் என்னும் கடைசி அத்தியாயம் விவசாய இயக்கத்தின் ஊழியர்களுக்கு வழி காட்டுகிறது.

இந்த நூல் கல்லூரி மாணவர்களுக்கு கருத்துச் சுரங்கம்; விவசாய இயக்க ஊழியர்களுக்கு இன்றியமையாத கையேடு.

தோழர் அ. சீனிவாசனுடைய நீண்ட அரசியல் அனுபவமும் மார்க்சீய ஆய்வு முறையும் புத்தகத்தை சிறப்பாக எழுதுவதற்கு உதவியிருக்கின்றன.

அவர் தமிழ் இலக்கியங்களை, குறிப்பாக வைணவ சமய நூல்களைப் படித்தவர். எனவே புத்தக முழுவதிலும் இலக்கிய நூல்களிலிருந்து பல மேற்கோள்களைத் தந்திருக்கிறார்.

இந்த நூலில் குறைகள் இருக்கலாம். சுதந்திரத்துக்குப் பிறகு இந்திய விவசாயிகள் நடத்திய வீரப் போராட்டங்களைப் பற்றி அவர் விரிவாக எழுதியிருக்க வேண்டும். மாபெரும் தெலிங்கானா போராட்டத்தைப் பற்றி அவர் சுருக்கமாக எழுதியிருக்கலாம்.

இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மூத்த தலைவர்களில் ஒருவரான தோழர் என். கே. கிருஷ்ணன் 'தெலிங்கானா போராட்டம் ஒரே சமயத்தில் வரலாறாகவும் வீரக்கதையாகவும் இருக்கிறது' (''Telengana armed Struggle is Both History and Legend'') என்று ஒரு சொற்பொழிவில் குறிப்பிட்டார். நாலாயிரத்துக்கும் அதிகமானவர்கள் உயிரை அர்ப்பணித்த அந்தப் போராட்டம் இந்தியாவின் விடுதலைப் போராட்டத்திலும் விவசாயப் பாட்டாளிகளின் இயக்கத்திலும் வரலாற்றுப் பாத்திரத்தைக் கொண்டிருக்கிறது. நிஜாம் ரஜாக்கர்கள் மற்றும் நிலப்பிரபுக்களின் படைகளையும் ஆயுதபலத்தையும் எதிர்த்து சாதாரண விவசாயிகள் நடத்திய போராட்டம் வீரக் கதையாகவும் இருக்கிறது.

தெலிங்கானா. போராட்ட வரலாற்றை இந்திய விவசாயிகளும் மற்றவர்களும் மறக்கக் கூடாது.

பல்கலைக் கழகங்களில் அரசியல் விவசாயப் பொருளாதாரம், சமூகவியல் ஆகிய துறைகளைச் சேர்ந்தவர்கள் இந்த நூலை அவசியம் படிக்க வேண்டும்.

இந்தியாவின் கிராமப்புறங்களில் வர்க்கக் கட்டமைப்பு மாறுபாடுகளைப் பற்றி உள்நாட்டு—வெளிநாட்டு நிதியுதவியுடன் அவர்கள் ஆராய்ச்சிகளைச் செய்கிறார்கள்... செய்து கொண்டே இருக்கிறார்கள். எந்த நிதியுதவியும் இல்லாமல் ஆசிரியர் இந்த நூலை எழுதியிருக்கிறார். இது உண்மையான ஆராய்ச்சி. இனிமேல் அவர்கள் இந்த நூலை மேற்கோள் காட்டி ஆராய்ச்சிகளைத் தொடர்வார்கள்.

தமிழ் நாட்டில் முற்போக்கு இலக்கியங்களையும் புதுக்கவிதை நூல்களையும் வெளியிட்டுப் பிரபலமடைந்திருக்கும் 'அன்னம்' பதிப்பகம் இந்த நூலை வெளியிட்டிருப்பதைப் பாராட்டுகிறேன்.

தோழர் அ.சீனிவாசன் இதைப் போன்ற நூல்களைத் தொடர்ந்து எழுதி தமிழ்நாட்டில் இடதுசாரிக் கருத்துக்களை வளர்க்க வேண்டும். இடதுசாரிச் சிந்தனை உள்ளவர்கள் இப்புத்தகத்திலுள்ள கருத்துக்களை விவாதிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

சிவகங்கை<br>
15.10.92

நா. தர்மராஜன்

# 1

# இந்திய நாட்டின் நிலவளமும் விவசாய வளர்ச்சியும்

உலகிலேயே மிகவும் செழிப்பு மிக்க நில வளத்தைக் கொண்ட நாடுகளில் ஒன்று பாரத தேசம் ''என்ன வளம் இல்லை இந்தத்திரு நாட்டில்'' என்று புகழ்பாடும் திரைப் பாடலை கேட்டுக்கேட்டுப் பரவசமடைகிறோம். நாட்டு வளத்தைப் பற்றி நமது பெரும் புலவர்கள் கம்பன் முதல் பாரதி வரை மிகவும் சிறப்பித்துப் பாடியுள்ளதைப் படித்து மகிழ்கிறோம்.

நிலவளத்திற்குக் காரணமாக உள்ளது நீர் வளமும் மலை வளமும் காடுகளும் கடல் வளமுமாகும். நமது நாட்டின் நீர் வளம்போல் வேறு எந்த நாட்டிலும் இந்த அளவில் இல்லை. கங்கையும் பிரம்மபுத்திராவும் ரவியும் பியாஸும் நர்மதா வும் தபதியும் மகாநதியும் கோதாவரியும், கிருஷ்ணாவும் வடபெண்ணையும் தென்பெண்ணையும் பாலாறும் காவிரி யும் வைகையும். பொருனையும், ஆகிய நதிகள் நமது வற்றாத நீர்ச்செல்வங்களாகும்.

நமது நதிகளை இணைத்து, நமது விளை நிலத்தில் சாகு படிக்கு உத்தரவாதம், செய்தால், நாம், இந்திய நாட்டிற்கு மட்டுமின்றி வேறு பல நாடுகளுக்கும் சோறு போடலாம், உலகின் உணவுப் பிரச்னையில் பெரும் பகுதிக்குத் தீர்வு காணலாம் என்று நமது பொறியியல் வல்லுநர்களும் நிபுணர்களும் கூறுகிறார்கள்.

நமது நதிகளை இணைப்பதன் மூலம் பாசன வசதி மட்டு மல்ல, நீர் மின் நிலையங்கள் மூலம் ஏராளமான மின்சக்தி யை உற்பத்தி செய்யவும் அதன் மூலம் இந்தியாவைப்போல் பத்து இந்தியாக்களுக்கு ஒளிகொடுக்கவும்முடியும் என நமது நிபுணர்கள் கருதுகிறார்கள். இத்தகைய விரிவான நீர் மின் நிலையங்கள் மூலம் ஏராளமான எரிபொருளை மிச்சப் படுத்த முடியும். நமது நாட்டின் ரயில் போக்கு வரத்து முழுவதையும், கூட மின்மயமாக்கி விடலாம். நமது தொழிற் சாலை இயந்திரங்களையும் தட்டின்றி இயக்க முடியும்.

நமது நீர் வளத்திற்கும் நிலவளத்திற்கும் ஆதாரமாக நிற்பது நமது மலைகளும் காடுகளும் கடலுமாகும். இமயமும் விந்திய சாத்பூரா மலைகளும் மேற்குத் தொடர்ச்சி, கிழக்குத் தொடர்ச்சி மலைகளும் அவைகளை ஒட்டியுள்ள அடர்ந்த காடுகளும் நமது வளமான வனச் செல்வங்களாகும். ஆண்டு முழுவதிலும் தாராளமாக கப்பல்கள் உலவிவர வசதியான கடல்கள் நாட்டின் மூன்று புறங்களிலும் இருக்கின்றன. இருபருவங்களிலும் இந்தக் கடல்கள் நமக்கு மழை மேகங்களை அனுப்பிக் கொண்டிருக்கின்றன. பனிமலை இமயம் ஆண்டு முழுவதிலும் மழையாலும் பனியாலும் நமக்கு ஏராளமான தண்ணீரை அள்ளிக்கொடுத்துக் கொண்டிருக்கிறது. நமது நாட்டின் நீர்வளம், அராபிய நாடுகளின் எண்ணெய் வளத்தைக் காட்டிலும் உயர்ந்த மதிப்பு உள்ளதாகும் என்று நமது நிபுணர்கள் கூறுகிறார்கள்.

நமது சிந்து கங்கை சமவெளியும் கிழக்குக்கரை சமவெளிப் பகுதிகளும் நமது ஆறுகள் அள்ளிக் கொடுக்கும் வளத்துடன் இணைந்து நமக்கு எண்ணற்ற செல்வத்தை வாரி வழங்கிக் கொண்டிருக்கிறது. இந்த சமவெளிகளிலும் அதன் ஓரப்பகுதிகளிலும் விளையும் தானியங்களும், காய் கனி கிழங்குகளும் கணக்கில் அடங்காதவை. எத்தனை வறட்சி ஏற்பட்டாலும் ஒரு மழை பெய்து விட்டால் நமது பூமி பசுமையை வெளிப்படுத்தி அழகு சொட்டும்.

பாரதத்தின் தென்கோடியான தமிழகத்தில் குறிஞ்சி, முல்லை மருதம் நெய்தல் என்று நிலத்தை நால்வகையாகப் பிரித்து நிலவளத்திற்கு இலக்கணத்தையும் பண்பாட்டையும் வளர்த்தார்கள் நமது முன்னோர்கள்.

> மானம் நேர்ந்(து)அற மனுநெறி நோக்கி
> போன தண் குடை வேந்தர் புகழ் என
> ஞானம் முந்திய நான்மறை யாளர்கைத்
> தாணம் என்னத் தழைத்தது நீத்தமே

என்றும்

> மணியும் பொன்னும் மயில்தழைப் பீலியும்
> அணியும் ஆனை வெண்கோடும் அகிலும் தன்
> இணையில் ஆரமும் இன்ன கொண்டு ஏகலால்
> வணிக மாக்களை, ஒத்தது அவ்வாரியே

என்றும்

> முல்லையைக் குறிஞ்சியாக்கி
> மருதத்தை முல்லையாக்கிப்
> புல்லிய நெய்தல் தன்னைப்
> பொரு வறு மருதம் ஆக்கி

எல்லையில் பொருள்கள் எல்லாம்
இடை தடுமாறும் நீரால்
செல் உறு கதியில் செல்லும்
வினை எனச் சென்றது அன்றே

என்றும் கம்பன் நமது ஆற்றுவளத்தைப் பாடுவதைக் காணலாம்.

குறிஞ்சி என்றால் மலையும் மலையைச் சார்ந்த இடங்களும், முல்லை என்றால் காடுகளும் காடுகளைச் சார்ந்த இடங்களும், மருதம் என்றால் நதி ஓடும் சமவெளிகளைச் சார்ந்த நிலங்களும் என்றும் நெய்தல் என்றால் கடலும் கடலைச் சார்ந்த இடங்களும் என்று தமிழ் இலக்கியங்கள் நமது மண்ணின் பண்பு கூறுகின்றன.

மலை, காடு, நதி, கடல் நமது வளங்கள். இந்த வளங்கள் நமது மண்ணைப் பொன்னாக்கி வருகின்றன.

நமது மலைகள், காடுகள், ஆறுகள், கடல் வளம் ஆகியவைகளை ஆதாரமாகக்கொண்டு நமது நாட்டின் கால் நடை வளர்த்தலும் விவசாயமும் வளர்ச்சி பெற்றிருக்கின்றன.

குடகு மலையிலிருந்து குமரிமுனை மலை வரையிலும் உள்ள மலைத் தொடர்கள் நமது தமிழகத்தின் மேற்கெல்லையின் அரண்களாக அமைந்துள்ளன. இவைகளிலிருந்து வரும் காவிரி, தென்பெண்ணை, பாலாறு, வைகை பொருனை நதிகள் பெரியவை. இவை தவிர வேறு பல சிறிய ஆறுகளும் துணை ஆறுகளும் நமது சிறிய பல மலைப்பகுதிகளிலிருந்தும் தோன்றி நமக்கு வளமும் வனப்பும் ஊட்டி வருகின்றன. ஏலகிரி, ஏற்காடு, கொல்லி மலை, சிறு மலை முதலிய நமது சிறந்த சிறிய மலைகளும், காடுகளும், அடங்கிய பகுதிகளாகும். இவைகளிலிருந்து வரும் சிற்றாறுகளும் நமக்கு வற்றாத வளத்தைக் கொடுத்துக் கொண்டிருக்கின்றன.

இந்திய நாட்டின் வளம் உலகப் பிரசித்தி பெற்றது. இதனைக் கேள்விப்பட்டு எத்தனையோ படையெடுப்புகளும், குடியேற்றங்களும் இங்கு நடந்துள்ளன என்பதை வரலாற்றின் மூலம் அறிகிறோம்.

புல்வெளிகளையும் மேய்ச்சல் தரைகளையும், காடுகளையும் பயன்படுத்தி கால் நடைச் செல்வங்கள் இங்கு வளர்ந்திருக்கின்றன. மாடுகள் ஆடுகள் எருமைகள் பன்றிகள் முதலியன பெரும் பண்ணைகளாகவும் குடும்பப் பராமரிப்பாகவும் வளர்க்கப்பட்டிருக்கின்றன. ஒவ்வொரு கிராமக் குடும்பத்திலும் ஆடு, மாடு, கோழி, பன்றிகள் வைத்திருப்பது—அவற்றைப் பராமரிப்பது நமது கிராமப் பொருளாதாரத்தின், சுயதேவைப் பொருளாதாரத்தின் ஒரு பகுதியாகவே வளர்ச்சி யடைந்து வந்திருக்கிறது.

**விவசாய வளர்ச்சி:**

ஆடு மாடு மேய்த்தலைத் தொடர்ந்தே அதன் சகோதரத் தொழிலாக சாகுபடித் தொழிலும் வளர்ந்தது. ஆனிரைகள் மேய்க்கும் கண்ணனும் கலப்பையைக் கருவியாகக் கொண்ட பலராமனும் சகோதரர்களாக நமது கதைகளில் வருவதைக் காணலாம்.

ஆனிரை கவர்தலும் காடுகளை மாற்றி விளை நிலமாக்குவதும் நமது நாட்டின் சமுதாயப் போராட்டத்தின் பகுதியாக நமது கதைகளில் கூறப்பட்டிருப்பதைக் காணலாம்.

படிப்படியாக ஆற்றோரங்களில் சாகுபடி தொடங்கி வளர்ந்து பரவியது. பருவ மழையை வைத்து சாகுபடி செய்யப் பட்டிருக்கிறது. பருவ மழை அதிகரித்து வெள்ளங்கள் ஏற்படுவதும், பருவ மழை தவறி வறட்சியும் பஞ்சங்களும் ஏற்படுவதும் கால நிலையின் பகுதியாக நமது மக்கள் அனுபவத்தில் கண்டார்கள்.

இத்தகைய இயற்கைச் சோதனைகள் காரணமாக மக்களின் குடிப் பெயர்ச்சிகளும் ஏற்பட்டிருக்கின்றன.

**நீர்ப்பாசன ஏற்பாடுகள்:**

இந்தியாவின் பழம் பெரும் நாகரிகத்தின் பகுதியாக நமது நாட்டின் நீர்ப்பாசன முறைகள் அபிவிருத்தி செய்யப் பட்டிருக்கின்றன. கால் வாய்களை வெட்டுவதும் நீர் நிலைகளை அமைப்பதும் அரசின் கடமையாக ராஜ நீதிமுறையில் வலியுறுத்தப்பட்டிருக்கிறது.

சிந்து கங்கை சமவெளிப்பகுதிகளிலும் கலிங்கத்தில் மகாநதி தீரத்திலும் குஜராத்தில் நர்மதா நதிதீரத்திலும், ஆந்திராவில் கோதாவரி-கிருஷ்ணா நதிதீரங்களிலும் தமிழகத்தில் காவிரி தென்பெண்ணை,பாலாறு வைகை தாமிரபரணி ஆற்றுப் பகுதிகளிலும் ஆற்றின், இருபுறங்களிலும் கால்வாய்கள் வெட்டப்பட்டு அவை மூலம் நீர்ப்பாசனத்திற்குத் தண்ணீர் கொண்டு செல்லப்பட்டன. காவிரியில் கட்டப்பட்டுள்ள கல்லணை கரிகாலன் காலத்தியது. கால்வாய்கள் மட்டுமின்றி, தமிழகத்திலும் ஆந்திராவின் சில பகுதிகளிலும் ஏராளமான பாசன ஏரிகள், குளங்கள், கண்மாய்கள் வெட்டப்பட்டு, ஆறுகளில் நீர் தேக்கி வைக்கப்பட்டுப் பாசனத்திற்குப் பன்படுத்தப் பட்டிருக்கின்றன.

தமிழகத்தின் விவசாய வளர்ச்சியில் பாசன ஏரிகள், குளங்கள் கண்மாய்கள் மிக முக்கிய இடம்பெற்றிருக் கின்றன. பல்லவர்களும் பாண்டிய மன்னர்களும், விஜய நகர

மன்னர்களும் ஏரிகள், குளங்கள், கண்மாய்கள் வெட்டு வதில் அதிக கவனம் செலுத்தியுள்ளனர். சோழ மன்னர்களும் கால்வாய்கள் கண்மாய்கள் வெட்டுவதில் அதிக கவனம் செலுத்தியுள்ளனர்.

அடுத்த நாட்டு மண்ணின் மீது படையெடுத்து, தன் படை பலத்தின்மூலம் அந்த மண்ணைக் கைப்பற்றித் தங்கள் ஆட்சி எல்லையை விரிவு படுத்திக் கொள்வதில் தங்கள் பேரும் புகழும் பரவும் என்று சிறுநில மன்னர்களும் குறு நில மன்னர்களும் கருதிய காலம் இருந்தது. ஒவ்வொரு சிறு நில மன்னனும் தான் பெரு நில மன்னனாக ஆவதற்கு ஆசைப் பட்டுத் தனது படை பலத்தைப் பெருக்கினான். அவ்வாறு தமிழ் மன்னர்கள் தங்கள் படைபலத்தையும் போர்க்கருவி களையும் பெருக்கி,அடுத்த நாடுகளின் மீது படையெடுத்துப் போர் நடத்திய காட்சிகளை வீரமென சித்திரிக்கிறது, சிறந்த தமிழ் இலக்கியமான புறநானூறு.

உதாரணமாக ஒரு காட்சி. ஒரு புகழ் மிக்க, வீரம் நிறைந்த மன்னன், அடுத்த நாட்டின் மீது படையெடுக்கிறான். அந்த மன்னன் படை பலம் மிக்கவன். அவனுடைய படைகள் எதிரி நாட்டிற்குள் புகுந்து ஏராளமான நாசங்களை விளை விக்கின்றன. அவனுடைய யானைப் படைகள் எதிரி நாட்டு வயல் வெளிகளில் மிதித்துப் பயிரை அழித்து அவற்றைச் சேறாக்குகின்றன. மாலைக் கதிரவனின் ஒளிவீசி, அந்தச் சேறு செக்கச் செவேலென்று ரத்தம் சிந்திக்கிடக்கும் போர்க்களக்காட்சி போல் தென்படுகிறது. அது அந்த மன்னனின் வீரத்தை எடுத்துக் காட்டுவதைப் போல் இருக் கிறது என்று. ஒரு புலவன் சிறப்பித்துப் பாடுகிறான். இந்தக் காட்சியில் வீரத்தின் பின்னே அழிவும் நாசமும் ரத்தச் சேறும் மண்டிக்கிடக்கின்றன.

அதே புறநானூற்றுக் காவியத்தில் மற்றொரு புலவன், ''மன்னா, அடுத்த நாட்டு மண்ணின் மீது படை யெடுத்து அதை அபகரிப்பதில் உனக்குப் பேரும் புகழும் இல்லை மக்களை வாழ்விக்க உணவு வேண்டும். 'உண்டி கொடுத்தோர் உயிர்கொடுத்தோர். உண்டி பெருக்க நீர் நிலைகள் வேண்டும். அந்த நீர் நிலைகளை உண்டாக்குவாயாக, அது தான் உனக்குப் பேரும் புகழும் கொடுக்கும்'' என்று போர்புரியத் துடித்த மன்னனைப் பார்த்து இடித்துக் கூறுகிறான்.

இவ்வாறான சீரிய மனிதாபிமானம் நிறைந்த சமுதாய சிந்தனை தமிழகத்திலும் இந்திய நாட்டின் இதரபகுதி களிலும் வளர்ந்துதான் எண்ணற்ற நீர் நிலைகள், பாசன முறைகள் நமது நாட்டில் உண்டாக்கப்பட்டுள்ளன. தமிழ கத்தில் மட்டும் ஐம்பதாயிரத்திற்கும் மேற்பட்ட நீர்ப் பாசன நீர் நிலைகள் நிலை பெற்றிருக்கின்றன.

செம்பரம்பாக்கம் ஏரி, தென்னேரி, மதுராந்தகம் ஏரி, வீராணம் ஏரி, வெலிங்டன் ஏரி, ராஜசிங்கமங்கலம் ஏரி, இராமநாதபுரம் பெரிய கண்மாய், மாடக்குளம் கண்மாய், மானூர்ஏரி முதலிய பெரிய பலஏரிகளும் ஏராளமான சிறிய நடுத்தர ஏரிகளும் குளங்களும் கண்மாய்களும் தமிழ் நாட்டின் எல்லா மாவட்டங்களிலும் அமைந்துள்ளன.

இத்தகைய பாசன வசதிகள் மூலம் நெல், கரும்பு, வாழை வெற்றிலை, மஞ்சள், முதலிய பொருள்கள் சாகுபடி செய்யப் பட்டு வருகின்றன. இத்தகைய நஞ்சைப் பயிர்கள் தவிர, கேழ்வரகு, சோளம் கரும்பு, வரகு, பயறு வகைகள், வேர்க் கடலை, குச்சிக் கிழங்கு முதலிய புஞ்சை மற்றும் தோட்டப் பயிர்களும் சாகுபடிக்குக் கொண்டு வரப்பட்டிருக்கின்றன.

காய்கறிகள், கனிவகைகள், கிழங்கு வகைகளும் தோட்டப் பயிர்களாகச் சாகுபடி செய்யப்பட்டு வந்துள்ளன.

பருத்தியும் பட்டும் உற்பத்தி செய்யப்பட்டு நேர்த்தியான ஆடைகள் நெய்யப்பட்டு வருகின்றன.

நீர்ப்பாசன முறைகளில் கால்வாய், கண்மாய், கிணறு ஆகியவைகள் இந்திய விவசாயத்தில் வளர்ச்சி பெற்றுள்ளன.

இன்றைய வளர்ச்சியில் பெரிய அணைக்கட்டுகள் வந்துள் ளன. கிணற்றுப்பாசனத்தில் மின்சார பம்பு செட்டுகள் வளர்ச்சி பெற்றுள்ளன.

இந்திய நாட்டின் விவசாய வளர்ச்சியில் நிலவளமும் நீர்வள மும் முக்கிய பங்கு வகிக்கின்றன. ஆண்டுமுழுவதும் போது மான வெப்பம், இருபருவங்களிலும் மழை, வற்றாத ஆறுகள், ஆறுகளின் தண்ணீரைப் பாசனத்திற்குப் பயன் படுத்த கால்வாய். கண்மாய்களின் அமைப்பு முறை, நிலத்தடி நீரையும் பாசனத்திற்குப் பயன்படுத்தும் பழக்கம் ஆகியவை விவசாயத் துறையின் வளர்ச்சிக்கு உதவி யுள்ளன.

நிலவளம், நீர்வளம், தட்பவெப்ப நிலை ஆகியவைகளின் வசதிகளைக் கொண்டு இந்திய நாட்டின் விவசாயத் துறை மத்திய காலத்தில் மிகப் பெரிய அளவில் வளர்ச்சி பெற்றுள்ளது.

இயற்கை பாதிப்புகளான பெருவெள்ளம், பேய்க் காற்று, பருவ மழை தவறுதல் முதலியன ஏற்பட்ட ஆண்டு கள் தவிர பாக்கி ஆண்டுகளில் பெரும்பாலும் விவசாய உற்பத்தியில் இந்திய நாடு உபரியாகவே இருந்திருக்கிறது.

## உரமிடுதல்

இயற்கையான நிலவளம் நிரம்ப இருந்த போதிலும், தொடர்ச்சியான சாகுபடி காரணமாக, நிலத்தின் சாரம் குறைகிறது. எனவே நிலத்தின் சாரத்தைப் பாதுகாக்க உரமிடுதலின் அவசியம் உணரப்பட்டு, இந்திய விவசாயத்தில் திட்டமிட்ட முறையில் இயற்கை உரங்கள் இடப்பட்டு வந்திருக்கின்றன. வண்டல் மண் அடித்தல், தழை உரம், தொழு உரம் ஆகிய உரங்கள் முழுமையாகப் பயன்படுத்தப்படுகின்றன.

இந்திய நாட்டின் தட்ப வெப்ப சாதக நிலை காரணமாகத் தாவரத்தின் தழைகளும் மிருகங்களின் (ஆடு, மாடு, பன்றி. கோழி) சாணங்களும் கழிவுகளும் மண்ணில் மக்கி, அவை விளை நிலத்திற்கு மிகவும் சிறந்த உரமாகிறது. இந்த உரங்களை இந்திய விவசாயிகள் சிறந்த முறையில் பயன்படுத்தி வந்துள்ளனர். அதே போல சாகுபடிப் பொருள்களில் கிடைக்கும் கழிவுப் பொருள்களும், மாடுகளுக்குத் தீவனமாகவும் மற்றவை நிலத்திற்கு உரமாகவும் பயன்படுத்தப்பட்டிருக்கின்றன. தழைஉரத்திற்காக சில வகைத் தாவரங்கள் பயிரிடப்பட்டும் பயன்படுத்தப் பட்டுள்ளன.

## கால்நடைகள்

இந்திய விவசாயத்துடன் இணைந்ததாக ஆடு மாடு வளர்த்தல், கோழி பன்றி வளர்த்தல் ஆகியவை அபிவிருத்தி செய்யப்பட்டிருக்கின்றன. இவை பெரும்பாலும் கிராமப்புற ஏழைகளின் துணைத் தொழில்களாகவும் வளர்ச்சி பெற்றுள்ளன. ஆடு, மாடு, கோழி, பன்றி, ஆகியவை கிராமப்புற ஏழைகளின் குடும்பப் பொருளாதாரத்தில் முக்கிய அங்கம் பெற்றுள்ளன.

ஆடு, கோழி, பன்றி ஆகியவை, மாமிசத்திற்காக மட்டுமின்றி அவைகளின் கழிவுப் பொருள்கள், சாணம் ஆகியவை நிலத்திற்கு மிகவும் அவசியத் தேவையான இயற்கை உயிரணு உரமாகவும் அமைகிறது.

மாடுகள், இந்திய விவசாயத்தின் முக்கிய உற்பத்தி சக்தியாக அமைந்துள்ளன. மாடுகள், உழவுக்கும் இதர விவசாய வேலைகளுக்கும் கிராமப் புறப் போக்குவரத்து சாதனமான வண்டி இழுத்தல் முதலிய வேலைகளுக்கும் பயன்படுகின்றன. பசுக்கள் எருமைகள் பால், தயிர், நெய், மோர் ஆகியவற்றின் உற்பத்திக்கும் அவசியமாய் உள்ளன. மாடுகளின் சாணம் மிக முக்கியமான தொழு உரமாக அமைந்துள்ளது.

இதன் காரணமாக இந்திய நாட்டின் கிராமப்புறங்களில்

விவசாயத் தொழிலுடன் இணைத்து கால் நடை பராமரித்தல், ஆடு மாடு மேய்த்தல் நடை பெற்று வந்துள்ளன. ஆடு மாடு கோழி பன்றி முதலியவைகள் தனியான பண்ணைகளாகவும் மந்தைகளாகவும், அத்துடன் ஒவ்வொரு குடும்பத்தின் துணைத் தொழிலாகவும் வளர்க்கப்பட்டு வந்துள்ளன.

மத்திய காலத்தில் விவசாயத்துறையுடன் சேர்ந்து இதர கிராமப் புறத்தொழில்கள் வளர்க்கப்பட்டுள்ளன.

உணவுப் பொருள் உற்பத்தி விவசாயத்தின் முக்கிய தொழிலாக இருந்த போதிலும், பருத்தி சாகுபடியும், மற்றும் சணல், அவுரி சாகுபடி, பட்டுப் பூச்சி வளர்த்தல் ஆகிய தொழில்கள் மூலம், நூலாடை, பட்டாடை, சணல் மூலம் கோணிகள், நார்கள் மூலம் கயிறுகள் அவுரி மூலம் சாயம் முதலிய முக்கிய தொழில்களும், இவைகளுடன் இணைந்த தச்சு வேலை, கொல்லு வேலை, கல் தச்சு முதலிய தொழில்களும் வளர்ச்சி பெற்றுள்ளன.

கால்நடை வளர்ச்சியை ஒட்டி சில பகுதிகளில் குறிப்பாக கம்பளி நெய்தலும் தோல் தொழில்களும் பெரிய அளவில் வளர்ச்சி பெற்று இருந்தன.

இவ்வாறு மத்திய காலத்தில் இந்திய நாட்டின் விவசாயத் துறையின் வளர்ச்சி மக்களுக்குத் தேவையான உணவுப் பொருள் வழங்குவதாகவும், கிராமப்புறத் தொழில்களுக்குத் தேவையான மூலப் பொருள்களை வழங்குவதாகவும் மேம்பாடு அடைந்து வந்திருக்கிறது.

இந்திய நாட்டின் இத்தகைய விவசாய வளர்ச்சியின் மரபுகளை நாம் நன்கு கற்றறிந்து அவைகளின் பயன் பாட்டின் தொடர்ச்சியைப் பாதுகாக்க வேண்டும்.

நமது நீர் வளங்களை, நீர்நிலைகளை ஆறுகளை, குளங்களை, ஏரிகளை, கண்மாய்களை, நிலத்தடி நீரைப் பாதுகாப்பதும் வளர்ப்பதும், அபிவிருத்தி செய்வதும் அவைகளைப் பராமரிப்பதும் மிகவும் அவசியமான பணிகளாகும்.

அத்துடன், நமது கால்வாய்கள், கண்மாய்கள், குளங்கள் ஏரிகளை நவீனப் படுத்துவது, புதிய பெரிய அணைகள், நீர்த் தேக்கங்கள் கட்டுவது, ஆறுகளை, நதிகளை இணைப்பது, பெரிய நீர்த்தேக்கங்களையும், ஆறுகளையும் சிறிய நீர் நிலைகளுடன் இணைப்பது, நிலத்தடி நீரைப்பாதுகாப்பது ஆகியவற்றில் நமது கவனம் திருப்பப்பட வேண்டும். மக்களுடைய உணர்வு நிலையை உயர்த்த வேண்டும்.

**கிராமப்புறத் தொழிலாளர்கள்:**

கிராமப்புறப் பாட்டாளிகளில் பெரும்பாலோர் விவசாயத் துறையில் ஈடுபட்டுள்ளவர்கள் அத்துடன் இதர கிராமப்புறத் தொழில்களிலும் பழைய தொழில்களிலும் ஈடுபட்டுள்ள பல்லாயிரக்கணக்கான கடின உழைப்பாளர் களும் இருக்கிறார்கள். கைத்தறி நெசவுத் தொழில், பனை தென்னை மரம் ஏறுதல், மீன் பிடித்தல், தோல் பதனிடுதல், கயிறு பாய் பின்னுதல், கொல்லு தச்சு முதலிய ஐந்தொழில்கள், கட்டிடத் தொழில் ஆடு மாடு மேய்த்தல் முதலிய பல வேறு பழங்காலத் தொழில் களில் பணியாற்றும் பாட்டாளிகளும் ஏராளமாக இருக் கிறார்கள். இவர்களுடைய வாழ்க்கை நிலைமைகளும் வர வர மேலும் மோசமடைந்து கொண்டு வருகிறது.

இந்தத் துறையில் உள்ள பாட்டாளிகளுக்கும் தொழில் பாதுகாப்பு, சமூகப் பாதுகாப்பு மாற்றுத் தொழில்கள் முதலியன பற்றிச் சிந்திப்பதும் அவர்களின் உணர்வு நிலையை உயர்த்துவதற்கான முயற்சிகளை மேற் கொள்ளுவதும் மிகவும் அவசியமாகும்.

**மத்திய கால மன்னராட்சி முறையின்**
**கொடுங் கோன்மை**

மத்திய காலத்தில் இந்திய நாட்டின் இயற்கை வளமும், இந்திய மக்களின் இடையறாத முயற்சியும் கடும் உழைப்பும் நமது நாட்டின் விவசாயத் துறையின் முன்னேற்றத்திற்கும் கிராமத் தொழில் முன்னேற்றத்திற் கும் பெரிதும் காரணமாக இருந்திருக்கின்றன.

இருப்பினும், இந்திய நாட்டின் மன்னராட்சி முறையும், சமுதாய அமைப்பு முறையும், அதன் வளர்ச்சியில் முன்னேற்றத்தில், பெரும் தாக்கங்களை உண்டாக்கி யிருக்கின்றன. அதன் காரணமாக நீண்ட தேக்கமும் இந்திய சமுதாயத்தில் ஏற்பட்டிருந்தது என்பதையும் நமது நீண்ட வரலாற்றில் காண்கிறோம்.

இந்தியாவின் வளத்தைக் கேள்வியுற்று வெளியிலிருந்து நிகழ்த்திய பல படையெடுப்புகளும், இந்திய நாட்டிற் குள்ளேயே இருந்த மன்னர்களுக்குள் நடைபெற்ற போர்களும், இயற்கைச் செல்வங்களையும், இந்திய மக்கள் உண்டாக்கிய செல்வங்களையும் அழித்திருக்கின்றன.

நமது நாட்டின் வரலாற்றில் நீண்டகாலம் குறு நில மன்னர்கள், சிறு நில மன்னர்கள், பெரு நில மன்னர்கள் ஆட்சி நடத்தி வந்திருக்கிறார்கள். மன்னனுக்குப் பல பெயர்கள் உண்டு; அதில் ஒன்று காவலன் என்பது. மக்களைக் காப்பது அவன் வேலை என்பதால் அந்தப் பெயர் வந்திருக்கலாம். உள் நாட்டில் மிருகங்கள், சமூக விரோதிகள், வெள்ளம் பஞ்சம் போன்ற கொடுமைகள் ஆகியவற்றிலிருந்து மக்களைக்காப்பதும், வெளிநாட்டுப் படையெடுப்பிலிருந்து மக்களைக் காப்பதும் காவலனின் வேலையாகும்.

அத்துடன் இந்திய மன்னர்களின் ஆட்சித்துறையில் பொதுப் பணித்துறை மிக முக்கியமான இடத்தைப் பெற்றிருந்தது.

மன்னர்களில் சிலர் செங்கோல் மன்னர்களாகவும் சிலர் கொடுங்கோல் மன்னர்களாயுமிருந்தனர் நமது நாட்டின் மன்னராட்சி முறைக்குப் பல நீதி முறைகள் வகுக்கப்பட்டுள்ளன. அத்தகை அரச நீதி நூல்களில் ஆட்சி முறையைப் பற்றி விரிவாக விளக்கிக் கூறப்பட்டிருக்கின்றன. அரசன் மட்டுமல்ல; அரசனுக்கு அமைச்சர்களும் இருந்தார்கள். இந்த அமைச்சர்களின் வேலை மன்னனுக்குத்துதி பாடுவதல்ல; அவனுக்குத் துணையாக இருந்து அறிவுரை கூறி, வரும் பொருள் உரைத்து, அவசியமானால் இடித்துக் கூறி வழி காட்டுவதாகும்.

அரசன் எவ்வாறு ஆட்சி நடத்த வேண்டும் என்பது பற்றியெல்லாம் இந்தியப் பேரிலக்கியங்களில் மிக விரிவாகக் கூறப்பட்டிருக்கின்றன. மகாபாரதக் கதையில் பாரதப்போர் முடிந்த பின்னர், அம்புப்படுக்கையில் கிடந்த பீஷ்மனிடம் தருமனும் அவனுடைய தம்பியரும் செல்கிறார்கள். அப்போது பீஷ்மன் பாண்டவர்களுக்கு எவ்வாறு ஆட்சி நடந்த வேண்டும் என்று அறிவுரை கூறுவதாக சாந்திபருவத்தில் வியாசர் விளக்குகிறார்

வால்மீகி தனது ராம காதையில் பல இடங்களில் பாத்திரங்கள் வாய்மொழியாக அரசனின் கடமைகளைப் பற்றிச் சுட்டிக் காட்டுகிறார். கம்பனும் தனது ராமாயணத்தில் அவன்காலத்திய ராஜ நீதியை விளக்குகிறான்.

கௌடில்யன் என்னும் சாணக்கியனின் அர்த்த சாஸ்திரம் ஆட்சி முறையைப் பற்றி விரிவுறக் கூறும் பெருநூலாக விளங்குகிறது வள்ளுவத்தின் பொருட்பால் முழுவதுமே, நல்லாட்சியைப் பற்றி, நாட்டைப்பற்றி, அமைச்சைப் பற்றி விரிவுபடமிக நுட்பமாக எடுத்துக் கூறுகிறது. இளங்கோவடி

கள் தம் சிலப்பதிகாரக் காப்பியத்தில் அரசியல் பிழைத்தோருக்கு— அல்லன செய்தோருக்கு அறம் கூற்றாகும் என்று குறிப்பிடுகிறார் இவ்வாறு ஏராளமான பழைய இலக்கியங்களைச் சுட்டிக் காட்டலாம்.

மன்னராட்சி முறையில் தொடக்க காலத்தில் நாட்டின் உற்பத்தி சக்திகளின் வளர்ச்சிக்கு அந்த ஆட்சி முறை உதவியாக இருந்தது. விளைநிலங்களைப் பெருக்க, நீர்ப்பாசன நிலைகளைப் பெருக்க கால்நடைகளைப்பாது காக்க கிராமப்புறத் தொழில்களை வளர்க்க, வாணிபத்தை வளர்க்க, வழித்துணைகளை ஏற்படுத்த உதவினார்கள்.

> இயற்றலும் ஈட்டலும் காத்தலும் காத்த
> வகுத்தலும் வல்லது அரசு.

என உற்பத்தி சக்திகளின் வளர்ச்சிக்கு அரசின் பங்கு பற்றி வள்ளுவர் எடுத்துக் கூறுகிறார்.

செங்கோல் மன்னர்கள் ஆறில் ஒரு பங்கு, பத்தில் ஒரு பங்கு என குறைவாகவே வரி விதித்தார்கள். மக்களின் ஒத்துழைப்புடன் நீர்நிலைகளையும் கலைக்கோவில்களையும் பெருக்கினார்கள்.

கொடுங்கோல் மன்னர்கள் வரிகளைஅதிகப்படுத்தினார்கள்; மூன்றில் ஒரு பங்கும் அதற்குமேலும் வரிவசூல் செய்தார்கள். தங்கள் பெயருக்கும் பெருமைக்குமாகப் போர்களை நடத்தினார்கள். பல ஆடம்பர விளையாட்டுக்களைநடத்தி செல்வங்களை வீணடித்தார்கள். அதனால் மக்களுடைய கஷ்டங்கள் அதிகரித்தன.

நாளா வட்டத்தில் அரசர்களின் கடமைகள் குறைந்து அவர்களும் அவர்களுடைய ஆட்சி முறையும் சமுதாயத்தின் மீது கடும் சுமையாக மாறின. போர்கள், வீண் ஆடம்பரங்கள், விளையாட்டுகள், ஆட்சியில் மக்களின் நலன்களில் எந்த கவனமும் இல்லாமை, வரி அதிகரிப்பு, தடி எடுத்தவன் தண்டல்காரன்— இவ்வாறான கொடுங்கோன்மை சமுதாயத்தின் மீதான கொடும் சுமையாக-தாங்க முடியாத பாரமாகப் பெருகியது.

விவசாயம், தொழில் முதலியவைகளுக்கு அரசினுடைய உதவி ஆதரவு குறைந்து மக்கள் தங்கள் சொந்த முயற்சியில் முடிந்த அளவு செயல்பட்டுக் கொண்டிருந்தார்கள். 'இன்றுகட்டுண்டோம் பொறுத்திருப்போம், காலம் மாறும்' என்று காத்திருந்தார்கள்.

ஆட்சி முறைமையில் பலவீனங்கள் அதிகரிக்கும்போது, சமுதாயக் கொடுமைகள், சமுதாயச் சீரழிவுகள், சாதிக்

கொடுமைகள், சமயக் கொடுமைகள் அதிகரித்து, விதிப்பயன் என்று மக்களுக்கு அக்கறை குறைந்து, சோர்வு மேலோங்கி, மந்தமும் தேக்கமும் மூடநம்பிக்கைகளும் அதிகரித்தன.

இவ்வாறு வளமும் செல்வமும், சிறந்த கலாச்சாரமும் அறிவு வளர்ச்சியும் ஒரு புறமும், தேக்கமும் சோர்வும் அறியாமையும் மூட நம்பிக்கைகளும் சமுதாயக் கொடுமைகளும் மறுபக்கமுமாக இந்திய சமுதாயம் மன்னராட்சி முறையில் நீடித்திருந்தது.

ஆயினும் இதன் இயற்கை வளமும் மனித முயற்சியும் உழைப்பாற்றலும் குறையவில்லை. ராமன் ஆண்டால் என்ன ராவணன் ஆண்டால் என்ன? யார் ஆண்டால் என்ன? நமது வேலையை நாம் கவனித்துக் கொண்டு காலத்தைக் கழிக்கலாம் எனக் கவலையை மறந்தும் பாரத மக்கள் பெரும் தேக்கத்தில் மட்டுமல்லாமல் ஆழ்ந்த தூக்கத்திலும் மூழ்கியிருந்தார்கள்.

அந்த நேரத்தில் தான் ஐரோப்பியர்களும் ஆங்கிலேயர்களும் இந்தியாவிற்கு வந்தார்கள்.

மனித சமுதாயம் காக்கப்படுவதற்கும் அதன் வளர்ச்சிக்கும் உற்பத்தி வளர்ச்சி அவசியமாகும். மனிதனின் தேவைகள் நாளுக்கு நாள் வளர்ந்து கொண்டே இருக்கின்றன. நாளுக்கு நாள் வளர்ந்து கொண்டேயிருக்கும் சமுதாயத்தின் தேவைகள் முழுமையாகப் பூர்த்தி செய்யப்பட வேண்டுமானால் உற்பத்தி இடைவிடாமல் பெருகிக் கொண்டேயிருக்க வேண்டும். விநியோகமும் சீராக அமைய வேண்டும்.

சமுதாய உற்பத்திக்கு அடிப்படை ஆதாரமாக அமைந்திருப்பது முதல் நிலை உற்பத்தியாகும். முதல் நிலை உற்பத்தி தான் மறு உற்பத்திக்கும் செல்வ வளர்ச்சிக்கும் ஆதாரமாக அமைந்திருக்கிறது.

முதல் நிலை உற்பத்தி என்பது, நிலம் நீர், மலை, காடுகள், கடல் சுரங்கங்கள் மூலம் கிடைக்கும் பொருள்களாகும். நிலத்தில் சாகுபடி மூலம் ஏராளமான பொருள்கள் கிடைக்கின்றன. உணவுப்பொருள்களும் தொழில்களுக்கு வேண்டிய மூலப்பொருள்களும் கிடைக்கின்றன.

நிலமும் காடுகளும் கால்நடை வளர்ச்சிக்கு ஆதாரமாக அமைந்துள்ளன. அத்துடன் மலைக்காடுகளிலிருந்து மரம், காய், கனி, கிழங்குகள், இலை, விதை, முதலிய ஏராளமான பொருள்கள் கிடைக்கின்றன. காடுகள், மலைகள் சுரங்கங்கள் ஆகியவற்றிலிருந்து கிடைக்கும் மூலப் பொருள்

களிலிருந்து மறு உற்பத்தி மூலம் ஏராளமான உபயோகப் பொருள்கள் உற்பத்தி செய்யப்படுகின்றன.

கடல் மூலமும் ஏராளமான நேரடிப் பொருள்கள் கிடைக்கின்றன. மீன், உப்பு, மற்றும் ரசாயனப் பொருள்கள், சங்கு முதலியவை கிடைக்கின்றன.

உணவுப் பொருள்கள், பழம் காய்கறி முதலிய துணைப் பொருள்கள், பருத்தி சணல், பருப்பு, கடலை, கிழங்கு, பட்டு, மரம், தழை, இயற்கை மருந்துப் பொருள்கள், இலை காய் கனி, கிழங்குகள், சுரங்கங்களிலிருந்து உலோகக் கனிமங்கள், கடலிலிருந்து கிடைக்கும் மீன், உப்பு, சங்கு, முதலியன, கால்நடைகளான ஆடு மாடுகள், கோழி பன்றி முதலியவை, குதிரை, யானை, ஒட்டகம் முதலிய விலங்குகள் முதலியவைகளும் அவைகள் மூலம் கிடைக்கும் பொருள்களும் இயற்கைச் செல்வங்களும் முதல் நிலை உற்பத்திப் பொருள்கள்.

இந்த முதல் நிலைப் பொருள்களை மூலப் பொருள்களாகவும் கச்சாப் பொருள்களாகவும் கொண்டு இதர ஏராளமான மறு உற்பத்தி மூலம் மனிதத் தேவைகள் உற்பத்தி செய்யப்படுகின்றன.

உதாரணமாக தென்னை மரத்திலிருந்து தேங்காய் மட்டைகள் கிடைக்கின்றன. தேங்காயிலிருந்து எண்ணெய். எண்ணெயிலிருந்து வனஸ்பதி, சோப்பு முதலியன, நாரிலிருந்து கயிறுகள், கயிற்றிலிருந்து பாய்கள், மட்டையிலிருந்து ஓலை, — இவ்வாறு மறு உற்பத்தி மூலம் எண்ணற்ற பொருள்கள் உண்டாக்கப்படுகின்றன.

நமது நாட்டில் முதல் நிலை உற்பத்திப் பொருள்கள் ஏராளமாகக் கிடைக்கின்றன. அவைகளிலிருந்து கிராமத் தொழில் பழைய தொழில்கள் மூலம் மறு உற்பத்தியும் செய்து இந்திய சமுதாயம் சுய தேவைகளைப் பூர்த்தி செய்து கொண்டு வாழ்ந்து வந்தது.

இந்த வளம் நிறைந்த பாரத சமுதாயத்திற்கு, படையெடுப்புகளால், இயற்கை சீற்றங்களால் சில கொடுமைகள் நேர்ந்த போதிலும் அவை தாற்காலிகமானவைகளாகவே இருந்தன.

படையெடுப்பாளர்கள் இங்கு வந்து சில பொருள்களைக் கொள்ளை அடித்துக் கொண்டு உடனே திரும்பிச் சென்று விட்டார்கள். சிலர் இங்கேயே தங்கி இந்திய மக்களுடன் இணைந்து விட்டார்கள்.

பெரு வெள்ளமும், பேய்க் காற்றும் வறட்சியும் பஞ்சமும் ஏற்பட்டால் அதை தாற்காலிகமாகவே வந்து விட்டுப் போய் விட்டன.

அவைகளினால் ஏற்பட்ட துயர்களை தணிக்கவும் துடைக்கவும்சமுதாய முயற்சிகள் மூலம் பல கடமைகள் நிறைவேற்றப்பட்டு வந்துள்ளன.

ஆறுகளில் வரும் பெரு வெள்ளங்கள் கால் வாய்கள் ஏரிகள் மூலம் திசை திருப்பப் பட்டிருக்கின்றன. உபரி உற்பத்தி சேமிக்கப்பட்டு பஞ்ச காலத்திற்கு உதவப்பட்டிருக்கிறது. இயற்கைச் சீற்றங்களின் போது பாதுகாப்பிற்காக ஏராளமான பல கற்கோயில் கட்டப்பட்டிருக்கின்றன.

நமது நாட்டின் முதல் நிலை உற்பத்தியிலும் சரி கிராமத் தொழில் உற்பத்தியிலும் சரி உபரிக்குக் குறைவில்லை; அந்தஉபரி மூலம் தான் நமது நாட்டின் அறிவுச் செல்வமும். கலைச் செல்வமும் வளர்க்கப் பட்டிருக்கின்றன.

மற்ற பல நாடுகளில் தங்கத்தைக் கட்டியாக்கி அரண்மனைகளில் சேமிக்கப்பட்டிருப்பதை அறிகிறோம். நமது நாட்டில் பொதுக் கோவில்களில், கோயில் விமானங்களில் கோபுரங்களின் உச்சியில் தங்கக் கலசங்களைக் காண்கிறோம்.

வற்றாத வளமும், குலையாத செல்வமும் நிறைந்த நாடாக பாரதம் இருப்பினும் ஏழ்மையும் சமுதாயக் கொடுமைகளும் மறுபக்கம் இருந்தது. அறிவின் இமயத்திற்கும் சென்றுள்ளோம். அறியாமையின் அடியாழத்திலும் வீழ்ந்து கிடக்கிறோம். அதனால்தான் பள்ளத்தில் வீழ்ந்திருக்கும் குருடர் என்று பாரதி குறிப்பிட்டான்.

இருப்பினும் நமது வற்றாத வளமும் குறையாத செல்வமும் நமது நாட்டு மக்களின் —கிராமப்புறப் பாட்டாளிகளின் உழைப்பால் தொடர்ந்து வளர்க்கப் பட்டே வந்திருக்கிறது. ஆயினும், ஐரோப்பியர் வருகையும் ஆங்கிலேயர் ஆட்சியும், சில புதிய ஐரோப்பிய நாகரிகத்தையும் உற்பத்தி முறையையும் கொண்டு வந்த போதிலும் அவர்களின் ஆட்சியும் கொடுமையும் கொள்ளையும் பாரதத்தை மிகப் பெரும் அளவில் சேதப்படுத்தியிருக்கின்றன.

அந்நிய ஆட்சியின் விளைவுகள் ஆழ்ந்த பரிசீலனைக்குரியதாகும். அதிலிருந்து நாம் செய்ய வேண்டிய மீட்சிப் பணி இன்னும் தொடருகிறது.

# 2

# அந்நியர் ஆட்சிக் காலத்தில், ஏற்பட்ட வீழ்ச்சி

ஐரோப்பியர்கள் ஒவ்வொரு நாட்டவராக இந்தியாவிற்கு பதினாறாம் நூற்றாண்டிலிருந்து வரத் தொடங்கினார்கள், போர்த்துக் கீசியர்கள், டச்சுக்காரர்கள், பிரஞ்சுக்காரர்கள் ஆங்கிலேயர்கள் ஆகியோர்கள் இந்தியாவிற்கு வந்தார்கள். வந்தவர்கள் முதலில் வியாபார நோக்கத்துடன் தான் வந்தார்கள். கடைசியாக வந்தவர்கள் பிரஞ்சுக்காரர்களும் ஆங்கிலேயர்களும்; அவர்களுக்குள் ஐரோப்பாவிலும் இந்தியாவிலும் போர்கள் நடந்து அதில் ஆங்கிலேயர்கள் வெற்றி பெற்றார்கள். வெற்றி பெற்ற ஆங்கிலேயர்களின் கிழக்கு இந்தியக் கம்பெனி என்னும் பெயர் பெற்றிருந்த வியாபாரக் கம்பெனி இந்தியாவில் நிலை பெற்றுவிட்டது.

ஆங்கிலேய வியாபாரிகள் முதலில் இந்தியாவில் கிடைத்த உபரிப்பொருள்களையும் கைத்தொழில் உற்பத்திப் பொருள் களையும் வாங்கிக் கொண்டு போய் அவர்களுடைய நாடு களிலும் அவர்களுடைய பக்கத்து நாடுகளிலும் விற்பனை செய்து அதன் மூலம் பொருள் ஈட்டினார்கள்.

கிழக்கிந்திய வியாபாரக் கம்பெனியை நடத்திக் கொண் டிருந்த ஆங்கிலேயர்கள், இந்திய நாட்டில் ஆட்சி நடத்திக் கொண்டிருந்த மன்னர்களுக்கிடையில் ஏற்பட்ட போட்டி பொறாமை சண்டை சச்சரவு ஆகியவைகளையும், நாட்டைப் பற்றியோ ஆட்சியைப் பற்றியோ கவலைப்படா மல் இருந்த மக்களையும் கண்டு அவற்றைப் பயன் படுத்தி நாட்டையே படிப்படியாகக் கைப்பற்றி அதைத் தங்கள் ஆட்சியின் கீழ் கொண்டு வந்தார்கள்.

1757 — ஆம் ஆண்டில் வங்காளத்தில் பிளாசி என்னும் இடத்தில் அந்தப் பகுதி மன்னர்களுக்கும் ஆங்கிலேயர் களுக்கும் நடந்த சண்டையில் ஆங்கிலேயர்கள் வெற்றி பெற்றார்கள். அது முதல் வங்காளத்தின் பெரும் பகுதி

ஆங்கிலேயக் கம்பெனியின் ஆட்சியின் கீழ் வந்தது. அதன் பின்னர் தென் இந்தியாவில் வந்தவாசியில் நடைபெற்ற போரில் ஆங்லேயர்கள் வெற்றி பெற்ற பின்னர், படிப் படியாக தென் இந்தியாவும் பிரிட்டிஷ் கம்பெனியின் ஆளுகையின் கீழ் வந்தது, இவ்வாறு படிப்படியாக நூறு ஆண்டுகளில் இந்தியா முழுவதையும்,இன்று இந்தியா பாகிஸ்தான், பங்களாதேஷ், பர்மா, இலங்கை என்றுள்ள நாடுகள் அனைத்தையும் ஆங்கிலேயர்கள் கைப்பற்றித் தங்கள் ஆளுகையின் கீழ் கொண்டு வந்துவிட்டார்கள்.

இந்த நூறு ஆண்டுக் காலத்திலும் ஆங்கிலேயர்கள் சுலப மாக இந்திய நாட்டைக் கைப்பற்றி விடவில்லை. ஆங்கிலப் படைகளுக்கு நமது நாட்டில் கடுமையான எதிர்ப்பு இருந்தது. இந்திய நாட்டில் இருந்த சிறிய, பெரிய மன்னர்களும் அவர்களுடைய படைகளும் பல இடங்களில் மக்களும் கூட ஆங்கிலேயர்களை எதிர்த்து ஆயுதம் எடுத்துச் சண்டை போட்டிருக்கிறார்கள்.

கடைசியாக 1857 ஆம் ஆண்டில் வட இந்தியா முழு வதிலும் பல இடங்களில் இந்திய ராணுவம் ஆங்கிலேயர் கம்பெனி ஆட்சியை எதிர்த்துப் பெரிய போர் நடை பெற்றது. இந்தப் போரிலும் இந்தியப் படைகள் தோற்று விட்டன. ஆங்கிலேயர்கள் வெற்றி பெற்று விட்டார்கள் இந்தப் போரை ஆங்கிலேயர்கள் 'சிப்பாய்க்கலகம்' என்று கூறினார்கள். இந்தப் போரை முதலாவது இந்திய விடுதலைப் போராட்டம் என்று காரல் மார்க்ஸ் இந்தியாவைப்பற்றிய தனது கட்டுரைகளில் குறிப்பிடு கிறார். எனவே ஆங்கில ஆட்சிக்கு எதிராக இந்தியர்கள் நடத்திய முதலாவது விடுதலைப் போராட்டமே இந்திய ராணுவமும் மக்களும் கலந்து கொண்ட ஆயுதம் தாங்கிய போராட்டமாகவே இருந்தது என்பது வரலாற்று உண்மை.

1857 ஆம் ஆண்டில் ஆங்கிலேயக் கம்பெனி ஆட்சிக்கு எதிராக நடை பெற்ற விடுதலைப் போராட்டத்திற்குப் பின்னர் கிழக்கிந்திய கம்பெனியின் நிர்வாகத்தில் பிரிட்டிஷ் பாராளுமன்றம் தலையிட்டு, இந்தியாவின் ஆட்சிப் பொறுப்பை 1858 ஆம் ஆண்டிலிருந்து பிரிட்டிஷ் அரசாங் கமே நேரில் எடுத்துக் கொண்டு விட்டது.

அது முதல் பிரிட்டிஷ் அரசின் பிரதிநிதியாக இந்தியா வில் ஒரு வைஸ்ராயும் அவருக்கு ஒரு ஆலோசனைக் குழு வும் இருந்து இந்தியா மீது ஆங்கிலேயர்கள் தங்கள் நேரடியான ஆட்சியை நடத்தினார்கள்.

**ஆங்கிலேயக் கம்பெனி ஆட்சிக் காலத்தில்**

பிரிட்டிஷ் கிழக்கிந்திய கம்பெனியின் ஆட்சிக் காலம்

தொடக்கம் முதல் முடிவு வரை ஒரு நூறு ஆண்டுக்காலம் என்று கூறலாம்.

இந்த நூறாண்டுக் காலத்தில் நமது நாட்டில் என்ன நடந்தது என்பது இந்திய நாட்டின் வரலாற்றில் ஒரு சோகக்கதை யாகும். இந்த சோகக்கதையின் இடையில் அவ்வப்போது இந்திய விவசாயிகள் நடத்திய வீரப்போராட்டங்களும் மின் வெட்டுகளைப்போல், இடி முழக்கங்களைப் போல் தோன்றி மறைந்துள்ளன.

ஆங்கிலேய வியாபாரிகள் நமது நாட்டில் புகுந்து முதலில் நமது நாட்டில் கிடைத்த பல்வேறு உபரிப் பொருள்களை வாங்கி, விற்பனைக்காக ஐரோப்பாவிற்குக் கொண்டு சென்றார்கள். அவற்றில் விவசாய விளைபொருள்கள் தானியம், பழங்கள், மிளகு இலவங்கம் முதலிய வாசனைப் பொருள்கள், சந்தனக் கட்டைகள், பல்வேறு உயர்வான மரங்கள், யானைத்தந்தங்கள், ஆடுமாடுகளின் தோல்கள், கிராமத் தொழில்கள் மூலம் உற்பத்தியான பட்டாடைகள் துணி ஆடைகள், வேலைப்பாடுகள் கொண்ட கம்பளிகள், சால்வைகள், மரச்சாமான்கள், தேயிலை, காப்பி, ஏலக்காய், தேங்காய் எண்ணெய் முதலிய பல வகைப் பொருள்களை யும் ஆங்கிலேயர்கள் வாங்கிக் கொண்டு சென்றார்கள்.

முதலாவதாக இந்த வியாபாரத்தை ஆங்கிலேயர்கள் மிகவும் திறமையாகச் செய்தார்கள். நமது நாட்டிலேயே உள் நாட்டுத் தரகர்களைப் பிடித்து அவர்கள் மூலம் நமது நாட்டு விவசாயிகளிடத்தில், கிராமப்புற மக்களிடத்தில் கைவினைஞர்களிடத்தில் குறைவான விலைக்கு வாங்கிக் கொண்டு போனார்கள்.

இரண்டாவதாக ஆங்கில வியாபாரிகளுக்கு இந்தியாவைப் பற்றிய, இந்திய மக்களைப் பற்றிய அனுபவம் அதிகரித்தது. இந்திய மக்கள் எதையும் நம்பும் சுபாவத்தை அவர்கள் அறிந்து கொண்டார்கள். அதை வைத்து இந்திய மக்களை ஆங்கிலேய வியாபாரிகள் ஏமாற்றியும் மோசடி செய்தும் இந்திய நாட்டின் செல்வத்தைக் கொள்ளை கொண்டு போனார்கள்.

மூன்றாவதாக ஆங்கிலேய வியாபாரிகளும், சிப்பந்திகளும் இந்திய மக்களிடம் வாங்கிய பொருள்களுக்கு பொய்க் கணக்குகள் எழுதியும் ஏமாற்றியும் இந்த நாட்டின் செல் வத்தைக் கொள்ளையடித்துக் கொண்டு போனார்கள்.

நான்காவதாக, பலஆங்கிலேய வியாபாரிகளும் கம்பெனியின் சிப்பந்திகளும் ஆயுதம் தாங்கிய வீரர்களை வைத்துக் கொண்டு கிராமங்களில் புகுந்து தங்க நகைகள், வெள்ளிச் சாமான்கள் முதலியவைகளைக் கொள்ளையடித்து நமது செல்வங்களை எடுத்துக் கொண்டு போனார்கள்.

ஐந்தாவதாக ஆங்கிலேய வியாபாரிகள் இந்திய நாட்டின்பல பகுதிகளிலும் ஆண்டுகொண்டிருந்த சிறிய பெரிய மன்னர் களுக்கிடையில் சண்டையை மூட்டி விட்டு, ஒருவருக்கு எதிராக-மற்றொருவருக்கு ஆதரவாகத் தங்கள் படைகளை அனுப்பினார்கள். இந்தப்படை வீரர்கள் போகுமிடமெல் லாம், தானியங்கள், துணி மணிகள், தங்கம், வெள்ளி ஆபரணங்கள் இதர பல பொருள்களையும் கொள்ளை யடித்து எடுத்துக்கொண்டு போனார்கள்.

காவல் இல்லாத காட்டில் ஆடுமாடுகள் புகுந்து மேய்வதைப் போல நாட்டை அந்நியர்கள் மேய்ந்து சின்னா பின்னப்படுத்தினர்.

உள் நாட்டு நிர்வாகமும் சரியாக இல்லை. அந்நியர்களின் கொள்ளைக்கும் அளவு இல்லை இவ்வாறு நாட்டு மக்கள் தங்கள் செல்வங்களை இழந்து கொண்டு வந்தார்கள். ஆயி னும் இதில் ஆங்கிலேய வியாபாரிகளும், கம்பெனியின் சிப் பந்திகளும் கொள்ளையடித்துக் கொழுத்தார்கள். இந்த அந்நிய வியாபாரிகளுக்கு புரோக்கர்களாக இருந்த இந்தியத் தரகர்களுக்கும் இதில் கொஞ்சம் பங்கு கிடைத்தது.

ஆறாவது இந்த நூறு ஆண்டுகளிலும் பிரிட்டிஷ் கம்பெனி யின் படைகளும், சில இடங்களில் பிரஞ்சு கம்பெனிப் படை களும், இந்திய மன்னர்களின் படைகள் ஒன்றோடொன்று மாறிமாறி சண்டை போட்டுக் கொண்டிருந்ததால் மக்கள் பல கொடுமைகளுக்கும் ஆளானார்கள். அந்த இடங்களில் சாதாரண மக்களின் உடமைகளும் செல்வங்களும் படைகளால் சூறையாடப்பட்டன.

பதினெட்டாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் தமிழ் நாட்டின் வடக்குப் பகுதிகளில்—இப்போதுள்ள வட ஆற் காடு தென் ஆற்காடு, செங்கல்பட்டு மாவட்டப் பகுதி களில் ஆங்கிலேயர்க் கம்பெனி துருப்புகள், ஆற்காடு நவாபின் படைகள், பிரஞ்சுக்காரர்களின் ராணுவம், திப்பு சுல்தான் படைகள் ஆகியவை பல போர்களை நடத்திக் கொண்டிருந்த காலத்தில் இந்தப் பகுதி மக்க ளுடைய உடமைகள் சூறையாடப்பட்டதோடு ஆடு மாடுகள் எல்லாம் படைகளால் அடித்துத் தின்று தீர்க்கப்பட்டது. அதனால் இந்தப் பகுதிகளில் ஆடு மாடுகளின் இனமே அழிந்து போய், சாகுபடியும் நடைபெறாமல் லட்சக்கணக் கான மக்கள் செத்து மடிந்தார்கள். இந்தக் கொடுமையைத் தாங்காமல் தான், இராமலிங்க சுவாமிகள் கொலையை நிறுத்து, மக்கள் பசியைப் போக்கு, கருணையில்லாத ஆட்சி கடுகி ஒழிக என்று குரல் கொடுத்துள்ளார்.

இவ்வாறு இந்திய நாடு முழுவதிலும் ஆங்கிலேயர் அடியெடுத்து வைத்த பின்னர் நூறாண்டுக் காலம், போர்கள், குழப்பங்கள், சண்டைகள், சரியான நிர்வாகமின்மை, கொள்ளை, சூறையாடல், மோசடி வியாபாரம் முதலியவை காரணமாக இந்திய விவசாயிகள் தங்கள் உடமைகளை இழந்து, ஆடு மாடுகளை இழந்து, வறுமை மிகுந்து, பயிர்க்குடி செய்யவும் முடியாமல், இந்திய விவசாயமும், கிராமப்புறத் தொழில்களும் பெரும் அளவில் சீரழிந்தன.

**ஆங்கில அரசின் நேரடி ஆட்சிக்காலத்தில.**

பதினெட்டு, பத்தொன்பதாம் நூற்றாண்டுகளில் இங்கிலாந்திலும் ஐரோப்பாவிலும் முதலாளித்துவ உற்பத்தி முறை தோன்றி வளரத் தொடங்கியது.

இந்தியா போன்ற நாடுகளில் வியாபாரத்தின் மூலமும் இதர பல வகைக் கொள்ளைகள் மூலமும் பல ஆங்கிலேய வியாபாரக் குடும்பங்களும் கம்பெனி அதிகாரிகளும் சிப்பந்திகளும் மிகப்பெரிய பணக்காரர்கள் ஆனார்கள் அவர்களிடம் ஏராளமான மூலதனம் குவிந்தது.

இந்த மூலதனத்தின் முதலீடுகள் மூலம் இங்கிலாந்திலும் இதர ஐரோப்பிய நாடுகளிலும் புதிய வகையிலான தொழில்கள் தோன்றின. விஞ்ஞான வளர்ச்சி ஏற்பட்டது. புதிய விஞ்ஞானக்கண்டுபிடிப்புகள் வந்தன. நீராவி எந்திரம் கண்டு பிடிக்கப்பட்டது.

நீராவி எந்திரம் கண்டு பிடிக்கப்பட்ட தானது, எந்திரத் தொழில்கள் தோன்றி வளருவதற்கும், ரயில் கப்பல் போக்குவரத்து வேகப்படுவதற்கும் உதவின.

பிரிட்டிஷ் வியாபாரிகளுக்கு இந்தியாவுடன் உள்ள வியாபாரத்தில் ஒரு புதிய அடிப்படையான மாற்றம் ஏற்பட்டது. இந்தியாவிலிருந்து விவசாய உற்பத்தி, கிராமத் தொழில் உற்பத்திப் பொருள்களை வாங்கிக் கொண்டு போய் அவர்கள் நாட்டில் விற்பனை செய்வதற்குப் பதிலாக, அவர்கள் நாட்டில் புதிய நவீன எந்திரத் தொழில்கள் மூலம் உற்பத்தியாகும் பொருள்களை இந்தியாவிற்குக் கொண்டு வந்து விற்பனை செய்யவும், இங்கிருந்து, பிரிட்டிஷ் தொழில்களுக்குத் தேவையான மூலப் பொருள்களை வாங்கிக் கொண்டு செல்லவுமான மாற்றம் ஏற்பட்டது.

பிரிட்டிஷ் தொழில்களுக்குத் தேவையான மூலப் பொருள் பண்ணையாகவும், பிரிட்டிஷ் எந்திரத் தொழில் உற்பத்திப் பொருள்களை விற்பனை செய்யும் சந்தையாகவும் இந்தியா மாறி விட்டது. அதற்கேற்ற வகையில் இந்தியாவில் இருந்த பிரிட்டிஷ் ஆட்சி இந்தியாவில் விவசாய

முறையிலும் கிராமப்புறத் தொழில் முறையிலும் பல கட்டாய மாற்றங்களைக் கொண்டு வந்தது.

இதன் விளைவுகள் மிகவும் கொடுமையானவை. இந்தக் கொடுமைகள் இந்திய மக்களின், குறிப்பாக கிராமப்புற மக்களின் வாழ்க்கையில் நீங்காத —நீண்டகாலம் நீடிக்கின்ற அழிவுகளையும் சேதங்களையும் உண்டாக்கி விட்டன.

முதலாவதாக, ஆங்கிலேயர் ஆட்சியில் புதிய முறையிலான, தங்களுக்குச் சாதகமான நிலப்பிரபுத்துவ முறையை உண்டாக்கினார்கள். தங்களுக்கு ஆதரவாக இருந்த, அல்லது தங்களுக்குக் கீழ்ப்படிந்த பழைய அரச பரம்பரையினருக்கு மன்னர் பட்டம் கொடுத்து அவர்களுக்குத் தங்களுடைய மேலாதிக்கத்திற்குட்பட்ட ஆட்சிப் பொறுப்பைக் கொடுத்தார்கள். அவர்கள் பிரிட்டிஷ் சக்கரவர்த்திக்குக் கப்பம் கட்டும் சுதேசி மன்னர்கள் ஆனார்கள். இத்தகைய சுதேசி மன்னர்கள் முந்நூறுக்கும் மேற்பட்டவர்கள் உண்டாக்கப்பட்டார்கள். தென் இந்தியாவில் திருவாங்கூர், கொச்சி, புதுக்கோட்டை, மைசூர், ஐதராபாத் முதலிய சமஸ்தானாதிபதிகள் அதாவது சுதேசி மன்னர்கள் உண்டாக்கப்பட்டிருந்தார்கள். இவர்கள் இந்தியாவிலுள்ள பிரிட்டிஷ் பிரதிநிதியான வைஸ்ராயின் மேல் பார்வையில் செயல் பட்டார்கள். உள் நாட்டில் அவர்களுடைய ஆட்சி எல்லைக்குட்பட்ட பகுதியில் வரி வசூல், சட்டம் அமைதி காத்தல், கல்வி, ஸ்தல நிர்வாகம் முதலிய அதிகாரங்கள் அவர்களுக்கு இருந்தது.

இந்த சுதேசி மன்னர்கள் பெருப்பாலும் மக்களுடைய நலன்களில் அக்கறை செலுத்தவில்லை. கொள்ளையான வரிவசூல்களைச் செய்து மிகவும் ஆடம்பர வாழ்க்கை நடத்திக் கொண்டிருந்தார்கள். நாளும் வரிக்கொடுமை, அதிகரித்துக் கொண்டு வந்தது. இதனால் மிகப்பெரிய பளுவை விவசாயிகள் சுமக்க வேண்டியதிருந்தது. அதே சமயத்தில் வரிசெலுத்துவதற்கு எந்தவிதப் பிரதிபலனும் கிடைக்காமல் இருந்தது. நீர்ப்பாசன முறைகள் புறக்கணிக்கப்பட்டு விவசாயம் பாதிக்கப்பட்டிருந்தது.

இந்த சுதேசி மன்னர்கள், இந்தியாவில் பிரிட்டிஷ் ஆட்சிக்குப் பாதுகாப்புத் தூணாக, சமுதாய அஸ்திவாரமாக இருந்தார்கள்.

இரண்டாவதாக ஆங்கிலேயர்கள், இந்தியாவில் தங்களுக்கு ஆதரவாக இருந்த குறுநில மன்னர்கள், சிறுநில மன்னர்கள். பாளையக்காரர்கள், ஜாகீர்தாரர்கள் முதலியவர்களுக்கு குறிப்பிட்ட கிராமங்களில் வரிவசூல் அதிகாரத்தைக் கொடுத்து அவர்களை ஜமீன்தாரர்கள் ஆக்கினார்கள். இதற்கு ஜமீன்தாரி முறை என்று பெயர். இந்த ஜமீன்

தாரர்கள் ஒவ்வொரு மாகாணத்திலும் மாவட்டக் கலெக்டர்களின் மேல் பார்வையில் இருந்தார்கள். இந்த ஜமீன்தாரர்களுக்கு நிலவரியை நிர்ணயித்து அதை வசூல் செய்வதற்கு அதிகாரம் கொடுக்கப்பட்டிருந்தது. தங்களுக்குச் சொந்தமாக உள்ள ஜமீனின் எல்லைக்குட்பட்ட கிராமங்களில் விவசாயிகளிடம் வரிவசூலித்துக் கொண்டு, அதில் ஒரு தொகையை பேஷ்கஷ் தொகை என்னும் பெயரில் சர்க்காருக்குச் செலுத்தினார்கள்.

இந்த ஜமீன்தாரர்களுக்கு அவர்களுடைய எல்லைக்குட்பட்ட கிராமங்களில் நிலத்தில் சாகுபடி செய்து வந்த விவசாயிகளிடம் வரிவசூலிக்கும் அதிகாரம் தவிர வேறு அதிகாரம் இல்லா விட்டாலும், அவர்கள் நடைமுறையில் தங்கள் ஜமீன் பகுதிகளின் அரசர்களைப் போல, அவர்களை எது செய்தாலும் தட்டிக் கேட்க ஆளில்லாமல் எதேச்சாதிகாரமாகவே தண்டல் நடத்திக்கொண்டிருந்தார்கள். விவசாயிகளுக்குத் தாங்கள்செலுத்தும் வரிப்பணத்திற்கு எந்த வித நன்மையும் கிடைக்கவில்லை. இந்த ஜமீன் பகுதிகளிலும் நீர்ப்பாசான நிலைகள் சரியாகப் பராமரிக்கப் படாமல் பாழாகிக் கொண்டிருந்தன. இதனால் விவசாயம் பாதிக்கப்பட்டு, உற்பத்தி குறைந்து படிப்படியாக விவசாயிகளின் வாழ்க்கை நிலை கீழே போய்க்கொண்டிருந்தது.

சுதேசி மன்னர்கள், ஜமீன்தார்கள் ஆகியோர், பிரிட்டிஷ் ஆட்சியாளர்களால் உண்டாக்கப்பட்ட புதிய வகையான இந்திய நிலப்பிரபுக்களாவர். இவர்கள் விவசாயிகள் மீது கடுமையாகவரி விதித்து, கொடுமையான முறைகளைக் கையாண்டு வரி வசூலித்தார்கள். அத்துடன் விவசாயிகளை பல்வேறு முறைகளிலும் கொடுமைப்படுத்தி அதிகாரம் செலுத்தினார்கள்.

சாதாரண மக்களிடம் பல்வேறு முறையிலான இனாம்களை வசூலித்தார்கள். ஜமீன்தார்களும், மன்னர்களுடைய ஆட்களும் மக்களைக் கொடுமைப்படுத்தினார்கள். அத்துடன் விவசாய உற்பத்திக்கும் அதன் வளர்ச்சிக்கும் இந்த நிலப்பிரபுக்களால் எந்த வித பலனும் இல்லை. மாறாக இவர்களுடைய ஆடம்பரம், ஊதாரிச் செலவுகள் எல்லாம் சமுதாயத்தின் மீது பிணச்சுமையாக அமைந்தன.

அத்துடன் இவர்கள் அந்நிய ஆட்சியின் அடியாட்களாக இருந்து மக்களை அடக்கி ஆளும் கொடுமைக்காரர்களாகவும், சுரண்டல்காரர்களாகவும் இருந்தார்கள்.

மூன்றாவதாக, சுதேசி மன்னர்களின் ஆட்சி, ஜமீன் பகுதிகள் போக பாக்கியுள்ள பகுதி கிராமங்கள் பிரிட்டிஷ் இந்திய ஆட்சியின் நேரடி நிர்வாகத்தின் கீழ் இருந்தது. இதற்கு ரயத்து வாரி முறை என்று பெயர், ரயத்துவாரி முறையில் விவசாயிகளுக்கு அவர்களுடைய நிலத்திற்கு

நேரடிப்பட்டா கொடுக்கப்பட்டது. தனது பட்டா நிலத்தை ஒரு விவசாயி விற்பனை செய்யலாம். வேறு பட்டா நிலங்களை விலைக்கு வாங்கவும் செய்யலாம்.

ஆங்கிலேய ஆட்சியில் இவ்வாறு ரயத்து வாரி பட்டா வழங்கப்பட்ட போது, பலர், மேல் தட்டுக்காரர்கள், ஆங்கிலேய கலெக்டர்கள் இதர அதிகாரிகளுக்கு அருகாமையில் இருந்தவர்கள், சற்று விவரம் தெரிந்தவர்கள், மேல் சாதிக்காரர்கள் எனப்பட்டம் பெற்றவர்கள் முதலியோர் ஏராளமான நிலங்களில் தங்களுக்கு பட்டா ஏற்பாடு செய்து கொண்டார்கள். ரயத்து வாரி என்று கூறி நிலம் ரயத்துகளுக்கு நேரடியாக பட்டா கொடுக்கப்பட்டதாகக் கூறப்பட்ட போதிலும் எல்லா நிலப் பட்டாதார்களுமே நிலத்தில் சாகுபடி செய்தவர்கள், சாகுபடி செய்து கொண்டிருந்தவர்கள் என்று கூற முடியாது. சாகுபடி செய்யாமல், வாரம் குத்தகைக்கு நிலத்தை சாகுபடிக்குக் கொடுக்கும் ரயத்து வாரி நிலச் சுவான்தார்கள் கையிலும் பெரும்பகுதி சாகுபடி நிலம் போய்விட்டது.

சுதேசி மன்னர்கள் ஆண்ட பகுதிகளில் நிலவரி பெரும்பாலும் ஜமீன்தாரர்களுக்கே இருந்தது. இந்த ஜமீன்தாரர்களுக்கு நேரடி சொந்தமாகப் பண்ணை நிலம் என்னும் பெயரிலும் இருந்தது. எனவே ஜமீன்தாரி பகுதிகளில் இருந்த பல ஆயிரக்கணக்கான பண்ணை நிலம், ரயத்து வாரி நிலச் சுவான்களின் ஏராளமான பட்டா நிலம், ஆகிய நிலங்களிலும் மற்றும் மடம் கோயில் இனாம்கள், முதலியவைகளுக்குச் சொந்தமாக இருந்த நிலங்களிலும் சாகுபடி செய்து கொண்டிருந்த விவசாயிகள் என்று ஒரு பெரிய கூட்டம் உருவானது. இவர்களை வாரம் குத்தகை விவசாயிகள் என்று கூறுகிறோம். நிலம் தங்களுக்குச் சொந்தமாக இல்லாமல் நிலச் சொந்தக்காரர்களுக்கோ ஜமீன்தாரர்களுக்கோ வாரம் அல்லது குத்தகை என்று விளைச்சலில் பெரும் பகுதி கொடுத்து விட்டு நிலத்தில் சாகுபடி செய்து கொண்டிருந்தவர்கள் இந்த ரகத்தைச் சேர்ந்தவர்களாவர். இவ்வாறாக ஆங்கிலேயர் ஆட்சிக்காலத்தில் இந்தியாவின் விவசாய உற்பத்தி உறவுகளில் விவசாயிகளை, சாகுபடியாளர்களை, சுரண்டிக் கொழுத்துசமுதாயத்தை அழுத்திக் கொண்டிருந்த நிலப்பிரபுத்துவவர்க்கமாக சுதேசி மன்னர்கள் ஜமீன்தார்கள். நிலச் சுவான்தார் ஆகியோர் அமர்ந்திருந்தனர். இந்த நிலப் பிரபுத்துவ சுரண்டல்முறைவரி, வாரக்கொடுமைகள் விவசாயிகளை அழுத்தி அழித்துக் கொண்டிருந்தன. நிலத்தின் உழைப்பாளர்கள் ஏழ்மை யடைந்து கொண்டிருந்தார்கள். அத்துடன் நீர்ப்பாசன முறைகளும் புறக்கணிக்கப்பட்டு பாதிக்கப்பட்டது.

இத்தகைய நிலப்பிரபுத்வ சுரண்டல் முறைக்கு அடுத்தபடியாக வரி, வட்டி, விலைக் கொடுமைகளாலும் பிரிட்டிஷ் ஆட்சியில் இந்திய விவசாயிகள் கடுமையாகப் பாதிக்கப்பட்டு விவசாயத் தொழில் சீரழிந்தது.

முதலாவதாக பிரிட்டிஷ் ஆட்சியாளர்கள் இந்திய விவசாயிகள் மீது விதித்த வரி முறைகள் கொடுமையாக இருந்தது.

பிரிட்டிஷ் கிழக்கிந்திய கம்பெனியின் ஆட்சிக் காலத்திலேயே கம்பெனியார்களுக்கு பல பகுதிகளில் வரி வசூல் செய்யும் உரிமைகள் கிடைத்த போது வன் முறைகளைக் கையாண்டார்கள். வரிபாக்கிக்காக விவசாயிகள் கொடுமைப்படுத்தப் பட்டார்கள். கை கால்கள் கட்டப் பட்டு சுடு மணலில் வீழ்த்தப்பட்டார்கள். குதிரை வாலிலும் வண்டிச் சக்கரத்திலும் கட்டப்பட்டார்கள். வரிபாக்கிக்காக விவசாயிகளின் உடைமைகள் ஜப்தி செய்யப் பட்டன. ஜப்தி செய்யப்பட்ட பொருள்கள் மோசமான முறையில் ஏலத்திற்கு விடப்பட்டன.

இவ்வாறு ஆங்கிலேயர்கள் நடத்திய வரிவசூல் கொடுமைகளை எதிர்த்து விவசாயிகளின் குரல் ஒலித்தது. தமிழ் நாட்டில் திருநெல்வேலிச் சீமையில் பாஞ்சாலங்குறிச்சிப் பகுதியை ஆண்டு கொண்டிருந்த பாளையக்காரர்கள் கட்டபொம்மன் தலைமையில் ஆங்கில ஆட்சியை எதிர்த்து நடத்திய விடுதலைப் போராட்டத்தில் முக்கிய கோஷமாக இருந்தது அந்நிய ஆட்சியாளர்களுக்கு வரி கொடுக்க மறுத்ததாகும். வானம் பொழியுது, பூமி விளையுது, உனக்கு ஏன் வரிக்கொடுக்க வேண்டும், என்பது பாமர மக்களின் குரலாக எழுந்தது.

பின்னர் தீவிரமான விடுதலைப் போராட்ட காலத்தில் மகாத்மா காந்தியும், வரிக் கொடுமை பற்றி மக்களிடம் கடுமையான கோப உணர்வு இருப்பதை அறிந்துதான் வரி கொடா இயக்கத்திற்கு அறை கூவல் விடுத்தார்.

ஆங்கிலேயர்கள் இந்தியாவில் நிலத்திற்கு மட்டும் வரி போடவில்லை. இங்கிலாந்து தேசத்தில் நவீன பஞ்சாலைகள் முதலிய தொழில்கள் வளர்வதற்காகவும் அந்தத் தொழில்கள் மூலம் உற்பத்தியாகும் பொருள்களை விற்பனை செய்வதற்கு மார்க்கட் பிடிப்பதற்காகவும் இந்தியாவில் இருந்த பழைய தொழில்களை அழித்தார்கள். இந்தியக் கைத்தறி மற்றும் பட்டுத் துணிகளுக்கு அதிகமான வரிகளைப் போட்டார்கள். மிகவும் நேர்த்தியான சன்னரக துணிகளை உற்பத்தி செய்வதற்கான நல்லமெல்லிய பருத்தியை உற்பத்தி செய்வதைத் தடுக்க அந்தரக பருத்தி உற்பத்திக்குக் கொடுமையான முறையில் வரிபோட்டார்கள்.

நைஸ்ரகப் பருத்தி சாகுபடியாகும் நிலத்திற்கு அதிக வரிகளைப் போட்டார்கள். உழவு மாடுகளுக்கும், கலப்பைக்கும் (மேக்காலுக்கு) (நுகத்தடி) வண்டிகளுக்கும் வரி போட்டார்கள்.

இவ்வாறு விவசாயிகளுக்கும் விவசாய உற்பத்திக்கும் நிலத்திற்கும் விவசாயக்கருவிகளுக்கும் வரிகளைப் போட்டார்கள். அந்தவரிகளைக் கொடுமையான முறையில் வசூலும் செய்தார்கள். இதனால் விவசாயத் தொழில் கடுமையாக பாதிக்கப்பட்டது. இதர பல கிராமத் தொழில்கள் அழிந்தன. அந்த கிராமத் தொழிலாளர்களுக்கு மாற்று வேலை இல்லாமல் விவசாயத் தொழிலாளர் அணியில் குவிந்தார்கள். இதனால் நிலத்தை, விவசாயத்தை நம்பி வாழும் மக்களுடைய எண்ணிக்கை அதிகமாயிற்று, நிலத்தின் மீது மக்களுடைய அழுத்தம் அதிகமாயிற்று.

ஆங்கிலேயர் ஆட்சியில் இருந்த வரிக் கொடுமைகளைப் பற்றியும் அந்த வரிப்பணத்தை எப்படி அவர்கள் கொள்ளையடித்தார்கள் என்பது பற்றியும் பல கதைகள் உண்டு. அதில் ஒன்று.

ஆங்கிலேயர் ஆட்சியின் வரிக் கொடுமைகளுக்கு சான்று.. அவர்களுடைய மாதங்களின் முதல் மாதம் ஜனவரி. ஜனவரி என்றால் ஜனங்களுக்கு வரி என்று பொருள்; ஜனவரி மாதம் தான் நிலவரியும் இதரவரிகளும் நிர்ணயிக்கப்பட்டு விதிக்கப் படுகிறது. எனவே ஜனவரியில் ஜனங்களுக்கு வரி போடப் படுகிறது

இரண்டாவது மாதம் பிப்ரவரி. பிப்ரவரி என்றால் பிறகும் வரி என்று பொருள். அந்த மாதத்தில் தான் மடக்குவரி போடப்படுகிறது. மூன்றாவது மாதம் மார்ச் மாதம். ஜனவரி மாதம் ஜனங்களுக்கு வரிபோட்டு, பிப்ரவரி மாதம் பிறகும் வரிபோட்டு மார்ச் மாதத்தில் ஆங்கிலேயர்கள் லண்டன் மாநகருக்கு மார்ச் ஆகிவிடுகிறார்கள். ஏப்ரல் மாதத்தில் அந்த வரிப் பணத்தையெல்லாம் ஏப்பம் விட்டு விடுகிறார்கள் என்று ஆங்கிலேயர் ஆட்சியின் வரிக் கொடுமையைப்பற்றி வர்ணிக்கப் படுவதுண்டு.

இவ்வாறாக பிரிட்டிஷ் ஆட்சியின் வரிக்கொள்கை இந்திய விவசாயத்தை அழிப்பதாக, இந்திய விவசாயிகளைக் கொள்ளையடிப்பதாக இருந்தது.

அத்தோடு இந்திய விவசாயிகள் பிரிட்டிஷ் ஆட்சிக் காலத்தில் மிகவும் கடுமையான வட்டிக் கொடுமைக்கு ஆளாக வேண்டியதாயிற்று. விவசாயிகள் எத்தனை விளைந்தாலும், விவசாய வேலைகளைத் தொடங்கும்

போது விவசாயச் செலவுகளுக்கு கடன் வாங்க வேண்டிய திருக்கிறது. இப்போதும் அந்த நிலைதான் நீடிக்கிறது.

இந்திய விவசாயிகள் தங்கள் கடன் தேவைக்குத் தனியார் லேவா தேவிக்காரர்களிடம் தான் வட்டிக்குப் பணம் வாங்க வேண்டியதிருந்தது. அந்நிய ஆட்சி எவ்வளவு தான் நில வரியும் இதர வரிகளும் வசூலித்தாலும் அந்த நிதியை யெல்லாம் அரசாங்க நிர்வாகத்திற்குத்தான் கொள்ளை யாக செலவழித்தார்களே தவிர, விவசாயிகளுக்கு, அவர் கள் சாகுபடிச் செலவுகளுக்குத் தேவையான பணத்தைக் கொடுத்து உதவி செய்வதற்கு அரசு எந்த ஏற்பாடும் செய்ய வில்லை.

அதனால் விவசாயிகள் பெரும் பாலும் பெரிய நிலச்சுவான் தாரர்கள்–பணம் படைத்த தனியார் லேவா தேவிக்காரர் களிடம் தான் செல்ல வேண்டியதாயிற்று. அந்தத் தனியார் கள் மூலமான வட்டிக்கொடுமை விவசாயிகளின் உற்பத்தி யின் பெரும் பகுதியை இழக்கச் செய்தது. இதனால் விவசாயிகள் மேலும்அதிகமான அளவில் ஏழையானார்கள்.

மூன்றாவதாக விவசாயிகள் தாங்கள் உற்பத்தி செய்யும் பொருள்களுக்குக் கட்டுபடியாகும் விலையின் லாபம் மறுக்கப்பட்டார்கள்.

விவசாயிகள் உற்பத்தி செய்யும் உணவுப் பொருள்களில் உபரியாக உள்ளவற்றைப் பெரும்பாலும் மொத்த வியாபாரி களுக்கே விற்பனை செய்ய வேண்டிய திருந்தது. அரிசி பெரும்பாலும் உள்நாட்டிலும் அண்டை நாடுகளுக்கும் மட்டும் சென்றது. கோதுமை பெரும் பாலும் ஐரோப்பா விற்கும் இங்கிலாந்திற்கும் சென்றது. அங்கு செல்லும் இந்தியக் கோதுமைக்கு மிகவும் குறைவான விலையே விவசாயிகளுக்குக் கிடைத்தது.

உணவு தானியம் தவிர பருத்தி, கரும்பு, நிலக்கடலை, சணல், அவுரி முதலிய பொருள்கள் எல்லாம், அந்நிய மார்க்கட்டிற்கே சென்றது. ஆங்கிலேய மொத்த வியாபாரி களும் பெரு முதலாளிகளும் மார்க்கட்டைத் தங்கள் ஆதிக்கத்தில் வைத்துக் கொண்டு விவசாயிகளின் விளை பொருள்களுக்குக் குறைவான விலையைக் கொடுத்து விவசாயிகளைப் படு கொள்ளையடித்தார்கள். விலைக் கொள்ளை தான் எல்லாவற்றைக் காட்டிலும் பெருங் கொள்ளையாக இருந்தது. இந்தக் கொள்ளை காரணமாய் விவசாயிகள் கடும் வெறுமைக்கு ஆளாகி ஓட்டாண்டி களானார்கள்.

ஆங்கிலேயர் ஆட்சியில் அரசாங்க எந்திரம், மக்கள் மீது மிகும் சுமையாகத் திணிக்கப்பட்டிருந்தது. கலெக்டர்கள்.

தாசில்தார்கள், ரெவின்யூ இன்ஸ்பெக்டர்கள், கிராம முன்சீபு கர்ணம் வரையிலும், மற்றும் போலீஸ் அதிகாரிகள், நீதி மன்றங்கள் முதலிய எல்லாரும் விவசாயிகளை யும் கிராமப்புறப் பாட்டாளி வர்க்கத்தையும் அடக்கி ஒடுக்கும் வன்முறைக் கருவியாகவே, மக்களை அழுத்தி வதைக்கும் கொடுமைக்கருவியாகவே இருந்தார்கள். தங்களைக் கொடுமைப்படுத்தும் இந்த அரசாங்க வன் முறைக்கருவிக்கும் ஆகும் செலவை யெல்லாம் விவசாயிகள் தான் சுமக்க வேண்டியிருந்தது.

மறுபக்கம் மத்திய காலத்தில் சில மன்னர்கள் செய்த சில நல்ல காரியங்களை' பொதுப்பணித்துறைப் பணிகளைக் கூட ஆங்கில அரசு சரியாகச் செய்ய வில்லை.

நீர்ப்பாசனத்திற்கு இரண்டொரு அணைகள் கட்டப் பட்டன. மராமத்து இலாகா மூலம் சில ஏரிகள் எப்போதா வது மராமத்து செய்யப்பட்டன. விவசாயிகளுக்கு வேண்டிய இதர வசதிகள் எதுவும் அரசாங்கம் செய்யவில்லை. கல்வி யும்— பெரும்பாலும் ஆங்கிலக்கல்வி—தனியார் கையிலும் கிறிஸ்தவ மதஸ்தாபனங்கள் கையிலும் இருந்தன.

இவ்வாறாக ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில் இந்திய விவசாயம், விவசாயத் தொழில், சுதேசி மன்னர்களின் சுரண்டல் முறையால்—ஜமீன்தாரர்கள், நிலச்சுவான்தாரர் களின் நிலப்பிரபுத்துவ சுரண்டல் முறைகளால்—

அந்நிய ஆட்சியின் வரிக்கொடுமையால்—

லேவா தேவிக்காரர்களின் வட்டிக் கொடுமையால்—

அந்நிய ஏகாதிபத்திய மார்க்கட்டின் விலைக் கொடுமை யால்—

அந்நிய அரசாங்கத்தின் வன்முறைக் கொடுமையால் வீழ்ச்சியடைந்தது. இந்திய விவசாயிகள் ஏழ்மையிலும் வறுமையிலும் தள்ளப்பட்டார்கள்.

பிரிட்டிஷ் வியாபாரக் கம்பெனியைச் சேர்ந்த ஒரு ஆங்கிலேயர், ''நாம் இந்திய நாட்டைச் சுரண்டிக் கொள்ளை யடித்ததைப் போல் ஏதாவதுஒரு ஐரோப்பிய நாட்டைச் செய்திருந்தோமானால் அந்த நாடு அழிந்திருக் கும். ஆனால் இந்திய நாட்டில் ஆண்டு முழுவதிலும் சூரியனின் ஒளி பிரகாசிக்கிறது. வற்றாத ஆறுகள் உள்ளன ஒரு மழை பெய்தவுடன் அந்த மண் தனது செழிப்பைக் காட்டி வளம் கொழிக்கிறது'' எனக்குறிப்பிட்டுள்ளார். எனவே ஆங்கிலேயர்களின் கொடுமையான ஆட்சியாலும் இந்தியாவை, இந்திய விவசாயிகளை அழிக்க முடியவில்லை.

இந்தியாவில் பிரிட்டிஷ் ஆட்சியின் விளைவுகளைப் பற்றி காரல் மார்க்ஸ் குறிப்பிடும் போது, ''பிரிட்டிஷ் ஆட்சியாளர்கள் இந்தியாவின் பழமையை அழித்து விட்டார்கள். பழமையான அழிந்து விட்டனவே என்று நாம் கண்ணீர் விடத் தேவையில்லை. ஆனால் புதியன எதுவும் பிரிட்டிஷ் ஆட்சியால் ஏற்படவில்லை எனவே இந்தியர்கள் பழையதை இழந்து புதியது எதுவும் கிடைக்காமல் ஒரு சோக நிலையை அடைந்திருக்கிறார்கள்'' என்று கூறுகிறார்.

எனவே பிரிட்டிஷ் ஆட்சி காரணமாக இந்திய விவசாயிகள் பழமையை இழந்து, புதியன எதுவும் பெறாமல் ஒரு சோக நிலையை அடைந்தார்கள். ஆயினும் அந்த சோக நிலையை இந்திய மக்கள் சகித்துக்கொண்டிருக்கவில்லை.

அந்நிய ஆட்சியை எதிர்த்துப் போராடி வெற்றி பெற்று இந்திய மக்கள் சுதந்திரத்தையும் பெற்றார்கள்.

சுமார் இருநூறு ஆண்டுக்கால ஆங்கிலேயர் ஆட்சி இந்திய வரலாற்றில் மிகப்பெரிய இருண்ட காலமாகும்.

இந்தியநாட்டில் ஆங்கிலேயர் ஆட்சியின் விளைவாக வரிக் கொடுமைகள், வட்டிக்கொடுமைகள், விலைக் கொடுமைகள் காரணமாக கிராமப்புறப் பாட்டாளி மக்கள் சூறையாடப்பட்டு கொள்ளையடிக்கப்பட்டார்கள்.

ஆங்கிலேயர் ஆட்சியின் நிர்வாகம், வரிவசூல் அதிகாரிகள், போலீஸ் அதிகாரிகள் மற்றும் அரசாங்க எந்திரம், அத்துடன் ஆங்கில ஆட்சியின் சிருஷ்டியான ஜமீன் இனாம், உள்நாட்டு மன்னர்களின் கொடுமைகள் ஆடம்பரச் செலவுகள் முதலியவை இந்திய சமுதாயத்தை மிகவும் கொடுமையாக அழுத்திக்கொண்டிருந்தது.

பிரிட்டிஷ் ஏகாதிபத்திய முறையில் வர்த்தகக் கொள்ளை, இந்திய கிராமப்புற மக்களின் விளைபொருள்களைக் குறைந்த விலைக்கு வாங்கியும், அவர்களிடம் தங்கள் உற்பத்திப் பொருள்களுக்கு அதிக விலையைத் திணித்தும் நடத்திய மார்க்கட் கொள்ளையால் இந்திய கிராமப்புற மக்கள் மீது கடன் சுமை ஏறியது.

அத்துடன் பிரிட்டிஷ் ஆட்சிக் காலத்தில் இந்திய நாட்டின் இயற்கைச் செல்வங்களும் பண்பாட்டுச் செல்வங்களும் அழிந்தன.

இந்தியாவின் வனங்களில் இருந்த விலை உயர்ந்த சந்தனம், தேக்கு, மற்றும் பல வகை மரங்கள் அந்நிய ஆட்சியாளர்களால் கொள்ளையடிக்கப்பட்டன. இந்தியாவின் கால்நடைகள் சூறையாடப்பட்டு அழிந்தன. இந்திய நாட்டின்

கிராமப்புறத் தொழில்கள், கைவினைத் தொழில்கள், பிரிட்டிஷ் ஏகாதிபத்தியப் போட்டியின் முன் நிற்க முடியாமல் அழிந்தன. அதனால் பல லட்சக் கணக்கான மக்கள் பஞ்சத்தால், பட்டினியால், வறுமையால் அழிந்தார்கள்

இந்திய நாட்டின் விளைநிலம் எல்லாம் சாரம் குறைந்து, வறுமையாளன் கையில் சக்தியிழந்து ஊட்டம் குறைந்து நலிந்து கொண்டிருந்தது.

இந்திய நாட்டின் நீர்நிலைகள்,—பாசனக் கால்வாய்கள், ஏரிகள், கண்மாய்கள், குளங்கள் ஊருணிகள் முதலிய எண்ணற்ற நீர் நிலைகள் எல்லாம் பராமரிப்பு இன்றி, மராமத்து இன்றி தூர்ந்து போய்ப் பாழடைந்து போயிற்று.

இந்திய நாட்டில் கோயில்கள், கலைக்கூடங்கள் எல்லாம் அழிந்து மறைந்து கொண்டிருந்தன. இந்திய மொழிகளின் தொன்மையான இலக்கியங்கள், அறிவுச் செல்வங்கள் எல்லாம் மறைந்து மங்கிக்கொண்டிருந்தன.

ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில் இந்திய நாட்டின் மரபு வழிக் கல்வி முறைகள் அழிந்தன. புதிய ஆங்கிலக் கல்வி என்னும் பெயரில் ஆங்கிலேய ஆட்சியின் நிர்வாகத்திற்கும் வாணிபத்திற்கும், தொழில் வர்த்தகத்திற்கும் அவசியமான ஊழியர்களை உண்டாக்கும் உற்பத்தி நிலையங்களாக சில புதிய ஆங்கிலக் கல்வி நிலையங்கள் வந்தன.

பிரிட்டிஷ் ஆட்சியின் இந்த விளைவுகளைப் பற்றித்தான்—பழையனவற்றை இழந்து, புதியன எதுவும் கிடைக்காமல் இந்தியா ஒரு சோக நிலையை அடைந்துள்ளது என்று மார்க்ஸ் குறிப்பிடுகிறார்.

இந்தியா அந்நியர் ஆட்சிக்காலத்தில் தனது வனப்பை இழந்தது, வளத்தை இழந்தது, செல்வத்தை இழந்தது, அறிவுச் செல்வத்தை இழந்தது. மறுபக்கம் தூக்கமும், துக்கமும், மந்தமும், மடமையும், மூடப்பழக்க வழக்கங்களும் மேல் எழுந்தன.

இத்தனையையும் தாண்டி விடுதலைப் போராட்டத்தின் வீரமும் துணிவும் செயல் வேகமும் தோன்றின.

★

# 3

# இந்திய விவசாயிகளின் உரிமைப் போராட்டங்களும் இந்திய விடுதலையும்

இந்தியாவில் ஆங்கிலேய கிழக்கிந்திய கம்பெனி காலத்திலும் பின், பிரிட்டிஷ் பாராளுமன்றத்தின் நேரடியான ஆட்சிக் காலத்திலும் சரி இந்திய மக்கள் பல வேறு முறைகளில் அந்நிய ஆட்சியை எதிர்த்துப் போராடி வந்நுள்ளார்கள்.

இந்தியாவின் பல பகுதிகளிலும்–மலபார், பஞ்சாப், பீகார் தெலுங்கானா, வங்காளம் உத்தரப் பிரதேசம், தமிழ் நாடு ஆந்திரா முதலிய பகுதிகளிலும் பிரிட்டிஷ் ஆட்சியின் வரிக் கொடுமைகளுக்கு எதிராகவும் ஜமீன்தாரி முறைக்கு எதிராகவும் சிறிய பெரிய கிளர்ச்சிகள் தொடர்ந்து நடைபெற்று வந்திருக்கின்றன.

நில வெளியேற்றத்திற்கு எதிராகவும், நீர்ப்பாசன நிலைகளை மராமத்து செய்யக் கோரிவும் மற்றும் பலவேறு சிறிய பிரச்சனைகள், கோரிக்கைகளுக்காகயும் எண்ணற்ற கிளர்ச்சிகள் போராட்டங்கள் நடந்துள்ளன. குளங்களில் மீன் பிடிக்கும் உரிமைக்காகவும், குளக்கரைகளில் உள்ள மரங்களின் பலன்கள் மக்களுக்குக் கிடைக்க வேண்டும் என்பதற்காகவும், மேய்ச்சல் காடுகளில் பட்ட சுள்ளிகள் எடுத்துக் கொள்ளவும், விவசாயத்திற்கு அவசியமான உழவுகருவிகளுக்கான மரங்களை அனுமதியுடன் வெட்டிக் கொள்ளவும் தரிசு நிலங்களில் சாகுபடி செய்து கொள்ளவும் தொடர்ச்சியான கிளர்ச்சிகள் நடந்துள்ளன.

இந்தியாவின் கிராமப்புறப் பாட்டாளி மக்கள் தங்கள் அரசியல் உரிமைகளுக்காகவும், பொருளாதாரக் கோரிக்கைகளுக்காகவும் மட்டுமல்லாமல், சமுதாயக் கொடுமைகள் ஏற்றத்தாழ்வுகளுக்கு எதிராகவும் எண்ணற்ற கிளர்ச்சிகளையும் போராட்டங்களையும் நடத்தியுள்ளார்கள், தெருக்களில் நடப்பதற்கும், குளங்களில் குளிப்பதற்கும் கிணறுகளில் தண்ணீர் எடுப்பதற்கும், பிணத்தை எடுத்துச் செல்வதற்

கான பாதைக்கும், சுடுகாட்டிற்கும் கூட உரிமைகள் கேட்டு கிளர்ச்சிகளும் போராட்டங்களும் நடந்துள்ளன.

இவையெல்லாம் ஆங்கிலேய ஆட்சிக்கு எதிரான, ஜமீன் இனாம் மடங்களின் நிலப்பிரபுத்துவக் கொடுமைகளுக்கு எதிரான, மேல் தட்டுக்காரர்களின் அரட்டல்கள் உருட்டல் அடக்கு முறைகளுக்கு எதிரான போராட்டங்களின் இணைப்பாகவே சென்றிருக்கின்றன.

கட்டபொம்மன் சகோதரர்கள், மருது சகோதரர்கள் தலைமையில் சாதி வேறுபாடுகள் இன்றிப் பல லட்சக் கணக்கான கிராமப்புற மக்கள் ஆங்கிலேயர் ஆட்சியின் கொடுமைகளை எதிர்த்தும் வரிக் கொள்ளை எதிர்த்தும் மிகப் பெரிய அளவில் ஆயுதம் தாங்கிய போராட்டங்களை நடத்தியுள்ளார்கள்.

மலபாரில் ஆங்கிலேயர் ஆட்சியின் கொடுமைகள், வரிக் கொடுமைகள் வட்டிக் கொடுமைகளுக்கு எதிராகவும், ஜென்மிகள் என்று சொல்லப்படும் நிலப்பிரபுக்களின் கொடுமைகளுக்கு எதிராகவும் மாப்ளா முஸ்லிம் விவசாயிகள் நடத்திய போராட்டம் ஏகாதிபத்திய எதிர்ப்பு நிலப்பிரபுத்துவ எதிர்ப்புத் தன்மை கொண்டதாகும்.

திப்பு சுல்தான் அன்று பிரான்ஸ் நாட்டில் இருந்த முற்போக்கு முதலாளித்துவ அமைப்பாக இருந்த ஜாக்கோபின் கிளப் என்னும் அமைப்பில் உறுப்பினராக இருந்து தென்னிந்தியாவின் எதிர்கால வளர்ச்சிக்குத் திட்டம் வெளியிட்டார். அந்த திட்டம் ஆங்கிலேய ஆட்சி முறைக்கு எதிரானதும், நமது நாட்டின் விவசாயம் தொழில் கல்வி ஆகியவற்றின் வளர்ச்சிக்கும் ஆன திட்டமாகும்.

வேலூர் சிப்பாய்க் கலகம் என்று கூறப்படும் ஆங்கிலேய எதிர்ப்புப் போராட்டமும் விவசாயிகளின் கிளர்ச்சியின் பிரதிபலிப்பேயாகும்.

18 ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் தமிழகத்தின் வடக்குப் பகுதிகளில் ஆங்கிலேய கம்பெனி ஆட்சியினர் நடத்திய கொடுமையான கொள்ளை சுரண்டல்களுக்கு எதிராக விவசாயிகளிடத்தில் ஏற்பட்ட உள்ளக் குமுறலின் பிரதிபலிப்பே ராமலிங்க அடிகளாரின் கருணையில்லா ஆட்சி கடுகி ஒழிக என்னும் கோபக்குரலாகும்.

வங்காளத்தில் வந்தே மாதர கீதம் தோன்றியதும், கிராமப்புற இளைஞர்கள் சாதுக்களின் வேஷம் கொண்டு, ஆங்கிலேய ஆட்சியை எதிர்த்து நடத்திய ஆயுதம் தாங்கிய போராட்டமும் விவசாயிகளின் கொந்தளிப்பின்ஒரு குதியேயாகும்.

சிப்பாய்க் கலகம் என்று ஆங்கிலேயர்களால் வர்ணிக்கப்படும் முதலாவது இந்திய விடுதலைப் போரில்-1857—ம் ஆண்டில்- இந்திய ராணுவ வீரர்களோடு சேர்ந்து பல லட்சக் கணக்கான விவசாயிகளும் அந்நிய ஆட்சியை எதிர்த்தும், உள் நாட்டுக் கொடுமைகளையும் எதிர்த்தும் பங்கு கொண்டனர்.

தென் திருவாங்கூரில் தளவாய் வேலுத்தம்பி தலைமை யிலும், ஆந்திராவில் அல்லூரி சீதாராம ராஜு தலைமை யிலும் நடை பெற்ற கிளர்ச்சிகளும் ஆங்கிலேய ஆட்சியில் விவசாயிகள் மீது நடத்திய கொடுமைகளுக்கு எதிராக நடந்தவையே.

இவ்வாறு இந்திய நாட்டின் பல பகுதிகளிலும் நூறு ஆண்டு களில் எண்ணற்ற கலவரங்கள், கிளர்ச்சிகள் ஆங்கில ஆட்சிக்கு எதிராக நடைபெற்றுள்ளன. இவைகள் பெரும் பாலும் நமது நாட்டின் விவசாயிகளின் உள்ளக் கொதிப்பி லிருந்து எழுந்தவைகளாகும்.

1858-ம் ஆண்டில் இந்தியா முழுவதிலும் பிரிட்டிஷ் பாராளுமன்றத்தின் நேரடியான ஆட்சி ஏற்பட்ட பின்னர் சில காலம் ஓரளவு அமைதியாக இருந்தது எனக்கூறலாம்.

1858-ம் ஆண்டிற்கு முன்னர் ஏற்பட்ட விவசாயிகளின் கல வரங்கள் பெரும்பாலும் தானாக எழுந்தவையாகும். கொடுமைகளைத் தாங்க முடியாமல் பொங்கி எழுந்த எழுச்சிகளாகும் இந்த எழுச்சிகளுக்கு ஆங்காங்கு இருந்த பழைய மன்னர் பரம்பரையைச் சேர்ந்த தன்மானமும் தேசிய உணர்வும் கொண்டிருந்த வீரர்கள்தான் தலைமை தாங்கினார்கள். சில இடங்களில் விவசாயிகளுக் குள்ளேயே இருந்து தோன்றிய தலைவர்களும் இருந்தார்கள். இவர்களுடைய நோக்கங்கள் எல்லாம் குறிப்பிட்ட வரம்பிற்குட்பட்டே இருந்தன. அந்நிய ஆட்சியின் அக்கிரமங்கள், வரிக் கொடுமைகள், இதர கொடுமைகளை எதிர்த்து நடந்த போராட்டங்களாகவே இருந்தன

## 1858-க்குப்பின்

1858-ம் ஆண்டில் பிரிட்டிஷ் பாராளுமன்றத்தின் மூலம் நேரடியான ஆட்சி ஏற்பட்டவுடன், சட்டமும், ஒழுங்கும் அமைதியும் நிலை நாட்டப்படும் எனவும், நல்லமுறையான நிர்வாகம் நடைபெறும் எனவும், மக்கள் தங்கள் குறைகளை எடுத்துக் கூறலாம் எனவும் ஆங்கிலேய ஆட்சி யாளர்கள் மக்களுக்கு அறிவித்தார்கள். மக்களுக்கும் குறிப்

பாக கிராமப்புற மக்களுக்கு ஒரு சிறு நம்பிக்கையும் ஏற்பட்டது. அதனால் ஒரு சில காலம் அமைதி நிலவியிருக்கலாம்.

ஆனால் இந்த அமைதி நீண்ட காலம் நீடிக்கவில்லை. இங்கிலாந்து நாட்டின் பாராளுமன்றத்தின் நேரடியான ஆட்சி இந்தியாவில் ஏற்பட்ட போதிலும் பிரிட்டீஷ் இந்திய அரசு என்பது, பிரிட்டனில் இருந்ததைப் போன்ற பாராளுமன்ற ஜன நாயக அரசாக இல்லை. பிரிட்டனில் இருந்ததைப் போன்ற உரிமைகள் எதுவும் மக்களுக்கு கொடுக்கப் படவில்லை. இந்திய மக்கள் ஆங்கிலேயர்களால் அடிமைகளைப் போல நடத்தப்பட்டார்கள். இந்தியர்களை நாகரிக மில்லாதவர்கள்என்றும், படிப்பறிவு இல்லாதவர்கள் என்றும் தாங்களே ஆட்சியை நடத்திக் கொள்வதற்கும் ஜன நாயக உரிமைகளை அடைவதற்குப் பக்குவமில்லாதவர்கள் என்று ஆங்கிலேய ஆட்சியாளர்கள் கூறிவந்தார்கள்.

நிலையான ஆட்சியை ஆங்கிலேயர்கள் ஏற்படுத்தியதாகக் கூறிய போதிலும் அந்த அந்நியர் ஆட்சியில் ஏகாதிபத்தியச் சுரண்டல் முன்னிலும் கடுமையாக, முன்னிலும் கொடுமை மிக்கதாக வளர்ந்தது என்பதை ஏற்கனவே முந்திய அத்தியாயத்தில் பார்த்தோம்.

1885—ம் ஆண்டில் இந்திய தேசிய காங்கிரஸ் உயதமாயிற்று. அது. தொடக்கத்தில் இந்தியாவில் இருந்த படித்தவர்கள், மேல்தட்டு நடுத்தர வர்க்கத்தினர், ஆங்கிலக் கல்விகற்றவர்களால் தொடங்கப்பட்ட தேசிய ஸ்தாபனமாகவே இருந்தது. அவர்கள் பெரும்பாலும் மிதவாதக் கொள்கைகளைக் கடைப்பிடிப்பவர்களாகவே இருந்தனர்.

இருப்பினும் அதில் பல சிறந்த அறிஞர்களும் சீரிய சிந்தனையாளர்களும் இருந்தனர். அவர்கள் சிலர் இந்தியாவில் ஆங்கிலேய ஆட்சியாளர்களின் பொருளாதார சுரண்டல் கொடுமையை ஆராய்ந்து பல விவரங்களைக் கொடுத்தனர். ஆங்கிலேய ஆட்சியின் வரிக் கொள்கை, வியாபாரக் கொள்கை, மார்க்கட் கொள்ளை—முதலியவைகளைப் பற்றி ஆய்வு செய்து ஆண்டு தோறும் இந்தியாவிலிருந்து எவ்வளவு செல்வம் கொள்ளை கொண்டு செல்லப்படுகிறது; அதனால் இந்தியா ஆண்டு தோறும் எவ்வாறு ஏழ்மையாகி வருகிறது என்பதை விவரித்தனர்.

மீண்டும் விவசாயிகளிடம் 19—ஆம் நூற்றாண்டின் இறுதியிலும், 20ஆம்நூற்றாண்டின் தொடக்கத்திலும் கொந்தளிப்பு வெடித்தது. தேசிய இயக்கத்தில் தீவிரவாதிகள் முன்வர ஆரம்பித்தார்கள். ஐரோப்பாவில் இந்தக்காலத்தில் நிலப் பிரபுக்களுக்கும் மன்னராட்சி முறைக்கும் எதிராக மிகவும்

விரிவாக ஜனநாயக இயக்கம் பரவி வெற்றி கண்டிருந்தது. முதலாளித்துவம் வளர்ந்து நிலை பெற்றுக் கொண்டிருந்தது.

1905-ஆம் ஆண்டில் வங்காளப் பிரிவினையை எதிர்த்து மிகப் பெரிய அளவில் போராட்டம் வெடித்தது. இதில் விவசாயிகளும் குறிப்பாக கிராமப்புற இளைஞர்களும் நகர்ப்புறங்களில் இருந்த படித்த இளைஞர்களும் ஈடுபட்டனர்.

ஐரோப்பாவில் அரசியல் கட்சிகள் தோன்றி வளர்ந்து மக்களுக்கு அரசியல் அறிவை ஊட்டியிருந்தது. தொழிலாளர் இயக்கமும் வளர்ச்சி பெற்று புரட்சிகரப் போராட்டங்கள் நடந்து கொண்டிருந்தன.

1847-ஆம் ஆண்டில் காரல்மார்க்ஸ் தலைமையில் கம்யூனிஸ்ட் லீக் தோன்றியது. 1848—ஆம் ஆண்டில் கம்யூனிஸ்ட் அறிக்கை வெளியிடப்பட்டது. பிரான்சிலும் ஜெர்மனியிலும் புதிய புரட்சிகள் வெடித்தன. இங்கிலாந்து தேசத்திலும் சார்ட்டிஸ்ட் இயக்கம் என்னும் பெயரில் தொழிலாளர் இயக்கம் மிகப் பெரிய இயக்கமாக வளர்ச்சி பெற்றிருந்தது.

1864-ஆம் ஆண்டில் முதலாவது உலகத் தொழிலாளர் அமைப்பு மார்க்ஸ், ஏங்கல்ஸ் தலைமையில் தோன்றியது. 1871-ம் ஆண்டில் உலகின் முதலாவது பாட்டாளி வர்க்கப் புரட்சி -வீரம் மிக்க பாரிஸ் கம்யூன் நடந்தது. அந்த வீரமிக்க போராட்டம் ஐரோப்பாவையே குலுக்கியது. ஐரோப்பா முழுவதிலும் தொழிலாளர் இயக்கம் [illegible] இரண்டாவது அகிலத்தின் கீழ் பெரிய சமூக ஜனநாயகக் கட்சிகள் தோன்றி வளர்ந்தன.

20-ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் தொழிலாளர் கட்சிகள் லெனின் தலைமையில் புதிய புரட்சிகரத் தன்மையைப் பெற்றன.

1905-ஆம் ஆண்டில் ரஷ்யாவில் முதலாவது ஜனநாயகப் புரட்சி வெடித்தது.

அந்தப் போராட்ட அலை கிழக்கு நாடுகள் வரையிலும் அடித்தது.

இந்த நேரத்தில் தான் இந்திய நாட்டிலும் வங்காளப் பிரிவினை எதிர்ப்பு இயக்கம், தேசிய இயக்கத்தில் தீவிர வாதிகளின் தோற்றம், ஐரோப்பியப் புரட்சிகரத் தொழிலாளர் இயக்கத்தின் தாக்கம், தூத்துக்குடி கோரல் மில் தொழிலாளர்கள் வ.உ. சிதம்பரம், சுப்ரமணிய சிவா

தலைமையில் நடத்திய போராட்டம், பம்பாயில் திலகர் கைது செய்யப்பட்டதைக் கண்டித்து நடந்த ஆலைத் தொழிலாளர் வேலை நிறுத்தம் முதலிய நிகழ்ச்சிகள் தொடர்கின்றன. இவை கிராமப்புற மக்களிடம் புதிய உணர்வுகளை உண்டாக்குகின்றன.

1914 ஆம் ஆண்டில் முதலாவது உலகப் போர் தொடங்கியது. போருக்குப் போட வேண்டிய தீனிக்காக இந்திய விவசாயிகள் ஆங்கிலேயர் ஆட்சியால் இன்னும் அதிகமாக சுரண்டப்படுகிறார்கள் ஏராளமான இந்திய கிராமப்புற இளைஞர்கள் பிரிட்டிஷ் இந்திய ராணுவத்தில் சேர்ந்து பயிற்சி பெற்றார்கள்.

யுத்த முடிவில் இந்தியாவில் புதிய தேசீயப் போராட்டங்கள் வெடித்தன. கிலாபத் இயக்கம், ஒத்துழையாமை இயக்கம், தொழிலாளர் இயக்கங்கள், புரட்சிகரமான போராட்டங்கள் முதலியவை எல்லாம் கிராமப்புற இளைஞர்களிடம் புதிய எழுச்சிகளை உண்டாக்கின.

ஆனால் இப்போது, தேசீய இயக்கத்தின் தலைமையை மகாத்மா காந்தி ஏற்று தேசீய இயக்கத்தை வெகு ஜனஇயக்கமாக மாற்றினார். இண்டிகோ விவசாயிகளின் இயக்கம், வரிகொடா இயக்கம் முதலியவை இணைந்தன. இந்திய தேசீய காங்கிரஸின் மகாசபைகளின் முக்கிய தீர்மானங்களில் விவசாயிகள் பிரச்னைகளும் முக்கிய இடம் பெற்றன. கிராமப்புற மக்கள், குறிப்பாக நடுத்தர விவசாயிகள் காங்கிரஸ் மகா சபையின் பால் அதிகமான அளவில் ஈர்க்கப்பட்டனர். 1917—ஆம் ஆண்டு நிகழ்ந்த மகத்தான ரஷ்யப் புரட்சிக்குப் பின்னர் இந்தியாவின் அரசியலிலும் அரசியல் இயக்கத்திலும் ஒரு புதிய வேகம் ஏற்பட்டது.

1920—ஆம் ஆண்டில் அகில இந்திய தொழிற்சங்க காங்கிரஸ் (ஏ.ஐ.டி.யு.சி) என்னும் பெயரில் முதலாவது சுயேச்சையான தொழிலாளர் அமைப்பு தோன்றியது. அதைத் தொடர்ந்து ஆலைத் தொழிலாளர்கள், நகர்ப்புறத் தொழிலாளர்களின் வர்க்க அமைப்புகளாக பல தொழிற்சங்கங்கள் தோன்றின. தொழிலாளி வர்க்கத்தின் ஸ்தாபன ரீதியான இயக்கமும் அமைப்புக்களும் வளரத் தொடங்கின. தொழிலாளர்கள் தங்களுடைய சொந்தக் கோரிக்கைகளுக்காக மட்டுமல்லாமல் நாட்டின் சுதந்திரத்திற்காகவும் அந்நிய ஆட்சியை எதிர்த்தும் குரல் கொடுத்தார்கள். அகில இந்தியத் தொழிற்சங்க காங்கிரஸ்—ம் தொழிலாளிவர்க்கத்தின் உரிமைகளுக்காகவும், நாட்டின் சுதந்திரத்திற்காகவும் போராடுவதைத் தனது லட்சியமாக அறிவித்தது.

தேசீய விடுதலைப் போராட்டத்தில் தொழிலாளா வர்க்கமும் பங்கு கொள்ளத் தொடங்கிய போது சுதந்திரப் போராட்டத்திற்கு ஒரு புதிய தன்மையும் ஏற்பட்டது. தொழிலாளி வர்க்க இயக்கத்தின் வளர்ச்சியை ஒட்டி இந்தியாவின் முக்கிய நகரங்களில் பம்பாய், சென்னை கல்கத்தா, கான்பூர், லாகூர் முதலிய இடங்களில் கம்யூனிஸ்ட் குழுக்கள் தோன்றின.

தொழிலாளர்களையும் விவசாயிகளையும் விடுதலைப் போராட்டத்தில் ஈர்க்க வேண்டும் என்னும் கருத்து வலுவாக வளர்ந்தது. கிசான் மஜ்தூர் கட்சி என்னும் பெயர்களில் விவசாயிகள் தொழிலாளர் கட்சிகளும் தோன்றின. மேலும் அந்தக் கருத்து வளர்ந்தது.

1925 ஆம் ஆண்டு இந்தியக் கம்யூனிஸ்ட் . கட்சி தோன்றியது. உலகக் கம்யூனிஸ்ட் இயக்கத்தின் ஒரு பகுதியாக, மூன்றாவது அகிலத்தின் அங்கமாக இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி தோன்றியது. பரிபூரண சுதந்திரம், (முழுமையான நாட்டு விடுதலை) விடுதலைப் போராட்டத்தில் தொழிலாளி விவசாயிகளின் பங்கு, விஞ்ஞான சோஷலிஸத்தின் திசை வழி முதலிய கருத்துக்களை இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி முன்வைத்தது.

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி ஆங்கிலேயர் ஆட்சியால் தடை செய்யப்பட்டது. அக்கட்சியின் தலைவர்கள் மீது சதி வழக்குகள் போடப்பட்டு அவர்கள் சிறையில் வைக்கப்பட்டனர். சதி வழக்குகள் நடைபெற்றபோது நீதி மன்றங்களில் அவர்கள் கொடுத்த வாக்கு மூலங்களே அவர்களுடைய கொள்கை அறிக்கைகளாகப் பல பத்திரிகைகளில் வெளியிடப்பட்டு பிரபலமடைந்து பரவின.

1928—29 ஆம் ஆண்டுகளில் ஏற்பட்ட உலக முதலாளித்துவப் பொருளாதார நெருக்கடி பிரிட்டிஷ் இந்தியாவின் பொருளாதாரத்தையும் மிகவும் கடுமையாக பாதித்தது. அதில் இந்திய விவசாயிகளுக்கு ஏற்பட்ட வீழ்ச்சி கடுமையானது. லட்சக்கணக்கான விவசாயிகள் திவாலானார்கள். அவர்களுடைய உற்பத்திப் பொருள்கள் அசையவில்லை. வாங்குவாரின்றித் தேங்கிக் குவிந்து விட்டது. இந்த வியாபார மந்தம், விவசாயிகளை படு நாசத்தில் தள்ளிவிட்டது. விவசாயிகள் எல்லாம் கடனாளிகளாகி, நிலத்தையே விற்றுக் கடன் கட்ட வேண்டியதாயிற்று. வரி கட்ட முடியாமல் கொஞ்ச நஞ்சம் இருந்த சொத்துக்களையும் ஆடு மாடுகளையும் வீட்டுக் கதவு நிலைகளையும் ஜப்தியில் இழந்தார்கள், சுதேசி மன்னர்களின் ஆட்சியின் கீழும் ஜமீன்தார்களின் நிர்வாகத்திலும் இருந்த விவசாயிகள் இன்னும் அதிகமாகக் கஷ்டப்பட்டார்கள்.

உலக முதலாளித்துவப் பொருளாதார நெருக்கடியின் பாதிப்புகளும், அந்நிய ஆட்சியின் கருணையில்லாத நிர்வாகத்தின் கொடுமையினால் ஏற்பட்ட பாதிப்புகளும் தேசீய விடுதலை இயக்கத்தின் புதிய இரண்டாவது கட்டத்தின் வேகமும் ஒத்துழையாமை, அந்நியத்துணி நிராகரிப்பு, உப்புசத்தியாக்கிரகம், கள்ளுக்கடை மறியல் முதலிய பல போராட்டங்களும் இந்திய விவசாயிகளிடத்தில் புதிய விழிப்புணர்வை உண்டாக்கின.

ஜமீன்எதிர்ப்புப்போராட்டங்கள் வெடித்தன. விவசாயிகளின் கூட்டங்களும் மாநாடுகளும் பலஇடங்களில் நடைபெற்றன. விவசாயிகளும் தேசீய அளவில் ஸ்தாபன ரீதியில் ஒன்று சேரவேண்டும் என்னும் உணர்வு பலப்படத் தொடங்கியது.

தேசீயப் போராட்டத்திற்குப் பின்னர் புதிய அரசியல் சீர் திருத்தங்களுக்கான பேச்சு வார்த்தைகள் தொடங்கின. புதிய அரசியல் சட்டம் கொண்டு வருவதாக பிரிட்டிஷ் இந்திய அரசு அறிவித்தது. அந்த அரை குறையான சமஷ்டி அரசியல் சட்டம் போதாது, முழு சுதந்திரம் வேண்டும், பிரஜாஉரிமைகள் வழங்கப்பட வேண்டும், ஜமீன்தாரி முறை ஒழிக்கப்படவேண்டும். விவசாயிகளுக்குக் கடன் நிவாரணம் கிடைக்கவேண்டும். வரிக்கொடுமைகள் குறைக்கப்பட வேண்டும் என்னும் கோரிக்கைகள்எழுந்தன. விவசாயிகளுக்கு அகில இந்திய அளவில் ஒரு அமைப்பு வேண்டும் என்னும் முயற்சி ஏற்பட்டது.

1936—ஆம் ஆண்டில் உத்தரப்பிரதேசத்தில் பாரா பங்கி என்னுமிடத்தில் அகில இந்திய கிசான்சபா என்னும் பெயரில் அகில இந்திய விவசாயிகள் சங்கம் ஆரம்பிக்கப் பட்டது.

விவசாயிகளின் கோரிக்கைகளுக்காகவும் நாட்டின் முழு விடுதலைக்காகவும் போராடுவது அகில இந்திய விவசாயிகள் சங்கத்தின் லட்சியமாக அறிவிக்கப்பட்டது. இந்திய நாட்டின் வரலாற்றில் முதல் தடவையாக விவசாயிகளுக்கு ஒரு சுயேச்சையான, தங்கள் கோரிக்கைகளைத் தொகுத்து ஸ்தாபன ரீதியான இயக்கத்தை நடத்துவதற்கான ஒரு அகில இந்திய அளவிலான அமைப்பு ஏற்பட்டது.

1936 ஆம் ஆண்டில் அகில இந்திய விவசாயிகள் சங்கம் அமைந்த பின்னர் நாட்டின் பல பகுதிகளிலும் அதன் கிளைகள் விரிவடைந்தன. ஆண்டு தோறும் பல இடங்களிலும் விவசாயிகள் சங்கத்தின் பேரவைக் கூட்டங்கள் மாநாடுகள் நடந்தன. அவைகளில் எல்லாம் நேரடியாகவே விவசாயிகள் கலந்து கொண்டார்கள். இந்த மாநாடுகள்,

பேரவைகள், அமைப்பு நிலைக்கூட்டங்களில் விவசாயிகளின் பிரச்சனைகள், கோரிக்கைகள், விவசாயப் பொருளாதாரத்தைப்பற்றிய ஆய்வுரைகள், விவசாயிகள்பால், விவசாயத் துறையின் பால் அரசின் கொள்கைகள் முதலியவை பற்றி விவாதிக்கப்பட்டன. பல தீர்மானங்கள் நிறைவேற்றப் பட்டன.

விவசாயிகள் மீதான வரிக் கொள்கையைக் கண்டித்து, யிவசாயிகளுக்குக் கடன் நிவாரணம் கோரி, சாகுபடியாளர்களுக்குப் பாதுகாப்பு கோரி, நில வெளியேற்றத்தைத் தடுக்கக்கோரி, நியாய வாரம் கோரி, உழுபவனுக்கே நிலம் வேண்டும் என்று கேட்டு, ஜமீன் இனாம் முறைகளை ஒழிக்கக் கோரி, முழுமையான நிலச் சீர்திருத்தம் கோரி, நீர்ப்பாசன வசதிகளை அதிகரிக்கக் கோரி, விவசாயிகளின் விளைபொருள்களுக்கு நியாயமான விலை கோரி, விவசாயிகளுக்கும் இதர உழைக்கும் மக்கள் பகுதிகளுக்கும், முழுமையான ஜனநாயக உரிமைகள், அரசியல் உரிமைகள் கோரி, அந்நிய ஆட்சியிலிருந்து முழுமையான விடுதலை கோரித் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. நாடெங்கிலும், உலகின் எந்தப் பகுதியிலும் விவசாயிகள் நடத்தும் போராட்டங்களுக்கு ஆதரவு தெரிவித்தும் அரசாங்கத்தின் அடக்குமுறைச் சட்டங்களைக் கண்டித்தும், போலீஸின் அடக்கு முறைக் கொடுமைகளைக் கண்டித்தும் பல தீர்மானங்கள் முன் வைக்கப்பட்டன. பல கிளர்ச்சிகளுக்கும் போராட்டங்களுக்கும் திட்டமிடப் பட்டன.

தேசியக் காங்கிரஸ் மகாசபைக் கூட்டங்களிலும் தொழிற் சங்க காங்கிரஸின் கூட்டங்களிலும் விவசாயிகளுக்கு ஆதரவான தீர்மானங்கள் முன் மொழியப்பட்டன. தொழிலாளி விவசாயி ஒற்றுமை குறித்தும் ஒன்றுபட்ட இயக்கம் பற்றியும் பல தீர்மானங்கள் நிறைவேற்றப் பட்டன.

1935ஆம் ஆண்டில் ஆங்கிலேய ஆட்சியாளர்களின் சமஷ்டி அரசியல் சட்டத்தை காங்கிரஸ்மகாசபை ஆரம்பத்தில் எதிர்த்த போதிலும், பின்னர் அதை ஏற்று 1937ஆம் ஆண்டில் நாடு முழுவதிலும் மாநில சட்ட மன்றங்களுக்கும், மத்திய சட்ட சபைக்கும் தேர்தல்கள் நடைபெற்றன. இந்தத் தேர்தலில் குறுகிய வாக்கு முறையே இருந்தது. படித்தவர்கள், பட்டதாரிகள் ஆகியவர்களுக்கு மட்டுமே ஓட்டுரிமை இருந்தது. இந்தத் தேர்தல்கள் சுதேதி சமஸ்தானங்கள் தவிர்த்த நேரடியான பிரிட்டிஷ் இந்திய ஆட்சியின் கீழ் இருந்த மாகாணங்களில் தான் நடைபெற்றது.

அப்போதிருந்த முக்கிய மாகாணங்கள் சென்னை பம்பாய், வங்காளம், அஸ்ஸாம், பீகார், ஒரிஸா, மத்திய மாகாணம்

ஐக்கிய மாகாணம் (இப்போதைய உத்திரப் பிரதேசம்) பஞ்சாப்,சிந்து, எல்லைப்புற மாகாணம் ஆகியவைகளாகும்.

சென்னை மாகாணம்என்பதுகன்னியாகுமரி,புதுக்கோட்டை செங்கோட்டை தவிர பாக்கியுள்ள தமிழகம் முழுவதும், இன்றைய கேரளத்தில் உள்ள மலபார்பகுதியும், இன்றைய கர் நாடகத்தில் உள்ள தென்கன்னடம், பல்லாரி பகுதியும் இன்றைய ஆந்திரப்பிரதேசத்திலுள்ள ராயலசீமா,ஆந்திரா பகுதிகளும், இன்றைய ஒரிசாவில்உள்ள கஞ்சம் மாவட்டப் பகுதியும் கொண்டதாக இருந்தது.

1937ஆம் ஆண்டு நடைபெற்ற குறுகிய வாக்குரிமைகளைக்கொண்ட தேர்தல்களில் பெரும்பாலான மாகாணங்களில் காங்கிரஸ் மகாசபை வெற்றிபெற்றது. குறிப்பாக சென்னை, பம்பாய், மத்திய மாகாணம்,ஐக்கியமாகாணம், பீகார், அஸ்ஸாம், வடமேற்கு எல்லைப்புற மாகாணம் முதலியவற்றில் காங்கிரஸ் வெற்றி பெற்றது

சென்னை மாகாணத்தில் 1937ஆம் ஆண்டிற்கு முன் ஜஸ்டிஸ் கட்சியின் ஆட்சி இருந்தது. ஜஸ்டிஸ் கட்சியில் பெரிய ஜமீன் தார்கள்,பெரிய வர்த்தகர்கள், தாகுமுதலாளிகள் ஆங்கிலேயர் ஆட்சியுடன் சார்ந்திருந்த சிலபடிப்பாளிகள் ஆகியோர் இருந்தார்கள். பொதுவாக ஜஸ்டிஸ்கட்சி ஜமீதார்களின் கட்சியாகவே, ஆங்கிலேயர் ஆட்சிக்கு ஆதரவான கட்சியாகவே மக்கள் கருதினார்கள். இந்த ஜஸ்டிஸ் கட்சியின் அலுவலக செயலாளர் என்ற விதத்தில்தான் சி. என். அண்ணாதுரை முதன்முதலில் அரசியலில் ஈடுபட்டார்.

சென்னை மாகாணத்தில் காங்கிரஸ்கட்சி மிதவாதிகளின் தலைமைப்பிடிப்பில் இருந்தது. காங்கிரஸ் கட்சியின் தலைமையில் சேலம் விஜயராகவாச்சாரியார், இராமநாதபுரம் சீனிவாச அய்யங்கார், சத்தியமூர்த்தி, சக்கரவர்த்தி ராஜகோபாலாச்சாரியார், திருச்சி டி.எஸ்.எஸ். ராஜன், மதுரை வைத்தியநாதய்யர், டங்குடூரி பிரகாசம் பந்துலு முதலிய பெரிய தலைவர்கள் காங்கிரஸ் கட்சியின் தலைமையில் இருந்தார்கள்.

இவர்கள் எல்லாம் பெரிய படிப்பாளிகளாகவும் அறிவாளிகளாகவும், தேசீய விடுதலைப் போராட்டத்தில் தங்களை அர்ப்பணித்துக் கொண்டவர்களாகவும் இருந்தார்கள். இருப்பினும் இவர்களை பிராமணத் தலைவர்கள் என்று ஜஸ்டிஸ் கட்சியினர் கூறினார்கள். காங்கிரஸ் கட்சியில் பிராமணர்கள் மட்டுமல்ல, திரு.வி. கல்யாண சுந்தர முதலியார், திரு.வி. சக்கரைச் செட்டியார், டாக்டர் வரதராஜுலு நாயுடு, முத்துரங்க முதலியார், வேலூர் குப்புசாமி முதலியார், ஓமந்தூர் ராமசாமி ரெட்டியார்,

வேலூர் உபயதுல்லா, டாக்டர் சுப்பராயன், ஈரோடு ராமசாமி நாயக்கர், அவினாசிலிங்கம் செட்டியார், சி. சுப்ரமணியம், முத்துராமலிங்கத் தேவர், பி.எஸ். குமார சாமி ராஜா, காமராஜர், எஸ். ராமசாமி நாயுடு, ரா. கிருஷ்ணசாமி நாயுடு, பக்தவச்சலம், வி. முனுசாமி பிள்ளை, கோபால் ரெட்டி, நீலம் சஞ்சீவி ரெட்டி பேராசிரியர் ரெங்கா, மாதவ மேனன் முதலிய சிறந்த தேச பக்தர்களும் முக்கிய இடம் பெற்றிருந்தார்கள். இவர்களில் பெரும்பாலோர், மேல்தட்டில் இருந்த விவசாயக் குடும்பங்களைச் சேர்ந்தவர்கள்.

இந்தக்காலத்தில் இந்தியக் கம்யூனிஸ்ட்கட்சி தடை செய்யப்பட்டிருந்தது. மீரத் சதிவழக்கு முதலிய சதி வழக்குகளில் கொடுமையாக தண்டிக்கப்பட்டு சிறைவாசம் முடித்து வெளியே வந்த கம்யூனிஸ்ட் தலைவர்கள், இந்திய தேசீய காங்கிரஸ் கட்சியில் இடதுசாரிகளாகவும் சோஷலிசக் கருத்துக்களையும் கொண்டிருந்த ஜெயப் பிரகாஷ் நாராயணன், அச்சுதபட்டவர்த்தனன், அசோக் மேத்தா முதலியவர்களுடன் சேர்ந்து 1934 ஆம் ஆண்டில் காங்கிரஸ் மகாசபைக்குள்ளேயே'காங்கிரஸ் சோஷலிஷ்ட் கட்சி என்னும் அமைப்பை உண்டாக்கி, தீவிரமான காங் கிரஸ் காரர்களாகவும், தொழிலாளர் விவசாயிகளின் கோரிக்கைகளை வலியுறுத்துபவர்களாகவும், சோஷலிசக் கருத்துக்களை பரப்புபவர்களாகவும் பணியாற்றினார்கள்.

காங்கிரஸ் சோஷலிஸ்ட் கட்சியில் இருந்த முக்கிய கம்யூனிஸ்ட் தலைவர்களில் டாக்டர் இஜட்.ஏ. அகமது, பங்கிம் முக்கர்ஜி, ஏ.கே. கோபாலன், இ,எம்.எஸ். நம் பூதிரிபாத், பி.சுந்தரய்யா, சோகன் சிங் ஜோஷ் பவானி சென் பி. சீனிவாசராவ் பாப்பாங்குளம் சொக்கலிங்கம் பிள்ளை முதலியோர்அகிலஇந்திய விவசாயிகள் சங்கத்தின் தலைவர்கள்பொதுச்செயலாளர்கள்பொறுப்பில்பணியாற்றி யவர்களாவர். இவர்களுடன் சகஜானந்த சரஸ்வதி, பேரா சிரியர் என் ஜி. ரங்கா இந்துலால்யக்னிக்.முதலிய காங்கிரஸ், சோசலிஸ்ட் தலைவர்களும் அகில இந்திய விவசாயிகள் சங் கத்தில் முக்கிய தலைவர்களாகப் பணியாற்றியுள்ளார்கள்.

காங்கிரஸ் சோஷலிஸ்ட் கட்சி சென்னை மாகாணத்தில் ஒரு வலுவான அமைப்பாக இருந்து காங்கிரஸ் கட்சிக்கு உள்ளே யும் வெளியேயும் பணியாற்றினார்கள். ப. ஜீவானந்தம், பி. ராமமூர்த்தி சீனிவாசராவ், பி. சுந்தரய்யா, சி. ராஜேஸ்வரராவ், சி.எஸ். சுப்ரமணியம், இ.எம்.எஸ் நம் பூதிரிபாத், ஏ.கே. கோபாலன் முதலிய கம்யூனிஸ்ட் தலைவர்கள் சென்னை மாகாணத்தில் இருந்த காங்கிரஸ் சோஷலிஸ்ட் கட்சி அமைப்புகளின் முக்கிய தலைவர்களாக வும், காங்கிரஸ் கட்சிக்குள் முக்கிய பிரச்சாரகர்களாகவும் இருந்தார்கள்.

சென்னை மாகாணத்தில் தமிழ் நாடு, கேரளம், ஆந்திரா ஆகிய மூன்று பகுதிகளிலும் காங்கிரஸ் சோஷலிட் கட்சியில் மேலே குறிப்பிட்டுள்ள கம்யூனிஸ்ட் தலைவர்களே முக்கிய தலைமைப் பொறுப்புகளில் இருந்து பணியாற்றி வந்தார்கள். இந்த சமயத்தில் தான் தமிழ் நாட்டில் காங்கிரஸ் சோஷலிஸ்ட் கட்சியின் பத்திரிகையாக 'ஜன சக்தி' தொடங்கப்பட்டது. 1937 தேர்தல் முடிந்து சென்னை மாகாணத்தில் காங்கிரஸ் வெற்றி பெற்று, சி. ராஜ கோபாலாச்சாரியார் தலைமையில் முதலாவது காங்கிரஸ் மந்திரி சபை அமைக்கப்பட்ட பின்னரே அது தொடங்கப் பட்டது.

காங்கிரஸ் சோஷலிஸ்ட்டு கட்சியின் பெயரில் செயல் பட்டு வந்த கம்யூனிஸ்ட் தலைவர்கள், சென்னை மாகாணத்தில் காங்கிரஸ் கட்சியின் பணிகளில் தீவிரமாகப் பங்காற்றினார்கள். முக்கியமாக தொழிலாளர்கள் விவசாயிகள் சம்பந்த மான பல தீர்மானங்களை உருவாக்குவதில், நிறைவேற்று வதில் முக்கிய பங்கு வகித்தார்கள். காங்கிரஸ் கட்சிக்கு ஒரு வெகு ஜன அடிப்படையைக் கொடுத்து பல முற்போக்கான கருத்துக்களைக் கொண்ட பார்வையைக் கொடுப்பதில் காங்கிரஸ் சோஷலிஸ்ட் கட்சித் தலைவர்கள் முக்கிய பங்கு ஆற்றினார்கள்.

1936-37 ஆம் ஆண்டில் நடைபெற்ற தேர்தல் பிரச்சாரத் தில் ஜீவானந்தம், பி ராமமூர்த்தி இ எம்.எஸ். நம்பூதிரி பாத்,ஏ.கே.கோபாலன், பி. சுந்தரய்யா முதலிய காங்கிரஸ் சோஷலிஸ்ட் கம்யூனிஸ்ட் மற்றும் தொழிற்சங்க, விவசாயி கள் சங்கத்தலைவர்கள் மிகவும் முக்கியமான பங்கை ஆற்றி னார்கள். இவர்கள் ஏராளமான தேர்தல் பிரச்சாரப் பொதுக் கூட்டங்களில் பங்கு கொண்டதால் தேர்தல் பிரச்சாரத்தில் தொழிலாளர்கள் விவசாயிகளின் பிரச்னை களும் கோரிக்கைகளும் முக்கிய இடம் பெற்றன. குறிப்பாக வரிக்கொடுமை, கடன் சுமை, ஜமீன்தாரி முறையின் சுரண்டல் கொடுமை முதலிய பிரச்னைகள் தேர்தல் பிரச் சாரத்தில் முக்கிய இடம் பெற்றிருந்தன. இந்த தேர்தல் பிரச்சார இயக்கம் விவசாயிகளின் கோரிக்கைகளுக்கும் பிரச்னைகளுக்கும் ஒரு புதிய பரிமாணத்தைக் கொடுத்தது. காங்கிரஸ் கட்சிக்கும் ஒரு புதிய விவசாய சாயலைக் கொடுத்தது. காங்கிரஸ் கட்சியின் செல்வாக்குப் பிடிப்பில் பெரும்பாலான விவசாயிகள் வருவதற்கான காரணங்களில் ஒன்றாகவும் அது அமைந்தது.

தமிழகத்தில் பெரியார் ஈ.வெ. ராமசாமி அவர்கள் 1930— ஆம் ஆண்டிற்கு முன் இந்திய தேசீய காங்கிரஸில் தமிழ் நாட்டில் முக்கிய பொறுப்பில் இருந்தார். சாதிப் பாகுபாடு பற்றி அவருக்கும் காங்கிரஸ் கட்சியில் இருந்த இதர

தலைவர்களுக்கும் தகராறு ஏற்பட்டு அவர் காங்கிரஸ் கட்சியிலிருந்து பிரிந்து தனியாக சுயமரியாதை இயக்கத்தையும் பகுத்தறிவு இயக்கத்தையும் தொடங்கினார். இந்த சுயமரியாதை பகுத்தறிவு இயக்கத்தில் சிங்காரவேலு செட்டியார், ஜீவானந்தம் போன்ற கம்யூனிஸ்ட் தலைவர்கள் முழுமையாக ஆரம்பத்தில் ஒத்துழைத்தார்கள். அவர்கள் சுயமரியாதை பகுத்தறிவு இயக்கத்துடன் தொழிலாளர்கள் விவசாயிகள் பிரச்னைகள் கோரிக்கைகளையும் சோஷலிஸ அரசியல் பொருளாதார சமுதாயக் கருத்துக்களையும் இணைத்தார்கள். அதனால் பெரிய பணக்காரர்கள், வர்த்தகர்கள், ஜமீன்தாரர்களின் எதிர்ப்பு, ஆங்கிலேயர் ஆட்சியின் எதிர்ப்பு ஏற்பட்டது. பெரியார் ஈ வெ. ராமசாமி அந்த எதிர்ப்பை ஏற்க விரும்பவில்லை. அதனால் அவருக்கும் ஜீவானந்தம், சிங்காரவேலு செட்டியார் ஆகியோருக்கும் கருத்து வேறுபாடு ஏற்பட்டு தனியாகப் பிரிந்து விட்டார்கள்.

பெரியார் ஈ.வெ. ராமசாமி அவர்கள், தமது சுத்தமான சுயமரியாதை—பகுத்தறிவுக் கருத்துபிரச்சாரப் பணிகளை மட்டும் நடத்தினார். இந்தப் பிரச்சாரத்திற்கு ஆங்கிலேய ஆட்சியின் ஆதரவும் பணக்காரர்களின் ஆதரவும் தேவை என்று கருதினார். அதனால் அவர் 1936—37 ஆண்டுகளில் பிராமண எதிர்ப்பு என்ற பெயரால் தேர்தல்களில் ஜஸ்டிஸ் கட்சிக்கு ஆதரவாகப் பிரச்சாரம் செய்தார், அப்போது ஈ.வெ. ராமசாமிக்கும் சி.என். அண்ணாதுரைக்கும் மிகவும் நெருக்கமான தொடர்பு ஏற்பட்டது.

1937 இல் நடைபெற்ற தேர்தல்களில் ஜஸ்டிஸ் கட்சி தோல்வியடைந்தது. இந்தத் தோல்வி ஜமீன்தாரர்களின் தோல்வி—பிரிட்டிஷ் ஆட்சியாளர்களின் தோல்வி என்று மக்கள் கருதினார்கள். காங்கிரஸ் கட்சியின் வெற்றியை விவசாயிகளின் வெற்றியாக, தேசீய விடுதலை இயக்கத்தின் வெறியாக மக்கள் கருதினார்கள். இந்தத் தேர்தல் வெற்றி இந்திய விவசாயிகளிடத்தில் ஒரு புதிய வேகத்தை ஏற்படுத்தியது.

1937ஆம் ஆண்டில் சென்னை மாகாணத்தில் அமைந்த காங்கிரஸ் மந்திரிசபை ஒருகடன் நிவாரணச்சட்டத்தைக் கொண்டு வந்தது. இச்சட்டம் விவசாயிகளுக்கு ஒரு குறிப்பிட்ட அளவில் நிவாரணத்தைக்கொடுத்து, முதல் தடவையாக இந்தியநாட்டில் விவசாயிகள் வாங்கும் கடனுக்கு வட்டி எவ்வளவு வாங்க வேண்டும் (12.5 சதவீதம்) என்று சட்டம்வந்தது. இதே போன்ற சட்டங்கள் காங்கிரஸ் ஆட்சி நடந்த மாநிலங்களிலும் கொண்டு வரப்பட்டன. இதனால் காங்கிரஸ் மந்திரிசபையை விவசாயிகள் தங்களுடைய அரசு என்று கருதினார்கள்.

1939ம் ஆண்டில் இரண்டாவது உலகப்போர் தொடங்கியது. யுத்தத்தை ஆதரிப்பது, யுத்தத்திற்கு ஒத்துழைப்பது பற்றி காங்கிரஸ் தலைமைக்கும் பிரிட்டிஷ் ஆட்சியாளர்களுக்கும் கருத்து வேற்றுமை ஏற்பட்டது. தங்களைக் கேட்காமல், தங்கள்சம்மதம் பெறாமல் பிரிட்டிஷ் வைசிராய் இந்தியாவையும் போர்ப்பிரகடனத்தில் ஈடுபடுத்தி விட்டார் என்னும் காரணத்தை வைத்து எல்லா மாகாணங்களிலும் காங்கிரஸ் மந்திரிசபைகள் ராஜினாமா செய்துவிட்டன.

இந்தியாவை இந்திய மக்களுடைய சம்மதமில்லாமல் பிரிட்டிஷ் ஆட்சியாளர்கள் யுத்தத்தில் ஈடுபடுத்தியதற்கு இந்தியாவில் இருந்த முக்கிய அரசியல் கட்சிகளிடம் எதிர்ப்பு இருந்தது. இந்திய தேசிய காங்கிரஸ் தலைவர்கள் தங்கள் ஆட்சேபணையைத் தெரிவித்துக்கொள்ளும் வகையில் தனிநபர் சத்தியாக்ரகம் நடத்தினார்கள்.

இந்தியக் கம்யூனிஸ்ட்கட்சி தீவிரமான யுத்த எதிர்ப்புப் பிரச்சாரத்தில் ஈடுபட்டது. பல நூற்றுக்கணக்கான கம்யூனிஸ்டுகள் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டார்கள். 1940ஆம் ஆண்டில் சென்னை மாகாணத்தில் கம்யூனிஸ்ட் தலைவர்கள் மீது சென்னை சதிவழக்கு, நெல்லை சதிவழக்கு, கோவை சதிவழக்கு என்னும் பெயரில்' மாட்சிமை பொருந்திய பிரிட்டிஷ் மன்னராட்சியைக் கவிழ்ப்பதற்குச்சதி செய்ததாக வழக்குத் தொடுத்தார்கள். கடும் தண்டனை விதித்தார்கள். காங்கிரஸ்காரர்கள் பலரும் தனிநபர் சத்தியாக்கிரகத்தில் கலந்து கொண்டு கைது செய்யப்பட்டுச் சிறை சென்றார்கள்.

1941—ஜூன்மாதம்நாஜி ஜெர்மனியின் படைகள் சோவியத் யூனியன் மீது படையெடுத்தன. சோவியத் யூனியன் போரில் ஈடுபட்டது.

ஜெர்மனியும் இத்தாலியும் ஜப்பானும் சேர்ந்து உலகை முழுவதும் கைப்பற்றி பங்கு போட்டுக் கொள்ள போரில் தீவிரமாக இறங்கின. ஜெர்மனி ஐரோப்பா முழுவதையும் கைப்பற்றிக் கொண்டு சோவியத் நாட்டின் மீது படையெடுத்தது. சோவியத் யூனியன் முழுவதையும் கைப்பற்றி அராபிய நாடுகளைப் பிடித்து இந்தியாவையும் பிடிக்க திட்டம் போட்டது. இத்தாலி மத்தியதரைக்கடல் பகுதியையும் ஆப்பிரிக்காவையும் கைப்பற்றத் திட்டமிட்டிருந்தது. ஜப்பான் தென்கிழக்கு ஆசியா முழுவதையும் கைப்பற்றி அமெரிக்காவையும் பிடிக்க நினைத்திருந்தது. நாடு முழுவதும் ஒரு மனிதனைப் போல் திரண்டு எழுந்து நாஜிப் படைகளை எதிர்த்தது, சோவியத் யூனியன். நாஜி ஆக்கிரமிப்பில் சிக்குண்ட ஐரோப்பிய நாடுகளின் மக்கள் அனைவரும் ஒன்று திரண்டு பாசிச ஆக்கிரமிப்பை எதிர்த்து விடுதலைப் போரைத் தொடங்கினார்கள்.

இத்தாலிய பாசிசப்படைகளை எதிர்த்து எதியோப்பிய மக்களும் வட ஆப்பிரிக்க மக்களும் வீரப் போராட்டத்தை நடத்திக் கொண்டிருந்தனர். சீனமக்களும் கொரிய மக்களும் வியத்நாம் வீரர்களும் தென்கிழக்கு ஆசிய நாடுகளின் விடுதலை வீரர்களும் ஜப்பானிய ராணுவ வெறியர்களை எதிர்த்து வீரச்சமர் புரிந்து கொண்டிருந்தார்கள்.

உலகக்கம்யூனிஸ இயக்கம் உலகு தழுவிய பாசிஸ எதிர்ப்பு அணியைத்திரட்ட அறை கூவல் விடுத்தது. இந்த மாபெரும் பாசிஸ எதிர்ப்பு அணியில், சோவியத் யூனியன் ஐரோப்பிய மக்கள், சீனா, கொரியா, வியத்நாம் மற்றும் தென்கிழக் காசிய மக்கள் அணிதிரண்டு நின்றார்கள்.

யுத்தத்தின் தன்மை மாறிவிட்டது. ஏகாதிபத்திய யுத்த மாகத் தொடங்கியது இப்போது மக்கள் யுத்தமாக மாறி விட்டது. எனவே இந்தியாவும் இந்த உலக மக்களின் பாசிஸ எதிர்ப்பு அணியில் நிற்கவேண்டும் என்று கம்யூனிஸ்ட் கட்சி தனது கொள்கை அறிவிப்பைச் செய்தது.

காங்கிரஸ் கட்சியின் தலைவர்கள் பிரிட்டிஷ் ஆட்சியாளர்க் களுடன் நிபந்தனைகள் பேசிக்கொண்டு காலத்தை நீட்டிக் கொண்டிருந்தனர். 1942 ஆம் ஆண்டு ஆகஸ்டு 8—ம் தேதி வெள்ளையனே வெளியேறு என்ற தீர்மானத்தை நிறை வேற்றிப் போராட்டத்திற்கு அறை கூவல் விட்டனர். காங்கிரஸ் கட்சியில் ஒரு பிரிவு போராட்டத்தில் தீவிரமாக பங்கு கொண்டது. ஒரு பிரிவு நடு நிலைமை வகித்தது. ராஜ கோபாலாச்சாரியார் தலைமையில் மற்றொரு பிரிவினர் காங்கிரஸிலிருந்து ராஜினாமா செய்துவிட்டு யுத்த முயற்சி களை ஆதரித்தனர். சோவியத் நண்பர்கள் சங்க இயக்கத் தில் பங்கு கொண்டனர்.

காயிதே ஆஜம் முகமதலி ஜின்னா தலைமையில் இருந்த முஸ்லீம் லீக் யுத்த முயற்சிகளை ஆதரித்தது தமிழகத்தில் பெரியார் ஈ. வெ. ராமசாமி தலைமையில் சி. என். அண்ணாதுரையவர்களும் திராவிடர் கழகத்தின் மூலம் யுத்த முயற்சிகளை ஆதரித்தார்.

ஜஸ்டிஸ் கட்சி, அதிலிருந்த ஜமீன்தார்கள் தலைமை மூலம் மக்களுடைய ஆதரவைப்பெற முடியாது என்று அண்ணாதுரை கருதினார். பெரியார் தலைமையில் திராவிடர் கழகத்தில் சேர்ந்தார். ஜஸ்டிஸ் கட்சிக்காரர் களை ஜரிகைக்குல்லாக்காரர்கள் எனவும் வெள்ளைக் காரர்களின் பாதம் தாங்கி என்றும் வர்ணித்து திராவிடர் கழகம், ஜஸ்டிஸ் கட்சியுடன் தனக்குள்ள தொடர்பை நீக்கிக் கொள்ள வேண்டும் என்று திராவிடர்கழக மாநாட்டில் அண்ணாத்துரை கொண்டுவந்த தீர்மானம் நிறைவேறியது. இதுவும் கூட ஜமீன்தார்களுக்கு எதிராக

விவசாயிகளிடம் இருந்த உணர்வு எழுச்சியின் தாக்கமே யாகும்.

இரண்டாவது உலகயுத்த காலத்தில் பாசிச எதிர்ப்பு, சோவியத் ஆதரவுக்கருத்துக்களையும் முன்வைத்து பெரியார் தலைமையில் திராவிடர்கழகமும் யுத்தமுயற்சி களை ஆதரித்தது.

இந்தியக்கம்யூனிஸ்ட்கட்சி பாசிஸ எதிர்ப்பு யுத்தமுயற்சிக்கு ஆதரவு தெரிவித்து மக்கள் யுத்தம் என்று அறிவித்த போதிலும் இந்தியக்கம்யூனிஸ்ட் கட்சி மீதிருந்ததடை நீங்கவில்லை. சிறையில் இருந்த கம்யூனிஸ்டுகள் விடுதலை செய்யப்படவில்லை. இந்தியக்கம்யூனிஸ்ட்கட்சி மீதான தடை நீக்கப்படவேண்டும் என்றும் சிறையில் உள்ள கம்யூனிஸ்டுகள் விடுதலை செய்யப்பட வேண்டும் எனவும் உலகம் முழுவதிலும் இருந்த பாசிச எதிர்ப்பு சக்திகள் கிளர்ச்சி நடத்தின. பிரிட்டனில் பிரிடிஷ்கம்யூனிஸ்ட் கட்சியினர் லேபர் கட்சியின் முற்போக்குப் பிரிவினா பிரிட்டிஷ் தொழிற்சங்கத்தினர் முதலானோர் இந்தியக் கம்யூனிஸட் கட்சி மீதான தடையை நீக்க வேண்டும் எனக் கோரினர். இத்தகையகிளர்ச்சி காரணமாக 1942 ஜூலை மாதத்தில் இந்தியக்கம்யூனிஸ்ட் கட்சி மீதான தடை நீங்கியது.

தடை நீக்கப்பட்டதால் விரிவான முறையில் கம்யூனிஸ்டு கள் மக்களிடம் பணியாற்றுவதற்கான வாய்ப்புகள் ஏற்பட்டன.

1943–ஆம் ஆண்டில் தமிழ் நாட்டில் பல பகுதிகளில் இருந்த விவசாயிகள் சங்கங்களை ஒன்றுசேர்த்து தமிழ்நாடு விவசாயிகள் சங்கம் அமைக்கப் பட்டது. இது அகில இந்திய கிசான் சபாவின் கிளையாகச் செயல்பட்டது.

தமிழ் நாட்டில் மாநில அளவில் விவசாய சங்க அமைப்பு ஏற்பட்டதானது, தமிழகத்தின் விவசாயிகளின் இயக்கத் திற்கு புதிய வாய்ப்புகளை உண்டாக்கியது. தமிழ் நாடு விவசாயிகள் சங்கத்தின் மூலம் விவசாயிகள் இயக்கம் எல்லா மாவட்டங்களிலும் பரவியது.

தமிழ் நாட்டில் தஞ்சை இராமநாதபுரம், திருநெல்வேலி, மதுரை சேலம் தென்ஆற்காடு, திருச்சி முதலிய மாவட்டங் களில் நிலச்சுவான்தாரி முறை, ஜமீன்தாரி முறை, இனாம் தாரி முறைகளுக்கு எதிராக விவசாயிகள் இயக்கம் பரவியது.

தஞ்சை மாவட்டத்தில் பண்ணை அடிமை முறைகளை நிலச்சுவான்தார்களின் கொடுமைகளை சமுதாய இழிவு

களை எதிர்த்து விவசாயிகள் இயக்கம் விரிவாகப் பரவியது. இராமநாதபுரம் மாவட்டத்தில் ஜமீன் இனாம் முறைகளை எதிர்த்து உழுபவனுக்கு நிலம் வேண்டும் என்னும் கோரிக்கையை முன் வைத்து விவசாயிகள் இயக்கம் பரவியது. வாரம் குத்தகைக்கு சாகுபடி செய்யும் விவசாயி கள், நியாயமான வாரம் கோரியும், நிலத்திலிருந்து வெளி யேற்றுவதை நிறுத்தக் கோரியும் பல மாவட்டங்களிலும் விவசாயிகளுடைய இயக்கம் பரவியது.

யுத்தகாலத்தில் மக்களுக்கு உணவுப் பொருள்கள் மற்றும் இதர அத்தியாவசியப் பண்டங்கள் கிடைக்கவில்லை. குறிப் பாக கிராமப்புற மக்களுக்கு மிகவும் அதிகமான கஷ்டம் ஏற் பட்டது. பல இடங்களில் பஞ்ச நிலை ஏற்பட்டது. பற்றாக் குறை அதிகமாகி விலைவாசி உயரத் தொடங்கிற்று.

வங்கத்தில் கடும் பஞ்சம் ஏற்பட்டது. பட்டினிச் சாவுகள் பல இடங்களில் ஏற்படத் தொடங்கின. மக்களுக்கு, உணவு தானியம், துணி, மண்,எண்ணெய்,முதலிய அத்தியாவசியப் பண்டங்கள் கிடைப்பதற்கு, பதுக்கல்களைத் தடுப்பதற்கு, விவசாயி சங்க ஊழியர்களும் கம்யூனிஸ்டுகளும் மிகவும் தீவிரமான முறையில் பணியாற்றினார்கள். இதனால் பல மாவட்டங்களிலும் பகுதிகளிலும் விவசாய சங்க ஊழியர் களுக்கும் கம்யூனிஸ்டுகளுக்கும் கிராமப்புற மக்களிடையே, நல்ல தொடர்பு ஏற்பட்டது. நிவாரணப் பணிகளைச் செய்யும்போதே விவசாயிகளின் பொதுவான கோரிக்கை களைப் பற்றியும் நாட்டு விடுதலையைப் பற்றியும் கிராமப் புறமக்களிடத்தில் விவசாய சங்க ஊழியர்களும் கம்யூனிஸ்டு களும் எடுத்துக் கூறிவந்தார்கள். இந்தத் தொடர்பும் பிரச் சாரமும் யுத்த முடிவில் ஏற்பட்ட எழுச்சிக்கு அனுகூலமாக அமைந்தது.

**யுத்த பிற்கால எழுச்சி:**

1945 ஆம் ஆண்டில் மே மாதம் இரண்டாம் உலகப் போர் முடிந்தது. ஜெர்மனி, இத்தாலி, ஜப்பான் பாசிச அச்சு நாடு கள் முறியடிக்கப்பட்டன. நேச நாடுகள் வெற்றி பெற்றன. சோவியத்யூனியன் மகத்தான வெற்றி வாகை சூடியது. கிழக்கு ஐரோப்பிய நாடுகளில் போலந்து செக்கோஸ் லோவேகியா, ஹங்கேரிருமேனியா, பல்கேரியா, யுகோஸ் லாவியா, அல்பேனியா, ஜெர்மன் ஜன நாயகக் குடியரசு ஆகிய நாடுகளில் பாட்டாளி வர்க்கங்களின் தலைமையில் தொழிலாளி விவசாயி கூட்டணியின் தலைமையில் சோஷ லிஸ அரசுகள் அமைந்தன. மங்கோலியா, வடகொரியா, சீனா, வியத்நாம் முதலிய நாடுகளில் தொழிலாளி விவசாயி சக்திகள் பெரிய வெற்றிகளைப் பெற்றுக்கொண்டிருந்தன.

ஐரோப்பாவின் பல நாடுகளிலும் தொழிலாளர்களின்

பேரெழுச்சி ஏற்பட்டுக் கொண்டிருந்தது. பிரிட்டனிலேயே பெரு முதலாளித்துவ கன்சர்வேட்டிவ் கட்சி தோல்வியடைந்து லேபர் கட்சி வெற்றி பெற்றது. தென் கிழக்கு ஆசிய நாடுகளில் விடுதலைக் கிளர்ச்சி உச்சத்திற்குச் சென்று கொண்டிருந்தது.

யுத்தம் முடிந்தவுடன் இந்திய விவசாயிகள் முதல் போர்க் குரல் கொடுத்தார்கள். வாரம் குத்தகை விவசாயிகள் சுத்த வாரம்—நியாய வாரம் கோரி பல்லாயிரக்கணக்கில் தமிழகத்தின் பலபகுதிகளில் எழுச்சி பெற்றார்கள். குறிப்பாக தஞ்சாவூர், இராமநாதபுரம், நெல்லை மாவட்டங்களில் எழுச்சி ஏற்பட்டது. ஜமீன் இனாம்களை எதிர்த்து ஆந்திராவில் பேரெழுச்சி ஏற்பட்டது. ஜென்மீகளின் கொடுமைகளை எதிர்த்து மலபார்ப்பகுதிகள் முழுவதிலும் விவசாயிகள் இயக்கம் பரவியது. மன்னராட்சி முறையை எதிர்த்து திருவாங்கூர், ஐதராபாத், காஷ்மீர் மற்றும் பல சமஸ்தானங்களிலும் விவசாயிகளின் பேரெழுச்சி ஏற்பட்டது. வங்காளத்தில் மூன்றில் இரண்டு பங்கு வாரம் கோரி மாநிலம் தழுவிய பேரெழுச்சி ஏற்பட்டது. அதற்கு தெபாகா இயக்கம் என்று பெயர். பீகார், ஐக்கியமாகாணங்களிலும் ஜமீன்தார் முறைகளை எதிர்த்துப் பெரும் கிளர்ச்சி ஏற்பட்டது.

இந்தப் போராட்டங்கள் எல்லாம் வெறும் பொருளாதாரக் கோரிக்கைகளுக்கான—வாரம் கூலி ஆகியவைகளுக்கான போராட்டங்களாக மட்டும் இல்லை. பல்வேறு முறையிலான நிலப்பிரபுத்துவச் சுரண்டல்களுக்கு எதிராகவும் சமுதாய ஏற்றத் தாழ்வுகள் இழிவுகளுக்குஎதிராகவும் அமைந்தன. ஆங்கிலேயர் ஆட்சியிலிருந்தும், நிலப்பிரபுத்துவ முறையிலிருந்தும் விடுதலை பெறவேண்டும் என்று விஸ்வரூபம் எடுத்தது. சுதேசி மன்னர்களை எதிர்த்து நடந்த போராட்டம் படிப்படியாக விரிவடைந்து ஆயுதம்தாங்கிய போராட்டமாக வளர்ந்து, நிலப்பிரபுக்களிடமிருந்து கிரமங்களை விடுவித்து நிலங்களை உழுபவர்களுக்குப்பங்கு போடும் அளவுக்கு உயர்ந்தது.

ஜமீன்தார்கள், நிலச்சுவான்தார்கள், ஜாகிர் ஜன்மிகள், சுதேசி மன்னர்கள், சாகுபடி செய்து கொண்டிருந்த விவசாயிகளை வரி, வாரம், குத்தகை, பங்கு, பாட்டம் என்னும் முறையில் சுரண்டிவந்தது மட்டுமல்ல அந்த நிலப்பிரபுக்கள், விவசாயிகளை நிர்ப்பந்தித்து பல்வேறு முறையில் தங்களுக்கு இனாமாக வேலைவாங்கிக்கொண்டிருந்தார்கள். அத்தகைய அடிமை வேலைகளைச்செய்ய மறுத்தார்கள்.

சமுதாயச்சொத்துக்கான புறம்போக்கு மரங்கள், ஊருணிகள் ஏரி குளங்களில் உள்ள மீன்பாசி முதலியவை

களையெல்லாம் நிலப்பிரபுக்கள் அபகரித்துத் தங்களுக்குச் சொந்தமாக்கிக்கொண்டிருந்தார்கள். இத்தகைய அநியாய அபகரிப்புகளை எதிர்த்து விவசாயிகள் பல போராட்டங்களை நடத்தி வெற்றி பெற்றார்கள்.

அத்துடன் சமுதாய இழிவுகளை, சாதீய இழிவுகளை ஏற்றத்தாழ்வுகளை எதிர்த்து ஒன்றுபட்டுப் போராடி முறியடித்தார்கள்.

இவ்வாறு இந்திய விவசாயிகள் தங்களுடைய உரிமைகளுக்காக நடத்திய நீண்ட நெடுங்காலப் போராட்டங்கள் 1945 46 ஆம் ஆண்டுகளில் உச்சகட்டத்தை அடைந்து சமுதாயத்தின் இதர பகுதிகளுடன் இணைந்து, அந்நிய ஆட்சிக்கு எதிரான முழுமையான விடுதலைப் போராட்டமாக உயர்ந்தது.

விவசாயிகள் தொழிலாளர்கள் நடுத்தரமக்கள் படை வீரர்கள் என்று இந்திய மக்கள் போர்க்கோலம்பூண்டு, புயலாய் வெள்ளமாய்ப் புறப்படக் கண்டு ஆங்கிலேய அரசு இனி இந்தியாவை ஆள முடியாது என்னும் முடிவுக்கு வந்தது; இந்திய தேசீய காங்கிரஸ் தலைவர்களுடன் பேச்சு வார்த்தை நடத்தி 1947 ஆகஸ்டு மாதம் 15–ம் தேதி இந்தியாவுக்குச் சுதந்திரம் வழங்க முன் வந்தது,

இந்தியாவின் விடுதலை என்பது சாராம்சத்தில் இந்திய விவசாயிகளின் விடுதலையாகும் 1947 ஆம் ஆண்டு இந்தியா சுதந்திரம் பெற்றது என்பது இந்திய மக்களின், குறிப்பாக இந்திய விவசாயிகளின் ஜனநாயகப் புரட்சியின் தொடக்கமாகும்.

இந்திய நாட்டின் விடுதலைப் போராட்டத்தில் அந்நிய ஏகாதிபத்தியத்தை எதிர்த்தும், மன்னர்கள் ஜமின்தார்கள் முதலிய நிலப்பிரபுக்களை எதிர்த்தும், உள் நாட்டில் இருந்த சமுதாய இழிவுகளை எதிர்த்தும் நடைபெற்ற நீண்ட வீரம் செறிந்த போராட்டங்களில் இந்தியாவின் கிராமப்புறப் பாட்டாளிகள் மிகப் பெரிய பங்கை ஆற்றியுள்ளார்கள். இருப்பினும் நாடு சுதந்திரம் பெற்றதும், நாட்டின் ஆட்சி அதிகாரம் இந்திய முதலாளித்துவத்தின் கைக்கே வந்திருக்கிறது.

அந்நிய ஆட்சியிலிருந்து நாடு அரசியல் சுதந்திரம் பெற்ற பின்னர், சுதந்திரம் முழுமை பெறுவதற்கு இந்திய ஜனநாயகப்புரட்சி முழுமை பெற வேண்டும். கிராமப்புறப் பாட்டாளிகளின் மீதுள்ள எல்லா தடைகளும் தளைகளும் முறிக்கப்பட வேண்டும். சுதந்திரத்திற்குப் பின்னர் முழுமையான ஜன நாயகத்திற்கான போராட்டம் தொடருகிறது.

அதற்குக் கிராமப்புறப் பாட்டாளிகளின் பங்கு முதலிடம் பெறுகிறது.

கிராமப்புறப் பாட்டாளிகள் முழுமையான ஜன நாயக உரிமைகளைப் பெறுவதற்கான போராட்டம் தொடருகிறது. அத்தகைய ஒரு ஜன நாயகப்புரட்சி முழுமையான வெற்றி பெறுவது முதலாளித்துவத் தலைமையில் சாத்தியமில்லை.

கிராமப்புற நகர்ப்புறப் பாட்டாளிகளின் படிப்பாளிகளின் புரட்சிகர ஜன நாயகசக்திகளின் கூட்டுத் தலைமையில்தான் சாத்தியம். அதற்கான வகையில் கிராமப்புறப் பாட்டாளிகளின் உணர்வு நிலையை உயர்த்த வேண்டும்.

★

4

# சுதந்திர இந்தியாவில், நிறைவேற்றப்பட்ட நிலச் சீர்திருத்தங்களும் கிராமப்புறங்களில் ஏற்பட்டுள்ள மாற்றங்களும்

1947 ஆகஸ்ட் 15 ஆம் தேதி இந்திய நாடு விடுதலை பெற்ற தானது இந்தியாவின் வரலாற்றில் ஒரு திருப்புமுனை யாகும்.

இந்திய சுதந்திரம் என்பது சில முதலாளித்துவ எழுத் தாளர்களும் வரலாற்று ஆசிரியர்களும் குறிப்பிடுவதைப் போல ஏதோ ஒரு சில தலைவர்கள் பேசி முடித்துக்கொண்டு வந்ததல்ல. வெறும் அகிம்சை பூர்வமான வேண்டுகோளால் மட்டும் வந்ததல்ல. கத்தியின்றி ரத்தமின்றி எவருடைய கருணையாலும் வந்ததல்ல. அல்லது சிலர் நினைப்பது போல ஆங்கிலேய ஆட்சியாளர்கள் மனமுவந்து மாற்றி கொடுத்த ஆட்சி அதிகாரமல்ல. இந்திய சிப்பாய்களின் ஆயுதம் தாங்கிய 1857 ஆம் ஆண்டுப் போராட்டத்தில் தான் இந்திய விடுதலைப் போராட்டம் தொடங்கியது.

இந்திய ராணுவம், விமானப் படை, கப்பற்படை, தரைப் படைநடத்திய வீரமிக்க ஆயுதம் தாங்கிய போராட்டத்தில் அது நிறைவுபெற்றது.

1857 முதல் 1947 வரை தொண்ணூறு ஆண்டுகள் தொடர்ச்சியாகவும் விட்டுவிட்டும் இந்திய மக்கள் நடத்திய போராட்டங்களின் பலனாகவே இந்தியா விடுதலை பெற்றது.

இந்திய விடுதலைப் போராட்டத்தில் இந்திய விவசாயிகளின் பங்கு மகத்தானதாகும். அதன் பலனாக இந்தியா சுதந்திரம்

பெற்றவுடன் கிராமப்புற சமுதாய முறையில், நிலப்பிரபுத்துவ சமூகப் பொருளாதார முறையில் பல மாற்றங்கள் கொண்டு வரப்பட்டன.

முதலாவதாக இந்திய நாட்டின் மூன்றில் ஒரு பகுதியில் ஆதிக்கம் கொண்டிருந்த சுதேசி மன்னர் ஆட்சி முறை ஒழிக்கப்பட்டு, அந்த சமஸ்தானங்கள் கலைக்கப்பட்டன. அந்த நிலப்பகுதிகள் அனைத்தும் இந்திய யூனியனுடன் இணைக்கப்பட்டன.

இந்திய சுதந்திரச் சட்டம் பிரிட்டிஷ் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட போது இந்த சமஸ்தானங்கள் அவர்கள் இஷ்டப்படி இந்திய யூனியனுடனோ, பாகிஸ்தானுடனோ சேர்ந்து கொள்ளலாம், அல்லது சுதந்திரப் பிரகடனம் செய்து கொண்டு தனியாகவும் இருந்து கொள்ளலாம் என்று அறிவிக்கப்பட்டது. அதன்படி ஜூனகாத் சமஸ்தானம் பாகிஸ்தானுடன் இணையப் போவதாக அந்த நவாப் அறிவித்தார். ஆனால் அந்த மக்கள் ஒன்று திரண்டு நவாபை விரட்டி விட்டு சமஸ்தானத்தை இந்தியாவுடன் சேர்த்தார்கள். அதே போல ஹைதராபாத் நிஜாம் தனியாக சுதந்திரப் பிரகடனம் செய்தார். அதை எதிர்த்து அந்த சமஸ்தான மக்கள் திரண்டார்கள்.

இந்திய அரசு ராணுவ நடவடிக்கை எடுத்தது. ஐதராபாத் சமஸ்தானம் இந்தியாவுடன் இணைக்கப்பட்டது. இதே போல் முந்நூறுக்கும் அதிகமான சமஸ்தானங்களும் இந்திய அரசில் இணைக்கப்பட்டன. அதன் பின்னர் படிப் படியாக இந்த சமஸ்தான மன்னர்களின் அதிகாரங்களும் இதர சலுகைகளும் நீக்கப்பட்டன. சமஸ்தானப் பகுதிகளும் உடைக்கப்பட்டு மொழிவழி மாநில அமைப்பில் இணைக்கப் பட்டன.

இவ்வாறு பழைய சமஸ்தானங்களில் இருந்த மக்கள் எல்லாம் இந்தியக் குடியரசின் நேரடியான ஆட்சியின் கீழ் கொண்டு வரப்பட்டார்கள்.

உதாரணமாக தமிழக மக்கள் சென்னை ராஜதானி அல்லது சென்னை மாகாணம் திருவாங்கூர் சமஸ்தானத்தின் கீழ் கன்னியாகுமரி மாவட்டம் செங்கோட்டை தாலுகா, ஆகியவைகளிலும் புதுக்கோட்டை சமஸ்தானம் ஆகிய பகுதிகளிலும் பிரிந்து இருந்தார்கள். இப்போது ஒன்று பட்டு ஒரே மாநில நிர்வாகத்தின் கீழ் உள்ளார்கள். ஆந்திரப் பிரதேச மக்கள் சென்னை மாகாணம், ஐதராபாத் சமஸ்தானம் ஆகியவற்றில்பிரிந்திருந்தார்கள். அதேபோல் கேரள மக்கள் திருவாங்கூர் சமஸ்தானம், கொச்சி சமஸ்தானம், சென்னை மாகாணம் ஆகியவற்றில் பிரிந்து இருந்தார்கள்.

இப்போது இம்மாநிலமக்கள் ஆந்திர, கேரள அரசின் நிர்வாகத்தின் கீழ் உள்ளார்கள். கர்நாடகமக்கள் சென்னை மாகாணம், பம்பாய் மாகாணம் மைசூர் சமஸ்தானம், குடகு சமஸ்தானம், ஐதராபாத் சமஸ்தானம், ஆகியவற்றின் கீழ் பலவாறாகப் பிரிந்து இருந்தார்கள். இப்போது கர்நாடக மாநிலத்தின் நேரடி நிர்வாகத்தின் கீழ் உள்ளார்கள்.

இவ்வாறு பலவாறாகப் பிரிக்கப்பட்டிருந்த மக்கள், மொழி வழியாக பிரிக்கப்பட்டு ஒரே மாநில நிர்வாகத்தில் மொழி வழி தேசீய இனமாக வளர்ச்சி பெற வாய்ப்பு ஏற்பட்டது. இந்த வாய்ப்பு இந்திய விவசாயிகளுக்கு இந்திய வரலாற்றில் முதல் தடவையாக ஏற்பட்ட வாய்ப்பாகும். இதன் மூலம் இந்திய விவசாயிகளுக்கு மொழி வழி மாநில அமைப்பில் நேரடியாக அரசாங்க நிர்வாகத்தில் பங்கு பெறும் நிலைமை ஏற்பட்டது.

மன்னராட்சியின் கீழ் இருந்த வரிக் கொடுமைகள் இதர நிர்வாகக் கொடுமைகள் குறைந்தன. மன்னர்களின் வீணான ஆடம்பரச் செலவுகள் குறைந்தன. உதாரணமாக ஐதராபாத் நிஜாமிற்கு 365 மனைவி மார்கள்; ஒவ்வொருவருக்கும் ஒரு அரண்மனை. ஒவ்வொரு நாளும் ஒரு அரண்மனையில் நிஜாம் தங்குவார் இதே போல மன்னர்களின் பல வகை ஆடம்பரச் செலவுகளை மக்கள் சுமக்க வேண்டியதிருந்தது. அவையெல்லாம் இன்றுநீங்கின.

இரண்டாவது, எல்லா மாநிலங்களிலும் ஜமீன்தாரிமுறை ஒழிக்கப்பட்டது. சுதேசி மன்னர்களின் நிர்வாகத்தின்கீழ் இருந்த ஜமீன்தாரி முறையும் ஒழிக்கப்பட்டுவிட்டது. இந்த இருவகை நிலப்பிரபுத்துவ முறைகளும் சேர்ந்தால் மொத்தமுள்ள இந்திய நிலப்பரப்பில் மூன்றில் இரண்டுபகுதியாகும். ஜமீன்தார்களுடைய வரிவசூல் நிர்வாக முறை ஒழிக்கப்பட்டு நிலங்களில் சாகுபடி செய்து கொண்டிருந்தவர்கள் நிலத்திற்கு நேரடிச் சொந்தக்காரர்களாகி விட்டார்கள். இப்போது நாடு முழுவதும் ஒரே மாதிரியான ரயத்துவாரிமுறை வந்து விட்டது நிலவுடைமையாளர்கள் நேரடியாக அரசின் கீழ்வந்து விட்டார்கள். சுதேசிமன்னர்கள், ஜமீன்தார்கள் போன்ற இடைத்தரகர்கள் ஒழிக்கப்பட்டுவிட்டார்கள். இது விவசாயிகளுக்கு ஆரம்பத்தில் மிகப் பெரிய நிவாரணத்தைக் கொடுத்தது. ஜமீன்தார்கள். அவருடைய ஆட்கள் ஆகியோர்களின் பல வகைச்சுரண்டல்முறைவரிவசூல் கொடுமைகள் ஒழிக்கப்பட்டுவிட்டன. இதன் காரணமாக விவசாயிகளுக்கு நேரடியான விடுதலை கிடைத்தது.

இந்த இரு மாற்றங்கள் காரணமாக இந்தியாவில்இருந்த சட்டபூர்வமான நிலப்பிரபுத்துவ முறை ஒழிக்கப்பட்டுவிட்டது என்று கூறலாம். ஏறத்தாழ இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு மேலாக இந்தியாவில் இருந்த நிலப்பிரபுத்துவ

முறைகளும், ஆங்கிலேயர் ஆட்சியில் ஏற்பட்ட புதிய வகைப் புல்லுருவிகளும் பெரும்பாலான அதன் மிச்ச சொச்சங்களும் ஒழிக்கப்பட்டுள்ளன.

இந்த மாற்றங்கள் நிலப்பிரபுத்துவ முறையை முற்றிலுமாக ஒழிக்கவில்லை.விவசாயிகளின் புதிய வாழ்வுக்கு முற்றிலும் வழி வகுக்கவில்லை. ஆயினும் இந்த மாற்றங்கள் கிராமப் புறங்களில் முதலாளித்துவ உற்பத்தி உறவு வளருவதற்கான பக்குவ நிலையை, சாதகமான சூழ்நிலையை உண்டாக்கியது.

இப்போது அரசாங்கத்தின் கீழ் நேரடியாக வரி செலுத்தும் நிலவுடமையாளர்களின் எண்ணிக்கை அதிகமாகியுள்ளது. ஆயினும் ரயத்துவாரி முறையில் ஏராளமான நிலங்களைக் கொண்டுள்ள நிலச்சுவான்தார்கள் நீடித்தார்கள். இன்னும் நீடிக்கிறார்கள். இந்தச்சிறிய பெரிய நிலச்சுவான்தார்களின் கீழ் சாகுபடியாளர்கள் மட்டும் தமிழகத்தில் இன்னும் சுமார் 24 லட்சத்திற்கும் மேல் உள்ளதாகக் கூறப்படுகிறது. இதில் 4 லட்சம் பேர்கள் தான் சட்டப்படி பதிவு செய்யப் பட்டிருக்கிறார்கள். அவர்களுடைய பிரச்னையும் ரயத் துவாரி முறையின் கீழ் உள்ள இன்னும் நீடிக்கிற நிலக்குவிய லும் முக்கியமானதாகும். இந்தப்பகுதி விவசாயிகள் போராட்டங்களில் முன்னணியில் நின்றவர்களின் முக்கிய பகுதியாகும். இந்தப்பகுதியில் திருத்தங்கள் கொண்டு வருவ தற்கும் அரசு சில சட்டங்கங் கொண்டு வந்துள்ளது. அவை வாரம், குத்தகைதாரர் பாதுகாப்புச் சட்டங்களாகும்

வாரம் குத்தகைதாரர் பாதுகாப்புச்சட்டத்தின் முக்கிய அம்சம் ஒருசாகுபடியாளரை அவர் சாகுபடி செய்துவந்த நிலத்திலிருந்து வெளியேற்றக்கூடாது என்பதாகும். இதன் மூலம் சாகுபடியாளருக்கு நிலவெளியேற்றத்திலிருந்து பாதுகாப்பு கிடைத்தது. இது விவசாயிகள், சாகுபடியாளர் கள் தங்களுடைய நீண்ட போராட்டங்களின் மூலம் கிடைத்த மிகப்பெரிய உரிமைகளில் ஒன்றாகும்.

இரண்டாவது, நியாய வாரச்சட்டம், இதன் மூலம் தமிழகத்தில் இப்போது சாகுபடியாளர்களுக்கு. கண்டு முதலில் 75 சதவீதம் கிடைக்கும். நிலச்சொந்தக்காரர் களுக்கு 25 சதவீதம் கிடைக்கும். நியாயவாரம் கேட்டு வாரம் குத்தகை விவசாயிகள் நீண்ட நெடும் போராட்டங் கள் நடத்தியிருக்கிறார்கள்.

இந்தியநாட்டில் சாகுபடி செய்யும் விவசாயிகளிடம் ஆறில் ஒரு பங்கு அரச பாகமாக வாங்குவது பண்டைய அரசர் களின் வரிமுறையாகத் தீர்மானிக்கப்பட்டிருந்தது. ஆறில் ஒருபாகம் வாங்குவதுதான் செங்கோல் மன்னன் கடமை யாகும். ஆனால் சில நல்ல மன்னர்கள் பத்தில் ஒருபாகம்

வாங்கினார்கள். வேறுசில மன்னர்கள் ஆறில் ஒருபாகத்தைக் காட்டிலும் அதிகமாக வாங்கியதாக வரலாற்றுச்சான்றுகள் பலவும் கூறுகின்றன. ஆறில் ஒருபாகத்தைக்காட்டிலும் அதிகமாக வாங்கும் அரசர்களைக் கொடுங்கோல் மன்னர்கள் என்று கருதுவார்கள். வரி அல்லது பாகம் அதிகம் வாங்கினாலும் அரசன் தனது இதரகடமைகளை நிறைவேற்றினால் மக்கள் அதைச் சகித்தே வந்தனர்.

சோழ நாட்டின் மிகவும் சிறப்பான மன்னர்களில் ஒருவனாகக் கருதப்படும் ராஜராஜ சோழன் மூன்றில் ஒருபங்கு வரி வாங்கியதாக வரலாற்றுச் சான்றுகள் கூறுகின்றன. ராஜராஜசோழன் பெரும் படைதிரட்டித் தனது ஆட்சியை விரிவுபடுத்தப் பல போர்களை நடத்தி வெற்றிகண்டான். அப்போர்களை நடத்துவதற்கு ஏராளமான செல்வம் செலவாகியிருக்கும். அதை ஈடுகட்ட அதிகமான வரியை மூன்றில் ஒரு பங்கு வரை வாங்கியிருக்கலாம் என்று தெரிகிறது. அத்துடன் சில மன்னர்கள் மக்களிடம் அதிக வரிவசூல் செய்து கோவில்கட்டியிருக்கிறார்கள், சாலைகள் போட்டிருக்கிறார்கள். சத்திரங்கள் கட்டியிருக்கிறார்கள். மக்கள் இவற்றைப் பொதுவாகப் பாராட்டியிருக்கிறார்கள்.

பெருநில மன்னர்களின் கீழ் இருந்த சிறு நில, குறுநில மன்னர்களும் ஆறில் ஒரு பாகம்தான் விவசாயிகளிடம் வாங்கி அதிலிருந்து ஒரு பகுதியைக் கப்பமாக பெருநில மன்னர்களுக்குச் செலுத்தியிருக்கிறார்கள். பெருநில மன்னர்கள் அதிகமாக பாகம் கேட்டபோது சிறு நில மன்னர்களும் அதிகம் வாங்கியுள்ளார்கள்.

பாகம் வாங்குவதில் ஏற்றத்தாழ்வுகள் இருந்தபோதிலும் மன்னர்கள் தங்கள் கடமையாக நீர்ப்பாசன நிலையைப் பாதுகாப்பதும், பராமரிப்பதும் விரிவுபடுத்துவதும் சமூக நீதியாக அரச நீதியாக வலியுறுத்தப்பட்டிருக்கிறது. இந்த சமூக நீதி அரசநீதி முறைகளை மீறிசில அரசர்கள் நடந்தபோது, மக்கள் ஆர்த்தெழுந்த வரலாறுகளும் இந்திய நாட்டில் இருந்தன. அதற்கான விவரங்கள்பலவற்றைமக்கள் இலக்கியங்களில், நாட்டுப்பாடல்களில் காணமுடிகிறது.

ஆனால் ஆங்கிலேயர் ஆட்சி ஏற்பட்டபின் புதிதாக உண்டாக்கப்பட்ட சுதேசிமன்னர்கள், ஜமீன்தார்கள், நிலச்சுவான்கள், விவசாயிகளிடம் சாகுபடியாளர்களிடம் பாதிக்குமேல், மூன்றில் இரண்டுபங்கு வரை கொடுமையான முறையில் வரி வாரம் குத்தகை பாட்டம் என்று வாங்கியுள்ளார்கள். இந்த, அளவுவாரம் மட்டுமல்ல, இன்னும் பலவேறு முறையான சுரண்டல்களும் இருந்திருக்கின்றன. இந்தக் கொடுமைகளை எதிர்த்துத்தான் சாகுபடி செய்த விவசாயிகள் மிகப்பெரிய போரட்டங்களை நடத்தியுள்ளார்கள்.

கொடுமையான வாரம், இதரவகை நிலப்பிரபுத்துவ சுரண்டல் முறைக்கு ஒரு சிறு உதாரணம் கூறலாம்.

இன்றைய காமராஜர் மாவட்டம், திருவில்லிப்புத்தூர் தாலுகா, வத்திராயிருப்பு வட்டாரம் மிகவும் செழிப்பான பள்ளத்தாக்குப் பகுதியாகும். அதற்கு அர்ஜுனா நதிப் பள்ளத்தாக்கு என்று பெயர்.

மூன்று பக்கம் மலைகளால் சூழப்பட்ட மிகவும் ரம்மியமான பசுமை நிறைந்த பகுதி. மூன்று பக்கம் உள்ள மலைகளில் பெய்யும் மழை நீரெல்லாம் சிறு சிறு ஓடைகளில், காட்டாறு களில் வந்து ஒன்று சேர்ந்து அர்ஜுனா நதிஎன்னும் பெயரில் ஒரு செழிப்பான ஆறாக வருகிறது. இந்த ஆற்றின் கிளை ஆறுகளின் தொடக்கமுதல் குறுக்கணைகள் கட்டப்பட்டிருக் கின்றன. இந்தப்பகுதியில்சுமார் நாற்பதுக்கு மேற்பட்ட பாசனக்கண்மாய்கள் உள்ளன. மிகவும்நெருக்கமாக ஆற்றை ஒட்டிப்படிப்படியாகஒன்றன்பின்ஒன்றாகசங்கிலிக் கோர்வை போல பாசனக் கண்மாய்களும் குளங்களும் ஊருணிகளும் உள்ளன. இந்தப் பகுதியை முடுக்கு நாடு என்று மக்கள் கூறு கிறார்கள். இந்தப் பகுதியை மூவரை வென்றான் என்னும் குறு நில மன்னன் ஆண்டதாக சில வரலாற்றுச் சான்றுகள் குறிப்பிடுகின்றன. இது பாண்டிய நாட்டின் மதுரைப்பகுதி யாக இருந்திருக்கிறது.

பிரிட்டிஷ் ஆட்சி ஏற்பட்ட காலத்தில் திருநெல்வேலி மாவட்டம் அமைக்கப்பட்ட காலத்தில் இந்த பகுதி திருவில்லிப்புத்தூர் தாலுகாவாக திருநெல்வேலி மாவட்டத் தில் சேர்க்கப்பட்டிருந்தது. பின்னர் 1910ஆம் ஆண்டில் இராமநாதபுரம் மாவட்டம் தனியாகப் பிரிக்கப்பட்ட போது இந்தப்பகுதி காரணமின்றி இராமநாதபுரம் மாவட்டத்தில் சேர்க்கப்பட்டது. இப்போது இராமநாத புரம் மாவட்டம் மூன்றாகப்பிரிக்கப்பட்டு இந்த மேற்குப் பகுதி முழுவதும் காமராஜர் மாவட்டமாக அறிவிக்கப் பட்டிருக்கிறது.

வத்திராயிருப்பு வட்டாரத்தில் இருந்த பெரும்பாலான கண்மாய்ப்பாசன நிலங்கள் பண்பட்ட நஞ்சை நிலங்கள். இவை வத்திராயிருப்பு, சுந்தரபாண்டியம், கோட்டையூர், மூவரை வென்றான் என்னும் கிராமங்களில் இருந்த பிராமணர் களுக்குச் சொந்தமாக இருந்தன.

மூவரைவென்றான் என்னும் குறுநில மன்னனுடைய ஆட்சி யின் கீழ் இருந்த பூமியெல்லாம் பிராமண அக்கிரகாரக் குடும்பங்களுக்கு எப்படிச்சொந்தமாயிற்று— அதுவும் நிலம் மட்டுமல்லாமல், கண்மாய்க்கரைகளும், கரைகளில் இருந்த மரங்களும், மரங்களில் கிடைக்கும் பலன்களும், கண்மாய்

நீரில் இயற்கையாக வளரும் மீன்பாசியும், நீர் வற்றியபின் கண்மாய் உள்வாய் நிலத்தில் வளரும் பசும்தழையும் கூட அந்த பிராமணக் குடும்பங்களுக்கு மட்டுமேஎப்படிச்சொந்த மாயிற்று என்பது ஒருபுதிராகும். அது பற்றிப் பலகதைகள் கூறப்படுகின்றன.

அது எப்படியிருப்பினும் அந்தக் கண்மாய்ப் பாசன நில மெல்லாம் பெரும்பாலும் பிராமண நிலச்சுவான்தாரர் களுக்கு ரயத்துவாரி முறையில் பிரிட்டிஷ் ஆட்சியாளர் களிடமிருந்து பட்டா இருந்தது. மற்றவர்களுக்கும் சில இடங்களில் கொஞ்சம் இருந்தது.

பிராமண நிலச்சுவான்தாரர்கள் தங்கள் நிலத்தில் நேரடி யாக சாகுபடி செய்யவில்லை. அந்நிலங்களில் மற்றவர்கள் தான் அதிகமாக சாகுபடி செய்து வந்தார்கள். இந்த சாகு படியாளர்களுக்கு அவர்கள் சாகுபடி செய்து வந்த நிலத் தின் மீது எந்த உரிமையும் இல்லாமல் இருந்தார்கள். நிலச் சுவான்தாரரின் இஷ்டத்திற்கு தனது சாகுபடியாளரை வைத்துக் கொள்ளலாம் அல்லது வேறு ஒருவருக்கு மாற்றி விடலாம். சாதாரணமாக மூன்றில் இரண்டு பங்கு நிலச் சுவான்தாருக்கும் மூன்றில் ஒரு பங்கு சாகுபடியாளருக்கும், செலவு சாகுபடியாளர் பொறுப்பிலும் இருந்தது. கண்டு முதலில் மூன்றில் இரண்டு பங்கு நிலச்சுவான்தாரருக்கு அளந்து கொட்டி விட்டு, பாக்கி சில்லறை அளப்புகளை முடித்து, அறுவடைக் கூலி கொடுத்து முடித்து மீதமிருக்கும் கொஞ்சம் நெல்லும் வைக்கோலும் சாகுபடி செய்தவருக்குக் கிடைத்தது. இந்தக் கொடுமையை விவசாயிகள் அவ்வப் போது தனிப்பட்ட முறையில் எதிர்த்துத் தோல்வியே கண்டார்கள். நிலச்சுவான்தாரர்களுக்கு ஆதரவாக சில ஊர்ப் பிரமுகர்கள், மற்றும் அரசாங்கமும் அதிகாரிகளும் இருந்தார்கள். நிலச்சுவான்தாரர்களுக்கு அடியாட்களும் இருந்தார்கள்.

இந்த வட்டாரத்தில் 1942 ஆம் ஆண்டில் அகில இந்திய கிசான் சபையின் கீழ் அதன் கிளையாக 'வத்திராயிருப்பு வட்டார விவசாயிகள் சங்கம்' என்னும் பெயரில் விவசாயி கள் சங்கம் ஆரம்பிக்கப்பட்டது.

இந்த விவசாயிகள் சங்கம் 1943, 1944ஆம் ஆண்டுகளில் மக்களிடம், குறிப்பாக சாகுபடியாளர்களிடம் நன்கு அறிமுக மாயிற்று. சாகுபடியாளர்களுக்கு சுத்தவாரம் வேண்டும் என்னும் கோரிக்கை வைத்து கிளர்ச்சியும் பிரச்சாரமும் நடைபெற்றது.

இரண்டாவது உலகப்போர் முடிந்தது. முதல் முழக்கமாக 1945ஆம் ஆண்டில் வத்திராயிருப்பு வட்டார விவசாயிகள்

சுத்தவாரம் வேண்டும் என்னும் நியாய வாரக்குரலைக் கிளப்பினார்கள். போராட்டம் சூடுபிடித்து முக்கிய கிராமங்களுக்குப்பரவியது.பல்லாயிரக் கணக்கான விவசாயிகள் செங்கொடிவிவசாயிகள் சங்கத்தின் கீழ் திரண்டார்கள். இயக்கத்தின் வலுவைக் கண்டு நிலச்சுவான்தாரர்கள் சமரச உடன்பாட்டிற்கு வந்தார்கள். அந்த உடன்பாடு உதவி கலெக்டர் முன்னிலையில் நடைபெற்றது. விவசாயிகளின் பிரதிநிதிகள் சுத்த வாரம் என்று கூறிய போது ''பாதி வாரம் என்றால் புரிகிறது. சுத்தவாரம் என்றால் என்ன பொருள்'' என்று உதவி கலெக்டர் கேட்டார். எந்த விதமான சில்லறை அளப்புகள் இல்லாமல் கூலி பொதுவில் போட்டு மீதமுள்ள கண்டு முதலில் நிலச்சுவானுப சாகுபடியாளரும் ஆளுக்குப் பாதியாகப் பிரித்துக் கொள்வது என்று விவாதிக்கப்பட்டது. சில்லறை அளப்புகள் என்பவை எவை?

போர் அடித்து நெல் குவியல் போட்ட பின்னர்—காற்றுக்கு விட்டுத்தூற்றி அம்பாரமாக்கிய பின்னர். மொத்தம் வந்த நெல்லை மூன்று பங்காகப் பிரித்து அதில் இரண்டு பங்கை நிலச்சுவான் தாருக்கு ஒதுக்கிவிட்டு,பாக்கியுள்ள ஒரு பங்கில் முதலில் கூலி அதாவது அறுவடை அடிப்புக்கூலிஅளந்துவிட வேண்டும் அதன்பின்னர்,முதலில்சாமிகுறுணி என்னும்பெயரில் ஒரு மரக்கால் (பழைய பட்டணம் படிக்கு நாலுபடி ஏறத்தாழ ஆறுலிட்டர் அளவுக்குசற்றுஅதிகமாகஇருக்கும்;) இரண்டாவதாக,களத்திற்கு நிலச்சுவான்தார் தனது பிரதிநிதியை அனுப்பியிருப்பார். அதற்கு கங்காணம் என்று பெயர். அவருக்குக்கங்காண அளப்பு என்னும் பெயரில் மூன்று மரக்கால் கொடுக்க வேண்டும். மூன்றாவது நிலச்சுவான்தாருக்கு இளைப்பு என்னும் பெயரில் இரண்டு மரக்கால், தவிப்பு என்னும் பெயரில் இரண்டு மரக்கால் நெல் (அதாவது நிலச்சுவான்தாரின் பிரதிநிதி கங்காணமாக வந்திருப்பவர், களத்திற்கு வந்து இளைத்துப்போய் விடுவார் என்றும் அதற்கு ஈடுகட்ட இரண்டு மரக்கால் நெல்லும், தவித்துப் போய் விடுகிறார் என்பதற்காக இரண்டு மரக்கால் நெல்லும் அளந்து விடுவதுஎன்பதாகும்.) நான் காவதாக நிலச்சுவான்தாருடைய பங்கான நெல்லை, அவருடைய வீட்டில் கொண்டு போய்ச் சேர்ப்பதற்கான வண்டி வாடகையாக அதற்கான நெல்லும் அளந்து விட்டு மிச்ச முள்ள நெல்லை விவசாயி தனக்கு எடுத்துக் கொள்ள வேண்டும் என்று சில்லறை அளப்புகள் மூலமான சுரண்டல் முறை இருந்தது.

எனவே சாமிகுறுணி, கங்காணம், இளைப்பு, தவிப்பு, வண்டிவாடகை, வைக்கோல்கட்டு முதலிய உபரி சுரண்டல் முறைஎதுவும் இல்லாமல் சுத்தமாக கூலிபோகக் கண்டதில் பாதி,அதுதான் சுத்தவாரம் என்று விளக்கம் கூறப்பட்டது. அதன் பின்னர், இந்த உபரி சுரண்டல் முறையான சில்லறை அளப்புகள் நீக்கி கூலி போக கண்டதில் 60 : 40

என தாற்காலிக ஒப்பந்தம்— அதாவது நிலச்சுவான் தாரருக்கு 60 உழவனுக்கு40என்று உடன்பாடு ஏற்பட்டது.

பின்னர் சுத்தமான பாதிவாரத்திற்கான கிளர்ச்சி தொடர்ந்தது. அதன் பின்னர் உழவனுக்கு 60 நிலச் சுவான்தாரருக்கு 40 என்னும் கோரிக்கை வளர்ந்தது. பின்னர் மூன்றில் இரண்டு பங்கு உழுபவனுக்கு என்னும் கோரிக்கையின் மீது நீண்ட கிளர்ச்சி ஏற்பட்டது.

தமிழ்நாட்டில் தஞ்சை இராமநாதபுரம் நெல்லை,மதுரை திருச்சி சேலம், தென்ஆற்காடு முதலிய பலமாவட்டங் களிலும் ஆந்திரா, கேரளம், வங்காளம், பீகார் உத்திரப் பிரதேசம் முதலிய பலமாநிலங்களிலும் கிளர்ச்சி வலுவாக நடைபெற்றது.அதன் பலனாக நியாய வாரச்சட்டம் நிறை வெற்றப்பட்டு, சுதந்திர இந்தியாவில் சாகுபடி தாரருக்கு நியாயவாரம் என்னும்உரிமைசட்டப் பூர்வமாகஅங்கீகரிக்கப் பட்டிருக்கிறது.

கண்மாய்க் கரைகள், உள்வாய், மீன் பாசி முதலியவைகள் மக்களுக்குச் சொந்தம் என்னும் கிளர்ச்சிகள் தொடர்ந்து நடந்தன. பின்னர் அவையெல்லாம் பல இடங்களில் அரசாங்கம் 'அல்லது பஞ்சாயத்துகளின் பொறுப்பில் வந்தன. இன்னும் சில இடங்களில் பழையமுறைநீடிக்கிறது.

மூன்றாவதாக நில உச்ச வரம்புச் சட்டம் வந்தது.

மன்னர் ஒழிப்பு, ஜமீன் ஒழிப்பு, நில வெளியேற்றத் தடுப்பு நியாய வாரச் சட்டங்கள் வந்த போதிலும் உழுபவனுக்கே நிலம் என்னும் கோரிக்கையில் இன்னும் வெகு தொலைவு செல்ல வேண்டியதிருந்தது. ரயத்துவாரி முறை முழுமை யாக வந்த போதிலும் ஏராளமான நிலத்திற்கு பட்டா உரிமையோடு நில உடமை கொண்டுள்ள பெரிய நிலச் சுவான்தாரர்கள் தொடர்ந்துநீடித்தது ஒரு பெருந்தடை யாக இருந்தது.

எனவே நிலவுடைமைக்கு உச்ச வரம்பு கட்ட வேண்டும் என்னும் கிளர்ச்சி நீடித்தது. அதில் கடைசியாக தமிழகத் தில் விவசாயிகள் சங்கம், கம்யூனிஸ்ட் கட்சி சார்பில் நடத்தப்பட்ட மிகப் பெரிய இயக்கம் குறிப்பிடத் தக்கது அன்றைய தமிழ் நாடு விவசாயிகள் சங்கத் தலைவர் மணலி கந்தசாமி தலைமையில் கன்னியாகுமரியிலி ருந்தும், தமிழ் நாடு விவசாயிகள் சங்கத்தின் பொதுச் செயலாளர் சீனிவாசராவ் தலைமையில் கோவையிலிருந்தும் சென்னையை நோக்கி நீண்ட பயணம், பாதயாத்திரை இயக்கம் நடத்தப்பட்டது. அது தமிழகத்தையே குலுக்கியது. அன்றைய காங்கிரஸ் ஆட்சி ஆளுக்கு 25 ஏக்கர் என்னும் முறையில் நில உச்ச வரம்புச்

சட்டம் கொண்டு வந்தது. 1967-க்குப் பின் தி.மு.க ஆட்சி இந்த வரம்பை 15 ஏக்கராகக் குறைத்தது. இதை ஒட்டி, காங்கிரஸ் ஆட்சியின் கீழ் நிலச் சீர்திருத்தச் சட்டங்கள் பூர்த்தி பெற்று விட்டன. இந்த சட்டங்கள் எல்லாம் அவைகளுக்குள்ள வரம்புக்குள்ளேயே செயல்பட்டன அவைகளில் ஓட்டைகள் சட்ட வியாக்கியானங்கள் ஏராளம் இருந்தன. அவையெல்லாம் விவசாயிகளுக்கு பாதகமானதாகவும், நிலச் சுவான்தாரர்களுக்கு சாதக மாகவுமே இருந்தன.

இந்த நிலச் சட்டங்களில் இருக்கும் ஓட்டைகளை எதிர்த்து விவசாயிகள் இயக்கம் தொடர்ந்து கிளர்ச்சி நடத்திக் கொண்டு வருகிறது.

இருப்பினும் விவசாயிகளின் நீண்ட தொடர்ச்சியான இயக்கங்கள், கிளர்ச்சிகள், போராட்டங்கள் காரணமாக வும் விடுதலை பெற்ற பின்னர், சுதந்திர இந்திய அரசு கொண்டு வந்த பலநிலச் சட்டங்கள் காரணமாகவும் பழைய நில உறவுகள் மாறி புதிய உறவுகளுக்கான அடித்தளம் உருவாக்கப்பட்டிருக்கிறது. பழைய நிலப்பிரபுத்துவ உறவு கள் பெரிய அளவில் அழிந்துள்ளன. இன்னும் பல இடங் களில் நிலக்குவியலும் நிலப் பிரபுத்துவ மிச்ச சொச்சங் களும், பண்ணை நிலக்குவியல், கோவில் மடத்து நிலங் கள் முதலியன இருப்பினும் பழைய நிலப் பிரபுத்துவ உற்பத்தி உறவுகள் பெரும்பாலும் அழிந்து அதன் ஆதிக்கம் பெரிய அளவில் குறைந்துள்ளது. இந்த மாற்றங் கள் முக்கியமானவை. இந்த மாற்றங்களைச் சரியாகக் கணித்துப் புரிந்து கொண்டால் தான், புதிய கட்டத்தில் விவசாயிகள் இயக்கத்திற்கு சரியான வழியைக் காட்ட முடியும்.

இந்த நிலச்சட்டங்களில் பல ஓட்டைகள் இருந்தபோதிலும்' இருக்கும் சட்டங்களும் சரிவர அமுல் நடத்தப்படவில்லை என்ற போதிலும்,நிலவுடமையில் உச்சவரம்புச்சட்டத்தை மீறிய பினாமி நிலவுடமைகள் இன்னும் இருந்த போதிலும், இவைபற்றிய பிரச்னைகளில் விவசாயிகள் இயக்கம்இன்னும் தொடர வேண்டியவேலைகள் இருந்தபோதிலும் பிரிட்டிஷ் ஆட்சியில் இருந்த நிலைமையை ஒப்பிடும்போது நாடு முழுவதிலும் நிலவுடமை முறையில் குறிப்பிடத்தக்க மாற்றங்கள் ஏற்பட்டிருக்கின்றன. கேரளாவில் நிலச்சீர் திருத்தம் முழுமை யாக்கப்பட்டிருக்கிறது.மேற்குவங்காளத் தில் தீவிரநடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. அதுவும் நிலவுடமை மாற்றங்களுக்கு காரணமாகவும் இருந்திருக் கிறது.

அநேகமாக நாடு முழுவதிலும் சுமார் 70 முதல் 80 சதவீதமான சாகுபடி நிலம் உச்சவரம்புக்குக் கீழ் உள்ள

நிலவுடைமையாளர் கையில் உள்ளன என்று கூறலாம். சிறுநில உடமையாளர்கள், நடுத்தரநில உடமையாளர்கள், பணக்கார நிலவுடமையாளர்கள் என மூன்று வகையாக அவர்களைப் பிரிக்கலாம். அத்துடன் நிலமில்லாத விவசாயத் தொழிலாளர் எண்ணிக்கையும் அதிகரித்துள்ளது. குறிப்பாக கேரளா, தமிழ்நாடு முதலிய மாநிலங்களில் மொத்த மக்கள் தொகையில் சுமார் 40 சதவீதம் வரை விவசாயத் தொழிலாளர்கள் இருக்கிறார்கள். விவசாயத்தை மட்டுமே நம்பி வாழும் மக்களில் சுமார் 50 சதவீதம் பேர் நிலம் இல்லாத விவசாயத் தொழிலாளர்களாவர்:

இந்த நிலைமையில் பாக்கியுள்ள நிலக்குவியலையும் பரவலாக்க வேண்டிய வேலையான, பினாமி உடமைகளை எதிர்த்தநிலப் போராட்டம் இன்னும் வேகமடைய வேண்டும்.

அதே சமயத்தில் 70 சதவீத விவசாய மக்களிடையே கிராமப் புறப்பாட்டாளிமக்களிடை யே ஏற்பட்டுள்ளமாற்றங்களைக் கணக்கில் கொண்டு, புதிய உத்திகளையும் விவசாயிகள் இயக்கத்தில் நாம் வகுத்துக் கொள்ள வேண்டியது மிகவும் அவசியமாகும்.

நாடு சுதந்திரம் பெற்ற பின்னர், காங்கிரஸ் ஆட்சியினர் கொண்டு வந்த நிலச் சீர்திருத்த சட்டங்களின் நோக்கம் நிலப்பிரபுத்துவ முறையை முற்றிலுமாக ஒழித்து விவசாயிகளுக்கு ஒரு முழுமையான விடுதலையைக் கொண்டு வருவதாக இல்லை. நிலப்பிரபுத்துவ பிடிப்புகளைத் தளர்த்தி, இந்திய விவசாயத்தை இந்திய முதலாளித்துவ உற்பத்தி முறையின் பிடியின் கீழ் கொண்டு வருவதே அவர்களின் முக்கிய குறிக்கோளாக இருந்திருக்கிறது.

நாடு விடுதலை பெற்ற பின்னர் மேலே குறிப்பிட்ட சில நிலச்சீர்திருத்தச்சட்டங்கள் கொ டு வரப்பட்டதன் மூலம் விவசாய உற்பத்தி முறையில் உற்பத்தி உறவுகளில் சில மாற்றங்கள் ஏற்பட்டிருக்கின்றன. இந்த மாற்றங்கள் கிராமப்புறப் பாட்டாளிகளின் வாழ்க்கை முறையிலும் சிந்தனை முறையிலும் உணர்வு நிலையிலும் மாற்றங்களைக் கொண்டு வந்திருக்கின்றன.

மன்னராட்சி முறை ஒழிப்பு, ஜமீன் ஒழிப்பு காரணமாக கிராமப்புற மேலாதிக்கம் ஒழிக்கப்பட்டது; கிராமப்புறப் பாட்டாளிகளின் ஒரு விலங்கு ஒடிக்கப்பட்டது.

ஒரே ரயத்துவாரி முறை வந்ததன் மூலம், விவசாயிகளுக்கும் அரசுக்கும் நேரடித் தொடர்பு ஏற்பட்டு விட்டது. இது உற்பத்தி உறவுகளில் ஏற்பட்ட முதல் மாற்றமாகும்.

இனி, வாரம் குத்தகைதார் பாதுகாப்புச் சட்டம், நியாய வாரச் சட்டம், நில உச்ச வரம்புச் சட்டம் முதலிய சட்டங்கள் மூலமும் ஏற்பட்டுள்ள மாற்றங்களும் முழுமையாக இல்லாவிட்டாலும் முக்கியமானவைகளாகும்.

கேரளாவிலும், மேற்கு வங்காளத்தில் பெரும் பகுதியிலும் நிலப்பிரபுத்துவம் முற்றிலுமாக ஒழிக்கப்பட்டிருக்கிறது. இதர மாநிலங்களில் சட்டங்களில் உள்ள ஓட்டைகளால் முழுமையான பலன் விவசாயிகளுக்குக் கிடைக்கவில்லை. நில உச்ச வரம்புச் சட்டத்திலிருந்து தப்பி ஏராளமான பினாமிகள் மூலம் நிலச்சுவான்தார்கள் தொடருகிறார்கள். ஆனால் அதே சமயத்தில் இந்த சட்டங்கள் காரணமாகக் கிராமப்புறப் பாட்டாளிகளிடத்தில் ஒரு விழிப்புணர்வும் ஏற்பட்டிருக்கிறது. வலுவான விவசாய சங்கங்கள் உள்ள இடங்களில் குறிப்பிட்ட அளவில் சட்டங்கள் நிறைவேற்ற முடிந்திருக்கிறது.

தமிழகம் மற்றும் இதர சில மாநிலங்களில் கோவில்கள் மடங்கள் பேரிலும் ஏராளமான நிலம் இருக்கிறது. அவையெல்லாம் உச்ச வரம்புச் சட்டத்தின் கீழ் கொண்டு வரப்படவில்லை.

நிலச்சட்டங்களில் பல ஓட்டைகள் இருப்பினும் பொதுவான விழிப்புணர்வு காரணமாகவும் இதர சமூதாய மாற்றங்கள் காரணமாகவும் இயல்பான முறையிலும் நில உறவு முறையில் மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன.

ஏராளமான சிறிய நடுத்தர நிலச்சுவான்தாரர்கள் பலர் தங்கள் நிலங்களை விற்று விட்டு நகரப்புறங்களுக்கு வந்து விட்டனர். அல்லது வேறு தொழில்களுக்குச் சென்று விட்டனர். அதனால் நிலச்சட்டங்களுடன் சேர்ந்து இயற்கையான மாற்றங்களும் கிராமப்புற நிலஉடமை முறையிலும் கிராமப் புறப்பாட்டாளிகளின் வாழ்க்கைநிலையிலும்உணர்வுநிலையிலும் மாற்றங்களை ஏற்படுத்தியுள்ளன.

1947-ம் ஆண்டு ஆகஸ்டுமாதம் 15-ஆம்தேதி நாடுவிடுதலையடைந்து ஆட்சி மாற்றம் ஏற்பட்டவுடன் 1948—ம்ஆண்டில் ஜமீன் ஒழிப்புச் சட்டம் கொண்டு வரப்பட்டது. சுதேசி சமஸ்தானங்கள் இந்திய யூனியனுடன் இணைக்கப்பட்டன. அதன் பின்னர் அரசியல் சட்டம் உருவாக்கப்பட்டது.

1950 ஜனவரி 26 ஆம் தேதி இந்திய அரசியல் சட்டம் அமுலாக்கப்பட்டு இந்தியா குடியரசு எனப் பிரகடனம் செய்யப்பட்டது.

இந்திய அரசியல் சட்டப்படி இந்திய மக்களுக்குப் புதிய அரசியல் உரிமைகள் கிடைத்தன. தொட்டாலே தீட்டு, பார்த்தாலே பாவம் என்று இருந்த பாரத சமுதாயத்தில் 21—வயது வந்து விட்டால் (இப்போது 18 வயது) ஆண் பெண் வேறுபாடு இன்றி, சாதி மத மொழி வேறுபாடு இன்றி அனைவருக்கும் ஓட்டுரிமை, அனைவரும் சமம் என்று பிரகடனம் செய்யப்பட்டது.

1952—ஆம் ஆண்டில் வயது வந்தோர் அனைவருக்கும் ஓட்டுரிமை அடிப்படையில் மாநில சட்ட மன்றங்களுக்கும் மத்திய பாராளு மன்றத்திற்கும் பொதுத் தேர்தல் நடைபெற்றது. இந்தத் தேர்தல் காலத்தில் நாட்டு மக்களிடத்தில், குறிப்பாக கிராமப்புற பாட்டாளிகள் மக்களிடத்தில் ஒரு மிகப்பெரிய அரசியல் எழுச்சி ஏற்பட்டது.

முதலாவது பொதுத் தேர்தலுக்குப் பின்னர், அரசியல் சட்டம் செயல்பட்ட பின்னர், படிப்படியாக சுதேச சமஸ்தானப் பகுதிகள் முழுமையாக இணைந்து, மொழி வழி மாநில அமைப்புகள் ஏற்பட்டன. அதை ஒட்டி சாதாரண மக்கள் தங்கள் சொந்தமொழியில் அரசியல் விவகாரங்களில் பங்கு கொள்வதற்கான வாய்ப்புகள் ஏற்பட்டன.

இத்தகைய புதியவளர்ச்சி கிராமப்புறப் பாட்டாளி மக்களின் அரசியல் பொருளாதார சமுதாய வாழ்க்கை நிலைமைகளில் பெரிய மாற்றங்களை ஏற்படுத்தின.

இந்த மாற்றங்களை ஒட்டி, கிராமப்புற நிர்வாகத்திலும் நில உற்பத்தி முறையிலும் புதியமேம்பாடுகள் கொண்டு வரவும் விவசாய உற்பத்தியில் புதிய ஏற்றம் கொண்டு வருவதற்கும் நவீன உற்பத்தி முறைகளைக் கொண்டு வருவதற்கும் களம் அமைக்கப்பட்டது.

கிராம நிர்வாகம், பஞ்சாயத்து, பள்ளிக்கூடம், கூட்டுறவு நாணய சங்கம், பஞ்சாயத்து யூனியன், வட்டார வளர்ச்சி நிறுவனங்கள் முதலியன ஏற்பட்டன.

புதிய அணைக்கட்டுகள், கிராமங்களுக்கு மின்சாரம், பம்பு செட்டுகள், ரசாயன உரம், பூச்சி மருந்துகள், நவீன விவசாய ஆராய்ச்சிப் பண்ணைகள், நவீன வீரிய வித்துகள் முதலிய புதிய நவீன உற்பத்திமுறைகள் செயலுக்கு வந்தன. இவைகளைப் பசுமைப்புரட்சி என அழைத்தார்கள். ஆனால் இவையெல்லாம் முதலாளித்துவ வழி முறையிலே தான் செயல்படுத்தப்பட்டுள்ளன. அதன் விவரங்களை அடுத்துக் காண்போம்.

★

# 5

# பசுமைப் புரட்சித் திட்டங்களும் அதன் பலாபலன்களும்

இந்திய நாடு சுதந்திரம் அடைந்த பின்னர், காங்கிரஸ் ஆட்சியினர் கடைப் பிடித்த பாதை முதலாளித்துவப் பாதையாகும். அதன் ஒரு பகுதியாகவே பழைய நிலப்பிரபுத்துவத்தை ஓரளவு மாற்றியமைக்கக் கூடிய முறையில் சில நிலச்சட்டங்கள் கொண்டு வரப்பட்டன என்பதை முந்திய அத்தியாயத்தில் பார்த்தோம். அதனால் ஏற்பட்ட சில புதிய மாற்றங்களையும் பார்த்தோம். ஆயினும் பழைய மிச்ச சொச்சங்கள் நீடிக்கின்றன. அவற்றைத் துடைத்தெறியத் தொடர்ச்சியான முயற்சிகள் அவசியமாகும்.

இன்னும் லட்சக்கணக்கான சாகுபடியாளர்கள் இருக்கிறார்கள். அவர்கள் தாங்கள் சாகுபடி செய்யும் நிலத்தின் உடமையாளர்களாக வேண்டும். உழுபவனுக்கே நிலம் என்பது முழுமையாக்கப்பட வேண்டும்.

நில உச்சு வரம்புச் சட்டம் முழுமையாக நிறைவேற்றப்பட வேண்டும் பினாமி நிலவுடைமைகள் ஒழிக்கப்பட வேண்டும் மிச்ச நிலம் சாகுபடி செய்யும் நிலமில்லா விவசாயிகளுக்குக் கொடுக்கப்பட வேண்டும். சாகுபடிக்கு லாயக்குள்ள நிலம் எல்லாம் சாகுபடிக்குக் கொண்டு வரப்படவேண்டும். ஏரி குளம் கண்மாய் கரைகள், ஆற்றங்கரைகள், சாலைகள் ரயில் பாதை ஓரங்கள் அனைத்தையும் மரங்கள் வளர்ப்பதற்காக விவசாயிகளுக்கு ஒதுக்கப்பட வேண்டும். இவ்வாறு நிலத்தின் உற்பத்தியில் விவசாயிகளின் ஊக்கத்தை உயர்த்த வேண்டும்.

இந்த வேலை-- அதாவது நிலப்பிரபுத்துவ மிச்ச சொச்சங்களை முழுமையாக ஒழிக்கும் வேலை பாக்கி இருக்கிறது. அதை முழுமையாக நிறைவேற்ற வேண்டும் அதை காங்கிரஸ் ஆட்சியினர் செய்து முடிக்கவில்லை.

மறுபக்கம் ஏற்கனவே ஜமீன் இனாம் முறைகளில் மாற்றம் பெற்று நேரடி நிலஉடமையாளர்களாக வந்துள்ளவர்கள், ரயத்துவாரி முறையில் ஏற்கனவே உள்ள நிலஉடமை யாளர்கள், ஆகியவர்களுடைய நில உற்பத்தி முறையிலும் அத்துடன் புதிதாக எழுந்துள்ளசில நவீனபண்ணைகளிலும் பசுமைப்புரட்சி என்னும் பெயரில் சில மாற்றங்கள் கொண்டுவரப்பட்டுள்ளன அது மிகவும் முக்கியமான தாகும். அந்த விவசாய உறவுகள் தான் இன்று இந்திய விவசாயத்தில் பெரும்பகுதி ஆதிக்கத்திற்கு வந்திருக்கிறது.

முதலாவதாக, நிலவுடைமையில் சிறிய நடுத்தர, உடைமை யாளர் எண்ணிக்கை உயர்ந்திருக்கிறது. ஆயினும் அண்மைக் காலத்தில் சில ஆண்டுகளாக, விவசாய நெருக்கடியைத் தாங்க முடியாமல் அவர்கள் தங்கள் நிலங்களை விற்பனை செய்வது அதிகமாகியுள்ளது. நகரங்களில் உள்ள சில வசதி யாளர்கள், வர்த்தகர்கள், தொழிலதிபர்கள் முதலானோர் நிலம் வாங்கியதால் முதலாளித்துவ முறையிலான நவீன நடுத்தரப் பண்ணைகளும் நடப்பிற்கு வந்துள்ளன. அவற்றைப் பற்றிப் பின்னர் காணலாம். இருப்பினும் நில வுடமைப் பிரச்சனையில் இப்போது வரும் சில வளர்ச்சி நிலைகளை நாம் இந்த இடத்திலும் கவனத்தில் கொள்ள வேண்டும்.

சிறிய நடுத்தர விவசாயிகளிடம் தங்களுடைய பழைய ஜமீன் இனாம் மற்றும் இதர நிலப்பிரபுத்துவ உறவு மாறி, அந்தப் பளு நீங்கி அரசுடன் நேரடியாக உறவு கொண்ட சுதந்திரமான நிவுடைமையாளர்களான போது அவர்களிடம் தொடக்கத்தில் ஒரு புதிய ஊக்கம் ஏற்பட்டது.

மேலும் நிலத்தில் இறங்கி சாகுபடி வேலைகளை நேரடி யாகச் செய்யாத பல ''மேல் தட்டு'' சமுதாயங்களைச் சேர்ந்தவர்கள் பலரும் தங்களுடைய நிலங்களை விற்று விட்டு நகரங்களுக்கு உத்தியோகங்கள், நவீன தொழில்கள் போன்றவற்றிற்கும் மற்றும் வர்த்தகம் வாணிபத்திற்கும் மாறியும் உள்ளார்கள். அந்த நிலத்தை வாங்கியவர்களும் புதிய ஊக்கத் தோடும் நவீன முறை சாகுபடியில் இறங்கினார்கள். இந்த ஆரம்ப ஊக்கத்திற்கு, அரசு விவசாய உற்பத்தியை அதிகரிப்பதற்கு எடுத்த சில முயற் சிகள் உதவியாக இருந்தன.

இரண்டாவதாக, அரசு ஐந்தாண்டு திட்டங்களின் மூலம் நாடெங்கிலும் பல மாநிலங்களிலும் பெரிய அணைக்கட்டு களைக் கட்டியது. இந்த அணைக்கட்டுகள் மூலம் புதிய பாசனப் பகுதிகள் பல வந்துள்ளன.

தமிழகத்தில் மூன்று வகைப்பாசன முறைகள் ஏற்கனவே

நிலை பெற்றிருக்கின்றன. ஒன்று கால்வாய்ப்பாசனம்; இரண்டு கண் மாய்ப்பாசனம்; மூன்று கிணற்றுப்பாசனம் இம் மூன்று துறைகளும் தமிழ் நாட்டில் முக்கியமானவையாகும்.

நாடு முழுவதிலும்முதல் இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டங்களில் பெரிய அணைகள் கட்டப்பட்டன. பாக்ரா நங்கல், ஹீராகுட் அணைகள், தாமோதர பள்ளத்தாக்குத் திட்டம், நர்மதாநதி திட்டம், கிருஷ்ண, துங்கபத்திராநதித் திட்டங்கள் முதலியன குறிப்பிடத்தக்கவை.

தமிழகத்தில் ஏற்கனவே இருந்த மேட்டூர். பெரியாறு, பாபநாசம் அணைகள் தவிர பவானி சாகர், ஆளியாறு. அமராவதி, வைகை, கோதையாறு, மணிமுத்தாறு, சாத்தனூர் அணை, கிருஷ்ணகிரி, அணை, பிளவைக்கல் அணை முதலிய பல அணைகள் கட்டப்பட்டு, கால்வாய்ப் பாசனப் பகுதி விரிவாக்கப்பட்டது.

ஆயினும் பழைய நீர் நிலைகளான ஏரி குளம் கண்மாய்கள் பற்றி ஐந்தாண்டுத்திட்டங்களில் அதிக கவனம் எடுத்துக் கொள்ளப்படவில்லை. அவைகளின் முறையான மராமத்துக் கூட கவனிக்கப்படாமல் புறக்கணிக்கப்பட்டு விட்டது. அதனால் தமிழகத்தில் பெரிய பாதிப்புகள் இப்போது ஏற்பட்டுள்ளன. அது பற்றிப்பின்னர் காண்போம்.

அடுத்தாற்போல்கிணற்றுப் பாசனம் விரிவுபடுத்தப் பட்டது. ஏற்கெனவே தமிழகத்தில் நிலத்தடி நீரைப்பயன்படுத்தி கிணற்றுப் பாசனம் ஒரு முக்கிய பாசனத் துறையாக இருந்திருக்கிறது. ஏரி கண்மாய்ப் பாசனப் பகுதிகளிலும் கூட தண்ணீர்த் தட்டுப் பாட்டைச் சமாளிக்கக் கிணறுகளும் பல இடங்களில் தோண்டப்பட்டுள்ளன

பாசனக்கிணறுகள் மட்டும் இப்போது தமிழகத்தில் இருபது லட்சத்திற்கு மேல் இருப்பதாகக் கணக்கிடப்பட்டிருக்கிறது. முதல் இரண்டு ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் மின்சார உற்பத்தி அதிகரிக்கப்பட்டது. கிராமங்களுக்கும் மின்சார விநியோகம் விரிவுபடுத்தப்பட்டது. கிராமங்களுக்கு மின்சாரம்வந்ததை ஒட்டித்தமிழகத்தில்கிணற்றுப்பாசனத்திற்கு மின்சார பம்பு செட்டுகள் கொண்டு வரப்பட்டன.

புதிய கிணறுகள்வெட்டுவதற்கும், மின்சார பம்புசெட்டுகள் போடுவதற்கும் அரசாங்கத்தின் மூலம் விவசாயிகளுக்குக் கடன் கொடுக்கப்பட்டது. இவ்வாறு படிப்படியாக பாசனக் கிணறுகளின் எண்ணிக்கை 20லட்சம் வரை உயர்ந்தது.

மின்சார பம்பு செட்டுகளின் எண்ணிக்கையும் சுமார் பத்து லட்சம் வரை உயர்ந்தது. மின் இணைப்பு வராத இடங்களில் அல்லது காலதாமதம் ஏற்படும் இடங்களில் ஆயில் என்ஜின்களும் பயன்படுத்தப்பட்டன. சுமார் மூன்று

லட்சத்திற்கும் மேற்பட்ட ஆயில் என்ஜின்கள் தமிழகத்தில் பயன்படுத்தப்படுவதாகக் கணக்கு கூறப்படுகிறது.

மின்சாரப் பயன்பாடும் கிணற்றுப் பாசனத்தில் மின்சார பம்புசெட்டுகள் வந்ததும் தமிழகத்தின் விவசாயத்தில் மிகப் பெரிய வளர்ச்சிக்கு உதவியது.

நீர்ப்பாசன முறைகளில் ஏற்பட்டுள்ள வளர்ச்சியைத் தொடர்ந்து விவசாயத் துறையில் புதிய நவீன முறைகளும் பசுமைப் புரட்சி என்னும் பெயரில் கொண்டு வரப்பட்டது.

ரசாயன உரம், பூச்சி மருந்து, புதியரக வீரிய வித்துக்கள் முதலியன அதிகமாக செயல் முறைக்கு வந்தன. இதையே பசுமைப்புரட்சி என்று குறிப்பிட்டனர். நமது நாட்டின் விவசாயத்தின் உரத் தேவையை ஒட்டி ரசாயன உர உற்பத்தித் தொழிற் சாலைகள் வளர்ந்தன. பூச்சி மருந்து உற்பத்திக்கான ரசாயனத்தொழிற்சாலைகளும் வளர்ந்தன.

விவசாயக் கல்லூரிகளும் ஆராய்ச்சிப் பண்ணைகளும் வளர்ந்தன. நெல் இதர தானியங்கள், பருப்பு, நிலக்கடலை, பருத்தி, கரும்பு முதலிய பல பொருள்களிலும் வீரிய வித்துக்கள் உண்டாக்கப்பட்டு பழக்கத்திற்கு வந்தன.

இத்தகைய நவீன விவசாய முறைகள் மூலம் விவசாய உற்பத்தி குறிப்பிடத்தக்க அளவில் வளர்ச்சியடைந்தது.

நவீன முறை விவசாய வளர்ச்சியை ஒட்டி, டிராக்டர்கள், புல்டோசர்கள், லாரிகள், டெம்போக்கள், ஸ்பிரேயர்கள், ஜின்னிங் பாக்டரிகள், அரிசிமில், மாவுமில், எண்ணெய் மில்கள், சவ்வரிசி—சேமியா பாக்டரிகள் போன்றவையும் கிராமப்புறத் தொழில்கள் மூலம் புதிய நவீன உற்பத்திக் கருவிகளும் வளர்ச்சியடைந்தன,

இவையெல்லாம் கிராமப்புற உற்பத்தி முறையில் பல மாற்றங்களைக் கொண்டு வந்திருக்கின்றன

இந்தப் புதிய உற்பத்தி முறைகளைக் கடைப்பிடித்து செயல் படுத்துவதற்கு விவசாயிகளுக்கு சிறிய அளவிலேனும் புதிய முதலீடுகள் தேவைப்பட்டன. ஏற்கெனவே விவசாயத் தொழிலை காலத்தில் நடத்துவதற்கு விவசாயச் செலவுகளுக்கு, முட்டுவளிச் செலவுகளுக்கு விவசாயிகளுக்கு பணம் தேவைப்பட்டிருந்தது. இப்போது நவீன விவசாய முறைகளைச் செய்வதற்கு மேலும் அதிகமான பணம் தேவைப் பட்டது.

எனவே புதிய விவசாய முறை வளர்ச்சியை ஒட்டி விவசாயிகளின் கடன் வசதிகளுக்காகக் கூட்டுறவு நாணய சங்கங்கள், கிராமாந்திரக் கூட்டுறவு வங்கிகள், கிராம வங்கிகள்

முதலியவை உருவாக்கப்பட்டு வளர்ச்சி பெற்றன. அரசும் விவசாய வளர்ச்சிக்குப் பல வகையான கடன்களைக் கொடுத்தது.

கிராமப்புற நிர்வாகத்தில் பஞ்சாயத்துகளும், பஞ்சாயத்து ஒன்றியங்களும் உருவாக்கப்பட்டது. பஞ்சாயத்து ஒன்றியங் களுடன் வட்டார வளர்ச்சியும் இணைக்கப்பட்டது. இதில், விவசாயம் கூட்டுறவு, பஞ்சாயத்து, கால்நடைப் பிரிவுகளும் அதற்கான அதிகாரிகள் மூலம் விவசாய வளர்ச்சிப் பணி களும் அபிவிருத்தி செய்யப்பட்டன.

நவீன விவசாய முறைகள், வீரிய வித்துக்கள், ரசாயன உரம், பூச்சி மருந்துகள், கிணற்றுப்பாசனம், மின்சார பம்பு செட்டுகள், கால்வாய்ப் பாசனங்கள் மூலம் விவசாயப் பொருள் உற்பத்தி அதிகரிக்கப் பட்டது. விவசாய உற்பத்திப் பொருள்களின் வளர்ச்சியுடன் ஆடு மாடு கோழி பன்றி முதலிய கால்நடைகள் வளர்த்தல், தென்னை, மா, பலா கொய்யா முதலிய பழமரங்கள் வளர்த்தல் முதலிய பணிகளுக்கும் கடன் வழங்கப்பட்டு அவையும் வளர்ச்சியடைந்தன.

நாட்டு மக்களுக்கு வேண்டிய உணவு தானியங்களும், அதே போல தொழிற்சாலைகளுக்குத் தேவையான விவசாய உற்பத்தி மூலமான மூலப்பொருள் உற்பத்தியும் அதிகரித்தன. நெல், கோதுமை, கம்பு, சோளம், ராகி, பருப்பு, பழவகைகள் முதலிய உணவுப் பொருள்களின் உற் பத்தியும், பருத்தி, சணல், கரும்பு, நிலக்கடலை, குச்சிக் கிழங்கு முதலிய அத்தியாவசியப் பண்ட உற்பத்தித் தொழில்களுக்கு சணல் ஆலைகள், சமையல் எண்ணெய் ஆலைகள், சவ்வரிசி ஆலைகள் பெருகின.

பசுமைப் புரட்சி என்னும் பெயரில் இந்திய நாட்டில், நாடு விடுதலை பெற்ற பின்னர், விவசாயத்துறையில் ஏற்பட்டுள்ள வளர்ச்சி குறிப்பிடத்தக்கதாகும். ஆயினும் இந்த வளர்ச்சி முதலாளித்துவ,முறையிலான வளர்ச்சியாக முரண்பாடுகள் மிக்க வளர்ச்சியாகவே உள்ளது.

விவசாய உற்பத்தித் துறையில், உற்பத்தி சக்திகள் அதாவது நீர்ப்பாசனம், உரம், பூச்சிமருந்து, கடன் நிறுவனங்கள், உற்பத்திக்கருவிகள் முதலியவை முதலாளித்துவ முறையிலேயே இந்திய நாட்டில் வளர்ச்சி யடைந்திருக்கின்றன. அதையொட்டி உற்பத்தி உறவு களும் முதலாளித்துவ முறையிலேயே வளர்ச்சிபெற்றிருக் கின்றன.

இன்றைய இந்தியாவில் விவசாயத்துறை உற்பத்தியில்

முதலாளித்துவ உற்பத்தி உறவுகளே வளர்ச்சி பெற்று கிராமப்புறங்களிலும் ஆதிக்கம் கொண்ட உற்பத்தி உறவுகளாக வளர்ச்சி பெற்று வந்துள்ளது

கிராமப்புறங்களில், விவசாயத்துறையில் முதலாளித்துவ வளர்ச்சி என்றால் என்ன?

முதலாளித்துவ உற்பத்தி முறையின் அடிப்படை 1) முதலீட்டு ஏற்பாடு, 2) நவீன உற்பத்திக் கருவிகள், 3) கூலி உழைப்பு, 4) மார்க்கட்டிற்காக அதாவது விற்பனைக்காக உற்பத்தி ஆகியவைகளைக் கொண்டதாகும்.

இந்த நான்கு முதலாளித்துவ அடிப்படைகளும் இன்றைய நமது இந்திய விவசாயத்துறையில் வலுவாக வளர்ந்துள்ளது. மேலும் வலுவாகி இறுகலாகிக் கொண்டிருக்கிறது.

முதலாவதாக முதலீட்டு ஏற்பாடுகள் என்பது. உற்பத்தி சாதனமாகிய நிலம் அதன் விலை, அதற்காக முதலீடு செய்து நிலத்தை வாங்கி, முதலீட்டுக் கணக்கில் வைப்பது, நீர்ப் பாசன ஏற்பாடான கிணறு பம்பு செட்டு ஆகியவைகளுக் கான முதலீடு, அணைகள் நீர்த் தேக்கங்கள் என்றாலும் அவைகளைக் கட்டுவதற்கான முதலீடு, கிணறு, பம்புசெட்டு அணைகள் கால்வாய்கள் முதலியவற்றைப் பராமரிப்பதற் கான செலவு, உற்பத்திக்கருவிகளான டிராக்டர், புல் டோசர், ஸ்பிரேயர்கள், லாரிகள் டெம்போக்கள் முதலிய உற்பத்திக் கருவிகளுக்கான முதலீடு, அல்லது வாடகைச் செலவுகளுக்கான முதலீட்டு ஏற்பாடுகள், விதைகளுக்கு, உரத்திற்கு, பூச்சி மருந்திற்கு முதலிய முட்டுவளிச் செலவுகளுக்கு வேண்டிய மூலதன முதலீடு ஏற்பாடுகள்—இவ்வாறாக நிலையான மூலதனம் நடப்பு மூலதனம் ஆகியவை விவசாயத் தொழிலுக்கு அடிப் படையாக அமைந்துள்ளன. இது பெரிய அளவு பண்ணை களாக இல்லாமல் சிறிய அளவில் சிறு சிறு பண்ணைகளாக இன்றைய நிலையில் நமது நாட்டில் அமைந்துள்ளன. இந்தப் பண்ணைகளின் பரப்பளவிலும் சில மாற்றங்கள் ஏற்படுகின் றன. அதைப் பின்னர் காண்போம்.

இரண்டாவதாக, நவீன உற்பத்திக்க கருவிகள் என்பவை பாவலாக வரத் தொடங்கியுள்ளன.

நவீன உற்பத்திக் கருவிகளில் உழவடை எந்திரங்கள் டிராக் டர்கள், புல்டோசர்கள், தொளி கலக்கும் கருவிகள், முதலியவை, களையெடுக்கும் கருவிகள், ரசாயனஉரம், பூச்சி மருந்துகள், மருந்து அடிக்கும் கருவிகள், அறுவடைக் கருவிகள், தண்ணீர் இறைக்கும் கருவிகள், மின்சாரம் முதலியன அதிகரித்துக் கொண்டுவருகின்றன. கிராமப்புற

விவசாயப் போக்குவரத்தில் மாட்டு வண்டிகள் இன்னும் நீடித்துவந்தபோதிலும்,லாரிகள்,டிராக்டர்,டெம்போக்கள், பஸ்கள் அதிகரித்து வருகின்றன.சிறிய நில உடமையாளர் கள் அதாவது சிறு விவசாயிகள் கூட இந்த நவீன உற்பத்திக் கருவிகளிலிருந்து தப்ப முடியவில்லை. இந்த நவீன உற்பத்திக் கருவிகளின் பயன்பாடு அதிகரிக்குமே தவிர குறையாது. அதன் பயன்பாட்டு வளர்ச்சியைத் தவிர்க்க முடியாது. முன்பு உற்பத்திக் கருவிகள் எல்லாம் எளிய உற்பத்திக் கருவிகள். ஏர்கலப்பை, வண்டி மாடு, தழைஉரம், தொளிஉரம், கைக்களையெடுத்தல், ஆட்கள் நேரடியாகப் போர் அடித்தல் முதலியவைகளை விவசாயிகள் தங்கள் சொந்த உழைப்பின் மூலம் நிறைவேற்றினார்கள். இப்போது அதற்கு பதில் நவீன உற்பத்திக்கருவிகளை வாடகைக்கு வாங்கிப் பயன்படுத்திக் கொள்வது அதிகரித்து வருகிறது.

மூன்றாவதாக கூலி உழைப்பு என்பது முதலாளித்துவ உற்பத்தி முறையின் முக்கிய ஆதாரமாகும். உழுதல், நிலம் சீரமைத்தல். விதைத்தல், நடுதல், களைஎடுத்தல், உரமிடுதல், மருந்து தெளித்தல்,அறுவடை செய்தல்,போக்குவரத்து அனைத்திலும் வேலை செய்வதற்கு தினசரிக்கூலி அல்லது ஒப்பந்தக் கூலி முறையில் உழைப்பு செலுத்தப் படுகிறது. இது உழைப்பை விலைக்கு அதாவது கூலிக்கு வாங்கி அல்லது வாடகைக்கு வாங்கிப் பயன் படுத்துவது என்பது தான் இப்போது நடை முறைக்கு வந்திருக்கிறது.

நிலப்பிரபுத்துவ முறையில் இருந்த பலவேறு முறையிலான மறைமுகமான , திரையிடப்பட்ட சுரண்டல் முறைக்குப் பதிலாக நேரடியான சுரண்டல் முறை ஏற்பட்டிருக்கிறது.

இவ்வாறான நேரடியான சுரண்டல் முறையிலான கூலி உழைப்பு விவசாயத்துறையில் வளர்ந்துநிலைபெற்றுள்ளது. அதனால் நிலவுடமையில் ஏற்பட்டுள்ள மாற்றங்களின் காரணமாக மட்டுமல்லாமல் நவீன உற்பத்தி முறைகளில் தாக்குப் பிடிக்க முடியாமல் மிகச்சிறிய அளவு நிலம் வைத்திருந்த சிறிய விவசாயிகளும் நிலத்தை விற்றுவிட்டுக் கூலி விவசாயிகளாக, விவசாயத் தொழிலாளர்களாக மாறி வந்துள்ளார்கள். அதனால் கிராமப்புறங்களில் விவசாயத் தொழிலாளர் எண்ணிக்கை அதிகரித்து வந்துள்ளது. கிராமத்தில் விவசாயம் செய்ய முடியாமல் நிலத்தை விட்டு நகரங்களுக்கு வேலை தேடிச்செல்லும் நிலையும் அதிகரித்து வருகிறது.

நான்காவதாக மார்க்கட்டிற்காக, விற்பனைக்காக உற்பத்தி செய்தலும் முதலாளித்துவ அடிப்படையில் மிகவும் முக்கியமானதாகும். நிலப்பிரபுத்துவ உற்பத்தி முறையில்

உற்பத்தி என்பது குடும்பத்தின் அல்லது கிராமத்தின் அல்லது குறிப்பிட்ட சமுதாயத்தின் தேவைக்காக என்று தான் செய்யப்பட்டது. நல்ல பருவ நிலை அல்லது வேறு சாதகமான சூழ்நிலை காரணமாக சாகுபடி சிறப்பாக அமைந்து உபரி அதிகமாக வந்தால் அந்த உபரியை சந்தைக்கு அனுப்புவது என்பது பழக்கமாகும். அதை இயற்கைச்சந்தை என்று கூறுகிறோம். அந்தப் பழைய இயற்கைச் சந்தை முறை மாறிவிட்டது. இப்போது உணவு தானியங்கள் உள்பட விவசாய உற்பத்தி முழுவதுமே மார்க்கட்டிற்காக என்று ஏற்பட்டுவிட்டது.

இன்றைய இந்தியாவின் மார்க்கட் என்பது இந்திய முதலாளித்துவ மார்க்கட்டாகும். இந்திய முதலாளித்துவ மார்க்கட் உலக முதலாளித்துவ மார்க்கட்டுடன் பிணைக்கப்பட்டு அதைச் சார்ந்திருக்கிறது. முதலாளித்துவ மார்க்கட்டில் மிகவும் முக்கியமான அம்சம் விலை ஆகும்.

இன்றைய விவசாய உற்பத்தியும் விநியோகமும், —அதாவது இன்றைய இந்தியாவின் விவசாயப் பொருளாதாரம் முழுவதுமே—முதலாளித்துவ மார்க்கட்டையே சார்ந்திருக்கிறது. முதலாளித்துவ மார்க்கட்டின் விலை முறை தான் இன்றையஇந்திய விவசாய உற்பத்தி முறையின் வளர்ச்சிக்கும், நிலைபாட்டிற்கும் நெருக்கடிக்கும் ஆதாரமாக அமைந்துள்ளது.

விவசாயிகள், தங்களுடைய விவசாய உற்பத்திக்காக வாங்கும் பொருள்கள், கருவிகள், இடு பொருள்களின் விலையும், உற்பத்தி செய்யும் பொருள்களின் விலையும் அவர்களின் உற்பத்திச் செலவையும், வருவாய் அளவையும் தீர்மானிக்கிறது.

விவசாயிகள் தங்கள் சொந்த உபயோகத்திற்காக மார்க்கட்டில் கடைகளில் வாங்கும் பொருள்களின் விலை உயர்ந்து கொண்டேயிருக்கிறது. அதனால் விவசாயிகளின் கிராமப்புற மக்களின் வாழ்க்கைச் செலவுகள் உயர்ந்து கொண்டே போகிறது. ஆனால் இந்த நிலை எல்லாப் பகுதி மக்களுக்கும் பொதுவானது. இது பற்றி நாம் தனியாகத் தான் பேச வேண்டும்.

விவசாயிகள் விவசாய உற்பத்திக்காகப் பயன்படுத்தும் பொருள்கள், இடுபொருள்களின் விலை உயர்ந்துகொண்டே இருக்கிறது. விவசாயக் கருவிகளின் விலை உயர்ந்து கொண்டேயிருக்கிறது. பம்புசெட்டுகள், அதன் உபகருவிகள், மின்சாரச்செலவு, டிராக்டர், டெம்போ, ஸ்பிரேயர் முதலியவற்றின் விலை, டயர், ஸ்பேர் சாமான்கள் எண்ணெய், ஆகியவற்றின் விலை, உரம் பூச்சிமருந்து முதலிய

இடுபொருள்களின் விலைகள் உயர்ந்து கொண்டேயிருக்கின்றன. பஸ் கட்டணம் உயர்ந்து கொண்டே இருக்கிறது. போக்குவரத்து சாதனங்களின் செலவும் கட்டணமும் உயர்ந்து கொண்டேயிருக்கிறது. அத்துடன் உழைப்பு சக்திக்கான செலவும் குறிப்பிட்ட அளவில் அதிகரித்து வருகிறது இதனால் இன்று விவசாயத்தின் உற்பத்திச் செலவு அதிகரித்துக் கொண்டே இருக்கிறது.

மறுபக்கம் விவசாய உற்பத்திப் பொருள்களின் மார்க்கட் விலை மேலும் கீழுமாய்ப் போய்க் கொண்டிருக்கிறது. உற்பத்திச் செலவில் சம்மந்தப்பட்ட பொருள்களின் விலை உயர்வுக்கு ஈடாக உற்பத்திப்பொருள்களின் விலை உயரவில்லை.

இதனால் விவசாயிகள் கடுமையாக பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். இதன் காரணமாக விவசாயத் தொழிலும் பாதிக்கப்பட்டிருக்கிறது.

மேலோட்டமாகப்பார்த்தாலும் நாடு விடுதலை பெற்ற கடந்த நாற்பது ஆண்டுகளில் நெல்லை விளைய வைத்தவர்கள் பணக்காரர்கள் ஆகவில்லை. ஆனால் நெல்லை வாங்கி அரிசியாக்கி நகரங்களில் விற்பவர்கள் லட்சாதிபதிகளாகியிருக்கிறார்கள் அரிசி வாங்கி உபயோகிப்போர்கள் அரிசிக்கு என்ன விலை கொடுக்கிறார்கள் என்று பார்க்கும் போது அந்த விலைக்கும் விவசாயிகளின் நெல்லிற்குக் கிடைக்கும் விலைக்கும் சம்பந்தமில்லை.

பருத்தி விளையவைத்தவன் பணக்காரன் ஆகவில்லை. பருத்தியை விவசாயிகளிடம் வாங்கி அதைப்பஞ்சாக்கி, நூலாக்கி துணியாக்கி விற்பவர்கள், மில் முதலாளிகள் கோடீஸ்வரர்களாகியிருக்கிறார்கள். மக்கள் வாங்கும் துணி விலைக்கும் விவசாயிகளின் பருத்திக்குக் கிடைக்கும் விலைக்கும் சம்பந்தமில்லை.

கரும்பு விளைய வைத்தவன் பணக்காரன் ஆகவில்லை. கரும்பை வாங்கிக் கசக்கி அதைச் சர்க்கரையாக்கி மிட்டாய் ஆக்கி விற்பவர்கள், சர்க்கரை ஆலை முதலாளிகள் கோடீஸ்வரர்களாகியுள்ளார்கள். மக்கள் வாங்கி உபயோகிக்கும் சர்க்கரையின் விலைக்கும் விவசாயிகளுக்கு—அவர்களுடைய கரும்பிற்குக் கிடைக்கும் விலைக்கும் சம்பந்தமில்லை.

நிலக்கடலை, தேங்காய், இதர எண்ணெய் வித்துக்கள் விளைய வைத்தவன் பணக்காரன் ஆகவில்லை. அந்த நிலக்கடலையை, தேங்காயை, இதர எண்ணெய் வித்துக்களை

எண்ணையரக்கி, சோப் பாக்கி விற்பவர்கள் டாட்டாக்கள் பிர்லாக்கள் ஆகியிருக்கிறார்கள். பெரிய தென்னந் தோப்புகளை வைத்துக் கொண்டுள்ள சில பணக்காரத் தோப்பு உடமையாளர்களும் கூட எண்ணெய் ஆலை முதலாளிகளால் சுரண்டப்படுகிறார்கள். சாதாரண மக்கள் வாங்கி உபயோகிக்கும் எண்ணெய் சோப்பின் விலைக்கும் விவசாயிகளுக்கு தங்களுடைய நிலக்கடலை தேங்காய் இதர எண்ணெ வித்துக்களுக்குக் கிடைக்கும் விலைகளுக்கும் சம்பந்தமில்லை.

விவசாயிகள் வாங்கும் பொருள்களுக்கெல்லாம் அதை விற்பவர்கள் விலை நிர்ணயிக்கிறார்கள். விவசாயிகள் விற்கும் பொருள்களுக் கெல்லாம் அதை வாங்குபவர்கள் விலை நிர்ணயிக்கிறார்கள். இந்த விற்பவர்களும் வாங்குபவர் களும் தான் மார்க்கட் விலைகளைத் தீர்மானிக் கிறார்கள்.

அதனால் இந்திய விவசாயிகளும் இந்திய விவசாய உற்பத்தி முறையும் இந்திய முதலாளி மார்க்கட்டின் கிடுக்கிக்குள் அகப்பட்டுக் கொண்டிருக்கின்றன.

நாடு விடுதலை பெற்ற பின்னர் இந்தியா முதலாளித்துவப் பாதையில் சென்று கொண்டிருக்கிறது. இந்திய அரசு முதலாளித்துவ அரசராக செயல்படுகிறது. இந்திய ஜன நாயகமும் முதலாளித்துவ ஜனநாயகமாகவே செயல்பட்டுக் கொண்டு வருகிறது. இந்தியப் பொருளாதாரம் கலப்புப் பொருளாதாரமாகவே செயல்பட்டு வந்திருக்கிறது.

இந்திய முதலாளித்துவ ஆதிக்கத்தில் உள்ள இந்திய அரசு நிலச்சீர்திருத்தங்கள் சிலவற்றைச் செய்து இந்திய விவசாயத்துறையை முதலாளித்துவ வழியில் கொண்டு செல்வதற்கான முறையில் நில உடமை முறையை சீர மைத்தது.

இந்திய முதலாளித்துவம் தனது ஆதிக்கத்தில் உள்ள அரசின் மூலம் விவசாயிகளுக்குக் கடனைக் கொடுத்தது. பசுமைப் புரட்சியின் மூலம், விவசாய உற்பத்தி அதிகப் பட்டிருக்கிறது.

அதன் விளைவாகப் பார்த்தால் இப்போது பெரிய அளவு செல்வக குவியலின் முன்பு விவசாயிகளின் ஏழ்மை அதிகரித் துள்ளதைக் காண்கிறோம், விவசாயிகள் தாங்கள் வாங்கிய கடனைக் கொக்க முடிய வில்லை. ஏன் என்றால் விவசாய உற்பத்தி அதிகரித்திருக்கிறது. இப்படிக் கூறுவது வேடிக்கை யாக தோன்றும்; ஆனால் உண்மை.

முதலாளித்துவ உற்பத்தியில் செல்வம் எந்த அளவுக்கு அதிகரித்து உச்சத்திற்குச் செல்கிறதோ அந்த அளவுக்கு

வறுமையின் ஆழமும் அதிகரிக்கும் என்று காரல் மார்க்ஸ் குறிப்பிடுகிறார்:

செல்வக் குவியல்

வறுமையின் ஆழம்.

இது முதலாளித்துவ உற்பத்தி முறையின் விதிமுறையாகும். சமுதாயம் தனது உழைப்பு சக்தி மூலம் உற்பத்தி செய்த செல்வங்களையெல்லாம் முதலாளித்துவம் அபகரித்துக் கொள்கிறது. அதனால் சமுதாயத்தின், குறிப்பாக சமுதாயத்தில் உள்ள உழைக்கும் மக்களின் வறுமை அதிகரிக்கிறது. எனவே முதலாளித்துவ முறையில் வளர்ந்துள்ள உற்பத்தி சக்திகளுக்கும் முதலாளித்துவ முறையில் அமைந்துள்ள—வளர்ந்துள்ள உற்பத்தி உறவுகளுக்கும் கடுமையான மோதல் ஏற்படத் தொடங்கியிருக்கிறது.

அந்த மோதல்கள் முதலாளித்துவ நெருக்கடியைத் தீவிரப் படுத்திவருகிறது.

முதலாளித்துவப்பாதையின் காரணமாகஇந்தியப்பொருளாதார வளர்ச்சியின் ஒரு பகுதியாக உள்ள இந்திய விவசாய வளர்ச்சியும் கடுமையாகப் பாதிக்கப்பட்டு நெருக்கடியில் சிக்கியிருக்கிறது.

பசுமைப்புரட்சி நடவடிக்கைகள் காரணமாக முதலில் விவசாய உற்பத்தி பெருகிற்று. ஆனால் அந்த உற்பத்திப் பெருக்கத்தின் பலனில் மிகப்பெரும் பகுதி இந்திய முதலாளிகளுக்குதான் சேர்ந்திருக்கிறது. விவசாயிகளைப் பொறுத்த வரை — ஏழை விவசாயிகள் சிறு விவசாயிகள் நடுத்தர விவசாயிகள் மட்டுமல்லாமல் வசதியான விவசாயிகளும் கூட —கடுமையாகப் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். விவசாயிகளுக்கு பசுமைப் புரட்சியினால் கிடைத்துள்ள பலன் கடன் சுமையே யாகும். இன்றைய கடன்சுமை விவசாயிகளால் தாங்க முடியாத அளவு உயர்ந்திருக்கிறது. எனவே நமது விவசாயத் துறையின் அடிப்படையாக உள்ள உழைப்பு சக்தி மிகப் பெரிய அளவில் பாதிக்கப்பட்டு நெருக்கடிக் குள்ளாகியிருக்கிறது. விவசாயிகள் ஏழ்மையாகி வருகிறார்கள் என்பது மட்டுமல்ல பெரும் அளவில் கடனாளிகளாகி வருகிறார்கள். இந்தக் கடன் சுமை தீர்க்கப்பட்டாலன்றி, விவசாயத் துறையில் உள்ள உற்பத்தி சக்தியை விடுவிக்க முடியாது.

கிராமப்புற உழைப்பு சக்திகளுக்கு பழைய நிலப்பரபுத்துவ விலங்குகள்நீக்கப்பட்டு இப்போதுபுதிய நவீ ஊ முதலாளித்துவ விலங்குகள்—கடன் விலங்குகள் மாட்டப் பட்டிருக்கின்றன.

விவசாயிகளின் கடன் சுமைகள் ஒழிக்கப்பட்டு, மீண்டும் கடன் சுமைகள் ஏறாமல் தடுக்கப்பட்டால்தான் பசுமைப் புரட்சியின் பலன் விவசாயிகளுக்குக் கிடைக்கும். அதற்கு விவசாயிகள் வாங்கும் பொருள்களின் விலைகளை நியாய விலை அளவுக்குக் குறைக்க வேண்டும். விவசாயிகளின் உற்பத்திப் பொருள்களுக்குக் கட்டுபடியாகும் விலை கிடைக்க வேண்டும். விவசாய உற்பத்திக்கு அவசியமான விசை சக்தி, கருவிகள், இதர சாதனங்கள் சீராகக் கிடைக்க வேண்டும்.

முதலாளித்துவ சுரண்டல் அமைப்பு முறை இருக்கும் வரை அது சாத்தியமில்லை. அதற்கு வேறு வழி காண வேண்டும்.

அத்துடன் பசுமைப் புரட்சியே இப்போது தனது உச்சக் கட்டத்தை அடைந்து விட்டது. அது மேலும் முன்னோக்கிச் செல்ல முடியாது. அதனால் இனி அதிக மான அளவில் பாதக விளைவுகள்தான் ஏற்படும். அதுவும் ஒரு புதிய நெருக்கடிக்குள் சிக்கியிருக்கிறது.

ஒரு பக்கம் முதலாளித்துவ சுரண்டல் முறை—பாகுபாட்டு முறை காரணமாக கிராமப்புற உழைப்பு சக்திகள் வலு விழந்து வருகின்றன, கடன் சுமையில் மூழ்கி எழ முடியாமல் கிடக்கின்றன என்பது மட்டுமல்ல, பசுமைப் புரட்சியின் இதர செயல்களும் சிக்கல்பட்டிருக்கின்றன.

முதலாவதாக, மின்சார பம்பு செட்டுகள் அதிகரித்துள்ளன. நிலத்தடி நீர் அளவுக்குமேல் இறைக்கப்படுகிறது. அதனால் நிலத்தடி நீர் கீழே போய்க் கொண்டிருக்கிறது. பல கிணறுகளில் தண்ணீர் இல்லாமல் போய் விட்டது. மேலும் வற்றி வருகிறது. ஆண்டு தோறும் ஆயிரக் கணக்கில் பணம் செலவு செய்யப்பட்டு கிணறுகள் ஆழப்படுத்தப்படுகின்றன. ஆயினும் தண்ணீர் கீழே போய்க் கொண்டிருக்கிறது. இதன் காரணத்தாலும் கிணற்றுப் பாசன விவசாயிகளின் கடன்சுமை மேலும் அதிகரித்து வருகிறது.

மறுபக்கம் நிலத்தடி நீர் ஊற்றுகளைப் பாதுகாக்க எந்த நடவடிக்கையும் முயற்சியும் பசுமைப் புரட்சியில் இல்லை.

ஆறுகள், ஏரிகள், குளங்கள் இதரநீர்நிலைகள் வற்றிவிட்டன; தூர்ந்து போய்க் கொண்டிருக்கின்றன. தண்ணீர் போதுமான அளவில் தேக்க முடியவில்லை. நிலத்தடி நீர் ஊற்றுக் கண்கள் அடைபட்டுக் கொண்டிருக்கின்றன. தமிழகத்தைப் பொறுத்த வரையில் பல பகுதிகள் இன்னும் பத்து இருபது ஆண்டுகளில் பாலைவனமாகும் அபாயம் ஏற்பட்டிருக்கிறது.

இரண்டாவது,ரசாயன உரமிடுதல் ஒரு தலைப்பட்சமாகவே அதிகரிக்கப்பட்டிருக்கிறது. அதனால் நிலத்தின் அமிலத் தன்மை அதிகரித்து நிலத்தின் சாரம் பாதிக்கப்பட்டிருக் கிறது. நிலத்திற்கு உரமிடுதலில் உயிரணு உரம் (தொளி உரம், தழை உரம் முதலியன) அத்துடன் ரசாயன உரம் இணையாக இட வேண்டும். ஆனால் இப்போது உயிரணு உரம் குறைந்து, ரசாயன உரம் மட்டுமே அதிகரிக்கும் போது நிலம் பாதிக்கப்படுகிறது. இந்தப் பிரச்சனை பல நாடுகளிலும் ஏற்பட்டுள்ளது. இந்தியாவில் தமிழ் நாட்டில் இது இன்னும் அதிகரித்துள்ளது. எனவே ரசாயன உரத் தினால் ஏற்படும் நன்மைகள் குறைந்து-பாதிப்புகள் அதிகரிக் கத் தொடங்கியுள்ளன.

மூன்றாவதாக, பூச்சி மருந்து; பூச்சி மருந்துகளில் பல பன்னாட்டுக்கூட்டு நிறுவனங்களின் கொடுஞ்செயல் களால் கலப்படம் அதிகமாகி, மருந்துகளின் தரம் குறைந்து விட்டது ஒரு பக்கம். மறுபக்கம் அதன் பாதக விளைவுகளும் ஏற்பட்டிருக்கின்றன. மேலும் பூச்சி மருந்து கள் அளவுக்கு மீறி அடிப்பதால், பயிர்களை பாதிக்கும் பூச்சிகள் மட்டுமல்லாமல் பயிர்களின் வளர்ச்சிக்கு அவசிய மான உயிரினங்களும் அழிந்து விடுகின்றன. உயிரணு உரம் குறைவதால் புதிய உயிரின வளர்ச்சியும் குறைந்து விட்டது.

தரம் குறைந்த பூச்சி மருந்துகள், சீரான தெளிப்பு இல்லாமை, மருந்துகளின் எதிர் விளைவுகள் முதலிய பாதகங்களைத் தடுப்பதற்கு எந்த முயற்சியும் பசுமைப் புரட்சியில் இல்லை.

நான்காவதாக, பசுமைப் புரட்சியின் பகுதியாக விவசாய ஆராய்ச்சி நிலையங்கள் வளர்க்கப்பட்டன. நமது நாட்டின் ஆராய்ச்சி நிலையங்கள் அரிய பணிகளை ஆற்றியிருக் கின்றன. நமது விஞ்ஞானிகளின், ஆராய்ச்சியாளர்களின், வல்லுநர்களின் ஆலோசனைகளை நமது அரசு எந்த அளவுக்கு செயல் படுத்துகிறது என்பது ஒரு கேள்வி.

இருப்பினும் நமது விவசாய ஆராய்ச்சி நிலைங்கள் பல அரியபணிகளைச் செய்து வருகின்றன. பல நாடுகளும் அவை களைப் பாராட்டுகின்றன. அந்த அரிய பணிகளில் ஒன்று பல புதிய வீரிய வித்துக்கள் கண்டுபிடிக்கப்பட்டதாகும். புதிய வீரிய வித்துக்கள், உயிரினங்கள், உயிரணுக்கள் உண்டாக்கப்பட வேண்டியது மிகவும் அவசியமாகும். ஆனால் பழைய, தொன்று தொட்டு உண்டாக்கப்பட்ட,பல உயிரினங்கள், உயிரணுக்கள், தாவர ரகங்கள் ஆகியவை களைப் பாதுகாக்கவும் வேண்டும்.

இப்போது ஒவ்வொரு தானியம், நவதானியம், பழம் காய் வகையிலும் புதியன உண்டாக்கப்பட்டிருக்கின்றன. ஆனால் அதே சமயத்தில் பழைய இனங்கள் ரகங்கள் முற்றிலும் அழிந்து கொண்டிருக்கின்றன. ஆயிரக்கணக்கான தாவர உயிரின வகை அழிவது அபாயகரமானதாகும். அது நாளா வட்டத்தில் நிலத்தின் சமநிலையையும் கெடுத்து விடும். அது இயற்கைச் சூழல் சம நிலையைக் கெடுத்து விடும். அந்த அபாயம் நமது பசுமைப்புரட்சி விவசாயத்தில் ஏற்பட்டிருக்கிறது.

எனவே பசுமைப் புரட்சியின் பலன்கள் விவசாயிகளுக்குக் கிடைக்க வில்லை. இப்போது ஏற்பட்டுவரும் அதன் பாதக விளைவுகளைத் தடுக்க முடியவில்லை. இது விவசாய உற்பத்திக்கே ஒரு அபாயத்தை உண்டாக்கியிருக்கிறது. இந்த அபாயத்தைத் தடுக்க புதிய முயற்சிகள் தேவை. அது அரசு மட்டத்தில் மட்டுமல்ல சமுதாய மட்ட த்திலும் தேவை.

இந்தப்பிரச்னைகள் மீது எல்லா தரப்பிலும் கிராமப் புறப் பாட்டாளிகளின் உணர்வு நிலையை உயர்த்த வேண்டும். இது பற்றி கிராமப்புறப் பாட்டாளி மக்களின் ஒன்றுபட்ட இயக்கமும் வளர வேண்டும். விவசாயத் துறையில் ஏற்பட்டுள்ள நெருக்கடிகளைப்பற்றி அடுத்த அத்தியாயங்களில் விரிவாகக் காண்போம்.

# 6

# இந்திய விவசாய நெருக்கடியும் அதன் விளைவுகளும்

இந்திய விவசாய நெருக்கடி என்பது இந்திய முதலாளித்துவ நெருக்கடியின் ஒரு பகுதியாகும். இந்திய முதலாளித்துவ நெருக்கடி என்பது உலக முதலாளித்துவ நெருக்கடியோடு இணைந்து பிணைந்ததாகும்.

உலக முதலாளித்துவ நெருக்கடியின் அடையாளங்கள் அனைத்தும் இந்தியப்பொருளாதாரத்தில் தென்படுகின்றன. வெளிப்பட்டிருக்கின்றன. இந்த நெருக்கடியின் தன்மைகள் அண்மைக்காலத்தில் குறிப்பாகக் கடந்த பத்துப்பதினைந்து ஆண்டுகளாக தீவிர மடைந்து வருகின்றன.

உலக முதலாளித்துவ நெருக்கடியின் முக்கிய வெளிப்பாடுகளாவன:

முதலாவதாக பண வீக்கம். பணவீக்கம் என்பது ஒவ்வொரு நாட்டின் நாணயமும் அதன் மதிப்பு குறைந்து பண்டங்களுக்கு அதிகப்பணம் கொடுக்க வேண்டிய நிலை ஏற்படுவதாகும். இன்று உலக முதலாளித்துவஅமைப்பின் கீழ் உள்ள எல்லா நாடுகளிலும், முதலாளித்துவ பொருளாதாரத்தை அனுசரித்து வரும் எல்லா நாடுகளிலும் பணவீக்கம் ஏற்பட்டிருக்கிறது. இந்தப்பண வீக்கத்தின் நேரடி விளைவு விலைவாசி உயர்வாகும். முதலாளித்துவ நாடுகள் அனைத்திலும் விலைவாசி மிகவும் கடுமையாக உயர்ந்து கொண்டேயிருக்கிறது.

அமெரிக்கா, பிரிட்டன், மேற்கு ஜெர்மனி, ஜப்பான் முதலிய வளர்ச்சியடைந்த நாடுகளிலும் பணவீக்கம் அதிகரித்துக் கொண்டேயிருக்கிறது. விலை வாசிகள் உயர்ந்து கொண்டேயிருக்கின்றன. இந்தியாவிலும் விலைவாசிகள் இன்னும் அதிகமான அளவில் உயர்ந்து கொண்டேயிருக்கின்றன. இதற்கு மற்றொரு காரணம் இங்குள்ளகருப்புப்பண

ஆதிக்கமுமாகும். கருப்புப்பண பலத்தின் செயல்பாடுகளும் அத்தியாவசியப் பொருள்களின் பதுக்கலும் அதிகமாகி விலைவாசிகள் மேலும் உயர்வதற்கும் காரணமாகின்றன. பணவீக்கத்திற்கு முக்கிய காரணங்களில் ஒன்று அளவுக்கு மீறி நோட்டுகள் அச்சடிப்பதுமாகும்.

இரண்டாவது, உற்பத்தி தேக்கம் ஏற்பட்டுள்ள நெருக்கடியாகும் இதன் விளைவாக வேலையில்லாத்திண்டாட்டம் அதிகரிப்பதாகும். பல தொழிற்சாலைகள் மூடப்படுகின்றன. புதிய தொழிற்சாலைகள் அதிகம் வளரவில்லை. இந்த நிலை உலக முதலாளித்துவ நாடுகள் அனைத்திலும் ஏற்பட்டிருக்கின்றன. வளர்ச்சியடைந்துள்ள முதலாளித்துவ நாடுகளில் மொத்தம் மூன்று கோடிப் பேருக்கு வேலை இல்லை என்று கணக்குக் கூறப்படுகிறது. அந்த அளவுக்கும் அதிகமாகவே சுமார் நான்கு கோடி பேருக்கு இந்தியாவிலும் வேலையில்லை. இந்த எண்ணிக்கை பதிவு செய்யப் பட்டிருப்பவர்களை பொறுத்து மட்டுமேயாகும். இந்த எண்ணிக்கை மேலும் அதிகரித்துக் கொண்டிருக் கிறது. தமிழ் நாட்டில் பல பஞ்சாலைகள் மூடப்பட்டிருக் கின்றன. பல ஆயிரக்கணக்கான சிறிய தொழிற்சாலைகள் மூடப்பட்டிருக்கின்றன. இவைகளின் உற்பத்திபாதிக்கப்பட்டு நின்று விட்டது. தஞ்சை மாவட்டத்தில் காவிரியில் தண்ணீர் இல்லாதபோது சாகுபடி பாதிக்கிறது. இதனால் ஒரு ஆண்டிற்கு இருநூறு கோடி ரூபாய் பெறுமான வருவாய் வருவது நின்றுவிடும். இதே போல பல துறைகளிலும் இந்தத் தேக்க நிலை ஏற்பட்டிருக்கிறது.

1967-ம் ஆண்டிற்குப் பின்னர் இந்தியாவின்வளர்ச்சி சாயத் தொடங்கிவிட்டது எனவும் 1974-ம் ஆண்டிற்குப்பின் இந்தியாவின் வளர்ச்சி சரியத் தொடங்கியிருக்கிறது என்றும் இந்தியப் பொருளாதார வளர்ச்சி பற்றிய புள்ளி விவரங்கள் எடுத்து கூறுகின்றன.

மூன்றாவதாக நிதி நெருக்கடியாகும். முதலாளித்துவ நாடுகள் அனைத்திலும் வளர்ச்சித் திட்டங்கள், மக்கள் நலத் திட்டங்கள் அனைத்தும் நிதிப் பற்றாக்குறையால், போதுமான நிதி இல்லாமையால் நடைபெறாமல் தேங்குகின்றன. இதனால் குறிப்பாக கல்விவசதிகள், ஆஸ்பத்திரி வசதிகள், சுகாதார வசதிகள், சாலை வசதிகள் முதலிய மக்கள் நலப்பணிகள் பராமரிப்பு இன்றிப் பாதிக்கப்பட்டிருக் கின்றன. இந்திய நாட்டிலோ வெனில் எதற்கெடுத்தாலும் அரசிடமிருந்து பணமில்லை, நிதியில்லை என்றே பதில் வருகிறது. ஒரு பக்கம் ஏராளமான பணம் இருப்பது போல் காட்சியளிக்கிறது. இந்தியாவின் ஓராண்டு வரவு செலவு பட்ஜட் 30 ஆயிரம் கோடி ரூபாய்க்கு மேல் போய்

விட்டது. தமிழகத்தின் வருடாந்திர பட்ஜட் மூவாயிரம் கோடி ரூபாய்க்கு மேல் போய்விட்டது. ஆயினும் பல வேலைகளுக்கும் பணம் இல்லை, நிதியில்லை என்று பதில் வருகிறது.

பள்ளிகள், ஆஸ்பத்திரிகள், சாலைகள், மின் இணைப்புகள் ரயில் பாதைகள், புதிய பஸ் வழித்தடங்கள், ஏரி குளம் கண்மாய் மராமத்துகள், புதிய நீர்ப்பாசன வசதிகள், சுகாதார ஏற்பாடுகள், குடி தண்ணீர், ஆசிரியர்களுக்கு அரசு ஊழியர்களுக்கு சம்பளம், நகர்ப்புறத் தெருக்கள் பராமரிப்பு, இப்படி எதையெடுத்தாலும் பணம் இல்லை, நிதியில்லை என்னும் பாட்டைக் கேட்கலாம். விவசாயிகளுக்கு கடன் நிவாரணம், வட்டி தள்ளுபடி, மின் கட்டணத் தள்ளுபடி, விளைச்சல் இல்லாமைக்கு வரிவஜா என்று எதைக் கேட்டாலும் நிதி நெருக்கடி காரணம் காட்டப்படுகிறது.

ஆனால் மறுபக்கத்தில் ஆடம்பரச் செலவுகள் குறைய வில்லை. பழைய முதலமைச்சர் ஒருவர் ஒரு இடந்திற் குப் போய்வர சுற்றுப் பயணம் செய்ய ஒரு கோடி ரூபாய்க்கு மேல் செலவு,;அமெரிக்காவிற்கு ஆஸ்பத்திரிக்குப் போய் வர இரண்டு கோடி ரூபாய் செலவு;, ஒரு முன்னாள் பிரதமர் மேற்கு வங்காளத்திற்குத் தேர்தல் பிரச்சாரம் செய்யப் போய் வர மாநில அரசுக்குமட்டும் 2 கோடி ரூபாய்க்கு மேல் செலவு; கட்சிகளுக்கு பல லட்சக்கணக்கில் கோடிக்கணக்கில் கூட தேர்தல் செலவு கள்; நமது நாட்டில் தான் தாங்க முடியாத தேர்தல் செலவுகளும் அமைச்சர்கள் அதிகாரிகளின் சுற்றுப்பயண ஆடம்பரச் செலவுகளும் எல்லாவற்றிற்கும் மேலாக கணக்கில் வராத கருப்புப்பணம் உலகநாடுகளிலேயே இந்தியாவில் தான் அதிகம் என்று கூறப்படுகிறது. அதற்கும் மேல், அந்நியச் செலாவணிச் சட்டத்தை ஏமாற்றி, கொள்ளை லாபபணத்தைக் கடத்தி. அல்லது வெளி நாடுகளில் வியாபாரம் செய்து லாபம்,கமிஷன் கிடைப்பதைச் சரியாகக் கணக்குக் காட்டமால், இந்தியா விற்குக்கொண்டு வரமால் வெளிநாடுகளில் உள்ள வங்கி களில் டிப்பாசிட் செய்யப் பட்டுள்ள பல ஆயிரம் கோடிப்பணம்.. இவையெல்லாம் நமது நிதி நெருக்கடிக்குத் துணையாகச் செல்கின்றன.

இந்திய நாட்டில் மிகப்பெரிய நதிகள் உள்ளன. இவை கள் எல்லாம் வற்றாத ஆறுகள். நமது நாட்டில் ஒரு பக்கம் கடும் வறட்சி, மறுபக்கம் கொடுமையான வெள்ள மும் வெள்ளச் சேதமும் ஆண்டு தோறும் ஏற்பட்டுக் கொண்டிருக்கின்றன. இதைத்தடுக்க முடியாதா? நிச்சய மாக முடியும். நதிகளை இணைக்கலாமா? இணைக்கலாம். நமது பொறியியல் வல்லுநர்கள் ஏராளமான திட்டங்கள்

வைத்துள்ளார்கள். நதிகளை இணைத்தால் நமது நீர்ப் பாசனத்தை விரிவு படுத்தினால் இந்தியாவின் உணவு உற் பத்தியைப் பல மடங்கு பெருக்கலாம் நமது நதிகளில் ஏராளமான நீர்மின் நிலயங்களைக் கட்டலாம். ஏராளமான மின்சாரம் கிடைக்கும். நமது ரயில் போக்குவரத்து முழு வதையும் மின்சாரமயமாக்கி விடலாம். புதிய ரயில் பாதைகளையும் போட்டு அதையும் மின்சாரமயமாக்கலாம். பெட்ரோல் டீசல் மிச்சப்படும். லாரி போக்குவரத்தைக் குறைக்கலாம். எமனுக்கும் வேலை குறையும். அதற்கு மேலும் மின்சாரத்தை மிச்சப்படுத்தி அண்டைநாடுகளுக்கும் கொடுக்கலாம். இதற்கெல்லாம் நமது அரசுக்கு நிதியில்லை. நாட்டில் பணமில்லையா? கருப்புப்பணத்திலும் கடத்தல் பணத்திலும் வெளிநாட்டு வங்கிகளில் போடப்பட்டுள்ள இந்தியர் பணத்திலும் ஒரு பகுதி எடுத்தால் போதும். இத் தகைய அரிய திட்டங்களை, ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக இந்திய மக்கள்கண்ட கனவை, வங்கத்தில் ஓடிவரும் நீரின் மிகையால், மையத்து நாடுகளில் பயிர் செய்யும் திட்டங்களை நிறைவேற்றலாம்.

இவ்வளவு பெரிய திட்டங்களை நிறைவேற்ற ஆள் வேண்டுமா? இந்தியாவில் நான்கு கோடிப் பேருக்கு மேல் வேலையில்லை. அத்துடன் நாற்பது கோடி ஆண் பெண் கள் உழைக்கும் சக்தி கொண்டவர்கள். ஆளுக்கு ஒரு மண் வெட்டி கூடையும் எடுத்தால் போதும். செல்வாக்கு மிக்க அரசியல் தலைவர்கள் அவர்களுக்குள் சண்டை போட்டுக் கொள்வதை நிறுத்தி பாடுபடும் மக்களையும் பொறியியல் வல்லுநர்களையும் நாட்டின் அறிவாளி களையும் திரட்டினால் அற்புதமான சாதனைகள் செய் யலாம். விசித்திரமான இந்த நாட்டை வளப்படுத்தி உலகுக்கும் உணவளிக்கலாம்.

ஆயினும் இந்தியப் பொருளாதரத்தில் இந்திய முதலாளி களுக்கும் அவர்களுடன் சேர்ந்து இணைந்துள்ள அந்நிய, பன்னாட்டு கூட்டு நிறுவன முதலாளிகளுக்கும் ஆதிக்கம் இருப்பதால், அவர்களுடைய செல்வாக்குப் பிடிப்பு இந்திய அரசிலும் மாநில அரசுகள் பலவற்றிலும் இருப் பதால் நமது சீரிய திட்டங்களுக்குப் பணமில்லை. நிதி நெருக்கடியால் நாட்டின் பட்டினியைப் போக்க முடிய வில்லை. தாகத்தைப் போக்கவில்லை. மதுரையைச் சேர்ந்த நமது பாட்டாளிவர்க்கக்கவிஞன் பரிணாமன் சிறந்த தனது கவிதை ஒன்றில் நமது நாட்டில் கங்கையும் காவிரியும் இருந்தும் நமதுதாகம் தீரவில்லை, காசியும் ராமேஸ்வரமும் இருந்தும் நமது பாவம் தீரவில்லை'' என்று குறிப்பிட்டுள்ளது ஒரு நல்ல உண்மையை வெளிப் படுத்துகிறது.

இந்த அவலநிலையை மாற்ற வேண்டும். இதை மாற்ற வேண்டுமானால் முதலாளித்துவ சுரண்டல் முறையை நீக்கி

சமுதாய மாற்றத்தைக் கொண்டு வரவேண்டும்.

நான்காவதாக, நாணய நெருக்கடி ஏற்பட்டுள்ளதைப் பொருளாதார நிபுணர்கள் குறிப்பிடுகிறார்கள். முதலாளித்துவ நாடுகளில் அநேகமாக எல்லா நாடுகளிலும் உள்ள நாணயங்களின் மதிப்பிலும் பாதிப்புகள் வந்து நெருக்கடி ஏற்பட்டிருக்கிறது. முதலாளித்துவ உலகிலேயே மிகவும் வலுவான நாணயம் என்று வலியுறுத்திக் காட்டப்படுவது அமெரிக்காவின் நாணயமான டாலர். இன்றைய உலக முழுவதிலும் எல்லா நாடுகளுக்கும் நாணயமாற்று பயன்படுவதும், சர்வதேச நாணயமாற்றுக்கு உரிய நாணயமாக முதன்மை பெற்றிருப்பதும் ஆதிக்கம் பெற்றிருப்பதும் டாலர்நாணயம்.

அந்த டாலர் நாணயமே இப்போது அடிக்கடி நெருக்கடிக் குள்ளாயிருக்கிறது. குறிப்பாக 1975-ம் ஆண்டில் வியத்நாம் போரில் அமெரிக்கா தோல்வியடைந்த பின்னர் அந்தப் போரில் ஏற்பட்ட தோல்வி அமெரிக்காவின் பொருளாதாரத்தைப் பாதித்து, அமெரிக்க நாணயமான டாலரையும் பாதித்தது. டாலர் மதிப்புக் குறைந்தது.

அத்துடன் இன்றைய முதலாளித்துவ உலகில், வளர்ச்சியடைந்த முதலாளித்துவ நாடுகளுக்கிடையில் கடுமையான வர்த்தகப் போட்டி—ஒருவருக்கொருவரை கழுத்தறுக்கும் போட்டி ஏற்பட்டிருக்கிறது. இந்தப் போட்டியினால் ஒருவருக்கொருவர் காலை வாரி விட்டுக் கொள்வதாலும் அந்த நாடுகளின் நாணயங்களின் மதிப்புகளும் பாதிக்கப் பட்டிருக்கின்றன. டாலரின் மதிப்புக் குறைந்தவுடன் இதர நாடுகளின் நாணயங்களின் மதிப்பையும் குறைத்துக் கொள்ளுமாறு அமெரிக்கா இதர நாடுகளையும், நிர்ப் பந்திக்கிறது, இத்தகைய நிர்ப்பந்தங்களினால் இதர பல நாடுகளும் தங்கள் நாணயங்களின் மதிப்பைக் குறைத்துக் கொள்கின்றன, அதனால் முதலாளித்துவ நாடுகளில் நாணய நெருக்கடி ஒரு நீராத வியாதியாகவே பரவியிருக் கிறது.

உலக முதலாளித்துவ அமைப்பின் ஒரு பகுதியாக இந்தியப் பொருளாதாரம் இணைந்து பிணைந்திருப்பதால் இந்திய நாணயமான ரூபாயும் பாதிக்கப்பட்டு மதிப்புக் குறைந்து பல சமயங்களிலும் நெருக்கடிக்குள்ளாகியிருக் கிறது. அமெரிக்க டாலரின் உத்தரவின் பேரில் இந்திய நாணயத்தின் மதிப்பு குறைக்கப்பட்டிருக்கிறது. அத் துடன் உலக வர்த்தகத்தில் பணக்கார முதலாளித்துவ நாடுகள், ஏழை நாடுகளுக்குக் காட்டும் பாரபட்சம் வர்த்தக ஏற்றத்தாழ்வுகாரணமாகவும் கடன் சுமைகளா லும் வளர்முக நாடுகளின் நாணயங்களின் மதிப்புகள் குறைந்து பாதிக்கப்பட்டிருக்கிறது.

ஐந்தாவதாக, விசை சக்தி எரிபொருள் நெருக்கடியாகும். இவைகள், நிலக்கரி, எரிவாயு, பெட்ரோல், மரங்கள் (விறகு முதலியன), மின்சாரம் முதலியவற்றிற்கு ஏற்பட்டுள்ள நெருக்கடி நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது. குறிப்பாக நிலக்கரி, நெருக்கடி பெட்ரோல் நெருக்கடி, மின்சார நெருக்கடி அதிகரித்து வருகிறது. அதற்கு முக்கியமான காரணம் நிலக்கரி, பெட்ரோல் முதலிய எரிபொருள்களை முறைப்படுத்தி சிக்கனமாகப் பயன்படுத்தாமையேயாகும்.

இப்போதைய மின்சார உற்பத்தி பெரும்பாலும் அனல் மின் நிலையங்கள் மூலமே அதிக அளவு உற்பத்தி செய்யப்படுகிறது. அதற்கு ஏராளமான நிலக்கரி தேவைப்படுகிறது. நிலக்கரியின் மொத்தக் கனிவள அளவும் குறைந்து கொண்டே வருகிறது. மேலும் மின் உற்பத்தியில் நீர்மின் நிலையங்களையும், அணுமின்நிலையங்களையும் அதிகம் பயன்படுத்த வேண்டும். நீர்மின் நிலையங்கள் எல்லா நாடுகளிலும் சாத்தியமில்லை. அணு மின் தொழில் நுட்பம் எல்லா நாடுகளிலும் வளர்ச்சி பெறவில்லை. இந்த நிலையில் நிலக்கரி நெருக்கடியும், மின்சார நெருக்கடியும் அதிகரித்து வருகிறது. பெட்ரோல் எல்லா நாடுகளிலும் இல்லை. சில நாடுகளிலே இருக்கின்றது. அந்த சில நாடுகளுக்கு ஆதிக்கம் இருக்கிறது. அல்லது செல்வாக்குப் பிடிப்பு இருக்கிறது. இப்போதைய நிலையில் அராபிய நாடுகளில்தான் அதிகமான இயற்கை வாயு பெட்ரோல் வளம் இருக்கிறது. அதன் விலை ஒரு முக்கிய பிரச்னை. பெட்ரோல் நமது பஸ் ரயில், கப்பல், விமானப் போக்குவரத்திற்கு மிகவும் அவசியமான எரிபொருளாகும். பெட்ரோல், டீசல் இல்லாவிட்டால் அநேகமாக மனித வாழ்வே ஸ்தம்பித்து விடும். எனவே பெட்ரோல் டீசல் நெருக்கடி ஏற்பட்டால், எல்லாவித நெருக்கடியும் அதிகரித்து விடுகிறது. குறிப்பாக விலைவாசி உயர்ந்துவிடுகிறது. உற்பத்தித் தேக்கம் அதிகரித்து விடுகிறது.

இந்த எரிபொருள் விசை சக்தி நெருக்கடியினால் சிறிய நாடுகள், வளர்முகநாடுகள், ஏழை நாடுகள் மிகவும் கடுமையாக பாதிக்கப்படுகின்றன. பணக்கார நாடுகளிலும் பிரிட்டன், பிரான்ஸ், இத்தாலி முதலிய நாடுகள் அதிகமான அளவில் பாதிக்கப்படுகின்றன. சில ஆண்டுகளுக்கு முன்னர் பெட்ரோல் உற்பத்தி செய்யும் நாடுகள் பெட்ரோல் விலையை உயர்த்தியபோது பிரான்ஸ் முதலிய மேற்கு ஐரோப்பிய நாடுகளில் பெரிய நெருக்கடி ஏற்பட்டது.

இந்திய நாட்டில் நமக்கு அதிகமான நீர்வளம் இருக்கிறது. நமது நீர்வளத்தைக்கொண்டு மின்சாரம் போன்ற விசை சக்தி உற்பத்தியை பெரும் அளவில் பெருக்க முடியும்.

ஆனால் நமது நாட்டின் முதலாளித்துவப் பொருளா தாரமும்ஆட்சி முறையும் அவ்வளவு சுலபமாக நமது வளத்தை அதிகப்படுத்தி நெருக்கடியைத் தீர்க்கவில்லை.

ஆறாவதாக, உணவு நெருக்கடி. இந்த நெருக்கடி இன்று உலக அளவில் உள்ள நெருக்கடியாக வளர்ந்திருக்கிறது. உலகின் மக்கள் தொகை அதிகரித்து வருகிறது. அதற்கேற்ற வாறு உணவு உற்பத்தியிலும் அதன் சீரான விநியோகத்தி லும் பயன்படுத்தும் முறையிலும் அபிவிருத்தியும் வளர்ச்சி யும் ஏற்படவில்லை. உணவு தானியம் மாமிசம், முட்டை, மீன், பழம், பால் முதலிய பொருள்களின் உற்பத்தியை அதிகரிப்பதற்கு திட்டமிட்ட முயற்சி தேவை. உலகின் நில வளம் நீர்வளம் வனவளம் கனிவளம் கடல் வளங்களை முறைப்படுத்திப் பயன்படுத்த வேண்டும். முதலாளித்துவ முறையிலான அராஜக வளர்ச்சி தான் இன்றைய நெருக்க டிக்கு முக்கிய காரணமாக உள்ளது. இன்று முதலாளித்துவ நாடுகளில் ஏராளமான உணவுப்பொருள்கள் வீணாக்கப்படு கின்றன. உணவு தானியங்கள் வீணாக்கப்படுகின்றன. பால் வளம், மீன்வளம், மாமிசம் முட்டை வகைகளை அதிகப் படுத்துவதற்கான வாய்ப்புகள் ஏராளம் உள்ளன. அவை களை முழுமையாக வளர்ப்பதற்கு முதலாளித்துவத்திற்கு வரம்பு உள்ளது.

இந்தியா போன்ற நாடுகளில் உணவுப்பொருள் உற்பத்திக்கு மிகவும் அதிகமான வாய்ப்புகள் உள்ளன. இவைகளை விரிவுபடுத்தினால் உணவு நெருக்கடிக்கு தீர்வு காண முடியும். அதற்கு இந்திய முதலாளித்துவத்தால் முடிய வில்லை.

ஏழாவதாக, இயற்கைச் சூழல் நெருக்கடி ஏற்பட்டுள்ளது. இந்த நெருக்கடி ஒரு அபாயகரமான பரிமாணத்திற்குச் சென்றிருப்பதை விவரங்கள் காட்டுகின்றன. பல நாடுகளி லும் காடுகள் அழிந்து கொண்டிருக்கின்றன. மலைகள் மொட்டையாகிக் கொண்டிருக்கின்றன. ஆறுகள் அசுத்தப் பட்டிருக்கின்றன. காற்று மண்டலம் விஷமாக்கப்பட்டிருக் கிறது. கடல்வளம் கெட்டுப் போய்க் கொண்டிருக்கிறது. நிலவளம் பாதிக்கப்பட்டிருக்கிறது. நிலத்தடி நீர் மட்டம் கீழே போய்க் கொண்டேயிருக்கிறது.

சுற்றுப்புறச் சூழல் அனைத்தும் மாசுப்படுத்தப்பட்டிருக் கிறது. மனித வாழ்விற்கே பெரும் அபாயம் ஏற்பட்டிருக் கிறது. தொழிற்சாலைகளிலிருந்து வரும் கழிவுப் பொருள் களை கண்டபடி ஆறுகளிலும் கடலிலும் கலந்து விடுகிறார் கள். சாக்கடைகள், தொழிற்சாலை புகை அனைத்தும் தண் ணீரையும் காற்றையும் அசுத்தப்படுத்துகின்றன.

நகரங்களில் சுகாதாரக்கேடுகள் அதிகரித்து விட்டன. தாவரங்கள், விலங்கினங்கள், பறவை இனங்கள் எல்லாம்

அழிந்து கொண்டிருக்கின்றன. இந்த இயற்கைச் சூழல் நெருக்கடியை சமாளிப்பதற்கு முதலாளித்துவ முறையில் எந்தச் சரியான திட்டமும் இல்லை.

இந்த இயற்கைச் சூழல் நெருக்கடியினால் இந்தியா மிகவும் கடுமையாக பாதிக்கப்பட்டிருக்கிறது. இந்தியாவின் காடுகள் மலைகள், ஆறுகள், கடல் எல்லாம் பாதிக்கப்பட்டிருக்கின்றன. இந்தியாவின் தாவர இனங்கள் விலங்கினம், பறவை இனங்களுக்கு அழிவு அபாயம் ஏற்பட்டிருக்கிறது. சுற்றுப்புறச் சூழல்களைப் பாதுகாப்பதற்கு சில நடவடிக்கைகள் எடுக்கப்படுவதாக அறிவிக்கப்பட்ட போதிலும் பாதிப்புகள் தொடருகின்றன.

இவையெல்லாம் இயற்கைச் செல்வங்களை முறையாகப் பாதுகாத்துப் பயன்படுத்தும் முறையில் உள்ள தவறுகள் காரணமாகத்தான் ஏற்படுகின்றன என்பதை நமது அனுபவங்கள் தெளிவாகக் காட்டுகின்றன.

எட்டாவதாக, முதலாளித்துவ நாடுகளில், ஆளும் வர்க்கங்களிடமும், ஆட்சியாளர்களிடமும், பொது மக்கள் பகுதிகளிலும் பொது அமைப்புகளிலும் ஏற்பட்டுள்ள ஒழுக்க நெருக்கடியாகும். லஞ்சம், ஊழல், மோசடி, பொய், ஏமாற்றுவித்தை, கள்ளத்தனம், கருப்புப்பணம், கடத்தல், கலப்படம், பொய்க்கணக்கு, வரிஏய்ப்பு, தரக்கேடுகள், நிர்வாகச் சீர்கேடுகள், சீரழிவுகள், கொள்ளைலாபம், சண்டைகள், கொள்ளை, கொலை, திருட்டுக்குற்றங்கள் அதிகரிப்பு முதலிய சமுதாயச் சீர்கேடுகள் அதிகரித்து விட்டன. இந்தக் குறைபாடுகள் ஏதோ சில சமுதாயப் பகுதிகளில் மட்டுமல்லாமல், சமுதாயத்தின் பெரும் பகுதியை முதலாளித்துவ அமைப்பு முறை உள்ள நாடுகளில் சூழ்ந்திருக்கின்றன. குறிப்பாகமேல் மட்ட ஊழல்கள் அதிகரித்து வருகின்றன.

அமெரிக்க ஜனாதிபதி வாட்டர் கேட் ஊழல், ஜப்பான் பிரதமர் ஊழல், பிரிட்டிஷ் மந்திரியின் ஒழுக்கக் கேடுகள் இந்தியாவில் டில்லியில் ஏற்பட்டுள்ள உயர்மட்ட ஊழல், தமிழகத்தில் ஊழலை எதிர்த்து வந்த ஆட்சியில் ஏற்பட்டுள்ள பெரிய ஊழல் ஏற்பட்டுள்ளதைக் காண்கிறோம்.

தொழில் துறைகளில், கல்வி நிலையங்களில், ஆஸ்பத்திரிகளில் அரசு நிர்வாகங்கள் அனைத்திலும், கூட்டுறவு அமைப்புகளில், சில தொழிலாளர் சங்கங்கள் நீதி மன்றங்கள் இவ்வாறு அனைத்திலும் லஞ்ச ஊழல்கள், சீர்கேடுகள், ஒழுக்க நெருக்கடி முற்றி வருவதைக் காண்கிறோம். இந்த ஒழுக்க நெருக்கடி இன்றைய உலக

முதலாளித்துவ அமைப்பின் இயல்பின் பகுதியாக வளர்ந்திருக்கிறது. இந்த ஒழுக்கக் கேடுகளை ஒழிப்பதானால், அதற்கான சமுதாய மாற்றத்துடன் சேர்த்துத் தான் அதைச் செய்ய வேண்டும்.

முதலாளித்துவத்தின் இந்த நெருக்கடியை சமுதாயத்தின் அனைத்து அம்ச நெருக்கடி என்று பொருளாதார நிபுணர்கள் குறிப்பிடுகிறார்கள். இந்த நெருக்கடி முதலாளித்துவத்தின் இறுதி கட்டத்தில் யுக சந்திப்பில் முதலாளித்துவத்தின் இயல்பான வெளிப்பாடாக வந்திருக்கிறது என்பதைக் காண வேண்டும்.

ஒரு சமூகப் பொருளாதார அமைப்பு முடிந்து அடுத்த புதிய சமூகப் பொருளாதார அமைப்பு தோன்றுவதற்கு முன்பு ஏற்படும் சீரழிவுகளை இப்போது நாம் முதலாளித்துவ உலகில் காண்கிறோம்.

யுகசந்திப்பில் தர்மம் அழிந்து அதர்மம் மேலோங்கி, நல்லவர்களுக்கெல்லாம் சோதனைகள் ஏற்பட்டு கெட்டவர்களின் கொட்டங்கள் அதிகப்படுகின்றன என்று கீதையின் வாக்கியம் குறிப்பிடுகிறது.

நிலப்பிரபுத்துவம் கம்பீரமாக ஆட்சி செய்த காலம் கடந்தபின், கடைசி காலத்தில் அழியும் போது ஏற்பட்டிருந்த சீர்கேடுகள், ஊதாரித்தனம், ஒழுக்கக்கேடுகள் நிறைந்து காணப்பட்டதைப் பார்த்தோம்.

''பொய் 'சூது' தீமை யெல்லாம் ஆரண்யத்தில் பாம்புகள் போல் மலிந்து வளர்ந்தோங்கின'' ''செம்மை யெலாம் பாழாகி கொடுமையே அறமாகித்தீர்கிறது'' இதுதான் இன்றைய முதலாளித்துவ அமைப்பாகக் காட்சியளிக்கிறது.

இத்தகைய அனைத்தளாவிய நெருக்கடியின் அலைகள் சோவியத் யூனியன், சீனா முதலிய நாடுகளையும் பாதிக்கின்றன. அதன் விளைவுகளை எதிர்த்தும், அதன் மூல வேர்களைக் களையவும் அங்கு தீவிரமான நடவடிக்கை எடுக்கப்படுகின்றன.

சீனாவில் பொருளாதாரத்துறையிலும் அரசியல் துறையிலும் பல சீரமைப்பு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. முன்னாள் சோவியத் யூனியன் நாடுகளிலும் கடுமையான சூழ்நிலைகளுக்கிடையிலும் சீரமைப்பு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுவருகின்றன.

இந்த நாடுகளில் இந்த நெருக்கடிகளின் விளைவுகளுக்கு ஜனநாயக முறையில் தீர்வுகாண்பதற்கு பல முயற்சிகளும் எடுக்கப்படுகின்றன.

முதலாளித்துவ உலகில் உள்ள அனைத்து அம்ச பொது நெருக்கடியின் பளுவை வளர்ச்சியடைந்த முதலாளித்துவ நாடுகள் வளர்முக நாடுகள் மீதும், பணக்கார நாடுகள் ஏழை நாடுகள் மீதும், வடக்கு நாடுகள் தெற்கு நாடுகள் மீதும் திணிப்பதற்கு முயற்சிக்கின்றன.

வளர்முக நாடுகளின் வளர்ச்சிக்கு முதலீட்டு வசதி, எந்திரம் தொழில் நுட்ப வசதி,மூலப்பொருள் வசதி, உழைப்பு சக்தி தேவைப்படுகிறது. இதில் மூலப்பொருளும் உழைப்பு சக்தியும் வளர்முக நாடுகளிடம் இருக்கின்றன. முதலீட்டு வசதியும் எந்திரம் தொழில் நுட்ப வசதிக்கு வளர்ச்சியடைந்த நாடுகளை எதிர் பார்க்க வேண்டியதிருக்கிறது. முதலீட்டு வசதிக்கும் எந்திரம் தொழில் நுட்பத்திற்குச்செலவும் விலையும் அதிகம். மூலப்பொருளும், உழைப்பு சக்தியும் மலிவு. எனவே உலக வர்த்தகத்தில் வளர்ச்சியடைந்த நாடுகள் மேலேயும் வளர்முக நாடுகள் தாழ்ந்தும் கிடக்கின்றன. இதனால் ஏற்றுமதி இறக்குமதி வேறுபாட்டில் ஆண்டிற்கு ஐயாயிரம் கோடி டாலர் வரையிலும் வளர்முக நாடுகளுக்கு பற்றாக்குறை ஏற்பட்டு வருகிறது. இதில் இந்தியாவிற்கு மட்டும் ஆண்டிற்கு இரண்டாயிரம் கோடி டாலர் பற்றாக் குறை ஏற்படுகிறது. அதாவது வளர்ச்சியடைந்த, ஏகாதிபத்திய நாடுகள் ஆண்டு தோறும் இந்தியாவிலிருந்து இரண்டாயிரம் கோடி டாலர் உபரியாகக் கொள்ளை கொண்டு போகிறார்கள் என்று பொருள். இது மேலும் அதிகரிக்கலாம். நாம் ஏழ்மையாகிக் கொண்டேயிருக்கிறோம். நமது செல்வம் ஆண்டு தோறும் கொள்ளை போய்க் கொண்டேயிருக்கிறது.

இவ்வாறு வெளி நாட்டு வர்த்தகத்தில் ஏற்படும் பற்றாக் குறை, அத்துடன் உள்நாட்டில் இந்திய முதலாளித்துவத் திற்கு ஏற்பட்டுள்ள அனைத்து அம்ச நெருக்கடியின் பளு முழுவதையும் இந்திய முதலாளித்துவம் தனது அரசாங்க பலத்தின் மூலம் இந்திய மக்களின் தலையில், இந்திய விவசாயிகளின் தலையில் சுமத்தி வருகிறது.

இந்த சுமை முழுவதையும் இந்திய விவசாயிதாங்கி,அவன் கடுமையாக உழைத்து உற்பத்தியைப் பெருக்கிய போதிலும், நாளுக்கு நாள் அதிகமாக கடனாளியாகி,ஓட்டாண்டியாகிக் கொண்டிருக்கிறான்.

அதனால் இந்திய விவசாயத்திற்கும் விவசாயிகளின் வாழ்க்கைக்கும் இதுவரை எப்போதும் இல்லாத அளவுக்கு ஒரு கடுமையான கஷ்டமும் நெருக்கடியும் ஏற்பட்டிருக் கிறது. அந்த நெருக்கடியின் தீவிரத்தன்மை அண்மைக் காலத்தில் மிகவும் அதிகமாகியிருக்கிறது.

இந்திய விவசாயத்தில் இன்று ஏற்பட்டுள்ள நெருக்கடியின் தன்மையை விரிவாக ஆராய்ந்து நாம் சரியான வழி காண முயற்சிக்க வேண்டும்.

முதலாவது, சிறு விவசாயிகள், நடுத்தர விவசாயிகள் தங்கள் கையிலுள்ள சிறிதளவு நிலத்தை வைத்து கட்டு படியாகும் முறையில் சாகுபடி செய்ய முடியவில்லை. விவசாயச் செலவுக்கும், அந்த விவசாயத்தின் மூலம் கிடைக்கும் வருமானத்திற்கும் இடைவெளி அதிகமாகிக் கொண்டே வருகிறது. அதனால் கடன் சுமை அதிகமாகி அதைத் தாங்க முடியாமல் தனது நிலத்தை விற்பனை செய்ய வேண்டிய நிலை ஏற்படுகிறது. உழுபவனுக்கே நிலம் என்னும் நிலை மாறி, உழுபவனிடமிருந்து நிலம் பறி போய்க் கொண்டிருக்கிறது. இந்த மாதிரி வரும் நிலத்தை விவசாயமும் இதர தொழில் வர்த்தகம் செய்து வேறு வருமானமும் உள்ளவர்கள் சிறிதளவு, நகரங்களில் தொழில் நடத்தி அதில் வருமானமும் கருப்புப் பணமும் உள்ளவர்கள் சிலர் வாங்கி, முதலாளித்துவ முறையில் பண்ணைகளாக்கி வருகிறார்கள். இந்தப் போக்கு இப்போது நில உடமையில் வளர்ந்து கொண்டிருக்கிறது. இது புதிய பிரச்னைகளைக் கிளப்பும். இதன் மூலம் விவசாயத் தொழிலாளர் பிரச்னை புதிய முறையில் கிளம்பும்.

இரண்டாவதாக, நீர்ப்பாசனம் இப்போது நிச்சயமற்றதாகி வருகிறது. பருவ மழை தவறியதால் அணைகளில் தண்ணீர் இல்லை. தமிழகத்தில் ஏற்கனவே தமிழகத்தில் பாலாறு வறண்டு விட்டது. பெண்ணையாறு வறண்டு கொண்டு வருகிறது. தமிழகத்தில் இருப்பதில் பெரியஆறு காவிரியாறு. வான் பொய்க்கினும் தான் பொய்யாத பொன்னியாறு இன்று மேலே அணைகட்டி தண்ணீர் நின்று விட்டது. அதனால் பொன்னியும் வற்றி வறண்டு கொண்டிருக் கிறது. காவிரி நீர்ப்பிரச்னைக்குத் தீர்வு காண பல ஆண்டுகள் கடந்தும், இன்னும் விடி வெள்ளி காணப்பட வில்லை. இருள் நீடித்துக் கொண்டே இருக்கிறது.

காவிரி நீர்ப் பிரச்னை பற்றி மாநில அரசு ஆரம்பத்தில் கர்நாடக அரசுடன் பேச்சுவார்த்தைகள் நடத்தியது. அதில் அதிகாரிகளும் அமைச்சர்களும் கலந்து கொண்டார்கள். ஆனால் எந்தவித உடன்பாடும் ஏற்படவில்லை. 1924-ஆம் ஆண்டு ஒப்பந்தம் இன்னும் தொடர்ந்துசெல்லுபடி யாகும் என்பது தமிழக அரசின் நிலைபாடாகும். ஆனால் கர்நாடக அரசோ அந்த ஒப்பந்தம் காலாவதி யாகி விட்டது என்றும் கூறுகிறது. அதே சமயத்தில் கர்நாடக அரசு, தமிழ்நாடு அரசுக்குத் தகவல் இல்லா மல், விவாதிக்காமல், மத்திய அரசின் அனுமதியோ, திட்டக் கமிஷன் அனுமதியோ, மத்தியநதிநீர்க்கமிஷன் அனுமதியோ இல்லாமலும் ஏற்கெனவே உள்ள அணைகள் போக கபினி ஆற்றிலும் இதர இடங்களிலும் மேலும் அணைகளைக்

கட்டி தண்ணீரை நிறுத்தி விட்டது. நதிநீர் எல்லோருக்கும், பொதுவானது: அதில் இரு மாநிலங்களின் நலன்களும் பாதிக்காத வகையில் காவிரி நீர்ப் பிரச்னைக்குத் தீர்வுகாண வேண்டியது மிகவும் அவசியமாகும். கடந்த சில ஆண்டுகளாக காவிரி நீர்ப்பிரச்னை மிகவும் அதிகமான நெருக்கடிக்கு வந்திருக்கிறது. மத்திய மாநில அரசுகள் போதுமான அக்கறை எடுத்துக் கொள்ளவில்லை. 1989-ஆம் ஆண்டில் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியும், விவசாயிகள் சங்கமும் சேர்ந்து தஞ்சை மாவட்டத்தில் மிகப் பெரிய அளவில் ஒரு மனித சங்கிலிப் போராட்டத்தையே நடத்தியது. பல்லாயிரக்கணக்கான மக்கள் திரண்டு இந்தப் பெரிய இயக்கத்திற்கு ஆதரவு கொடுத்தார்கள்.

மத்தியில் வி.பி. சிங் தலைமையில் ஏற்பட்ட தேசிய முன்னணி அரசு காவிரி நீர்ப் பிரச்னையை நீதிமன்றத்திற்கு அனுப்பியது. நீதிமன்ற இடைக்காலத் தீர்ப்பை நிறைவேற்றுவதிலும் சிக்கல் ஏற்பட்டிருக்கிறது.

காவிரிப் பாசனத்தில் மற்றொரு முக்கிய பிரச்னை, தஞ்சை மாவட்டத்திலுள்ள கால்வாய்களாகும். தஞ்சை மாவட்டத்தில் காவிரிப் பாசனத்தில் உள்ள கால்வாய்கள் கிளைக்கால்வாய்கள்எல்லாம் பெரும்பாலும் தூர்ந்தும், பழுதாகியும் ஆக்கிரமிப்பு செய்யப்பட்டும், சரியாக பராமரிக்கப்படாமலும், உடனுக்குடன் மராமத்து செய்யப்படாமலும் பாதிக்கப்பட்டு அதனால் வரக்கூடிய தண்ணீரும் சேதமாகிறது. அதே சமயத்தில் மழை பெய்தால் போதுமான வடிகால்களும் சரியாக இல்லாததால் நீர் தேங்கி சேதப்படுகிறது. வெள்ளங்கள் ஏற்பட்டு நஷ்டங்கள் ஏற்படுகின்றன. தஞ்சை திருச்சி, தென்ஆற்காடு மாவட்டத்திலுள்ள சிதம்பரம் தாலுகா பகுதிகளில் உள்ள கால்வாய்கள், வடிகால்களை நவீனப்படுத்தவேண்டும் என்று விவசாயிகள் பல முறை கோரியுள்ளார்கள். ஆயினும் அரசு அசையவில்லை.

மேலும் காவிரி பாசனப் பகுதியில் தண்ணீரை சிக்கனமாகப் பயன் படுத்தவும், அதற்கேற்றவாறு, சாகுபடி முறை பயிர் மாற்றம் முதலியவைகளிலும் புதிய முறைகள் கொண்டு வரப்படவும் வேண்டியதிருக்கிறது. அதிலும் அரசு கவனமும், நிர்வாகத்தின் கவனமும் மக்களுடைய கவனமும் அதிகரிக்க வேண்டியதிருக்கிறது.

இன்று தமிழகத்தின் மொத்த உணவு உற்பத்தியில் சரிபாதி அளவு உற்பத்தியாகும் காவிரி பாசனப் பகுதி கடுமையான நெருக்கடிக்குள்ளாகியிருக்கிறது. இந்த நெருக்கடி செயற்கையாலும் இயற்கையாலும் ஏற்பட்டிருக்கிறது. செயற்கையில்

ஏற்பட்டுள்ளதை உடனடியாகத் தடுக்கவேண்டும். தவிர்க்க வேண்டும். இயற்கையில் ஏற்படும் நெருக்கடிகளை எதிர்த்து மாற்று வழிகாண வேண்டும் இந்த நெருக்கடியை சமாளிக்க உடனடி நிவாரண நடவடிக்கைகளையும் மேற்கொள்ள வேண்டும். அது பற்றி அடுத்த அத்தியாயங் களில் பார்க்கலாம்.

தமிழ் நாட்டில் பழைய காலம் தொட்டு இருந்து வரும் மிக முக்கியமான நீர்ப்பாசன முறை ஏரி குளம் கண்மாய்ப் பாசனமாகும். தமிழ் நாட்டில் ஓடும் எல்லா ஓடைகள் சிற்றாறுகள், காட்டாறுகள்' பெரிய ஆறுகள் நதிகள் அனைத்திலும் குறுக்கணைகள் கட்டப்பட்டு ஏரிகள் குளங் கள் கண்மாய்கள் குளங்கள் வெட்டப்பட்டு, அவைகளில் அந்தத்தண்ணீர்தேக்கப்பட்டு பாசனத்திற்குப்பயன்படுத்தப் பட்டு வருகிறது. இவ்வாறான பாசன ஏரிகள் தமிழ் நாட்டி லும் ஆந்திரப் பிரதேசத்திலும் அதிகம் இருக்கின்றன. வேறு எங்கும் இல்வளவு நெருக்கமாக ஏரிகள், குளங்கள், கண் மாய்கள் இல்லை. அநேகமாக தமிழ் நாட்டில் ஓடும் ஆறு களின் தண்ணீரில் 80 சதவீதத்திற்கு மேல் பயன் படுத்தப் படுகிறது என்று கூறலாம்.

தமிழ்நாட்டில் இவ்வாறான பாசன ஏரிகள் 50 ஆயிரத் திற்கு மேல் உள்ளன. இவை தவிர ஊர் தவறாமல், நாடு முழுவதிலும் லட்சக்கணக்கில் சிறிய நீர்நிலைகள் இருக்கின்றன. தமிழ் மொழியில் நீர்நிலைகளுக்கு பல பெயர்கள் உள்ளன. ஏரி, குளம், கண்மாய், தெப்பம், தெப்பக்குளம், ஏந்தல், ஊருணி, பொய்கை, தடாகம் இவ்வாறு பல பெயர்கள் உள்ளன. இத்தனைப் பெயர் கள் நீர்நிலைகளுக்கு வேறு எந்த மொழியிலும் இருப்ப தாகத் தெரியவில்லை. கோவிலைக் கட்டி குளத்தை வெட்டுவது புண்ணியமென்று பழங்காலத்துப் பெரியோர் கள் கருதி வந்தனர். ஒவ்வொரு சிறுநில குறுநில பெருநில மன்னனும், செல்வந்தர்களும் செல்வாக்கு மிக்கவர்களும் பெரிய மனிதர்களும் முன் முயற்சி எடுத்து நீர் நிலைகளை அமைத்திருக்கிறார்கள். பலருடைய பெயர் களிலும் எரி குளம் கண்மாய்கள் ஊருணிகள் இருப்பதை தமிழகத்தில் காணலாம். பல ஊர்களின் பெயர்களும் ஏரி, குளம், கண்மாய் ஊருணி, ஏந்தல்கள் பெயர்களில் முடிகின்றன. நடயநேரி, அச்சங்குளம், பாண்டிக் கண்மாய், முத்தனேந்தல் வெற்றிலை யூரணி, போன்ற ஊர்களின் பெயர்களைத் தமிழகத்தில் காணலாம்.

தமிழகத்தின் வரலாற்றின், கலாச்சாரத்தின் பண்பாட்டின் ஒரு பகுதியாக இந்த எண்ணற்ற நீர் நிலைகள் அமைந்திருக் கின்றன.

இந்த நீர் நிலைகள் பல நோக்கம் கொண்டவைகளாக நிர் மாணிக்கப்பட்டிருக்கின்றன.

நீர்ப்பாசனம், குடி நீர், கால் நடைகளுக்குத் தண்ணீர், சுற்றுப்புறச் சூழலைப் பாதுகாக்க, குளிர்ச்சியாக்க, மரங்களை வளர்க்க நிலத்தடி நீர் ஊற்றுகளைப் பாதுகாக்க, இவ்வாறு பல நோக்கம் கொண்டு இந்த நீர் நிலைகள் கட்டப்பட்டிருக்கின்றன.

இந்த ஏரி குளம் கண்மாய்கள் ஊருணிகள் முதலிய நீர்நிலைகள் எல்லாம் இப்போது மேடிட்டுப் போயுள்ளன. அதனுடைய வரத்துக்கால் வடிகால்கள் தூர்ந்து மேடிட்டுப் போயிருக்கின்றன. அவைகளின் கரைகள், சுவர்கள், கலுங்கல்கள், மதகுகள் முதலியனவெல்லாம் சேதப்பட்டுக் கிடக்கின்றன.

சென்னை நகருக்குக் குடிதண்ணீருக்கு ஆதாரமாகவும் பாசனத்திற்குப் பயன் படுவதாகவும் உள்ள தமிழ் நாட்டின் மிகப் பெரிய ஏரிகளில் ஒன்றான செம்பரம்பாக்கம் ஏரியின் வாத்துக்கால், அந்த ஏரியிலிருந்து புழலேரிக்குச் செல்லும் கால்வாய் முதலியவைகள் எல்லாம் தூர்ந்து மேடிட்டுப் போயிருக்கின்றன.

இந்தியாவிலேயே, தமிழ் நாட்டிலேயே மிகப் பெரிய ஏரி வீராணம் ஏரி. காவிரியும், கொள்ளிடமும் கரை புரண்டு வந்தாலும் வீராணம் ஏரியின் விப்புகளுக்குக் காணாது எனத் தமிழ் நாட்டில் ஒரு பழமொழியே உண்டு. அந்த வீராணம் ஏரியில் சுமார் 17 அடி ஆழ அளவிற்கு தண்ணீர் நிறுத்தலாம். அது தான் அதன் ஆரம்ப வடிவம். ஆனால் இப்போது நாலரை அடி அளவு தண்ணீர்தான் நிறுத்த முடிகிறது. அந்த அளவிற்கு அந்த ஏரி தூர்ந்து போயிருக்கிறது.

தமிழ் நாட்டில் உள்ள பெரிய ஏரிகளில் ஒன்று செங்கல் பட்டு மாவட்டத்தில் உள்ள மதுராந்தகம் ஏரியாகும். அதற்கு ஒரு கதை உண்டு. மதுராந்தகம் ஏரிக்கரையில் ஒரு ராமர் கோவில் இருக்கிறது. அந்த ராமருக்கு ஏரி காத்த ராமர் என்றும் அந்த ஏரிக்கு ராமர் காத்த ஏரி என்றும் பெயர் வழங்குகிறது. ராமபிரானே தனதுகோதண்டத்தைத் தாங்கி நின்று அந்த ஏரிக்கரையைக் காத்துக் கொண்டிருப்பதாகக் கதை கூறப்படுகிறது.

இந்த ஏரியின் கொள்ளளவு ஒரு பெருக்கு பெருகினால் ஒன்றரை ஆண்டிற்கு தண்ணீர் நிற்கும். எனவே தொடர்ந்து அந்த ஏரியில் தண்ணீர் நிற்கும். ஆனால் இப்போது ஒரு பெருக்கு பெருகினால் ஆறு மாதங்கள் கூட தண்ணீர் நிற்பதில்லை. அதனால் 1985—நவம்பரில் கிளியாற்றில் பெரிய வெள்ளம் வந்தபோது ஏரி தாங்காமல் கலுங்கலிலேயே உடைப்பு ஏற்பட்டு, எதிரில் இருந்த சாலைப் பாலம் சேதப் பட்டு, ரயில்வே பாலத்தைப் பெயர்த்துத் தூக்கி தூரப்

போட்டு விட்டது. அந்த ரயில்வே பாலம் பழுது பார்க்கப் படுவதற்கு மூன்று மாதங்களுக்கு மேலாகி விட்டது. அது வரை விழுப்புரம்– சென்னை நேர் ரயில் வண்டி இணைப்பு நின்று விட்டது. அதனால் ஒரு நாளுக்கு இரண்டு கோடிக்கு மேல் ரயில்வேக்கு நஷ்டம் என்று கூறப்பட்டது. அது ஒரு புறமிருக்க, ஏரியில் எக்கல் மண் ஏறி விட்டதே, அதிக தண்ணீர் வரும் போது தாங்க முடியாமல் போவதற்குக் காரணமாகும்.

இராமநாதபுரம் பெரிய கண்மாய், நாரை பறந்து கடக்க முடியாத 48 மடைகளைக் கொண்டது. வைகை நதியே அதில் வந்து நின்று விடுகிறது. இப்போது தூர்ந்து போய் பெரும் பகுதி செயலற்றுக் கிடக்கிறது. ராஜ சிங்க மங்கலம் பெரிய கண்மாய், தமிழ் நாட்டில் உள்ள மற்றொரு பெரிய ஏரியாகும். அந்த ஏரியும் தூர்ந்து கிடக்கிறது.

செங்கல்பட்டு மாவட்டத்தில் தென்னேரி என்று ஒரு பெரிய ஏரி. அதன் கரைகள் தாழ்ந்து கிடக்கின்றன.

மதுரை அருகில் மாடக்குளம். அந்த மாடக்குள ஏரி மிகப் பெரியது. வைகையிலிருந்து அதற்குக் கால் வருகிறது. மாடக்குளம் உடைந்தால் மதுரைக்கே ஆபத்து என்பது பழமொழி. இப்போது மதுரைக்கு எந்த ஆபத்தும் இல்லை. ஏன் என்றால் மாடக்குளத்தில் பழைய அளவில் மூன்றில் ஒரு பகுதி கூட தண்ணீர் நிற்பதில்லை.

தமிழ் நாட்டில் உள்ள பெரிய ஏரிகளில் மற்றொன்று தென் ஆற்காடு மாவட்டத்தில் உள்ள வெல்லிங்டன் ஏரியாகும். இந்த ஏரிக்கரையின் நீளம் 4 கிலோ மீட்டருக்கு மேல் இருக்கும். இதன் ஆயக்கட்டு பாசனப் பரப்பு 27 ஆயிரம் ஏக்கருக்கும் அதிகம். இந்த ஏரியும் நான்கு மீட்டர் உயரத்திற்கு மேல் தூர்ந்து விட்டது. கொள்ளளவு பாதிக்கும் குறைந்து விட்டது. அது கட்டப்பட்ட காலத்திலிருந்து சரியாகப் பழுது பார்க்கப்படவில்லை.

இவ்வாறு தமிழகத்தில் உள்ள ஐம்பதினாயிரம் பாசன ஏரிகளுக்கும் ஐம்பதினாயிரம் விவரங்கள் சொல்லலாம். இந்த நீர் நிலைகள் பெரும்பாலும் சேதமடைந்து கிடக்கின்றன. அதனால் தமிழகத்தின் பாசனம், குடிநீர், நிலத்தடி நீர் ஊற்றுகள், சுற்றுப்புறச் சூழல் முதலியவை பாதிக்கப்பட்டு விவசாயத்திற்கும் விவசாயிகளுக்கும் கடுமையான நெருக்கடி ஏற்பட்டிருக்கிறது.

தமிழ்நாட்டின் அடுத்த முக்கியமான பாசன ஏற்பாடு கிணற்றுப்பாசனமாகும்.

தமிழகத்தில் மொத்தம் சுமார் 20 (இருபது) லட்சத்திற்கு மேல் பாசனக்கிணறுகள் இருப்பதாகக் கணக்கிடப்பட்டிருக்கிறது. இதில் சுமார் 13 லட்சம் கிணறுகளுக்கு மேல் மின்சார பம்பு செட்டுகளும் ஆயில் என்ஜின்களும் இணைக்கப்பட்டவை. 10.5 லட்சம் மின்சார பம்பு செட்டுகள் 3லட்சம் ஆயில் என்ஜின்கள் ஓடுகின்றன. கிணற்றுப்பாசனம் கடந்த முப்பது ஆண்டுகளில் தமிழ் நாட்டின் விவசாய வளர்ச்சியில் மிகப் பெரிய பங்கை ஆற்றியிருக்கிறது.ஒரு பம்பு செட்டிற்கு சாரசரி ஐந்து ஏக்கர் பாசனம் கிடைக்கிறது எனக் கணக்குப் போட்டால் பன்னிரண்டு லட்சம் பம்பு செட்டுகளும் சேர்ந்து சுமார் 60(அறுபது லட்சம்) ஏக்கர் நிலத்திற்குப் பாசனம் கொடுத்திருக்கிறது. மேட்டூர் அணை மூலம் தண்ணீர் வந்து தஞ்சையில் பாசனவசதி பெற்றுள்ள நிலம் சுமார் 12லட்சம் ஏக்கர் எனக் கணக்குக் கூறுகிறார்கள். அப்படியானால் தஞ்சையைப் போல் ஐந்து தஞ்சை மாவட்டங்கள் பம்பு செட்டுகள் மூலம் பாசனம் பெறுகின்றன. இந்த அறுபது லட்சம் ஏக்கர் மூலம் கிடைத்த உற்பத்தி தமிழகத்தின் செல்வத்தைப் பெருக்கியிருக்கிறது.தமிழகத்தின் பஞ்சாலைகளுக்கு வேண்டிய பருத்தியைக் கொடுத்திருக்கிறது தமிழகத்தின் சர்க்கரை ஆலைகளுக்கு வேண்டிய கரும்பைக் கொடுத்திருக்கிறது. தமிழகத்தின் எண்ணெய் மில்களுக்குத் தேவையான நிலக்கடலையையும் இதர எண்ணெய் வித்துக்களையும் கொடுத்திருக்கிறது. தமிழகத்தின் சவ்வரிசி சேமியா, தொழிற்சாலைகளுக்குத் தேவையான குச்சிக் கிழங்கைக் கொடுத்திருக்கிறது. தமிழக மக்களுக்கு வேண்டிய உணவுப் பொருளைக் கொடுத்திருக்கிறது. இதர தானியங்களையும், 18 வகை வாழைப்பழங்களையும் மற்றும் திராட்சை, ஆரஞ்சு, கொய்யா மா, பலா, முதலிய கனி வகைகளையும் தட்டாமல் கொடுத்து வந்திருக்கிறது,

இந்தப் பாசனக்கிணறுகளுக்கான பம்பு செட்டுகள் வைப்பதற்கு அரசுகடன் கொடுத்தது. அந்தக் கடனை வட்டிக்கு மேல் வட்டி போட்டு திரும்பிவாங்கி விட்டது பம்பு செட்டுகள் போடுவதற்கான செலவைக் காட்டிலும் அதிகமாகவே பலவகை முறைகளில் குறைந்தபட்சகட்டணம் என்று அதிக பட்சமாகவே பணம் வாங்கி விட்டார்கள்.அத்துடன் நிர்வாகச் சீர்கேடு, ஊழல்கள், லஞ்சம் காரணமாகவும் விவசாயிகள் ஏராளமான பணம் நஷ்டமடைந்திருக்கிறார்கள். அதற்கு மேல் மின்சார கட்டணத்தையும் படிப்படியாக உயர்த்தி அரசு விவசாயிகளைக் கொள்ளையடித்தது.

இப்போது கிணற்றுப் பாசனத்திற்கு தமிழகத்தில் ஒரு கடுமையான நெருக்கடி ஏற்பட்டிருக்கிறது. நிலத்தடி நீர் கீழே போய்க் கொண்டேயிருக்கிறது. கிணறுகளை ஆண்டு தோறும் விவசாயிகள் ஆழப்படுத்திக் கொண்டேயிருக்கிறார்கள். பல கிணறுகளில் தண்ணீர் வற்றி விட்டது. ஏரி

குளம் கண்மாய்கள், இதர நீர் நிலைகளும் பாழடைந்து கிடப்பதால் மழைபெய்தாலும் தண்ணீர் நிறுத்தப்படாத தால், நீர் ஊற்றுகள் பாதிக்கப்பட்டு நின்று விட்டன.

வட்டி, கட்டணம், விலைகள் காரணமாய் இந்தப் பகுதி விவசாயிகள் மீது நடத்தப்பட்ட கொடுமைக்கு அளவே இல்லை. அதனால் அவர்களிடம் ஏற்பட்ட வெடிப்பு பற்றி அடுத்த அத்தியாயத்தில் பார்ப்போம்.

தமிழகத்தின் முக்கிய நீர்ப்பாசனப் பகுதிகளில் ஒன்றான கிணற்றுப் பாசனம் இவ்வாறு, நிலத்தடி நீர் ஊற்று பாதிப்பு, மின்சார பற்றாக்குறை, மின் கட்டணம், மின் சார சாதனங்கள், கருவிகள், உபகருவிகளுக்கான விலை உயர்வு முதலிய காரணங்களால் கடுமையான நெருக்கடி ஏற்பட்டிருக்கிறது.

தமிழகத்திலும் இந்திய நாட்டிலும் ஏற்பட்டுள்ள நீர்ப் பாசன நெருக்கடி பெரும்பாலும் செயற்கையான நெருக் கடியாகும். முதலாளித்துவ உற்பத்தி உறவுகளின் பிற்போக்கான தன்மைகள், அதனால் உண்டாகி யுள்ள தடைகள் தான் இந்த நெருக்கடிக்கு முக்கிய காரணங்களாகும்.

மூன்றாவதாக உழவுகருவிகள், உழவு மாடுகளின் பற்றாக் குறையால் ஏற்பட்டுள்ள பற்றாக் குறையும் நெருக்கடியு மாகும்.

உழவுகருவிகள் நவீன உழவுகருவிகள் இந்திய விவசாயத்தில் வரத் தொடங்கி அவை வளரும், சக்தியாக இருக்கிறது. தமிழகத்தில் மட்டும் முப்பதாயிரத்திற்கு மேற்பட்ட டிராக் டர்கள், டெம்போக்கள் செயல்பாட்டிற்கு வந்துள்ளன. இந்த எண்ணிக்கை மேன்மேலும் அதிகரித்துக் கொண்டிருக் கிறது. ஆயினும் டிராக்டர்களை வாங்கி பயன்படுத்தும் அளவிற்கு சிறிய நடுத்தர விவசாயிகளுக்கு பொருளாதார பலம் இல்லை. வாடகைக்கு பிடிப்பதற்கும், வாடகையும் அதிகரித்துக் கொண்டிருக்கிறது. அத்துடன் டிராக்டர், டெம்போக்களின் விலை டீசல் விலை உபகருவிகள் விலை அதிகரித்து கொண்டிருப்பதால் உழவு செலவு அதிகரிக் கிறது. அதுசிறிய நடுத்தர விவசாயிகளுக்கு கட்டு படியாகாத நெருக்கடியாகவளர்ந்து கொண்டிருக்கிறது.

டிராக்டர்கள் நாளுக்கு நாள் அதிகமாக செயல்பாட்டிற்கு வந்திருந்தாலும், நமது நாட்டின் விவசாயத்தில் மாடுகளின் பயன்பாடு எந்தவிதத்திலும் குறையவில்லை. சாகுபடி நிலத் தின் அளவும், இரண்டாவது சாகுபடியும் அதன் அளவும் அதிகரித்து வருவதால் உழவு கருவிகளின் தேவையும் மாடு களின் தேவையும் அதிகரித்து வருகிறது மாடுகள் நமது நாட்டு விவசாயத்தின் மிகவும் முக்கியமான உற்பத்தி சக்தி யாகவே தொடருகிறது

மாடுகள் பசுக்கள் எருமைகள், ஆடுகள் கோழிகள் பன்றிகள் ஆகிய கால்நடைகள் இந்திய விவசாயப் பொருளாதாரத்தில் கிராமாந்திரப்பொருளாதாரத்தில் மிகவும் முக்கியமான இடத்தைப் பெற்றிருக்கின்றன. உழவு வேலைகள், வண்டி போக்குவரத்து முதலியவைகளுக்கு மாடுகள் அவசியம். அத்துடன் பால், தயிர், மோர் வெண்ணெய், நெய் முதலிய உணவுப் பொருள்களுக்கும், நமது நாட்டின் நிலத்திற்கு மிகவும் அவசியமான தொளி உரத்திற்கும் கால்நடைகளின் சாணம் மிகவும் முக்கியமானது. தொழு உரத்தின் மூலம் தான் நிலத்திற்குத் தேவையான உயிர் அணு உரம் அதிகமாகக் கிடைக்கிறது.கால்நடைகளின் எண்ணிக்கை குறைந்து கொண்டு வருகிறது. மறுபக்கம் உழவு மாடுகளின் தேவையும் அதிகரித்து வருகிறது.

நவீன உழவு கருவிகளின் விலையும் பராமரிப்புச் செலவும் அதிகரித்தும், உழவு மாடுகளின் பற்றாக்குறை அதிகரித்தும் சாகுபடியில் நெருக்கடியை உண்டாக்கியிருக்கிறது.

நான்காவதாக உரம் பற்றி ஏற்பட்டுள்ள நெருக்கடியாகும். ரசாயன உரம் நமது விவசாயத்தில் முக்கிய இடம் பெற்றிருக்கிறது. உற்பத்தியை அதிகரிப்பதற்கு ரசாயன உரம் மிகவும் அவசியமாகும். இந்த அவசியத்தை இந்திய விவசாயிகள் நன்கு புரிந்து கொண்டுள்ளார்கள் ஆரம்பத்தில் உர உற்பத்தி ஆலை முதலாளிகளும் சரி, அரசும் சரி ரசாயன உர உபயோகத்தை ஊக்குவித்தார்கள். அதன் பயன்பாடும் அதிகரித்துள்ளது. இப்போது ரசாயன உரத்தின் விலையும் அதிகரிக்கப்பட்டு விட்டது. அதன் தரமும் குறைந்து விட்டது. ஆலை முதலாளிகள், அதில் பெரும்பாலும் பன்னாட்டு கூட்டு நிறுவனங்கள் திட்டமிட்டு ரசாயன உரங்களின் விலையையும் உயர்த்தி, தரத்தையும் குறைத்து விட்டார்கள். அரசு அந்த ஆலை முதலாளிகளுக்கு அனுசரணையாகவே இருக்கிறது.

அடுத்தபடியாக இப்போது நிலத்திற்கு இடப்படும் தழை உரம், தொளிஉரம் முதலிய உயிர்அணு உரங்களில் அளவு குறைந்து விட்டது ஏற்கெனவே பலகாலமாக நிலப்பிரபுத்துவஏகாதிபத்திய சுரண்டல்காரணமாக ஏழ்மைப்பட்டிருந்த விவசாயிகள் நிலத்திற்கு உரமிடுவதில் பலவீனமடைந்து நிலத்தின்சாரம் பல இடங்களில் குறைந்திருக்கிறது, இப்போது தீவிரசாகுபடி ஏற்பட்ட பின்னர் புதிய செய்முறைகள் ரசாயன உரம் போன்றவைகளினால் உற்பத்தி அதிகரித்தது. இப்போது ரசாயன உரம் உயிரணு உரம் ஆகியவற்றின் விகிதாசார ஏற்றத் தாழ்வின் காரணமாக எதிர் நிலை விளைவுகளும் ஏற்பட்டு வருகின்றன.

அத்துடன் காடுகள், மரங்கள் அழிக்கப்படுவதன் காரணமாக தழை உரம் கிடைப்பதும் குறைந்து வருகிறது. கால்

நடைகளின் எண்ணிக்கை குறைவதால் தொழு உரமும் கிடைப்பது குறைந்து வருகிறது.

இந்த நிலைமைகள் நிலத்தின் சாரத்தை பாதித்துள்ளது மட்டுமல்ல நிலத்தில் அமிலச்சத்து அதிகமாகி பண்பட்ட நிலமும் கூட பாழடைந்து வருகிறது. இந்த நெருக்கடியும் வளரத்தொடங்கியிருக்கிறது.

ஐந்தாவதாக, பூச்சி மருந்து பற்றியதாகும். நவீன வித்துக்கள் அதிகமாகப்பயன் படுத்துகிறோம் நல்ல விளைச்சல் வருகிறது அதே சமயத்தில் பயிர் நோய்கள் அதிகரித்துள்ளன. பயிர் நோய்கள் வராமல் தடுப்பதற்கான முயற்சிகள் நமது ஆராய்ச்சி நிலையங்களின் அரசின் முயற்சிகளில் இல்லை. மனிதனுக்கு ஏற்படும் நோய்களையே தடுக்கும் முறைகளைக் காட்டிலும் சிகிச்சை முறைகள் தானே அதிகரிக்கிறது. சிகிச்சை முறையில் வருமானமும் லாபமும் அதிகம் முதலாளித்துவத்திற்கு நோயைத் தடுப்பதைக் காட்டிலும் நோய் வந்து அதற்கு சிகிச்சை செய்வதில் கிடைக்கும் லாபத்தில் தான் அதிக அக்கறை.

அதே நிலைமை பயிர்ப் பாதுகாப்பு விஷயத்திலும் செயல்படுகிறது. பயிர்நோய்களைத் தடுக்கும் முயற்சிகள் குறைவு. அதே சமயத்தில் வளர்முக நாடுகளில் பயிர் நோய்களைப் பரப்புவதற்கும் ஏகாதிபத்திய சக்திகள் முயற்சிப்பதில் ஆச்சரியப் படுவதற்கில்லை.

புதிய புதிய பயிர் நோய்கள் ஏராளமாக வருகின்றன. எனவே பயிர்களுக்கு மருந்து தெளிப்பது முக்கியமான விவசாய வேலைகளில் ஒன்றாகிவிட்டது.

இங்கும் பூச்சி மருந்துகள் உற்பத்தி செய்யும் தொழிற்சாலைகள் பெரும்பாலும் பன்னாட்டு கூட்டு நிறுவனங்களே யாகும். அவைகள், மருந்துகளின் விலையையும் உயர்த்தியிருக்கின்றன. மருந்துகளின் தரத்தையும் தாழ்த்தியிருக்கின்றன. இந்த நிலையில் பூச்சிகளும் சரியாக அழிவதில்லை. பயிர் நோய்களும் முழுமையாகத் தீர்வதில்லை. அத்துடன் மருந்து தெளிப்பதில் ஏற்றத் தாழ்வுகள் ஏற்பட்டு பயிரின் வளர்ச்சிக்கு அவசியமான உயிரினங்களும் அழிந்து விடுகின்றன. சிறிய நடுத்தர விவசாயிகள், மருந்துகள் வாங்குவதில், அதைத் தெளிப்பதில் அதிகமான செலவுகளை சமாளிக்க வேண்டியதிருக்கிறது.

ஆறாவதாக, விவசாயிகளுக்குள்ள கடன், கட்டணம் வரி, விலை முதலியன இன்று விவசாயிகளின் கழுத்தை நெரித்து அழுத்திக் கொண்டிருக்கின்றன.

விவசாயச் செலவுகளுக்கு, நடப்பு செலவுகளுக்கு விவசாயிகள் பெரும்பாலும் கடன் வாங்க வேண்டியதிருக்கிறது. ஆட்டு லோன், மாட்டு லோன், கிணற்று லோன், பம்பு செட் லோன், ரசாயன உர லோன், பூச்சி மருந்து

லோன், பொறுக்கு விதை லோன், பயிர் லோன், பராமரிப்பு லோன் இவ்வாறு பலவகை கடன்கள். வாங்கி நமது நாட்டு விவசாயிகளும் விவசாயத் தொழிலும் கடனில் மூழ்கி விட்டது. இப்போது விவசாயிகளுக்கு வாங்கிய கடனைக் கொடுக்க முடியவில்லை. தவணைகள் கடந்து விட்டன. வட்டி அதிகரித்து விட்டது. அபராத வட்டிகள் வந்து விட்டன. வட்டிக்கு வட்டியும் வந்து விட்டது.

இதனால் கடன் பாக்கி அசலுக்கு மேல் இருமடங்கு மும் மடங்கு கூட அதிகரித்து விட்டது. இந்தக்கடன் பாக்கி களைக் கட்ட முடியாத கடுமையான நெருக்கடி நிலை இந்திய விவசாயிகளுக்கு ஏற்பட்டிருக்கிறது. பழைய கடன் பாக்கி இருப்பதால் புதிய கடன் கிடைப்பதில்லை. அதனால் விவசாயிகள் தனியார்களை நோக்கியும் போக வேண்டிய திருக்கிறது. அதனால் மேலும் அதிகமான கடன் பளுவும் வட்டிப் பளுவும் ஏற்பட்டிருக்கிறது.

இவ்வாறு இந்திய விவசாயிகளின் கடன் பளு தீராத நெருக்கடியாக நீடித்துக் கொண்டிருக்கிறது. கடன் பளு வைக் குறைக்க வேண்டும் என்னும் கிளர்ச்சி தொடர்ச்சி யாக இருந்து வந்தது.

1989–ம் ஆண்டில் மத்தியில் வி.பி.சிங் தலைமையில் ஆட்சிக்கு வந்த தேசீய முன்னணி அரசு விவசாயிகளுக்கும் கிராமப்புற ஏழைகளுக்கும் ரூபாய் பத்தாயிரம் வரை யிலான கடன் தள்ளுபடி செய்யப்படும் என அறிவிப்பு செய்துள்ளது. இது விவசாயிகள் நீண்ட காலப் போராட் டத்தின் வெற்றியாகும்.

கட்டணத்தில் மின்சார கட்டணம் மிக முக்கியமானது. மின்சாரகட்டணம், விவசாயிகளுக்கு படிப்படியாக உயர்த் தப்பட்டது. கிணறுகளில் தண்ணீர் குறைந்துவருகிறது. அதனால் இறவை குறைகிறது. மின்வெட்டு ஏற்படுகிறது. மின்சார பயன்பாடு குறைகிறது. ஆயினும் கட்டணத்தின் விகிதமும் மொத்த அளவும் குறைய வில்லை. மாறாக அதிகரித்து வருகிறது.

தமிழகத்தில் மின்சாரக்கட்டணத்தைக் குறைக்க வேண்டும். கடன் பாக்கிகளை ரத்து செய்ய வேண்டும் என்று நெருக்கடி முற்றி 1970–ம் ஆண்டுகளில் பெரிய கிளர்ச்சிகள் ஏற் பட்டன. கிளர்ச்சிகளை துப்பாக்கி கொண்டு போலீஸ் தடிகளைக் கொண்டு அடக்க முடிந்ததே ஒழிய பிரச்னை களைத் தீர்க்க முடியவில்லை. விவசாய பம்பு செட்டு களுக்கு இலவச மின்சாரம் கொடுக்க 1990–ம் ஆண்டில் திமுக அரசு ஆணையிட்டுள்ளது.

டீஸல், பெட்ரோல் விலை உயருகின்றன. பஸ் கட்டணம் உயர்ந்து கொண்டேயிருக்கிறது. அதனால் சாதாரண

விவசாயிகள், உரம் வாங்க, மருந்து வாங்க, விவசாயத்திற்குத் தேவையான மின்சார சாதனங்கள் வாங்க, தங்கள் விவசாயக் கருவிகளைப் பழுது பார்க்க, தங்கள் விவசாயப் பொருள்களை சந்தைக்கு கொண்டு போய் விற்று வர பஸ்களில் போக வேண்டும். பஸ் கட்டணம் உயர்ந்து கொண்டேயிருக்கிறது. அதன் காரணமாகவும் விவசாயச் செலவும் அதிகரிக்கிறது.

நிலவரி, தண்ணீர்வரி, அதற்கான செஸ்கள் உபரிசெஸ்கள் உயர்ந்து கொண்டேயிருக்கிறது. நிலவரி இன்றைய அரசுகளின் பட்ஜெட்டில் சிறிய பகுதி தான். இருப்பினும் நிலவரி அதன் உபரிவரிகள் தொடருகின்றன. அதனால் விவசாயிகளுக்குப் பிரதிபலன் எதுவும் இல்லை. அந்தவரிப்பணத்தை வைத்து அரசு துப்பாக்கிகளையும் தடிகளையும் வாங்கி விவசாயிகளை மிரட்டவும், சுடவும் அடிக்கவும்தான் பயன்படுத்தியிருக்கிறது.

ஏழாவதாக, எல்லாவற்றிற்கும் மேலான பிரச்சனையாக உள்ளது. விவசாயிகளின் விளை பொருளுக்குரிய விலை இல்லாமையாகும், விவசாயிகளின் விளைபொருளுக்குக் கட்டுபடியாகும் விலை இல்லாமையால் ஏற்பட்டுள்ள பாதிப்புகள் பற்றி ஏற்கெனவே முந்திய அத்தியாயத்தில் கூறப்பட்டிருக்கிறது.

முதலாளித்துவ முறையில் தொழிற்சாலையில் உற்பத்தியாகும் பொருள்கள் அனைத்திற்கும் உற்பத்திச் செலவைக் கணக்கிட்டுலாபத்தை வைத்து விலை நிர்ணயிக்கப்படுகிறது. விவசாயிகள் விவசாயத்திற்கு வாங்கும் பொருள்கள் அனைத்திற்கும் நிர்ணய விலை இருக்கிறது. ரசாயன உரம் வாங்குகிறோம் என்றால், அது ரசாயனத் தொழிற்சாலையின் நிலம், கட்டிடம், எந்திரங்கள் ஆகியவைகளுக்கான முதலீடு அதற்கான வட்டி, மூலப்பொருள் விசை சக்திக்கு ஆகும் செலவு உழைப்பு சக்தி, நிர்வாகம் ஆகியவற்றிற்கான செலவுகள் அதற்கான தொகை அதற்கான வட்டி, மூலப் பொருள் முதலியவை வாங்குவதற்கான கமிஷன் செய் பொருள் விற்பனைக் கமிஷன், நடப்பு செலவுகளுக்காக, ஸ்டாக்கிற்காக, வங்கிகளிடமிருந்து வாங்கியுள்ள பணம் அதற்கான வட்டி, வருமான வரி, விற்பனை வரி, தொழிற்சாலை நிர்வாகம், பராமரிப்பு செலவுகள் முதலிய அனைத்தையும் கணக்கிட்டு, உற்பத்திச் செலவைக் கணக்கிட்டு அதற்கு மேல் லாபத்தை வைத்து ரசாயன உரத்தின் விலை நிர்ணயிக்கப்பட்டு மார்க்கட்டிற்கு வருகின்றது. உர மூட்டைகளின் விலைகள் அச்சடிக்கப்பட்டு விடுகின்றன.

இதே, போல் நாம் வேறு எந்தப் பொருள், வாங்கினாலும், துணி, சர்க்கரை, மின்சார பல்பு, எண்ணெய்,

டீசல், மின்சார மோட்டார், டிராக்டர், உபபொருள் கள், பூச்சி மருந்து முதலிய பொருள்களுக்கெல்லாம் உற்பத்தி அடக்கச் செலவு கணக்கிட்டு விற்பனை விலை நிர்ணயிக்கப்படுகிறது.

ஆனால் விவசாயிகள் உற்பத்தி செய்யக்கூடிய நெல், கரும்பு, பருத்தி, நிலக்கடலை, தேங்காய், குச்சிக்கிழங்கு மிளகு, சணல், கோதுமை முதலிய பொருள்களுக்கு மட்டும் நிலத்தின் விலை, நீர்ப்பாசனச் செலவு, உழவுச் செலவு, நிலத்தைப் பண்படுத்துவதற்கான செலவு, களையெடுத்தல் செலவு, உரம் போடும் செலவு, பூச்சி மருந்து செலவு, அறுவடைச் செலவு, போக்குவரத்துச்செலவு, முதலியவைகளைச் சேர்த்து உற்பத்திச் செலவைக் கணக்கிட்டு விலை நிர்ணயம் செய்வது கிடையாது.

தொழிற்சாலைகளில் உற்பத்தியாகும் பொருள்களுக்கெல் லாம் உற்பத்தியாளர் குழுக்கள் விலை நிர்ணயம் செய் கின்றன. ஆனால் விவசாய உற்பத்திப் பொருள்களுக்கு மட்டும் பெரும்பாலும் உபயோகிப்போரின் குழுக்கள் தான் விலை நிர்ணயிக்கும். குழுக்களின் உறுப்பினர்கள், அரசால் நியமிக்கப்படுகிறார்கள். அதனால் நிச்சயமாக விவசாயிகளுக்கு நியாயம் கிடைப்பதில்லை.

விவசாயிகளின் விளைபொருள்களுக்குக் குறைவான விலை யை நிர்ணயித்து முதலாளிகளும் மொத்த வியாபாரிகளும் பன்னாட்டுக் கூட்டுக்கம்பெனிகளின் ஏகபோக முதாளிகளும் ஏற்றுமதி இறக்குமதி வர்த்தகர்களும் கொள்ளை லாபம் அடைகிறார்கள்.

விவசாயிகளின் வாங்கும் பொருள்களுக்கும் விற்கும் பொருள்களுக்கும் இடையில் உள்ள ஏற்றத் தாழ்வு வித்தி யாசம் ஆண்டிற்கு இரண்டாயிரம் கோடி ரூபாய்க்கு மேல் இருக்கும் என ஒரு கணக்குக் கூறுகிறார்கள். அப்படியானால் இந்திய விவசாயிகள் ஆண்டுதோறும் ரூபாய் இரண்டாயிரம் கோடி வரை நஷ்டமடைந்து கொண்டிருக்கிறார்கள்; ஆண்டு தோறும் இந்தியப் பெரு முதலாளிகளும் பெரிய வர்த்தகர்களும் பன்னாட்டுக் கூட்டு நிறுவன முதலாளிகளும் இந்திய விவசாயி களிடமிருந்து ரூபாய் இரண்டாயிரம் கோடிக்கு மேல் சுரண்டிக்கொள்ளையடிக்கிறார்கள் என்று பொருள்.

இந்தக் கொள்ளை இதற்கு முன் இருந்த எல்லாக் கொள்ளைகளையும் மிஞ்சி விட்டது.

'பொழுதெல்லாம் எங்கள் செல்வம் கொள்ளை கொண்டு போகவோ, நாங்கள் சாகவோ' என்று பாரதி ஆங்கிலேய

ஆட்சியைப் பார்த்துக் கூறினான். இப்போதைய கொள்ளை அதையும் மிஞ்சி விட்டது. சுதந்திரம் கிடைத்த இந்த நாற்பது ஆண்டுகளிலும் இந்தக் கொள்ளை தொடருகிறது.

அரசினுடைய விலைக் கொள்கை, ஏற்றுமதி இறக்குமதிக் கொள்கை இந்திய முதலாளிகளுக்கும் பெருமுதலாளிகளுக்கும் சாதகமாகவே அமைந்திருக்கிறது. பருத்தி விலை உயரும் போது, வெளிநாடுகளிலிருந்து பருத்தியை இறக்குமதி செய்து விலையை வீழ்த்துவார்கள். சமையல் எண்ணெய் விலை உயரும் போது வெளிநாடுகளிலிருந்து சமையல் எண்ணெய் இறக்குமதி செய்து அதன் விலையை வீழ்த்துவார்கள். வெல்லம் கிராக்கியானால் வெல்லத்தின் ஏற்றுமதியைத் தடை செய்து, மார்க்கட் விலையை மொத்த வியாபாரிகள் வீழ்த்துவார்கள்.

இந்த வியாபார சூதாட்டத்தில் விவசாயிகள் சிக்கித் தவிக்கிறார்கள். உற்பத்தி பெருகினாலும், கடின உழைப்பைச் செலுத்தினாலும் ஆண்டு தோறும் நஷ்டமடைந்து, விவசாயிகள் கடுமையான நெருக்கடிக்குள் சிக்கியிருக்கிறார்கள்.

வரி, வட்டி, கட்டணம், விலை ஆகியவை இந்திய விவசாயிகளின் கழுத்தை நெரித்துக் கொண்டிருக்கிறது. இதனால் இன்றைய இந்திய விவசாய உற்பத்தியில் கடுமையான தேக்கம் ஏற்பட்டுள்ளது. இன்றைய முதலாளித்துவ உற்பத்தி உறவுகள் விவசாயத்தின் வளர்ச்சிக்குப் பெரும் தடையாக ஏற்பட்டுள்ளது.

இந்த நெருக்கடியிலிருந்து விவசாயி விடுவிக்கப்பட வேண்டுமானால் அது முதலாளித்துவப் பாதையில் சாத்தியமில்லை. எனவே இத்திய விவசாயிகளுக்கு முன்பாக இந்தியப் பெருமுதலாளிகளும் முதலாளித்தவ அரசும்தான் பெரும் எதிரிகளாக வந்து முன் நிற்கிறார்கள்.

எட்டாவதாக, விவசாய உழைப்பில் ஏற்பட்டுள்ள பல பிரச்சனைகளும் இன்றையவிவசாய நெருக்கடியைத் தீவிரப் படுத்துகிறது.

விவசாயத் தொழில் கட்டுபடியாக வில்லை. சிறு விவசாயிகள், நடுத்தர விவசாயிகள், பெரிய விவசாயிகள் அனைவருமே விலையினால் பாதிக்கப்படுகிறார்கள். இதர தொழில்களையும் பார்த்துக் கொண்டு விவசாயத்தில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு ஓரளவு சமாளிக்க முடிகிறது. விவசாயத்தை மட்டுமே நம்பியிருப்பவர்களுக்கு விவசாயம் கட்டுபடியாக வில்லை.

சிறு விவசாயிகளும் நடுத்தரவிவசாயிகளும் விவசாயத்தில் ஏற்படும் அதிக செலவைச் சமாளிக்கமுடியவில்லை. அதனால்

போதுமான உரம் போடுவது மருந்து அடிப்பது போன்றவற்றைக் குறைத்துக் கொள்கிறார்கள்.

விவசாயத் தொழிலில் நிலவுடமையாளர்கள் மட்டுமே உழைப்பது என்பது போதாது, பெரிய விவசாயிகள், நடுத்தர விவசாயிகள் சொந்தத்தில் ஏர்மாடுகள் வைத்திருந்தாலும் ஏர் ஓட்டுவதற்கு ஆட்களைக் கூலிக்கு அமர்த்த வேண்டியதிருக்கிறது. சிறு விவசாயிகள் சொந்த ஏர்மாடு வைத்திருந்தால் பிரச்சனையில்லை. ஆனால் எல்லா சிறுவிவசாயிகளிடமும் சொந்த ஏர்மாடுகள் இருக்கின்றன என்று கூறமுடியாது. சாதாரணமாக இப்போதெல்லாம் ஏர் உழுதல் பெரும்பாலான இடங்களில் சராசரி ஒரு நாளைக்கு நான்கு அல்லது ஐந்து மணி நேரத்திற்கு மேல் நடைபெறுவதில்லை. கூலிக்கு ஏர்பிடிப்பதானால் சீசன் நேரங்களில் ஏருக்கு அதிக கிராக்கி ஏற்பட்டுவிடும். சாதாரண ஏழை நடுத்தர விவசாயிகளுக்கு இதனால் பாதிப்பு ஏற்படுகிறது.

விதைத்தல், நடுகை, களை எடுத்தல், மருந்து தெளித்தல் அறுவடை போன்ற வேலைகளுக்கு சிறு விவசாயிகள் கூட கட்டாயம் கூலி ஆட்கள் வைத்துத்தான் வேலை செய்ய வேண்டும். இந்த வேலைகள் எல்லாம் சாதாரணமாக ஒரு நாளுக்கு நான்கு ஐந்து மணி நேரத்திற்கு மேல் நடைபெறுவதில்லை.

விலைவாசி உயர்வு, வாழ்க்கைக் கஷ்டங்கள், கடின உழைப்பு போன்ற காரணங்களால் விவசாயத் தொழிலாளர்களுக்கும் கூட வேலையில் அக்கறை ஏற்படுவதில்லை. சோர்வுதான் அதிகம் ஏற்படுகிறது.

நெல் நடுகையில் நேர்த்தியாக இல்லாவிட்டால் அதனால் பயிர் நெருக்கமின்றி விளைச்சல் பாதிக்கிறது. களை யெடுப்பது நன்கு அமையாவிட்டால், பயிர் வளர்ச்சி பாதிப்பு ஏற்படுகிறது. அறுவடையில் அடியில் பிடித்து அறுக்காவிட்டால் நெல் சாகுபடியில் வைக்கோல் அதிகம் கிடைக்காது. இப்போதெல்லாம் வைக்கோல் பாதிக்குப்பாதி கூட கிடைப்பதில்லை.

தண்ணீர் பாய்ச்சுவதில் குறிப்பாக கால்வாய்ப் பாசனத்திலும், ஏரிப்பாசனத்திலும் சிக்கனமும் கவனமும் இல்லாமல் தண்ணீர் வீணாகிறது.

இவ்வாறு நில உடமையாளர்களிடமும் சரி, விவசாயத் தொழிலாளர்களிடமும் சரி, போதுமான உற்சாகமும் உணர்வும் இல்லாததால், உற்பத்தி பாதிப்பு ஏற்படுகிறது. இந்த நெருக்கடியும் அதிகரித்து வருகிறது.

ஒன்பதாவதாக, ஊழலும் மந்தமும் நிறைந்த அரசாங்க நிர்வாகத்தின் அழுத்தமும் பெரும் பாரமாக விவசாயிகள் மற்றும் இதர கிராமப்புறப் பாட்டாளிகள் மீது தான் விழுகிறது.

ரெவின்யூ அதிகாரிகள்— பணியாளர்கள், பஞ்சாயத்து அதிகாரிகள்—பணியாளர்கள், வரிவசூல் அதிகாரிகள்—பணியாளர்கள், மின்சாரவாரிய அதிகாரிகள்—பணியாளர்கள் போலீஸ் அதிகாரிகள்—காவலர்கள் இதர பலவேறு துறைஅரசாங்க நிர்வாகிகள் அதிகாரிகள் பணியாளர்கள் வனஇலாகா அதிகாரிகள் ஊழியர்கள் அனைவருக்கும் கிராமப்புற விவசாயிகளும் பாட்டாளிகளும் தான் வேட்டைக்காடாக அமைந்திருக்கிறார்கள். ஒரு சான்றிதழ் வேண்டுமா, ஒரு கையெழுத்து வேண்டுமா, ஒரு மின் இணைப்பு வேண்டுமா, ஒரு பியூஸ் காலிற்கு கூப்பிட வேண்டுமா, ஒரு லோன் போட வேண்டுமா, ஒரு பட்டா வாங்க வேண்டுமா— எது வானாலும், அதற்கு வட்டம் செலுத்த வேண்டும், 'அன்பளிப்பு' செலுத்த வேண்டும்.

அத்துடன் கிராமப்புறப் பாட்டாளிகளின் குழந்தைகள் படிக்கவும் இதர வசதிகள் பெறவும், வைத்திய வசதி முதலியவை பெறவும், அவர்கள் படும்பாடு சொல்ல முடியாது.

அரசாங்க எந்திரத்தின் இந்த அழுத்தமும் விவசாயிகளின் இடுப்பை முறிக்கிறது.

இத்தனை நெருக்கடியும் விவசாயத் தொழிலில் தேக்கத்தை உண்டாக்கியிருக்கிறது. இந்த தேக்கத்திற்குக் காரணம் முதலாளித்துவ சுரண்டல் முறையும் அரசாங்க எந்திரத்தின் சுமையுமாகும்.

இந்த நெருக்கடியிலிருந்து விவசாயமும், விவசாயத் தொழிலும் நாடும் மீளவேண்டுமானால், முதலாளித்துவப் பொருளாதார அமைப்பு முறையை மாற்ற வேண்டும். அரசாங்க நிர்வாகச் சீரமைப்பு செய்ய வேண்டும். வேறு வழியில்லை.

எனவே இன்றைய விவசாயிகளுக்கு—அதாவது விவசாயத் தொழிலாளர்கள் சிறுவிவசாயிகள் நடுத்தர விவசாயிகள் பெரிய விவசாயிகள் முதலிய எல்லாப் பிரிவு விவசாயிகளுக்கும்—கிராமப்புறப் பாட்டாளிகள் அனைவருக்கும் முக்கிய எதிரியாக முன்னால் நிற்பது முதலாளித்துவச் சுரண்டல் முறையும் முதலாளித்துவ ஆட்சி முறையுமாகும்.

இந்த சுரண்டல் ஆட்சிமுறைக்கு எதிராகவிவசாயிகள் ஒன்று பட வேண்டும். விவசாயிகள் தங்கள் கோரிக்கைகளுடன் சேர்ந்து ஆட்சி முறையை மாற்றுவதற்கும் முன் வந்தால் தான் இன்றைய நெருக்கடிக்கு தீர்வு காண முடியும்.

# 7

# இதர கிராமப்புறப் பாட்டாளிகளும் அவர்களுடைய பிரச்சனைகளும்

விவசாயிகளுக்கு அடுத்தபடியாக கிராமப்புறங்களில் வாழும் பலவேறு பாட்டாளி மக்கள் இருக்கிறார்கள். கைத்தறி நெசவாளர்கள், கடற்கரையோர கிராமங்களில் வாழும் மீனவர்கள், பனை தென்னை மரத் தொழிலாளர்கள், ஐந்தொழில்களில் ஈடுபட்டுள்ள கைவினைஞர்கள், கட்டிடத் தொழிலாளர்கள், மண்பாண்டத் தொழிலாளர்கள், வெற்றிலைக் கொடிக்கால் விவசாயிகள், கல் உடைக்கும் தொழிலாளர்கள், பாய் முடைதல் கயிறு திரித்தல் முதலிய பல்வேறு சில்லரைத் தொழில்களில் ஈடுபட்டுள்ள கிராமப்புறப்பாட்டாளி மக்கள் இருக்கிறார்கள். இவர்களுடைய தொழில் நிலைமை, வாழ்க்கை நிலைமை, அவர்களுடைய பிரச்னைகள் முதலியவற்றையும் ஆராய வேண்டியதிருக்கிறது.

### 1. கைத்தறி நெசவாளர்கள்!

விவசாயத்திற்கடுத்த படியாக நமது நாட்டில் அதிகமான எண்ணிக்கையில் பாட்டாளி மக்கள் ஈடுபட்டுள்ள தொழில் கைத்தறி நெசவுத் தொழிலாகும். பட்டுநூல், பருத்தி நூல் இரண்டும் நமது நாட்டு நெசவு. உலகப் புகழ் பெற்ற மஸ்லின் துணி இந்தியாவில்தான் நெய்யப்பட்டதாக நமது வரலாறு கூறுகிறது.

பதினேழு, பதினெட்டாம் நூற்றாண்டுகளில் இந்தியாவிற்கு வந்த ஐரோப்பிய வியாபாரிகள் இந்தியாவின் கைத்தறித் துணிகளைத்தான் அதிகமான அளவில் வாங்கிக் கொண்டு போய் அவர்களுடைய நாடுகளில் விற்று லாபம் சம்பாதித்தார்கள்.

இந்தியாவைக் கைப்பற்றிய ஆங்கிலேயர்களும் முதலில் இந்திய கைத்தறித் துணிகளை வாங்கிக் கொண்டு போனவர்களாகத்தான் தங்கள் வாணிபத்தைத் தொடங்கினார்கள்.

பின்னர் பிரிட்டனில் எந்திரத் தொழில் வளர்ந்த போது திசை மாறியது. நவீன எந்திரத் தொழிற்சாலைகள் மூலம் உற்பத்தியில் வேகம் ஏற்பட்ட போதிலும் இந்தியக் கைத்தறி ஜவுளியின் நேர்த்தி மில்த் துணிக்கு இல்லாத தால் கைத்தறித் துணிக்கான மார்க்கட் மேலாகவே இருந்தது. அதற்கான கிராக்கி குறையவில்லை.

கைத்தறித் துணிகளின் போட்டியைத் தடுத்து பிரிட்டிஷ் மில்துணியை மார்க்கட்டில் கொண்டு வந்து விட வேண்டும் என்று பிரிட்டிஷ் வர்த்தகர்களும் முதலாளி களும் தங்கள் அரசியல் அதிகாரத்தைப் பயன்படுத்தி னார்கள். சுதந்திர வர்த்தகம் என்று அவர்கள் கூறிய தெல்லாம் ஏமாற்று வித்தையாகும். நமது நாட்டின் கைத்தறித் துணி உற்பத்தியையும் விற்பனையையும் தடுப் பதற்கு பிரிட்டிஷ் ஆட்சியாளர்கள் எல்லா விதமான முயற்சிகளையும் செய்தார்கள். முதலாவதாக இந்தியக் கைத்தறித் துணிகளுக்கு ஏற்றுமதி, இறக்குமதி, சுங்க வரி களை விதித்தார்கள். அதனால் இந்தியக் கைத்தறி துணி களின் விலை அதிகமாயிற்று. இருப்பினும் ஐரோப்பிய மார்க்கட்டில் அதற்குள்ள கிராக்கி குறையவில்லை. அதன் பின்னர் இந்தியாவிலிருந்து பிரிட்டிஷ் ஆட்சியாளர்கள் கைத்தறித் துணி உற்பத்திக்கு வேறு பல இடையூறுகளைச் செய்தார்கள். பட்டு நூலுக்கும், பஞ்சு நூலுக்கும் உள் நாட்டு வரிகளை விதித்தார்கள். தறிக் கூடங்களுச்கு வரி விதித்தார்கள். கைத்தறி நெசவாளர்களுக்குத் தண்டவரி போட்டார்கள். ஆயினும் இந்தியக் கைத்தறித் துணி உற்பத்தியை பிரிட்டிஷ் ஆட்சியாளர்களால் தடுக்க முடியவில்லை.

அதன் பின்னர் பிரிட்டிஷ் ஆட்சியாளர்கள் பிரிட்டனில்அந்த நாட்டு மக்கள் இந்தியக் கைத்தறி துணிகள் வாங்குவதைத் தடை செய்தார்கள். அந்தத் தடையையும் மீறி பிரிட்டிஷ் மக்கள், இந்தியத் துணியின் நேர்த்தியின் காரணமாய் அதை வாங்கிப் பயன்படுத்தினார்கள். அதையும் தடுப்பதற்கு பிரிட்டிஷ் ஆட்சியாளர்கள் இந்தியத் துணியை வாங்குபவர் களுக்கும், அதை அணிபவர்களுக்கும், அபராதங்கள் விதித் தார்கள். அதையும் மீறி பிரிட்டிஷ் மக்கள் இந்தியத்துணியை வாங்கினார்கள்.

மேலாடைகளாக இந்தியத் துணிகளை அணியத் தடை இருந்ததால் பல பிரிட்டிஷ் வாடிக்கையாளர்கள் இந்தியக் கைத்தறித் துணிகளை உள் ஆடைகளாகப்பயன்படுத்தினர். குறிப்பாக இந்தியப்பருத்தி,பட்டுத்துணியின்நேர்த்தியையும் மிருதுத் தன்மையையும் அதை உபயோகிப்போர் விரும் பினார்கள்.

இதன் பின்னரும் இந்தியக்கைத்தறி துணியின் உற்பத்தியை

யும் விற்பனையையும் தடுக்க முடியாததால் பிரிட்டிஷ் ஆட்சியாளர்கள் மேலும் பல கொடுமைகளைச் செய்யத் தொடங்கினார்கள். இந்தியாவில் பருத்தி சாகுபடியையும் பட்டுநூல் உற்பத்தியையும் தடுப்பதற்கு இந்தியா விலிருந்து பிரிட்டிஷ் கம்பெனி ஆட்சியாளர்கள் சில நடவடிக்கைகளை மேற் கொண்டார்கள்.

பருத்தி சாகுபடி செய்பவர்களுக்கு வரி விதித்தார்கள். பருத்தி சாகுபடி செய்யும் நிலத்திற்கு வரி விதித்தார்கள். பருத்தி சாகுபடி செய்யும் நிலத்தில் உழும் ஏர்க் கலப்பை களுக்கு வரிவிதித்தார்கள். உழவு மாடுகளுக்கும் அதன்கொம்புகளுக்கும் நுகத்தடிக்கும் கூட வரி விதித்தார்கள். பருத்தி யை ஏற்றிச் செல்லும் பார வண்டிகளுக்கு வரி விதித்தார் கள். இந்த வரி மிகவும் கொடுமையான வரியாகவும் இருந்தது. சில சமயங்களில் பார வண்டிகளில் உள்ள பருத்தியின் விலை மதிப்பில் சரிபாதி அளவுக்குக் கூட வரி விதிக்கப்பட்டது.

இத்தனை கொடுமைகளைத் தாங்கியும் கைத்தறித் துணி உற்பத்தி நிற்கவில்லை. கைத்தறி நெசவாளர்களின் பணி நிற்கவில்லை. அதன் பின்னர் பிரிட்டிஷ் ஆட்சியாளர்கள் மற்றொரு கொடுமையைச் செய்தார்கள். மஸ்லின் போன்ற மிக நேர்த்தியான துணிகளை நெய்யக் கூடிய நெசவாளர் களின் கட்டை விரல்களை வெட்டினார்கள். இவ்வாறு பல கொடுமைகளைச் செய்து கைத்தறித் துணி உற்பத்தியைத் தடுக்க முடியா விட்டாலும் அதன் உற்பத்தி குறைந்தது. பிரிட்டனில் ஜவுளி ஆலைத்தொழில்கள் மேலும் அபிவிருத்தி அடைந்தன. அந்த ஜவுளி ஆலைகளுக்குத் தேவையான பருத்தியை இந்தியாவில் அதிகமான அளவில் உற்பத்தி செய்வதற்கும் பிரிட்டிஷ் ஆட்சியாளர்கள் தூண்டினார்கள். அதனால் இந்தியாவில் பருத்தி உற்பத்தியில் ஒரு மாற்றம் ஏற்பட்டது. பழைய இந்தியக்கைத்தறித்துணிகளுக்குஅவசிய மான மெல்லிய ரக உற்பத்திக்குத்தேவையான பருத்தி உற் பத்தி மறைந்து பிரிட்டிஷ் ஆலைகளுக்குத் தேவையான புதிய மோட்டா ரக பருத்தி உற்பத்தி அதிகரித்தது.

அதன் பின்னர் 19—ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் இந்தியாவில் பல பருத்தி அரவை ஆலைகளும் நூல் உற் பத்தி மில்களும் தோன்றி வளர்ந்தன. அத்துடன் துணி உற் பத்தி ஆலைகளும் இந்தியாவில் பல பகுதிகளிலும் வளர்ச்சி அடைந்தன.

இவ்வாறு பிரிட்டிஷ் துணி ஆலைத் தொழில்களில் மூலமும் இந்தியாவின் நவீன துணி உற்பத்தி ஆலைகளின் மூலமும் ஏற்பட்ட போட்டியினால் கைத்தறித் தொழில் பெரிய அளவில் பாதிக்கப்பட்டபோதிலும் இந்தியாவில் கைத்தறித் தொழில் அழியவில்லை. இந்திய நாட்டில் விவசாயத்திற்கு அடுத்த படியாக, அதிகப்படியாக மக்கள் ஈடுபட்டுள்ள

தொழிலாகக் கைத்தறித் தொழில் தொடர்ந்து நீடித்து வருகிறது. இருப்பினும் இந்த நூற்றாண்டில் கைத்தறி நெசவாளர்களும் கைத்தறித் தொழிலும் மிகவும் கடுமையாக பாதிக்கப்பட்டதால் இந்தியதேசிய இயக்கத்தில் கதர்த்துணி உற்பத்தியையும்உபயோகத்தையும் ஊக்கப்படுத்தினார்கள். இந்திய ஜவுளித் தொழிலை பாதுகாக்கும் நோக்கத்துடன் அந்நிய துணி பகிஷ்காரம் போன்ற கிளர்ச்சிகளை நடத்தினார்கள். ஆயினும் வேகமான ஆலைத்தொழில் வளர்ச்சியின் முன் கைத்தறி நெசவுத் தொழில் குறைந்து கொண்டே வந்தது. 1947 ஆம் ஆண்டில் இந்திய நாடு விடுதலை பெற்ற பின்னர் நமது ஆட்சியாளர்கள் மூலம் கைத்தறித் தொழிலுக்குப் பாதுகாப்புக் கிடைக்குமென்று நெசவாளர்கள் எதிர்பார்த்தார்கள். ஆயினும் ஆலைத் தொழிலுக்கு இருந்த ஆதரவுச் சட்டங்கள் கைத்தறித் தொழிலுக்கு இல்லாமல் இருந்தது.

1950 ஆம் ஆண்டின் தொடக்கத்தில் கைத்தறி நெசவுத் தொழிலுக்கு மிகப் பெரிய நெருக்கடி ஏற்பட்டது. லட்சக் கணக்கான நெசவாளர்கள் வேலை இன்றி நடுத்தெருவில் அலைந்தார்கள். வேலை இருந்தவர்களுக்கும் நாள் முழுவதும் 12மணி நேரத்திற்கு மேல் வேலை செய்தாலும் ஒரு ரூபாய் கூலி கிடைப்பதும் கஷ்டமாக இருந்தது. தமிழகத்தில் இருந்த நெசவாளர்கள் இன்னும் அதிகமான அளவில் கஷ்டங்களுக்கு ஆளானார்கள். நெசவாளர்களுக்குள் பட்டினி சாவும் ஏற்படத் தொடங்கியது.

இந்த நேரத்தில், 1952 ஆம் ஆண்டில் ஸ்ரீவில்லிபுத்தூர் தாலுகாவிலிருந்து இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் வழிகாட்டுதலின் கீழ் 500க்கும் அதிகமான நெசவாளர்கள் பட்டினிப் பட்டாளமாக சென்னையை நோக்கிப் பாதயாத்திரையாக நடந்து வந்தார்கள்.

இவ்வாறு நடந்து வந்த நெசவாளர் பட்டினிப் பட்டாளப் போராட்டத்திற்கு, அவர்கள் நடந்து வந்த வழி நெடுகிலும் மக்கள் வரவேற்று ஆதரவு கொடுத்தார்கள். அவர்கள் மதுரை, இராமநாதபுரம், திருச்சி, தஞ்சாவூர், தென் ஆற்காடு, செங்கல்பட்டு மாவட்டங்களைக் கடந்து வந்தார்கள்.

பல்வேறு பகுதி மக்களும், பல்வேறு அரசியல் கட்சியினரும் நெசவாளர் பாத யாத்திரைப் போராட்டத்திற்கு ஆதரவு கொடுத்தார்கள். இந்தப் போராட்டம் தமிழ்நாடு நெசவுத் தொழிலாளர் பட்டினிப் பட்டாளப் போராட்டம் என்று அழைக்கப்பட்டது. அன்று வலுவாக இருந்த தமிழ்நாடு கைத்தறி நெசவாளர் சம்மேளனம் இந்தப் போராட்டத்திற்குத் தலைமை தாங்கியது.

நெசவாளர் பட்டினிப் பட்டாளம், சென்னை வந்து சேர்ந்த போது சென்னையிலும் எல்லா வட்டங்களிலும் அவர்களுக்கு வரவேற்பும் ஆதரவும் கொடுக்கப் பட்டது. முடிவாக, அவர்கள் மாநில அரசின் தலைமைச் செயலகத் திற்குச் சென்று மறியல் செய்தார்கள்.

அப்போது சென்னை மாகாண அரசின் முதலமைச்சராக சக்கரவர்த்தி ராஜகோபாலாச்சாரியார் இருந்தார். மறியல் செய்த நெசவாளர் பிரதிநிதிகள் முதலமைச்சரைப் பார்த்தார்கள். தங்கள் கோரிக்கை சாசனத்தைக் கொடுத் தார்கள். அவர்களுடைய கோரிக்கைகளில் பல அம்சங்கள் ஏற்றுக் கொள்ளப்பட்டு, உடனடியாக அன்றைய ஸ்ரீவில்லி புத்தூர் தாலுகா முழுவதிலும் உள்ள நெசவாளர்கள் குடியிருக்கும்பகுதிகளிலும் ஸ்ரீவில்லிபுத்தூர், ராஜபாளையம், சத்திரப்பட்டி, ராமச்சந்திரபுரம் சுந்தரபாண்டியம் முதலிய இடங்களிலும் பின்னர் அருப்புக் கோட்டையிலும் அரசின் சார்பில் கஞ்சித் தொட்டிகள் திறக்கப்பட்டு இலவசமான கஞ்சி உணவு பட்டினி கிடக்கும் நெசவாளர்களுக்கு வழங்கப்பட்டது.

நெசவாளர்களுக்குக் கூட்டுறவு சொஸைட்டிகள் மூலம் உதவி செய்ய செஸ் திட்டம் கொண்டு வரப்பட்டது. அதன் மூலம் கூட்டுறவு சொஸைட்டி ரிபேட் உதவி கொடுக்கப்பட்டது. நெசவாளர் பெரும்பாலும் கூட்டுறவு சொஸைட்டிகளின் கீழ் கொண்டு வரப்பட்டார்கள். அதன் பின்னர், நெசவாளர்களுக்குச்சற்று நிவாரணம் கிடைத்தது.

இந்த "தமிழ் நாடு கைத்தறி நெசவுத் தொழிலாளர் பட்டினிப் பட்டாளப் போராட்டம்" உலக புகழ் பெற்று விட்டது. தமிழ் நாடு கைத்தறி நெசவுத் தொழிலாளர் சம் மேளனத்தின் மூலம், ஏ.ஐ.டி.யு.சி மாநாட்டிலும் மாநாட்டு அறிக்கைகளிலும், உலக தொழிற்சங்க சம்மேளனத்தின் அறிக்கையிலும் இந்தப் போராட்ட விவரங்களும் நிகழ்ச்சி களும் குறிப்பிடப்பட்டு, அது இந்தியாவின் தொழிலாளர் போராட்ட வரலாற்றில் இடம் பெற்றுவிட்டது.

தமிழகத்தில் இப்போது பட்டு நெசவில், மிகவும் நேர்த் தியான பட்டுத்துணிகள் புடவை, வேஷ்டி, துண்டு, அங்க வஸ்திரம் ஆகியவை ஜரிகை பார்டருடன் நெய்யப்படு கிறது. சேலம் பவானி போன்ற இடங்களில் ஜமக்காளம் நெய்யப்படுகிறது. கரூர், ஈரோடு, சென்னிமலை சேலம் முதலிய பகுதிகளில் பெட்ஷீட்டுகள் துப்பட்டி போர்வை முதலிய ரகங்கள் நெய்யப்படுகின்றன. சென்னை, செங்கல்பட்டு, தென்ஆற்காடு, வடஆற்காடு முதலிய இடங்களில் கைலிகள், லுங்கிகள் நெய்யப்படுகின்றன. மதுரை, இராமநாதபுரம், காமராஜர், நெல்லை மாவட்டங்

களில் வேஷ்டி, புடவை, துண்டுகள் டவல்கள் முதலிய ரகங்கள் நெய்யப்படுகின்றன. இராஜபாளையம் சத்திரப் பட்டி பகுதியில் ஆஸ்பத்திரித்துணிகள் நெய்யப்படுகின்றன. இவைகளுக் கெல்லாம் இந்தியா முழுவதிலும், அண்டை நாடுகளிலும் நல்ல மார்க்கட் இருக்கின்றன. ஏற்றுமதி செய்யப்படுகின்றன.

கைத்தறியின் பல்வேறு ரகங்களுக்கு விசைத்தறிகளும் வந்துள்ளன. கைத்தறியும் தொடருகிறது. கைத்தறி விசைத்தறித் தொழில்களில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்கள் நகரப்புறங்களிலும், கிராமப்புறங்களிலும் குடியிருக்கிறார் கள். இவர்கள் பெரும்பாலும் உதிரிப் பாட்டாளிகளாக இருக்கிறார்கள். இவர்களுக்குத் தொழில் பாதுகாப்பு, வேலைப்பாதுகாப்பு கொடுப்பது என்பது வெறும் தொழில் மற்றும் தொழிலாளர் பிரச்சனை மட்டுமல்ல, அது ஒரு சமுதாயப் பிரச்சனையாகும். நெசவுத் தொழிலாளர்களின் பிரச்சனை என்பதும் இந்தியா முழுவதிலும் உள்ள பிரச்சனையாகும்.

நாடு முழுவதிலும் உள்ள கைத்தறி நெசவாளர்களுக்கு வாழ்வு கொடுப்பது என்பது தொடர்ச்சியாக உள்ள பிரச்சனையாகும். நெசவாளர்கள் அனைவரையும், கூட்டுறவு அமைப்புகளின் கீழ் கொண்டுவந்து அவர்களுக்கு நியாயமான விலையில் நூல் சாயம் முதலிய பொருள் கள் கிடைப்பதற்கும், உற்பத்திக் கருவிகள் கிடைப்பதற் கும், படிப்படியாக உற்பத்திக் கருவிகளில் அபிவிருத்தி கொண்டு வருவதற்கும் கைத்தறித் துணிகளை விற்பனை செய்வதற்கும், அதற்குரிய திட்டங்களை வகுத்து நிறை வேற்றுவதில் இன்று முதலாளித்துவ முறையில் பல நெருக்கடிகள் ஏற்பட்டுள்ளன. மீண்டும் நெசவுத் தொழில் ஒரு கடுமையான நெருக்கடிக்கு உள்ளாகியிருக்கிறது.

நூல் விலை ஏறிக்கொண்டே போகிறது. இதர சாயப் பொருள்களின் விலைகளும் ஏறிக் கொண்டே போகிறது. மின்சாரக் கட்டணத்தின் உயர்வு, பஸ், ரயில் கட்டணங் களின் உயர்வு, சரக்குக் கட்டணங்களின் உயர்வு, லாரி கட்டணங்களின் உயர்வு முதலியவைகளும் கைத்தறித் துணியின் விலையும் மேற்குறிப்பிட்ட காரணங்களால் உயருகிறது. துணி விலை உயர்வாலும், மக்களிடம் உள்ள வாங்கும் சக்தியின் குறைவாலும், கைத்தறித் துணியின் விற்பனை பாதிக்கப்பட்டு, துணித் தேக்கம் அதிகரித்து வருகிறது.

அத்துடன் நெசவாளர் கூட்டுறவு சொஸைட்டிகளில் அரசாங்கத்தின் நிர்வாகத் தொடர்பு காரணமாக ஏற் பட்டுள்ளலஞ்சம் ஊழல்மோசடிகள் அதிகரித்துக் கைத்தறித் தொழிலுக்கு கடுமையான பாதிப்புகள் ஏற்பட்டுள்ளன.

கைத்தறித் தொழிலுக்கும் தொழிலாளர்களுக்கும் ஏற்பட்டுள்ள கஷ்டங்களுக்குத் தீர்வு காண்பதற்குத் தற்காலிகமான சில முயற்சிகள் எடுக்கலாம். ஆனால் முதலாளித்துவ சுரண்டல் பாதையில் செல்லும் இன்றைய இந்திய அரசால் இன்றைய நெருக்கடிக்குத் தீர்வு காண முடியுமா?

நாற்பதாண்டுக் காலஅனுபவம், இந்த அரசால், அதன் கொள்கைகளால் முடியாது என்றே பதில் கூற வேண்டியதிருக்கிறது.

முதலாவதாக, நூல் விலை ஏறிக்கொண்டேயிருக்கிறது. அதைத் தடுப்பதற்கு, அல்லது அத்தனை பொருள்களின் விலையுடனும் இணைத்து விலைவாசியை ஸ்திரப் படுத்துவதற்கு இந்திய அரசாங்கத்தின் முதலாளித்துவக் கொள்கையால் முடியவில்லை.

இரண்டாவதாக, கைத்தறித் தொழில் உற்பத்தி விற்பனை முறையில் இன்று கூட்டுறவுத் துறையும் தனியார் துறையும் உள்ளது.

கைத்தறித்துறையில் கூட்டுறவு அமைப்பை விரிவுபடுத்துவது, பாதுகாப்பு என்னும் கொள்கையை இந்திய அரசு முதல் மூன்று ஐந்தாண்டு திட்டக்காலங்களில் அறிவித்தது. ஆனால் இப்போது அந்தக் கொள்கையில் எந்த விதமான உயிரும் இல்லை. துடிப்பும் இல்லை. அந்தக் கொள்கை கோமாவில் கிடக்கிறது.

இன்று பல மாநிலங்களில் குறிப்பாக தமிழ்நாட்டில் நெசவாளர் கூட்டுறவு சொஸைட்டிகள் பெரும்பாலும் நெருக்கடியில் தான் செயல்படுகின்றன. அத்துடன் தமிழ் நாட்டிலும் இன்னும் சில மாநிலங்களிலும் கூட்டுறவு சொஸைட்டிகளில் கொஞ்ச நஞ்சம் இருந்த ஜனநாயகமும் படுகொலை செய்யப்பட்டிருக்கிறது.

தமிழகத்தில் கூட்டுறவு அமைப்புகளில் பலஆண்டுகளாகத் தேர்தல்களே கிடையாது—நடைபெறவில்லை. சில சொஸைட்டிகளில் ஆளும் கட்சி மூலம் நியமன போர்டுகள் செயல்படுகின்றன. சில சொஸைட்டிகள் தனி அதிகாரிகளின் நிர்வாகத்தில் செயல்படுகின்றன. இவைகளில் கணக்கு வழக்கில்லாத பல வகை ஊழல்கள் மிகுந்தும் குவிந்துமிருக்கின்றன. தட்டிக் கேட்பதற்கு யாருமில்லை. தம்பி சண்டப் பிரசண்டனாகி விட்ட நிலைதான். கூட்டுறவு சொஸைட்டிகளுக்கு தேர்தல் நடத்த வேண்டுமென்று நெசவாளர்கள் தொடர்ந்து குரல் கொடுத்து வருகிறார்கள். ஆயினும் அரசு அசைந்த பாடில்லை. நடந்துள்ள தேர்தல்களிலும் ஏகப்பட்ட ஊழல்கள் ஏற்பட்டுள்ளதாகப் புகார்கள் எழுந்துள்ளன. மீண்டும் அவை கலைக்கப்பட்டன.

மூன்றாவதாக, கூட்டுறவு சொஸைட்டிகளிலும் சரி, தனி யார் வியாபாரிகளிடமும் சரி, துணி தேக்கம் ஏற்பட்டுள்ளது. துணி தேக்கம் என்பது தொடர்ச்சியான பிரச்னையாக உள்ளது.

கைத்தறித் துணி தேக்கத்திற்கு தீர்வுகாண கைத்தறித் துணியின் விற்பனைக்கு மாநில அளவில் கைத்தறித் துணி விற்பனை நிலையங்களை அரசு உருவாக்கியது. ஆனால் அந்த அமைப்பிலும் இப்போது பல ஊழல்களும் முறை கேடு களும் சூழ்ந்து எதிர்விளைவுகள் ஏற்படத் தொடங்கியுள்ளன.

கூட்டுறவு உற்பத்தி சொஸைட்டிகள், மாநில விற்பனை அமைப்பிற்கு துணிகளைக் கொடுக்கின்றன. அந்தத் துணி களுக்குரிய பணம் காலத்தில் சொஸைட்டிகளுக்குக் கிடைப் பதில்லை, இந்த வகையில் பல கோடிக் கணக்கான ரூபாய் பாக்கி விழுந்து ஆரம்ப சொஸைட்டிகளுக்கு வரவு செலவுக் குப்பணம் இல்லாமல் போய் விடுகிறது.

ஆரம்ப சொஸைட்டிகளுக்கு வேண்டிய நிதி வசதி மத்திய கூட்டுறவு வங்கியின் மூலம் கிடைக்கிறது. அதற்கான வட்டி விகிதம் அதிகம்.

ஆரம்ப கைத்தறி கூட்டுறவு சொஸைட்டிகள் அதிக வட்டி யில் கூட்டுறவு வங்கியில் கடன் வாங்கி அதிக விலையில் நூல் வாங்கி குறைந்த கூலியில் நெசவாளர்களை வேலை செய்ய வைத்து உற்பத்தி செய்த துணியையெல்லாம் மாநில விற் பனை நிலையத்திற்கு அனுப்பி, அதற்குரிய பணம் எந்த வட்டியும் இல்லாமல் கோடிக்கணக்கான ரூபாய் ஆண்டுக் கணக்காய் நின்று போய், இன்றைய கூட்டுறவு கைத்தறித் தொழில் மீண்டும் தீராத நெருக்கடியில் வந்து நிற்கிறது. கைத்தறி நெசவுத் தொழிலில் ஈடுபட்டுள்ள பல லட்சக் கணக்கான மக்களுடைய பிரச்சனை ஒரு சமுதாயப் பிரச்சனையாகும். எனவே அதை ஒரு பழங்காலத் தொழில் பிரச்சனையாக மட்டும் பார்க்கக் கூடாது.

காலத்தின் வளர்ச்சிக்கேற்ப சில மாற்றங்களுடன் கைத்தறி நெசவுத் தொழிலாளர்களின் வேலைப்பாதுகாப்பு, தொழில் பாதுகாப்பு, சமூகப் பாதுகாப்புக்கான ஏற்பாடுகளைச் செய்ய வேண்டியது அவசியமாகும்.

குறைந்த விலையில் அல்லது நியாயமான விலையில் நூல் கிடைக்கவும், இதர சாயப் பொருள்கள் கிடைக்கவும், குறைந்த வட்டியில் அல்லது பெயரளவு வட்டியில் கூட்டுறவு கைத்தறி நெசவாளர் சொஸைட்டிகளுக்கு கடன் கிடைக்க வும், கைத்தறி நெசவாளர்களுக்குக் குறைந்த பட்சக் கூலிக்கு உத்தரவாதம் கிடைக்கவும், நெசவுத் தொழிலாளர்களுக்கும்

இதர கிராமப் புற மக்களுக்கு அத்தியாவசியப் பண்டங்கள் குறைந்த விலையில் பொது விநியோகத்தின் மூலம் கிடைக்கவும் கைத்தறி நெசவாளர்கள் தனியார் மூலமும் சரி, கூட்டுறவு சொஸைட்டிகள் மூலமும் சரி, உற்பத்தியாகும் துணியை அரசு முழுமையாகக் கொள் முதல் செய்து, விற்பனை செய்ய முறையான ஏற்பாடு செய்யவேண்டும். கைத்தறி நெசவாளர்களுக்கு விபத்து ஏற்பட்டால், அங்கக் குறைவுகள் ஏற்பட்டால் வியாதிகள் வந்தால், வயது அதிகமானால் அவர்களுக்கு, முழுமையான சமூகப் பாதுகாப்பு கிடைக்கவும் வழி வகை செய்ய வேண்டும்.

உணவு, துணி, வேலை, வீட்டு வசதி, கல்வி இதர அவசியமானவை கிடைக்கவும், அதற்கு உத்தரவாதம் அளிக்கக் கூடிய ஒரு புதிய ஆட்சி அமைப்பு, நிர்வாக அமைப்பு ஏற்படவும், தொழில் துறையில் படிப்படியாக நவீன உற்பத்தி முறைகளைக் கொண்டு வரவும், கைத்தறித் தொழிலில் உள்ள உபரித்தொழிலாளர்களுக்கு மாற்று வேலை கிடைக்கவும், அதற்கான வளர்ச்சிப் பாதையை செயல்படுத்தக் கூடிய சோஷலிஸ திசை வழியிலான மாற்று ஆட்சி அமைப்பு ஏற்படவும், கைத்தறி நெசவுத் தொழிலாளர்களை சங்கத்தில், வலுவான அமைப்பு நிலைகளில் ஒன்று திரட்டவும், அரசியல் ரீதியில் சமுதாய விழிப்புணர்வை உயர்த்தி அவர்கள் தங்களுக்கும் நாட்டிற்கும் ஆற்ற வேண்டிய கடமைகளை நிறை வேற்றவும், முயற்சிகள் மேற்கொள்ள வேண்டியது மிகவும் அவசியமானதாகும்.

## 2 மீனவர்கள்

நீண்ட கடற்கரையைக் கொண்டுள்ள நாடுகளில் ஒன்று பாரததேசம். தமிழகத்தில் ஆயிரம் கிலோ மீட்டருக்கு மேல் கடற்கரை இருக்கிறது.

மேற்கு வங்காளம், ஒரியா, ஆந்திரப்பிரதேசம், தமிழ் நாடு, கேரளம், பாண்டிச்சேரி, கர்நாடகம், கோவா, மகாராஷ்டிரம், குஜராத் முதலிய மாநிலங்கள் நீண்ட கடற்கரைகளைக் கொண்டவை.

கடற்கரை தவிர பெரிய ஆறுகளும், கழிமுகங்களும். அணைக்கட்டுகள் ஏரி, குளம், கண்மாய்கள் போன்ற உள் நாட்டு நீர் நிலைகள் முதலியனவும் மீன்வளர்ச்சிக்கான இடங்களாக உள்ளன.

மீனவர்கள் பழமையான நீண்ட வரலாற்றுச் சிறப்புக் கொண்ட பெருங்குடி மக்களாவர். மீன்பிடிக்கும் தொழில் உலகின் மிகத் தொன்மையான தொழில்களில் ஒன்றாகும்.

தமிழ் இலக்கியத்தில் நிலம் நான்கு வகையாகப்பிரிக்கப் பட்டிருந்தது. குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல் என்னும் நால்வகை நிலப்பண்புகளில் நெய்தல் நிலம் கடலும் கடலைச் சார்ந்த நிலமாகச் சிறப்பித்துக் கூறப்படுகிறது. நெய்தல் நில மக்கள் மீனவர்களாவர் தமிழகத்தில், கன்னியாகுமரி, நெல்லை சிதம்பரனார், இராமநாதபுரம், புதுக்கோட்டை, தஞ்சாவூர், தென் ஆற்காடு, செங்கல் பட்டு, சென்னை மாவட்டங்களும் புதுச்சேரியும் கடற் கரை உள்ள மாவட்டங்களாகும்.

இந்தியாவை மூன்று பக்கங்க்ளிலும் சூழ்ந்துள்ள கடல்கள் வெப்பமண்டலத்தில் உள்ளகடல்களாகும். ஆண்டுமுழுவதும் மீன் பிடிப்பதற்கு பருவம் கொடுக்கும் வசதிகள், வாய்ப்பு கள் உள்ள கடல்களாகும். இதன் மூலம் நமக்கு மிகவும் சிறந்த கடல் வளம் அமைந்து இருக்கிறது.

நமது நாட்டு மீனவர்கள் பெரும்பாலும் கடல் ஓர கிராமங்களில் வசிக்கிறார்கள். அவர்கள் மிகப் பெரும் பாலும் பழைய முறையிலேயே தொழில் நடத்துகிறார் கள். அதனால் அவர்களுடைய வருவாய் குறைவாகவே உள்ளது. வறுமையிலேயே அவர்கள் வாழ்க்கை நடத்து கிறார்கள்.

அண்மைக்காலங்களில் பழைய கட்டுமரங்கள், தோணி கள், படகுகள், வலைகள், ஒரு பக்கம் நீடிக்க, சில முக்கிய இடங்களில், விசைப்படகுகளும் நடைமுறைப் பழக்கத்திற்கு வந்திருக்கின்றன. இதில் நாட்டுப்படகு, விசைப்படகுத் தகராறுகளும் ஏற்பட்டுள்ளன.

ஐரோப்பிய நாடுகளிலும் ஜப்பான் முதலிய கிழக்கத்திய நாடுகளிலும், சீனா முதலிய சோஷலிஸ நாடுகளிலும் பெரிய அளவில் எந்திர மயமாக்கப்பட்டு மீன் பிடிக்கும் தொழில் அபிவிருத்தி அடைந்து, அந்த நாடுகளுக்கு இத் தொழில் நல்ல வருவாயைக் கொடுக்கிறது.

மீன்பிடித் தொழிலை நவீனப்படுத்தவும் அபிவிருத்தி செய்யவும் முதலில் அதற்கான அடிப்படைக் கட்டுமான சாதனங்களை அபிவிருத்தி செய்ய வேண்டும். கடற்கரை நெடுகிலும் முக்கியமான கேந்திரங்களில் மீன்பிடித் துறை முகங்கள் நவீன முறையில் கட்டப்பட வேண்டும். உதாரண மாக எண்ணூர், சென்னை சதுரங்க பட்டின கடற்கரைப் பகுதி, மரக்காணம், புதுச்சேரி, கடலூர், தரங்கம்பாடி, நாகபட்டினம், கோடிக்கரை, மீமிசல், தொண்டி, மண்ட பம், ராமேஸ்வரம், கீழக்கரை, மாரியூர், தூத்துக்குடி, இடிந்தகரை, குளச்சல் இன்னும் இது போன்ற கடற்கரைப் பட்டினப்பாக்கங்களில் வாய்ப்புள்ள இடங்களில் ஆய்வு

செய்து மீன்பிடித் துறைமுகங்கள் கட்டப்பட வேண்டும் நவீன படகுகள், சிறு கப்பல்கள், பெரிய ஆழ்கடல் மீன் பிடிக்கும் கப்பல்கள் ஆகியவற்றின் மூலம் மீன் பிடித்தலை அதிகப்படுத்த வேண்டும். மீன் பதனிடும் தொழிற் சாலைகள், ஐஸ் உற்பத்தி, டப்பாக்களில் மீன் அடைக்கும் தொழிற் சாலைகள் முதலியன மூலம் அதிகமான வேலை வாய்ப்புகள் பெருகும்; மீன் உற்பத்தி பெருகும். மக்களுக்கு மிகவும்அவசிய மான மீன் உணவும் அதிகமாகக் கிடைக்கும்.

மீன் பிடிக்கும் தொழிலில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு வரு வாய் அதிகரிக்கும். அத்தகைய வளர்ச்சி மூலம் தான் மீன வர்களின் வாழ்வில் மறுமலர்ச்சி ஏற்படும்.

இன்று பல மீனவர் குடியிருப்புப் பகுதிகளிலும் மீனவர் கூட் டுறவு அமைப்புகள் இருக்கின்றன. அந்தக் கூட்டுறவு அமைப்புகளை படிப்படியாக அபிவிருத்திசெய்து, தொழிலை படிப்படியாக நவீனப்படுத்தி வளர்க்கவும், அரசுத்துறையில் மீன்பிடித்துறைமுகங்களை நிர்வகிக்கவும், விற்பனையை அரசு எடுத்துக்கொள்ளவும் திட்டமிடப்பட வேண்டும்.

மீனவர்களுக்குள்ள மிகமுக்கியமான பிரச்சனைகளில் ஒன்று சமூகப்பாதுகாப்புப் பிரச்சனையாகும். விபத்துக்களி ருந்து பாதுகாப்பு, நோய்வாய்ப்பட்டால்—வயதாகி விட்டால் பாதுகாப்பு, தொழில் கம்மியாகி வேலை குறைந்து விட்டால் அவர்களுக்கு ஊதிய உத்தரவாதம் போன்ற பிரச்சனைகள் மிகமுக்கியமானதாக உள்ளன.

மீனவர்கள் இப்போது பெரும்பாலும் சாதிமத அமைப்புக் களின், சமூகக்கட்டுப்பாடுகளின் கீழ் உள்ளார்கள். அவர் களை சாதி மத வேறுபாடின்றி, கூட்டுறவு அமைப்புகளில் கொண்டு வந்து அவர்களுடைய பொது வாழ்க்கையில் ஜனநாயகத்தன்மை வளர்க்கப்பட வேண்டும்.

உள்நாட்டு நீர் நிலைகளில் மீன் வளர்த்தல், கழிமுகங் களில் இறால் வளர்த்தல் முதலியவற்றில் சிறப்புக்கவனம் செலுத்த வேண்டும்.

அத்துடன் மீன்பிடித்தல், பதனிடுதல், விற்பனை செய்தல் சம்பந்தப்பட்ட தொழிலில் ஈடுபட்டுள்ள தொழிலாளர் களை தொழிற்சங்க அடிப்படையிலும் திரட்டி அவர் களுக்கிடையில் உள்ள உற்பத்தி உறவுகளை சீரமைக்க வேண்டும். அவர்களுடைய வாழ்க்கையில் ஜனநாயக மறு மலர்ச்சி ஏற்படுத்த வேண்டும்.

**உப்பளத் தொழில்:**

கடலைச் சார்ந்த மற்றொரு முக்கிய தொழில் உப்பு உற்பத்தித் தொழிலாகும்.

உப்பளத் தொழில் பெரும்பாலும் கடலோர கிராமங்களில் தான் அமைந்துள்ளது. நமது நாட்டில் ஆண்டு முழுதும் உள்ள சூரிய ஒளி, கடல் நீரிலிருந்து உப்பு எடுக்கும் உப்பளத் தொழிலுக்கு மிகவும் உகந்ததாகும்.

இந்த உப்பளத் தொழிலுக்கும் நமது நாட்டில் மிகப் பெரிய வாய்ப்புகள் உள்ளன. தமிழ்நாடு, ஆந்திரா, குஜராத் போன்ற மாநிலங்களில் உப்பு உற்பத்தி அதிக மாக உள்ளது.

உப்பளங்களில் உப்பு எடுத்த பின்னர், எஞ்சியுள்ள பொருள் களில் பல ரசாயன மூலப் பொருள்கள் உள்ளன. அவை களைப்பயன்படுத்தி பல ரசாயனத் தொழில்கள் வளர்ப் பதற்கும் வாய்ப்புகள் உள்ளன.

இந்தப் புதிய தொழில்கள் எல்லாம் தொழில் துறையில் நவீன விஞ்ஞானத் தொழில் நுட்ப முறைகள் வரும்போது ஏற்படும் உபரித் தொழிலாளர்களுக்கு புதிய வேலை வாய்ப்புகளைக் கொடுக்கும்.

இந்த உப்பளங்களில் தமிழ் நாட்டில் குறிப்பாக எண்ணூர், மரக்காணம், வேதாரண்யம், மாரியூர், தூத்துக்குடி முதலிய இடங்களில் உள்ள உப்பளங்களில் பல்லாயிரக்கணக்கான தொழிலாளர்கள் வேலை செய் கிறார்கள். அவர்களுக்கு வேலை உத்தரவாதம், குறைந்த பட்சக்கூலி சமூகப்பாதுகாப்பு முதலிய வசதிகளைச் செய்வதும் அவசியமாகும். உப்பளத்தொழிலாளர்கள் அமைப்பு ரீதியில் ஒன்றுபடவேண்டும்.

**3. தென்னை பனைமரத்தொழிலாளர்கள்,**

நில உற்பத்தியோடு இணைந்தது தென்னை, பனை மரங் களைக் கொண்ட தோப்புகள், தென்னை, பனைமரங்கள் இந்தியாவில், குறிப்பாக தென் மாநிலங்களில் அதிகம். இந்த மரங்கள் நமது நாட்டில் பல லட்சக்கணக்கில் இருக் கின்றன.

தென்னை மரத்தின் பலன், தேங்காய். அதுமிகவும் உயர்ந்த எண்ணெய்வித்து. தேங்காய் எண்ணெய் சமையலுக்குப்பயன் படுகிறது. சிலவகை உணவுப் பொருள்கள் தயாரிப்பதற்கு நெய்க்கு ஈடாக உள்ளது, தேங்காய் எண்ணெய்.

இந்த எண்ணெய் சோப்பு செய்வதற்குப் பயன்படும் மூலப் பொருள்களில் ஒன்று; தேங்காய் எண்ணெய், காயங்களை யும், புண்களையும் ஆற்றும் மருந்து சக்தி படைத்ததாகும். தேங்காய் எண்ணெய் எந்திரப் பாதுகாப்பிற்கும் உபயோக மானதாகும்.

தேங்காயே நேரடியாக சமையலுக்குப் பயன்படுகிறது. தேங்காய் இல்லாத தமிழ்நாட்டுச் சமையல் இல்லை. தேங்காய்த் துவையலிலிருந்து தேங்காய்ச்சாதம் வரையிலும் காய்கறிகளின் சமையலிலும் தேங்காயின் பயன்பாடு அதிகம். ருசிக்குத் தேங்காய், அத்துடன் சத்துக்கும் தேங்காய்.

தேங்காய் மட்டையிலிருந்து கிடைக்கும். நார் மிகவும் பயனுள்ளது; கயிறுகள், கயிறுகள் மூலம் எண்ணற்ற பல வீட்டுப் பொருள்கள், பிரஷ்கள் முதலியன செய்வதற்கும் அது தேவை. தேங்காய் மட்டைய மூலப் பொருளாகக் கொண்டு கேரளத்திலும் தமிழகத்திலும் ஏராளமான கயிற்றுத் தொழிற் சாலைகளும் இருக்கின்றன.

தேங்காயின் ஓடு கொட்டாங்கச்சி அல்லது சிரட்டை என்று கூறப்படும்; அது உறுதியான பொருள்; பல வகைப் பயன்பாடு உள்ளது. அதை இன்னும் நாம் சரியாகப் பயன்படுத்தவில்லல. இப்போது நமது நாட்டில் அதை அகப்பைக்குப் பயன்படுத்துகிறோம். அதை டெலிபோன் ரிசீவர் போன்ற சாதனங்களுக்குப் பயன்படுத்தலாம் என்று இப்போது கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது.

இன்னும் பல் வேறு 'கப்பு'கள் செய்வதற்கும் சிரட்டை (கொட்டாங்கச்சி) யைப்பயன்படுத்தலாம். தென்னையின் இளநீர் உடலின் வெப்ப நிலையை சமப்படுத்தவும், தாகத்தைத் தணிக்கவும் வெட்டை மேக நோய் முதலிய நோய்களைத் தீர்ப்பதற்கும் மருந்தாகவும் பயன்படுகிறது.

தென்னை ஓலைகள் வீட்டுக் கூரைகளை மேய்வதற்கு, பந்தல், கொட்டகை முதலியவைகளுக்கு மிகவும் பயனுள்ள சாதனமாகும். இன்றைய இந்தியாவில் உள்ள வீடுகளில் பெரும் பகுதி வீடுகள் கூரை வீடுகள் அந்தக் கூரையில் பெரும்பகுதி தென்னை ஓலை, பனை ஓலைகளைக் கொண்டதாகும்.

தென்னையின் அடிமட்டைகள் எரிபொருளாக விறகாகப் பயன்படுகிறது.

தென்னம் பாளையிலிருந்து கள் இறக்கப்படுகிறது. கள் என்பது ஒரு வகை மது பானம். இந்திய மொழிகளில் தேனுக்கும் மது என்று பொருள் உண்டு. கள் தென்னை மரப்பாளையிலிருந்தும் பனைமரப் பாளையிலிருந்தும் எடுக்கப்படுகிறது. இரண்டிற்கும் கள் என்றே கூறப்படுகிறது. கள் என்பது சாதாரண ஏழை எளிய மக்களுடைய ஓரளவு மலிவான மதுபானமாக இருக்கிறது. கள்ளில் இதர

போதைப் பொருள்களைச் சேர்த்து வேகப்படுத்தாமல் நிதானமாக உபயோகித்தால் உடலுக்கும் நல்லது என்று கூறுகிறார்கள்.

பனைமரமும் பல வகையில் பலன் உள்ளது. அதன் மட்டைகள் நார் எடுக்க உதவும். அதன் ஓலைகள் கூரை மேய்வதற்கு உதவுகிறது. அது தவிரப்பனைஓலையிலிருந்து முறம், பெட்டி, முதலியவைகள் தயாரிக்கப்படுகின்றன. பனங்காய்களிலிருந்து கிடைக்கும் நுங்கு நல்ல உணவாகும். நுங்கு உடல் ஆரோக்கியத்திற்கு, உடல் வெப்பத்தை சமப்படுத்த மிகவும் நல்லது. பனைமரம் வீட்டுக் கூரைகளுக்கு சட்டமாகப் பயன்படுகிறது.

பனையிலிருந்தும் கள் கிடைக்கிறது. கள்ளில் சுண்ணாம்பு தடவினால் அது பதநீர் ஆகி விடுகிறது பதநீரிலிருந்து வெல்லம், கற்கண்டு முதலியவை தயாரிக்கப்படுகிறது. பனை வெல்லம் கற்கண்டு ஆகியவை சிறந்த சர்க்கரை உணவாகும். பனங்கிழங்குகளும் மிகவும் சிறந்த—ஏழைக்குழந்தைகளின் உணவாகும்.

இத்தனை பயனுள்ள தென்னை, பனை மரங்களை ஆதாரமாகக் கொண்டு பணியாற்றுகின்ற தொழிலாளர்கள் பல லட்சக் கணக்கில் இருக்கிறார்கள்.

மரம் ஏறுபவர்கள், கள், பதனீர் இறக்குபவர்கள், அதை விற்பவர்கள், தென்னை ஓலை கிடுகு பின்னுபவர்கள், தேங்காய் பறிப்பவர்கள், விற்பனையாளர்கள், மட்டையிலிருந்து நார்எடுப்பவர்கள், கயிற்றுத்தொழில் செய்பவர்கள், கூடை, முறம் செய்பவர்கள் இப்படிப் பல தரப்பட்டவர்கள் சாதாரண ஏழை எளிய கிராமப்புறப்பாட்டாளிகளாக இருக்கிறார்கள்.

இதில் குறிப்பாக தென்னை பனைமரம் ஏறுபவர்கள் அதிகமாக உள்ளார்கள். இவர்களுக்கு வேலைப்பாதுகாப்பு, சமூகப்பாதுகாப்பு மிக முக்கிய பிரச்சனையாகும்.

மதுவிலக்கு உள்ள காலத்தில் இந்தத் தொழிலாளர்களுக்கு அரசாங்கத் தொல்லைகள் போலீஸ் தொல்லைகள் அதிகம் உள்ளது. இவர்கள் கள் இறக்கியதாக. விற்றதாகக் கைது செய்யப்படுவதும், இவர்கள் மீது வழக்குகள் போட்டு தண்டிக்கப் படுவதும் மிகவும் கொடுமையான அடக்கு முறைகளில் ஒன்றாகும்.

தென்னை, பனைமரத் தொழிலாளர்களுக்கும் குறிப்பாக பனைமரத் தொழிலாளர்களுக்கும் கூட்டுறவு அமைப்புகளும் உள்ளன. அவை சில இடங்களில் குறிப்பிட்ட அளவில்தான் செயல்படுகின்றன.

இந்தப்பிரிவு கிராமப் புறப் பாட்டாளிகளையும் அமைப்பு

ரீதியில் திரட்ட வேண்டும். அமைப்புகள் மூலம் அவர்களுடைய கோரிக்கைகளைத் தொகுத்து அவர்களுடைய உரிமைகளை உயர்த்தப் பாடுபட வேண்டும்.

## 4 ஐந்தொழில் தொழிலாளர்கள்:

கல், மரம், இரும்பு, பித்தளை, —வெண்கலம், தங்கம் ஆகியவைகளை ஆதாரமாக் கொண்டு, கைவினைத் தொழில்களில் ஈடுபட்டுள்ள கிராமப்புற மக்கள், நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கும், நாகரிக வளர்ச்சிக்கும் ஆதாரமான கிராமப்புறப்பாட்டாளிகளாவர். இந்த ஐவகைத் தொழில்களும் இதர தொழில்களுக்கும் விவசாயத்திற்கும், உற்பத்திக்கருவிகளை உருவாக்குவதற்கு ஆதாரமாகும்,

முதலாவதாக கல், நமது நாட்டின்—குறிப்பாகத் தென் மாநிலங்களில் உள்ள மிகப் பெரிய சிறந்த செல்வமாகும். முதலில் கருங்கல் தொன்மையானதாகும். கருங்கல் மிகச் சிறந்த கட்டிடப் பொருள்களில் ஒன்றாகும். நமது நாட்டில் கட்டப்பட்டுள்ள பெரிய பெரிய கோவில்கள், கோட்டைகள், குளங்கள் பல நூற்றுக்கணக்கான ஆண்டுகளாக வரலாற்றுச் சின்னங்களாக விளங்குகின்றன.

கல்லை சதுரித்தும் கொத்தியும், மெருகிட்டும் கட்டிடங்களுக்கு, சுவர்களுக்கு, தூண்களுக்கு, தளத்திற்குப் பயன் படுத்துகிறோம். பொடிக்கற்களும் கட்டிட வேலைகளுக்குப் பயன்படுகின்றன. கல்லை மெருகிட்டு அழகிய முறையில் கட்டிடங்களுக்குப் பயன் படுத்துகிறார்கள்.

கற்களின் சரளை, சாலைகள், இருப்புப்பாதைகள் போடுவதற்கு மிகவும் பயன் உள்ளதாகும். கல் உடைக்கும் வேலையில் பல ஆயிரம் பாட்டாளிகள் பணியாற்றுகிறார்கள்.

கற்களிலிருந்து உயர்தரமான சிற்பங்கள், சிலைகள், உருவாக்கப்படுகின்றன. இந்த சிற்பங்கள், சிலைகள் மிகவும் விலை மிக்கவை. சிறந்த கலைச் சிறப்பும் நாகரிகச் சிறப்பும் மிக்கவை அதில் நமது நாடு புகழ் பெற்றது. நமது நாட்டு சிற்பிகளைப் பாதுகாப்பதும் அவர்களுடைய தொழிலுக்கும் வாழ்க்கைக்கும் முழு உதவி செய்ய வேண்டியதும்அரசாங்கத்தின் பொறுப்பாகும்; சமுதாயத்தின் கடமையாகும்.

இப்போதெல்லாம், நமது நாட்டின் கரடு முரடான கற்கள் எல்லாம் ஜப்பான் முதலிய வெளி நாடுகளுக்கு ஏற்றுமதியாகின்றன. அங்கு இந்தக் கரடு முரடான கற்கள், பாளங்களாக அறுக்கப்பட்டு, பாலிஷ் செய்யப்பட்டு, நல்ல விலைக்கு விற்கப்படுகின்றன. கருங்கல்லை மூலப்பொருளாகக் கொண்ட இந்தத் தொழில்களை நமது நாட்டில் பெருக்கி, அந்த லாபத்தை நமது நாடு அடைய முடியும்.

கல்லை மூலப் பொருளாகக் கொண்டு நடைபெறும் தொழில்கள், தயாரிப்புத் தொழில்கள் நமது நாட்டில் பெரும் பாலும் பழைய முறையிலேயே நடைபெறுகின்றன. அதில் பணியாற்றும் பாட்டாளிகள் மிகவும் கடுமையான உழைப்பாளிகளாக இருக்கிறார்கள்.

இரண்டாவதாக, மரத்தைக் கொண்டு நடைபெறும் தொழிலைத் தச்சு வேலை எனக் கூறுகிறோம். தச்சு வேலை மூலம் தான் விவசாயம் நெசவுத் தொழில் மீன் பிடித்தல் முதலிய அனைத்திற்கும் அவசியமான கருவிகள் செய்யப் படுகின்றன. தச்சு வேலையும் கொல்லு வேலையும் சேர்ந்து தான் உற்பத்தியின் வள்ர்ச்சிக்கான உற்பத்திக் கருவிகளின் வளர்ச்சிக்கான அடிப்படைத் தொழில்களாக வளர்ந்துள்ளன.

ஏர், கலப்பை, வண்டிகள், இதர விவசாயக் கருவிகள், தறிகள்மற்றும் இதர கைத்தறித் தொழிலுக்கு வேண்டிய கருவிகள், கட்டுமரம், ஓடம், தோணி, படகு, கப்பல் முதலிய மீன் பிடிப்பதற்கான சாதனங்கள் வீடுகள் கட்டு வதற்கான நிலை கதவு, சாளரம், கூரை முதலிய சாமான்கள், வீட்டிற்கு வேண்டிய கட்டில், பலகை, நாற் காலி மேஜை முதலிய பல சாமான்கள் செய்வது தச்சு வேலை மூலமாகத்தான். இன்றைய நவீனத் தொழில் களிலும் தச்சுவேலைகளுக்கு முக்கிய இடம் இருக்கிறது.

நமது நாட்டில் உள்ள தச்சு வேலைத் தொழிலாளர்களில் பெரும் பகுதி இப்போதும் கிராமப்புறங்களில் தான் இருந்து கொண்டிருக்கிறார்கள். இப்போது முதலாளித்துவ வளர்ச்சியையொட்டி சில மாற்றங்கள் எற்பட்டு வரு கின்றன. இருப்பினும் இந்தத் தொழிலில் உள்ள பாட்டாளி களின் பிரச்சனை மிகவும் முக்கியமானதாகும்.

மூன்றாவதாக, இரும்பு வேலை, இரும்பு சம்பந்தமான வேலை கொல்லு வேலை என்று அழைக்கப்படுகிறது. கொல்லு வேலை தச்சு வேலையுடன் இணைந்ததாக இருக்கிறது. இரும்பைக் காய்ச்சி உருக்கி எடுப்பது, அதைப் பாளங்களாக்கி பதப்படுத்துவது, உருக்கு ஆக்குவது, அந்த இரும்பு உருக்கிலிருந்து விவசாயம், நெசவு, மீன் பிடித்தல், மரம்அறுத்தல், தச்சு வேலைமுதலிய தொழில்களுக்கு ஆதாரமான உற்பத்திக் கருவிகள் செய்வது கொல்லு வேலையின் பணிகளாகும். மண்வெட்டி கோடரி, உளி, சுத்தியல், சம்மட்டி முதல் பல முக்கியமான நுட்பமான கருவிகள் வரை செய்வதற்கு கொல்லுவேலை மிகவும் அவசியமான தொழிலாகும்.

எந்திர வளர்ச்சியை ஒட்டிக் கொல்லு வேலையில் மாற்றங் கள் ஏற்பட்டுக் கொண்டிருக்கின்றன. இருப்பினும் தச்சு வேலையுடன் சேர்ந்த கொல்லு வேலையும் கிராமப்புறத்

தொழிலாகவும் நீடிக்கிறது. இந்தத் தொழிலில் ஈடு பட்டுள்ள தொழிலாளர்களின் பிரச்சனையும் மிக முக்கியமாக கவனிக்கப்பட வேண்டிய ஒன்றாகும்.

நான்காவதாக, இதர உலோகங்கள் சம்பந்தமான வேலைகள். இதில் முக்கியமாக பித்தளை, தாமிரம், வெண் கலம், முதலிய பல வகை உலோகங்களைச் சார்ந்த தொழில்களாகும். உலோகக் கனிமங்களை எடுத்து உருக்குவது, உலோகக் கலவை செய்வது, இந்த உலோகங்களிலிருந்து பலவகைப் பாத்திரங்கள் செய்வது இந்திய நாட்டின் பழைய முக்கிய கைத்தொழில்களில் ஒன்றாகும். இப்போது இந்த வகைப் பாத்திரங்கள் குறைந்து எவர் சில்வர் பாத்திரங்கள் அதிகமான புழக்கத்திற்கு வந்துள்ளது. எனினும் பாத்திரத்தொழில் முக்கிய தொழிலாகும். இந்தத் தொழில் சில சிறிய நடுத்தர நகரங்களிலும் உள்ளது.

ஐந்தாவதாக, தங்கம், வெள்ளி, தொடர்பான ஆபரணத் தொழில்; இதில் ஈடுபட்டுள்ள பொற் கொல்லர்க்கும் பிரச்சனை உள்ளது.

தங்கம் வெள்ளி ஆபரணங்கள் செய்யும் தொழில் இந்தியாவில் பண்டைக்காலம் தொட்டு மிகவும் புகழ் மிக்கதாகும். இந்திய நகைகள், ஆபரணங்கள் மிகவும் கலைச்சிறப்பும், தொழில் நுட்பமும், நேர்த்தியும் நிறைந்தவை.

இன்று தங்கம், வெள்ளியின் விலை உயர்வாலும், மக்களின் ஏழ்மையாலும் இந்தத் தொழில் மிகவும் கடுமையாகபாதிக்கப்பட்டுள்ளது. இதில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்கள் பெரும்பாலும் சிறிய பெரிய நகரங்களில் அதிகமாக உள்ளார்கள். இதில் ஈடுபட்டுள்ள தொழிலாளர் பழைய கிராமப்புற, கைவினைத் தொழிலாளர் பிரிவைச் சேர்ந்தவர்கள் என்னும் முறையில் ஐந்தொழில் தொழிலாளர்களையும் ஒன்று சேர்த்து, அமைப்பு ரீதியில் திரட்டுவது அவசியமானதாகும்.

## 5 மண்பாண்டம், செங்கல் உற்பத்தித் தொழிலாளர்கள்.

மண்பாண்டத் தொழில் நமது நாட்டின் முக்கியமான பண்டைய தொழில்களில் ஒன்றாகும். உலோகங்கள் பயன் பாட்டிற்கு வருவதற்கு முன்னர் மண் பாண்டங்கள் உற்பத்தி மிகவும் பிரபலமாக இருந்தது.

சக்கரம் உலக வளர்ச்சியின் காலப் பயணத்தின் சின்னமாகும்.

உருளையும், வண்டியும், ரதமும், தேரும், இன்றைய நவீன கால எந்திரங்களும் ஓடுவதும் செயல்படுவதும் சக்கரங்

கள் மூலமாகவே தான். அதனால் தான் படைத்தல் கடவுளின் பேராயுதமாக சக்கரத்தைக் கற்பித்து இந்திய மக்கள் மகிழ்ந்தார்கள்.

மண்பாண்டத் தொழிலின் மையம் சக்கரமாகும். மண் பாண்டத் தொழில் தோன்றியதும், மனித நாகரிக வளர்ச்சியின் ஒரு குறிப்பிட்ட மேல் கட்டமாகும்.

தண்ணீரும், உணவுப் பொருள்களும் சேமித்துவைக்கவும், சமையல் செய்வதற்கும், மண்பாண்டங்கள் பயன்படுத்தப் பட்டன. தாழிகளாகவும், குதிர்களாகவும் மண்பாண்டங் கள் பயன்படுத்தப்பட்டிருக்கின்றன.

மண்பாண்டங்கள் கிராமப்புற ஏழை எளிய மக்களின் பாத்திரங்களாக இன்னும் பெரும்பாலும் நீடிக்கின்றன. ஆயினும் தற்காலத்தில் பிளாஸ்டிக் பாத்திரங்களின் வர வால், மண்பாண்டங்களின் பயன்பாடு குறைந்து அந்தத் தொழிலுக்குப் பாதிப்பு ஏற்பட்டிருக்கிறது.

அதே சமயத்தில் பல்வேறு வளர்ச்சித் திட்டங்களினால் கட்டிட வேலைகள் மிகுந்து செங்கல் ஓடு ஆகியவை களின் பாடு அதிகரித்துள்ளது. அதிகரித்துச் செங்கல் காள வாசல்கள் அதிகரித்து வந்துள்ளன.

மண்ணை மூலப் பொருளாகக் கொண்டுள்ள இந்தத் தொழில்களில் ஈடுபட்டுள்ள பாட்டாளிகளின் பிரச்சனை களும் ஏராளம் உள்ளது. இவர்கள் பெரும்பாலும் கிராமங்களிலும் சிறு நகரங்களிலும் தான் வாழ்கிறார் கள்; தொழில் நடத்துகிறார்கள்.

இவர்களுக்கு அரசும் அரசு நிர்வாகங்களும் உதவி செய் வதற்குப் பதிலாக அதிகமாகத் தொல்லைகள் தான் கொடுக்கிறார்கள். மண்பாண்டங்களுக்கும் செங்கல் காள வாசல்களுக்கும் மண் எடுப்பதற்குக் கூட கட்டுப்பாடு, வரி, கட்டணம், அபராதம், வழக்கு, லஞ்சக் கொடுமை போன்றவை அண்மைக் காலத்தில் அதிகரித்து வருகின்றன.

இந்தப் பிரிவு பாட்டாளிகளுக்குள்ள பிரச்சனைகள், தொழில் பாதுகாப்பு, தொழிலாளர் நலன் ஆகியவை களில் கவனம் செலுத்துவது அவசியமாகும்.

இந்தப் பிரிவு பட்டாளிகளை அமைப்புப் பூர்வமாகத் திரட்டி அவர்கள் தங்கள் உரிமைகளைப் பெற, நலன் களைப் பாதுகாத்துக் கொள்ளப் பாடுபட வேண்டும்.

## 6 கட்டிடத் தொழிலாளர்கள்:

கட்டிடத் தொழில், கட்டுமானத் தொழில் நாட்டின்

தொழில் துறையில் மிகவும் முக்கியமான பிரிவாகும். கட்டிடத் தொழில் இன்று மிகவும் பெரிய அளவில் வளர்ச்சி பெற்று வருகிறது. கட்டிடத் தொழிலுக்கு ஆதாரமான கல், மண், ஓடு, செங்கல், சுண்ணாம்பும், இப்போது சிமிண்டு உற்பத்தியும் இந்தத் தொழிலுடன் இணைந்ததாகும். சுண்ணாம்பு உற்பத்தி என்பது இன்னும் கிராமத் தொழிலாகவே இருந்து வருகிறது. ஆனால் நாடு விடுதலை பெற்ற பின்னர் சிமிண்ட் ஆலைகள் அதிகம் வந்து சிமிண்ட் உற்பத்தியும் பெருகி, கட்டிட வேலைகளுக்கு அதிகமாகப் பயன்படுகிறது.

கட்டிடத் தொழிலாளர்கள் சமுதாயத்தின் மிக முக்கியமான தொழிலாளர் பிரிவாகும். ஐரோப்பிய நாடுகளில் கட்டிடத் தொழிலாளர்கள், கட்டுமானப் பணியாளர்கள் மிகவும் வலுவான ஸ்தாபன அமைப்புகளைக் கொண்டிருக்கிறார்கள். நமது நாட்டில் கட்டிடத் தொழிலாளர்களின் அமைப்பு ஆரம்ப நிலையில் தான் இருக்கிறது.

கட்டிடத் தொழிலாளர்கள் கிராமப்புறத் தொழிலாளர்களாகத்தான் இருக்கிறார்கள் என்று கூற முடியாது.

கிராமப்புறப் பாட்டாளிகளுடன் சேர்ந்து இவர்கள் கவனிக்கப்பட வேண்டியவர்களாவார்கள்.

கட்டிடத் தொழில் வெறும் தொழில் மட்டுமல்ல, அது ஒரு பெரும் கலையாகும். நமது நாட்டின் கட்டிடக்கலை மிகச் சிறப்பும் தொன்மையும் வாய்ந்தது. அத்துடன் பாரத நாட்டுக் கட்டிடக் கலை, பல வேறு கட்டிடக் கலைகளும் இணைந்த ஒரு பெரிய நாகரிக வரலாற்றைக் கொண்டதாகும்.

தென்னாட்டுக் கோவில்கள், கோபுரங்கள், கல்லணைகள், ஏரி குளங்கள், நமது நாட்டின் கட்டிடக் கலையின் சிறப்புகள். வடமாநிலங்களில் டில்லி சுல்தான்களின் கட்டிடக் கலை, மொகலாயர்களின் கட்டிடக் கலை, கோட்டைகள், சமாதிகள், பள்ளிவாசல்கள், அதன் உச்சமாக தலைசிறந்த கலைச் சின்னமான தாஜ்மகால்; விஜயநகர மன்னர்கள் காலத்தில் தோன்றிய பல கோட்டைகள், அரண்மனைகள் கோவில் பிரகாரங்கள், புதியவகைக் கோபுரங்கள், மண்டபங்கள் சத்திரங்கள் முதலியவை; சீக்கியர்களின் குருத்துவாராக்கள், ஐரேப்பியர் வந்த பின் வந்துள்ள பெரிய பாலங்கள் மாதா கோவில்கள் புதியவகைக் கோட்டைகள், அரசு மாளிகைகள் கட்டிடங்கள் முதலியவைகள் எல்லாம் இந்திய வரலாற்றுச் சின்னங்களாக நமது நாட்டு கட்டிடத் தொழிலாளர்களின் கை வண்ணங்களைச் சிறப்பித்து எண்ணற்ற கதைகளை—வீரத்தின், காதலின் கதைகளை கூறிக் கொண்டிருக்கின்றன.

நமது நாட்டின் பழைய கட்டிடத் தொழில் கல்லோடு இணைந்தது. கல் என்றால் கலை ,கல் என்றால் கலாச் சாரம் என்று பொருள். கல்லும் கதை சொல்லும் என்பது பழமொழி. கல்லுக்கு கதை சொல்லும் சக்தி பிறந்தது, சிற்பியாலும்கட்டிடத் தொழிலாளியாலும்தான் என்பதைக் காண்கிறோம்.

இன்றைய கட்டிடத் தொழில் நவீன எந்திரவளர்ச்சியை ஒட்டி புதிய பரிமாணங்களை, புதிய உயரங்களை எட்டியிருக்கிறது.

ஆயினும் கட்டிடத் தொழிலாளர்களின் வாழ்க்கை நிலை, நமது நாட்டில்,உயரவில்லை. வேலைப் பாதுகாப்பு,ஊதிய வசதிகள், சமூகப்பாதுகாப்பு இதர உரிமைகள் சரியாக இல்லை.

உதிரிப் பாட்டாளி மக்களின் ஒரு முக்கியமான பிரிவு என்னும் முறையில் கட்டிடத் தொழிலாளர்களை அமைப்பு ரீதியில் திரட்டுவதில் நாம் அதிகமாகக் கவனம் செலுத்த வேண்டியது மிகவும் அவசியமானதாகும். அவர் களுடைய கோரிக்கைப் பட்டியல் தயாரித்து. அவர்களின் உரிமைகளையும் நலன்களையும் பாதுகாத்து அபிவிருத்தி செய்வது மிகவும் அவசியமானதாகும்.

இப்போதைய முதலாளித்துவப் பாதையின் நெருக்கடியின் காரணமாக சமுதாய வளர்ச்சி தேக்க மடைந்திருக்கிறது. தடைப்பட்டு நிற்கிறது. அதனால் கட்டிடத் தொழில்கள், கட்டு மானப்பணிகள் தேக்கமடைந்துள்ளன. தடைப் பட்டு நிற்கின்றன. புதிய வேலைகள் அதிகம் இல்லை. அதனால் கட்டிடத் தொழிலாளர்களுக்கு வேலை வாய்ப்புகள் குறைந் துள்ளன.

ஒரு பக்கம் மக்களுடைய அத்தியாவசியத் தேவைகள் பூர்த்தி செய்யப்படாமல் மக்களுடைய வளர்ச்சி பாதிக்கப்பட்டிருக் கிறது.

நமது நாட்டில் மிகப் பெரும் பாலான மக்களுக்கு, முக்கால் வாசி மக்களுக்கு சரியான வீட்டு வசதி இல்லை. சென்னை போன்ற பெரிய நகரங்களில் கூட மக்கள் தொகையில் சரி பாதி பேருக்கு மேல் குடிசைகளிலும் தெரு ஓரங்களிலும் தான் மக்கள் வாழ்கிறார்கள்.

இத்தனை பேருக்கும் ஒரு குடும்பத்திற்கு ஒரு சிறிய வீடு கொடுப்பதானாலும் இன்றைய கட்டிடத் தொழிலாளர் களுக்குப் பெரும் அளவில் வேலை கிடைக்கும்.

நாடு விடுதலை பெற்று நாற்பது ஆண்டுகளைக் கடந்தும்

இன்னும் நாட்டு மக்களில் 60 சதவீதப் பேருக்கு மேல் எழுதப் படிக்கத் தெரியாதவர்களாக இருக்கிறார்கள். அவர்களுக்கு வேண்டிய பள்ளிக்கூடங்கள் இல்லை. இப்போது இருக்கும் பள்ளிக் கூடங்களும் பராமரிப்பு சரியாக இல்லாமல் இடிந்து கொண்டிருக்கின்றன. பல பள்ளிகள் வெறும் குடிசை, கொட்டகைகளாக இருக்கின்றன.

எல்லோருக்கும் கல்வி கிடைக்கப் போதுமான கல்வி நிலையங்கள் கட்டுவதானால், இன்றைய கட்டிடத் தொழிலாளர்களுக்கு இன்னும் பல மாதங்கள் வேலை கிடைக்கும்.

நமது நாட்டின் கடற்கரையோர மக்களுக்கு—தொழிலுக்கு அவசியமான, மீன்பிடித் துறைமுகங்கள், கட்டிடங்கள், வீடுகள் கட்டுவதற்குத் திட்டமிட்டால் நமது கட்டிடத் தொழிலாளர்கள் வேலை செய்து முடியாது.

இத்தனை வளர்ச்சி வாய்ப்புகள், முதலாளித்துவப் பாதையில். நிச்சயம் ஏற்படாது. சோஷலிஸத்திசை வழியில்தான் அந்த வாய்ப்புகள் வளரும். இன்றைய சோஷலிஸ நாடுகளிலும் சோஷலிஸ திசை வழியிலான நாடுகளிலும் வளர் முக நாடுகளிலும் கட்டிடத் தொழிலாளர்களுக்கு மிகப்பெரிய அளவில் தொழில் வாய்ப்புகள் எற்பட்டிருக்கின்றன.

வீடுகள், கல்வி நிலையங்கள், ஓய்வு இல்லங்கள், திரை அரங்குகள், விளையாட்டு அரங்குகள், தொழிற்சாலைகள், சாலைகள் பாலங்கள், முதலிய கட்டுமானத்திட்டங்கள் ஏராளமான அளவில் விரிவாகப் போடப்பட்டு நிறைவேற்றப்படுகின்றன்.

இந்த அரும்பணிகளைக் கட்டிடத் தொழிலாளர்கள் நிறைவேற்றுகிறார்கள். அவர்களுக்கு அதிக வேலை வாய்ப்புகளும், தொழில் வசதிகளும், சமூகப் பாதுகாப்பு வசதிகளும் நிரம்ப செய்யப்பட்டிருக்கின்றன.

முன்னேற்றம் அடைந்துள்ள நாடுகளின் முன்னுதாரணங்கள், வளர்ச்சித் திட்டங்கள், நமது நாட்டுக் கட்டிடத் தொழிலாளர்களுக்கு ஊக்க மூட்ட வேண்டும்.

கட்டிடத் தொழிலாளர்களுக்கான சங்கங்களை வளர்க்க வேண்டும். அவர்களுடைய கோரிக்கைகளைத் தொகுத்து அவற்றை நிறைவேற்றுவதற்கான இயக்கங்களை நடத்த வேண்டும். அவர்களுடைய தொழிலுடன், வாழ்க்கையுடன் இணைக்கப்பட்டுள்ள திட்டங்களை நிறைவேற்றவும் நாட்டில் சமுதாய மாற்றத்திற்கான இயக்கங்

களில் பங்கு கொள்ளவும் கட்டிடத் தொழிலாளர் களின் உணர்வு நிலையை உயர்த்த வேண்டும்.

சோஷலிஸ திசை வழியிலான சமுதாயப் புரட்சிகர தேசிய இயக்கத்தில் கட்டிடத் தொழிலாளர்களும் சிறப் பாகப் பங்கு கொள்ளப் பாடுபட வேண்டும். கட்டிடத் தொழிலாளர்களும், தங்களுக்காகவும், நாட்டிற்காகவும், தங்கள் வரலாற்றுக் கடமையை நிறைவேற்ற முன் வர வேண்டும்.

## 7 இதர கிராமத் தொழில்கள்:

பீடி, சுருட்டு, புகையிலை, தீப்பெட்டி, பட்டாஸ் உற்பத்தி முதலிய தொழில்கள் பெரும் பாலும் கிராமங்களில் பரவி யுள்ளன. இந்தத் தொழிலாளர்கள் பெரும்பாலும் குடிசைத்தொழில் அடிப்படையிலேயே வேலை செய் கிறார்கள் என்ற போதிலும் இவர்களுக்கெல்லாம் அவர் களுடைய வேலை முறையை ஒழுங்குபடுத்துவதற்கான சில தொழிலாளர் சட்டங்களும் தொழிற்சாலை சட்டங் களும் மற்றும் கடை நிறுவனச்சட்டங்களும் தனிசட்டங் களும் இப்பகுதியில் செயல்படுத்தப்படுகின்றன. இந்தத் தொழில்கள் குறைந்த பட்சக் கூலிச் சட்டத்தின் கீழ் வருகின்றன.

இந்தப் பிரிவுத் தொழிலாளர்கள் பல இடங்களில் சங்கரீதியி லும் திரண்டுள்ளார்கள். இவர்கள் அரசியல் பயிற்சி பெற்று இதர கிராமப்புற தொழிலாளர்களை ஒன்று திரட்டு வதற்கு உதவ வேண்டும்.

இன்னும் நமது கிராமப்புறங்களில் பாய் முடைதல், கூடை முடைதல் போன்ற தொழில்களிலும் உதிரியாகப் பல இடங் களில் பல நூற்றுக்கணக்கான தொழிலாளர்களும் பணியாற்றுகிறார்கள். இதில் பாய் முடைதல் ஒரு முக்கிய தொழிலாகும்.

கோரையிலிருந்தும், பனை ஓலை, ஈச்சம் ஓலையிலிருந்தும் பாய்கள் தயாரிப்பது நமது நாட்டின் மிகவும் பழைய தொழில்களில் ஒன்றாகும். பனை ஓலைப் பாய்கள், ஈச்சம் பாய்கள் பேக்கிங் செய்வதற்கு முக்கியமாகப் பயன் படுகிறது. கோரைப் பாய்கள், ஏழைகளின் படுக்கை விரிப்பா கும். கோரைப் பாயில் படுப்பது நமது நாட்டின் வெப்ப நிலைக்கு மிகவும் ஆரோக்கியமானதாகும்.

பாய் நெசவுத் தொழில் திருநெல்வேலி, தஞ்சாவூர், சேலம் மதுரை முதலிய மாவட்டங்களில் மிகவும் பிரபலமாக சில குறிப்பிட்ட பகுதிகளில் உள்ளது. அவர்களுக்கு கோரை, நூல் ஊதியம், பாய் விற்பனை முதலியவற்றில் பல

பிரச்சனைகள் உள்ளன. இதில் உற்பத்தியாளர்களுக்கும் வேலைசெய்யும் தொழிலாளர்களுக்கும் மிகவும் குறைவான வருவாய் தான் கிடைக்கிறது. போக்குவரத்து செலவும், விற்பனையாளர்களின் லாபமும் பாய்களின் விலையை மேலே கொண்டு போகிறது. இதில் உற்பத்தி விற்பனையைக் கூட்டுறவு முறையில் கொண்டு உற்பத்தியாளர்களுக்கும் தொழிலாளர்களுக்கும் சற்று கூடுதலான ஊதியம் கிடைக்க முயற்சிக்க வேண்டும்.

**வெற்றிலைக் கொடிக்கால் விவசாயிகள்.**

வெற்றிலை நமது நாட்டில் உள்ள ஒரு சிறந்த மூலிகையாகும். உணவு செரிப்பதற்கு வெற்றிலை உதவுகிறது. வெற்றிலை , பாக்கு, சுண்ணாம்பு சேர்த்துப் போடுவது நமது நாட்டு மக்களின் முக்கிய பழக்கமும் பண்பாடுமாக இருக்கிறது.

வடக்கே, ''பான்ஷாப்'',—தெற்கே வெற்றிலை பாக்குக் கடை, என்பதும் பிரபலமானதாகும் வெற்றிலை போடுவது. உணவு செரிப்பதற்கு மட்டுமல்ல, பல்லிற்கு உறுதியளிக்கிறது. வாய் நாற்றத்தைத் தடுக்கிறது. உதடுகளுக்கு அழகு கொடுக்கிறது.

இரண்டு வெற்றிலையில் சிறிது உப்பும் இரண்டு மூன்று மிளகையும் வைத்து மென்று தின்றால் கடுமையான அஜீரணத்தால் ஏற்படும் வயிற்று வலியும்நின்றுவிடும். இது போல் வெற்றிலையின் மூலிகைக் குணம் ஏராளமாக உள்ளது.

வெற்றிலை சுவைப்பது நமது நாட்டில் பெரும் பாலான சாதாரண மக்களுடைய பழக்கத்தில் ஒன்று என்னும் முறையில் வெற்றிலை உற்பத்தி நமது நாட்டில் ஒரு தனி அம்சமாக உள்ளது.

நமது நாட்டில் அநேகமாக எல்லாமாநிலங்களிலும் வெற்றிலை உற்பத்தி செய்யப்படுகிறது. அது நிலத்தில் பயிரிடப்படும் ஒரு பயிர் என்றாலும் அது ஒரு தனித்தன்மையான விவசாயமாகும்.

வெற்றிலை சாகுபடிப் பகுதி கொடிக்கால் என்று கூறப்படுகிறது. மிகவும் செழிப்பான தண்ணீர் வசதியுள்ள நிலத்தில் தான் வெற்றிலை பயிரிடப்படுகிறது.

தமிழ் நாட்டில் எல்லா மாவட்டங்களிலும் வெற்றிலை சாகுபடி செய்யப்படுகிறது. ஆற்றங்கரைப் பகுதிகளில் அது அதிகம். காவிரிக்கரை வெற்றிலை சாகுபடிக்குப் பெயர் போனது.

கங்கை நதிப்புறத்து கோதுமைப் பண்டம்
காவிரி வெற்றிலைக்கு மாறுகொள்ளுவோம்.

என்று பாரதி காவிரிக் கரை வெற்றிலையைச் சிறப்பித்துப் பாடியுள்ளார்.

வெற்றிலை விவசாயத்திலும்,அந்த விவசாயத்தில் சம்பந்தப் பட்டுள்ள விவசாயப்பாட்டாளிகள் வாழ்விலும் பலபிரச்ச னைகள் உள்ளன.

கொடிக்கால் விவசாயம் மிகவும் கடுமையான, நுட்பமான, கவனம் மிக்க விவசாயமாகும்.வெற்றிலைக் கொடி அகத்திச் செடிகளின் மீது படர விடப்படுகிறது. கொடிக்கால் போடு வதற்கு உரம் மிகவும் அதிகமாகத் தேவைப்படுகிறது.விவ சாயத்தில் உள்ள பிரச்சனைகள் அனைத்தும் வெற்றிலை விவசாயத்திலும் உள்ளன.

அத்துடன் வெற்றிலைத் தோட்டத்திலிருந்து இலைகளைச் சேகரிப்பதும், அவற்றைக் கட்டுகள் கட்டி விற்பனைக்கு அனுப்புவதும் மிகவும் முக்கியமானதாகும்.

வெற்றிலைச் சாகுபடி மிகவும் விரிவான நிலப்பகுதிகளில் செய்வதல்ல. குறிப்பிட்ட நிலத்தில் ஆளுக்குக் கொஞ்சமாக ஐந்து செண்டு,பத்து செண்டு என்று பிரித்துக் கொண்டு அதில் ஒவ்வொரு விவசாயியும் சாகுபடி செய் கிறார்கள். ஒரு கொடிக்காலில் பலர் பங்கு கொண்டு பணியாற்றுகிறார்கள். அவர்கள் நிலத்தைக் குத்தகைக்கு எடுத்துத் தான் வெற்றிலை சாகுபடி செய்கிறார்கள்.இதில் குத்தகைப் பிரச்சனை உள்ளது.

பலவித நோய்களிலிருந்து வெற்றிலைக் கொடியைப் பாதுகாப்பது ஒரு முக்கிய வேலையாகும். வெற்றிலை மக்கள் நேரடியாக மென்று தின்று உபயோகிக்கும் பொருளாகையால், வெற்றிலை நோய்களுக்கு கடுமை யான விஷ மருந்துகளை உபயோகிக்க முடியாது. எனவே அதற்கான பூச்சி மருந்துகளை உபயோகிக்க வேண்டும்.

வெற்றிலை எடுப்பது ஒரு கடுமையான வேலை. மிகவும் பொறுமையுடன் ஒவ்வொரு வெற்றிலையாகக் கையினால் கிள்ளி எடுத்து அதைச் சேகரிக்க வேண்டும். கொடிக்கால் என்பது சதம்பல் தண்ணீர் அதிகம் உள்ள இடம். கொடிக்காலுக்குள் கொசுக்கள் மிக அதிகம். கொடிக் கால் கொசு கடிப்பதற்குப் பெயர் போனது. கொசுக் கடி யால் அந்த விவசாயிகளின் உடல்நிலை மிகவும் பாதிக்கப் படுகிறது.

கொடிக்கால் விவசாயம், அதன் விநியோகம், விற்பனை, வெற்றிலையின் பயன்பாடு முதலியவை பற்றித் தனி ஆய்வு

நடத்தி இந்தத் தொழிலை அபிவிருத்தி செய்யவேண்டும். இதில் ஈடுபட்டுள்ள பாட்டாளிகளுக்குப் பாதுகாப்புக் கொடுக்க வேண்டும்.

தஞ்சை, திருச்சி, சேலம், மதுரை, நெல்லை மற்றும் செங்கல் பட்டு மாவட்டத்தில் மதுராந்தகம் பகுதியில் கொடிக் கால் விவசாயம் அதிகம். அந்த இடங்களில் உள்ள கொடிக்கால் விவசாயிகளைத் தனியாக அமைப்பு ரீதியில் திரட்ட வேண்டும்.

கொடிக்கால் விவசாயிகள் தனி சங்கமாகத்திரண்டு தங் களுடைய கோரிக்கைகளை முன்வைத்து இயக்கத்தை வளர்க்க வேண்டும். சேலம் மாவட்டத்தில் பரமத்தி வேலூர்ப்பகுதியில் காவிரிக்கரையில்—கொடிக்கால் விவசாயி கள் சங்கம் உருவாகியுள்ளது. அது மாநில அளவில் வளர்க்கப்படுவதற்குக் கொடிக்கால் விவசாயிகள் தயாராக வேண்டும்.

**நாட்டுச் செக்குத் தொழில்:**

எள், கடலை, கடுகு, தேங்காய், வேப்பங்கொட்டை, ஆமணக்கு முதலியவை நமது நாட்டில் உள்ள மிக முக்கிய மான எண்ணெய் வித்துக்களாகும். நமது நாட்டின் விவசாயத்தில் எண்ணெய் வித்துக்கள் உற்பத்தி மிகவும் முக்கியமான ஒன்றாகும்.

இதில் எள், கடலை, கடுகு, தேங்காய் எண்ணெய்கள் சமையல் எண்ணெய்களாகும். அத்துடன் எள், தேங்காய் எண்ணெய்கள் தலையில் தேய்த்துக் கொள்ளவும் பயன் படுகின்றன. இந்தியாவின் வெப்ப நிலையில் தலையில் எண்ணெய் தேய்த்துக் கொள்வது, மிகவும் அவசியமான தாகும்.

வேப்பங் கொட்டை எண்ணெய், ஆமணக்கு எண்ணெய் மிகவும் சிறந்த மருந்துப் பொருள்களாகும்.

நமது நாட்டில் எண்ணெய் பழைய கால முறையில் செக்கு கள் மூலம் செய்யப்பட்டு வந்தது. இதற்கெனத் திறமை வாய்ந்த தொழிலாளர்களும் இருக்கிறார்கள்.

ஆனால் நாட்டுச் செக்குத் தொழில்பெரும்பாலும் மறைந்து கொண்டு வருகிறது. எந்திரச் செக்குகள் வந்து விட்டன. இருப்பினும் நாட்டுச் செக்குகளும், எந்திரச் செக்குகளும் கிராமப்புறங்களில் உள்ளன.

அத்துடன் விவசாய உற்பத்திப் பொருள்களை ஆதார மாகக் கொண்ட அரிசி ஆலை, மாவுமில், சாகு (சவ்வரிசி)

தொழிற்சாலைகளும் கிராமப்புறங்களில் வளர்ந்து வருகின்றன.

இந்தத் தொழில்கள் பற்றிய பிரச்னைகளிலும் இதில் ஈடு பட்டுள்ள தொழிலாளர் பற்றிய பிரச்னைகளிலும் கவனம் செலுத்த வேண்டும்.

இவையெல்லாம் மக்களுடைய உபயோகப் பண்டங்களுடன் நேரடித் தொடர்பு கொண்ட தொழில்களாகும்.

இந்திய நாட்டின் முதலாளித்துவப் பாதையில் இந்திய நாட்டின் பொருளாதாரம், உற்பத்தியும் விநியோக முறையும், ஏற்றுமதிக்கான திசை வழியில் தான் கொண்டு செல்லப்படுகிறது. எனவே ஏற்றுமதி செய்யப்படும் பொருள் களின் உற்பத்தியில் தான் அதிகம் கவனம் செலுத்தப்படு கிறது.

அதனால் மக்களுக்கு அவசியமான பொருள்களை உற்பத்தி செய்யும் தொழில்கள், குறிப்பாக சிறு தொழில்கள் பற்றி அரசின் கவனம் இல்லை மாறாக புறக்கணிப்பும் இருக்கிறது. இந்தத் தொழில்கள் இயற்கை நியதிகளுக்குப்பட்டு, தங் களால் இயன்ற அளவு சமாளித்து உயிர் வாழ்ந்து கொண்டி ருக்கின்றன.

இதில் உற்பத்தியாளர்கள்(உரிமையாளர்கள்) தொழிலாளர் கள் ஆகியோருடைய பிரச்னைகளையும் இணைத்து, ஸ்தாபன நீதியான இயக்கம் வளர வேண்டும்.

**சுமை தூக்கும் தொழிலாளர்கள்:**

நாட்டில் பஸ், லாரி போக்குவரத்து அதிகரித்துள்ளது. அதையொட்டி கிராமப்புறங்களிலும் நகரங்களிலும் சுமை தூக்கும் தொழிலாளர் பிரிவும் தனியாக வளர்ந்துள்ளது. இந்தப் பிரிவுத்தொழிலாளர்கள் கடுமையான உடல் உழைப் பாளர்கள். இவர்கள் கிராமங்களில் சிறு பிரிவாக இருந்த போதிலும் போக்குவரத்துத் துறையில் முக்கிய அங்க மாவார்கள்,

மாட்டு வண்டிப் போக்குவரத்து அதிகமாக இருந்த போது மூட்டைகளை ஏற்றுவது, இறக்குவது போன்ற வேலை களை வண்டிக்காரர்களே செய்து வந்தார்கள்.

இப்போது கிராமங்களுக்கும் பஸ் போக்குவரத்து, லாரி போக்குவரத்து ஏற்பட்டுள்ளது. தானிய மூட்டைகள், உர மூட்டைகள் முதலியவைகளின் போக்குவரத்திற்கு லாரி கள் அதிகமாக வந்துள்ளன. இதில் மூட்டைகளை இறக்கு வது ஏற்றுவது முக்கியமான வேலை. இதில் ஈடுபட்டுள்ள தொழிலாளர் ஒரு அவசியமான பிரிவாக உள்ளனர்.

இது போல் கிராமப்புறங்களில் விவசாயத்தோடும் விவசாயத் தொடர்பு கொண்ட தொழில்களுடனும், இதர வகைத்தொழில்களுடனும் ஈடுபட்டுள்ளதொழிலாளர் களின் நல்வாழ்விற்கான திட்டங்கள் வகுப்பதும்அவைகளை நிறைவேற்றுவதும் இந்திய சமுதாயத்தின் முக்கியமான தொரு ஜனநாயகவளர்ச்சிப் பிரச்சனையாகும். இதில் நாம் கவனம் செலுத்துவது மிகவும் அவசியமானதாகும்.

**பால் உற்பத்தித் தொழில்:**

அண்மைக் காலங்களில் குறிப்பாக நாடு விடுதலை அடைந்த பின்னர் தொழில் வளர்ச்சியை ஒட்டி நகரங்களின் எண்ணிக் கை அதிகரித்து வருகிறது. நகரங்களில் மக்கள் குவியலும் அதிகரித்து வருகிறது. பெரிய நகரங்களில் உள்ள மக்களின் தேவைகளும் அதிகரித்து வருகின்றன. உணவு தானியங்கள், காய்கறிகள், எண்ணெய், பால் முதலிய தேவைகள் அதிகரித்து வருகின்றன. அண்மைக்காலத்தில் பால் உற்பத்தியை அதிகரிக்க, கிராமப்புறங்களில், கூட்டுறவு முறையில் பால் பண்ணைகள் அதிகரித்து வருகின்றன. இந்தக் கூட்டுறவு பால் பண்ணைகள் மூலம் கிராமப்புற மக்களுக்கு பால் உற்பத்திக்கு ஊக்கமளிக்கப்படுகிறது. இது வெண்மைப் புரட்சி என்று கூறப்படுகிறது.

பால் மாடு வளர்த்தல் விவிசாயிகளின் துணைத் தொழிலா கவும் கிராமப்புற மக்கள் சிலரின் தனித் தொழிலாகவும் வளர்ந்துவருகின்றன இவை தவிர தனியார் துறையிலும் கால் நடைப்பண்ணைகள் கோழிப் பண்ணைகள் வளர்ந்து வருகின்றன.

இவ்வாறான பால் மாடுகள் வளர்ப்பதில் பல பிரச் சனைகளும் உள்ளன. மாடுகளுக்கான தீவனம், நோய்த் தடுப்பு, கருத்தரிக்கவைத்தல், பால் விற்பனை, அதற்குரிய கட்டுபடியாகும் விலை முதலிய பிரச்சனைகள் எழுந் துள்ளன.

இன்றைய கூட்டுறவு பால் சங்கங்கள் பெரும்பாலும் பால் உற்பத்தி சங்கங்களாகவே வளர்க்கப்படுகின்றன. அவை கள் நகரங்களுக்குப் பால் அனுப்புவதற்காகவே உருவாக் கப்படுகின்றன. இதனால் கிராமப்புற மக்களின் பால் தேவை பாதிக்கப்படுகிறது. இதில் பால் உற்பத்தி, விநி யோகம் இரண்டும். கிராமச்சங்கங்களுக்கு இருக்கவேண்டும். பாலுக்குக் கட்டுபடியாகும் விலை கிடைக்க வேண்டும் தீவனங்கள் தட்டு இல்லாமல் கிடைக்கவேண்டும்.

இந்தப்பண்ணைகள் சம்பந்தப்பட்ட விவசாயிகள், கிராமப் புற மக்கள், ஊழியர்கள் ஆகியோரின் பிரச்சனைகள் தனி யாகக் கவனிக்கப்பட வேண்டும்.

★

# 8

# இந்திய கிராமப்புறங்களில் உள்ள இன்றைய வர்க்க அமைப்பும், வர்க்க வேறுபாடுகளும்.

வர்க்கம் என்றால் என்ன? புறநிலையாக ஒரே மாதிரியான பொருளாதார நலன்களையும் அதை ஒட்டிய அரசியல் மற்றும் சமுதாய நலன்களையும் கொண்ட ஒரு சமுதாயக் கூட்டத்தை வர்க்கம் என்று குறிப்பிடுகிறோம்

வர்க்க அமைப்பு சமுதாயத்தில் இருப்பது பற்றி ஐரோப்பிய சமூக ஆராய்ச்சியாளர்கள் குறிப்பிட்டுள்ளார்கள். ஒரு வர்க்கத்தின் அரசியல் பொருளாதார நலன்களை இணைத்து வர்க்க நலன் என்கிறோம்.

வர்க்க நலன்கள் வேறுபடும்போது வர்க்கங்களும் வேறு படுகின்றன. வர்க்கங்களுக்கிடையில் வேறுபாடுகள் ஏற் படும் போது அவைகளுக்கிடையில் முரண்பாடுகள் ஏற் படுகின்றன. இந்த முரண்பாடுகளினால் சில சமயங்களில் மோதல்கள் ஏற்படுகின்றன. இந்த வர்க்க முரண்பாடுகள் ஒன்றுக்கொன்று நேரடியாக மோதும்போது வர்க்கப் போராட்டங்கள் வெடிக்கின்றன.

இத்தகைய வர்க்கப் போராட்டங்களின் வரலாறே சமுதாயத்தின் வரலாறாக இருந்திருக்கிறது என்று காரல் மார்க்ஸ் குறிப்பிடுகிறார்.

உதாரணமாக புராதன காலத்தில் மனிதன் காடுகளிலும் மலைகளிலும் வாழ்ந்து வந்தான். உணவு சேகரிப்பது அவனுடைய பிரதான வேலையாக இருந்தது.

இயற்கையில் கிடைத்த கல்லும் கம்பும் அவனுடைய கருவி களாக —அதாவது உற்பத்திக் கருவிகளாகவும் போர்க் கருவி களாகவும்-இருந்தன,அன்றைய சமுதாயம்காட்டுமிராண்டிச் சமுதாயமாக, நாகரிக வளர்ச்சியில்லாத சமுதாயமாக உற்பத்தி வளர்ச்சியில்லாத சமுதாயமாக இருந்தது அந்த சமுதாயத்தில் வர்க்கங்களும் இல்லை. வர்க்கப் பிரிவுகளும்

இல்லை. எல்லோரும் ஓரே நிலையில் இருந்தார்கள். எனவே அதில் வர்க்கங்களும் வர்க்க முரண்பாடுகளும் மோதல்களும் போராட்டங்களும் இல்லாமல் இருந்தது. கிடைத்ததை தங்களுக்குள் பங்கிட்டுக் கொண்டு வாழ்க்கையை நடத்தினார்கள்.

இரண்டாவது கட்டத்தில், ஆண்டான் அடிமை சமுதாய அமைப்பு தோன்றிய காலத்தில், சமுதாயத்தில் ஆண்டான் வர்க்கம்' அடிமை வர்க்கம் என்னும் அடிப்படையான வர்க்கப் பிரிவு தோன்றின.

இந்த சமுதாய வளர்ச்சிக் கட்டத்தில் உற்பத்தி சக்திகளும் உற்பத்திக் கருவிகளும் பெரிய அளவில் வளர்ந்தன. மந்தை மந்தையாக ஆடு மாடுகள் வளர்க்கப்பட்டன. ஏராளமான நிலம் சாகுபடியின்கீழ் கொண்டு வரப்பட்டது.

சாகுபடி நிலத்திற்கும் ஆடு மாடுகளின் மந்தைகளுக்கும் சொந்தக்காரர்களாக அந்த சொத்துக்களின் உடமையாளர்களாக ஆண்டான்கள் இருந்தார்கள். அவர்கள் ஆலோசகர்களாக, அறிவுத்துறையினராக இருந்தார்கள்.

மறுபக்கம் நிலத்திலோ மந்தைகளிலோ எந்த விதமான சொந்தமோ, உடமையோ உரிமையோ இல்லாமல், சாகுபடி வேலைகளிலும் ஆடு மாடுகளை மேய்ப்பதிலும் கடுமையாகத் தங்கள் உழைப்பைச் செலுத்தி வந்த உழைப்பாளர்களாக அடிமைகள் இருந்தார்கள்.

அத்தகைய ஒரு சமுதாயத்தில் ஆண்டான் வர்க்கமும், அடிமை வர்க்கமும் அடிப்படை வர்க்கங்களாக இருந்தன. ஆண்டான் வர்க்கத்திற்கும் அடிமை வர்க்கத்திற்கும் இடையில் பல வேறு நடுத்தர வர்க்கங்களும் இருந்தன.

இந்த ஆண்டான் அடிமை சமுதாயத்தில், சமுதாயத்தின் அடிப்படையான சொத்துக்கள், நிலம், ஆடு மாடுகளின் மந்தைகள் ஆகியவை ஆண்டான்களுக்குச் சொந்தமாக இருந்தன. அடிமைகளிடம் உழைப்பு சக்தி மட்டுமே இருந்தது. அடிமைகளின் உழைப்பின் மூலம் நிலத்தில் சாகுபடியும், ஆடு மாடுகள் மேய்த்தலும் நடைபெற்றன. இவைகள் மூலம் கிடைத்த பலன் அனைத்தும் உற்பத்திப் பொருள் அனைத்தும் ஆண்டான்களுக்கே சொந்தமாக இருந்தன. அடிமைகளுக்குக் குறைந்தபட்சக் கூலி—உண்பதற்கு உணவாக ஒரு நாளுக்கு நாழி தானியமும் உடுப்பதற்கு ஒரு ஆண்டிற்கு நான்கு முழத்துணியும்—கொடுக்கப்பட்டது.

ஆண்டான்கள் தங்கள் சொத்துக்களையும் சுகவாழ்வையும் பாதுகாத்துக் கொள்ள அரசியலை உண்டாக்கிக் கொண்டார்கள். சட்டம், நீதி, ஒழுக்கம், சமயம், அரசு, ஆட்சி

நிர்வாகம் முதலியவைகளை ஏற்படுத்திக் கொண்டார்கள். இங்கு ஆண்டான்களின் சமூகப் பொருளாதார அரசியல் நலன்கள் ஒரே மாதிரியாக இருப்பதால் ஆண்டான்களை ஒரு வர்க்கம் என்று குறிப்பிடுகிறோம். அதே போல் அந்த சமுதாயத்தின் அடிப்படை உழைக்கும் வர்க்கமாக இருந்த அடிமைகள் உழைப்பதற்கு மட்டுமே உரியவர்களே, உழைப்பிற்குரிய ஊதியம் ஆண்டான்களிடமிருந்து பெறுபவர்களாக, சொத்துக்களிலும் சுகவாழ்விலும் எந்தவிதப் பங்கும் இல்லாதவர்களாக, அரசில் ஆட்சி நிர்வாகத்தில் எந்தவிதப் பங்கும் பாத்திரமும் இல்லாதவர்களாக இருந்தார்கள்' இப்படி அடிமைகளின் அரசியல் 'பொருளாதார சமுதாய நலன்களும் ஒரே மாதிரியாக இருந்ததால் அடிமை மக்களை ஒரு வர்க்கம் என்று குறிப்பிடுகிறோம்.

ஆண்டான்களுக்கும் அடிமைகளுக்குமிடையில் பிற்காலத்தில் உற்பத்தி உறவுகளில் மோதல்கள் ஏற்பட்டுப் போராட்டங்களும் நடை பெற்றிருக்கின்றன. இந்த இரு வர்க்கங்களுக்கிடையில் நடந்த போராட்டத்தை வர்க்கப் போராட்டம் என்று குறிப்பிடுகிறோம்.

வர்க்கப் போராட்டம் என்பது ஆரம்பத்தில் ஆண்டான்கள் தங்கள் பொருளாதார ஆதிக்கத்தை—அரசியல் ஆதிக்கத்தை உறுதிப் படுத்திக் கொள்வதற்காக அல்லது சாகுபடி, ஆடு மாடு மேய்த்தல் முதலிய தொழில்களில் அதிகமான உபரியைப் பெறுவதற்காக, மற்றும் ஆண்டான்களுக்குத் தேவையான வீடுகள் இதர வசதிகளைச் செய்து கொள்வதற்காக அடிமைகளை அதிகமாகக் கொடுமைப் படுத்திய போது அந்தக் கொடுமைகளுக்கு எதிராக நடந்துள்ள போராட்டமாக இருந்திருக்கிறது. பின்னர் அடிமைகள் தங்கள் உரிமைகள் கேட்டும் போராட்டங்களும் நடந்திருக்கின்றன. இந்த வர்க்கப் போராட்டம் முற்றிய போது அடிமைகளின் பலம், உழைப்பு எண்ணிக்கை பலத்தின் காரணமாக ஆண்டான்களின் ஆதிக்க சமுதாயம் நிலை கொள்ள முடியாமல் தகர்ந்து விட்டது. ஆண்டான்களுக்கும் அடிமைகளுக்கும் பொது நாசம் ஏற்பட்டு புதிய சமூகப் பொருளாதார அமைப்புமுறை ஏற்பட்டிருக்கிறது.

அடிமைகளின் பலம் எண்ணிக்கையில் மட்டுமல்ல. அவர்களுடைய உழைப்பு சக்தியில் தான் அவர்களுடைய பலத்தின் ஆதாரம் அமைந்திருந்தது. அடிமைகள் உழைக்க மறுத்தால், அல்லது அவர்களுடைய உழைப்பில் ஊக்கம் குறைந்தால் சமுதாயத்தின் உற்பத்தி பாதிக்கப்பட்டு, சமுதாயமே சக்தியிழந்து அந்தக் கட்டிடத்தின் அஸ்திவாரம் பல வீனப்பட்டு தகர்ந்து விடுகிறது. எனவே ஆண்டான் அடிமை சமுதாயத்தில் ஏற்பட்ட வர்க்க மோதல்கள் அந்த சமுதாயக் கட்டமைப்பைத் தகர்த்து விட்டது. அதில் பழைய சமூகப் பொருளாதார அமைப்பு முறைகள் அழிந்து

ஒரு புதிய சமூகப் பொருளாதார அமைப்பு ஏற்பட்டிருக்கிறது. வரலாற்றின் வளர்ச்சியில் ஒரு புதிய கட்டம் ஏற்பட்டிருக்கிறது. இந்தப் புதிய கட்டம் ஏற்படுவதற்கு ஆண்டான் அடிமை வர்க்கங்களுக்கிடையிலான வர்க்கப் போராட்டம் தான் காரணமாக, உந்து சக்தியாக இருந்திருக்கிறது. இதனால்தான் 'வர்க்கப் போராட்டத்தின் வரலாறே மனித சமுதாயத்தின் வரலாறாகும்' என்று காரல் மார்க்ஸ் சமுதாய உண்மைகளைக் கண்டுபிடித்துக் கூறியுள்ளார்.

மூன்றாவது கட்டத்தில் ஆண்டான் ஆதிக்கம் ஒழிந்து, ஆண்டான் அடிமை அமைப்பு தகர்ந்து, ஒரு புதிய வகை பிரபுத்துவ அமைப்பு முறை ஏற்படுகிறது. இந்த நிலப்பிரபுத்துவ சமூகப் பொருளாதாரத்தின் உச்சியில் மன்னராட்சி முறை ஏற்படுகிறது.

நிலப்பிரபுத்துவ சமூகப் பொருளாதார அமைப்பு முறையில் அடிப்படை வர்க்கங்களாக இருப்பவை நிலப்பிரபுக்களும் குடியானவர்களுமாவர்.

நிலப்பிரபுத்துவ வர்க்கத்திற்கும் குடியான வர்க்கத்திற்கும் இடையில் பல வேறு நடுத்தரவர்க்கத்தினர்களும் இருந்தார்கள். உதாரணமாக கைவினைஞர்கள், வணிகர்கள் முதலிய வர்க்கப் பிரிவினர்களும் இருந்தார்கள் நிலப்பிரபுத்துவ வர்க்கத்திலும் பல தட்டுகள் (படிகள்) இருந்தன. குடியான வர்களுக்கிடையிலும் சில தட்டுகள் இருந்தன. இருப்பினும் நிலப்பிரபுக்களுக்கும் குடியானவர்களுக்கும் இடையில் இருந்த உற்பத்தி உறவுகள் தான் அந்த சமுதாயத்தின் வர்க்க உறவுகளாக இருந்தன.

இந்திய நாட்டின் சமூகப் பொருளாதார அமைப்பில் சாதி முறைகள் ஏற்பட்டிருக்கின்றன. இந்திய நாட்டின் சாதி முறைகள் ஆண்டான் அடிமை சமுதாயத்தில் தோற்றுவிக்கப்பட்டு, நிலப்பிரபுத்துவ காலத்தில் உறுதிப்பட்டு நிலை பெற்றிருக்கிறது.

நமது நாட்டில் ஆண்டான் அடிமை அமைப்பு இருந்ததில்லை என்று ஒரு கருத்து கூறப்படுகிறது. இது பற்றிய அதிக ஆராய்ச்சி இங்கு தேவையில்லை. இருப்பினும் ஆண்டான், அடிமை என்னும் அருமையான தமிழ்ச் சொற்கள் ஏற்பட்டிருப்பதிலிருந்தே நிச்சயமாக அந்த வர்க்கங்களும் அந்த வர்க்க அமைப்பும் இருந்திருக்க வேண்டும். ஆயினும் இந்திய நாடு பெரியநாடு. இதில் பிரதேசத்திற்குப் பிரதேசம் வடிவங்களில் வேறுபாடு இருந்திருக்கலாம். அதில் பண்ணை அடிமை முறை பரவலாக இருந்ததாகவும் கூறப்படுகிறது.

அடுத்தபடி சாதி அமைப்புகள் இந்திய சமுதாயத்தில் எப்படித் தோன்றின என்பதும் ஆய்வுக்குரிய ஒரு முக்கிய பொருளாகும்.

தொழில் அடிப்படையில்—இன்னும் தெளிவாகக் கூறுவதானால் வேலைப் பிரிவினையின் அடிப்படையில் சாதீய முறைகள் தோன்றியிருக்கலாம். அப்படியானால் சாதி அமைப்பு என்பதும் வர்க்க அமைப்பு என்பதும் ஒன்று தானா என்னும் கேள்வி எழுகிறது. இரண்டிற்கும் சில சாயல்கள் இருக்கின்றன. ஆனால் இன்றைய நிலையில் இரண்டும் ஒன்று பட்டும் வேறு பாடுகள் தோன்றியும் உள்ளன.

இன்றைய கட்டத்தில் வர்க்க ஒற்றுமை புரட்சிகர இயக்கத்தின் வளர்ச்சிக்கு மிகவும் அவசியமானது. சாதி ஒற்றுமை என்பது பாட்டாளி வர்க்கப் புரட்சிகர இயக்கத்தைப் பிளவு படுத்தி விடுகிறது. அதே சமயத்தில் மேல் சாதிக் கொடுமைகளைப் பாட்டாளி வர்க்க இயக்கம் கடுமையாக எதிர்க்கிறது. அத்தனை சாதிகளிலும் உள்ள பாட்டாளி வர்க்கத்தை ஒன்றுதிரட்டி, மேல் சாதிக் கொடுமைகள் எதிர்த்து முறியடிக்கப்பட்டிருக்கின்றன.பாக்கியுள்ளசாதீயக் கொடுமைகளையும் துடைத்தெறிய வேண்டியது பாட்டாளி வர்க்கப் புரட்சிகர இயக்கத்தின் முக்கிய கடமைகளில் ஒன்றாகும். இறுதியில் சோஷலிஸ சமுதாய அமைப்பில் சாதிகளே இல்லாமல் ஒழிக்கப்பட்டு விடும் அல்லது படிப் படியாக மறைந்து விடும்.

இந்தியாவில் சாதிகளுக்கிடையிலான போராட்டங்கள் சாதிப்பாகுபாடுகளை எதிர்த்த போராட்டங்கள் ஏராளமாக நடந்திருக்கின்றன. வர்க்கம் என்பதை இந்திய சமுதாயத்திலும் நாம் தனியாகத் தான் பார்த்து படித்துப் புரிந்து கொள்ள வேண்டும்.

நிலப் பிரபுத்துவ சமுதாயத்தில் அடிப்படை வர்க்கங்களாக இருந்தவை நிலப் பிரபுக்களும் குடியானவர்களுமாவர்.

நிலப்பிரபுத்துவ மன்னராட்சி முறையில் குறுநில மன்னர்கள் சிறுநில மன்னர்கள் பெரு நில மன்னர்கள் என்று பல தட்டுகள் இருந்திருக்கின்றன. மன்னனுக்குத் தமிழில் காவலன் என்றும் பெயர் உண்டு; காவலன் என்பது காரணப் பெயர்.

காவலர்களே தங்கள் கடமைகளை மறந்து விட்டால்—வேலியே பயிரை மேய்ந்து விட்டால் அந்த அமைப்பையே மாற்றுவதைத் தவிர வேறு வழியில்லை.

மேலைநாடுகளில் பதினேழாம் நூற்றாண்டிற்குப் பின்னர் உள்ளகாலத்தில்நிலப்பிரபுத்துவ வர்க்கத்தில்நிலப்பிரபுத்துவ வர்க்கத்திற்குஎதிராக மிகப்பெரிய வர்க்கப்போராட்டங்கள் நடைபெற்றிருக்கின்றன.இந்த நிலப்பிரபுத்துவ வர்க்கத்தை எதிர்த்துக்குடியானவர்கள், பண்ணை அடிமைகள் நடத்திய வர்க்கப் போராட்டத்தில் குடியானவர்களுக்கு, பண்ணை அடிமைகளுக்கு நடுத்தரவர்க்க வர்த்தகர்கள்,முதலாளிகள்,

தொழிலதிபர்கள் ஒரு வர்க்கம் என்ற முறையில் தங்களுடைய பொருளாதார அரசியல் நலன்களையும் கருத்தில் கொண்டு தலைமை தாங்கியிருக்கிறார்கள். பின்னர் அது முதலாளிகளுக்கும் நிலப்பிரபுக்களுக்கும் இடையிலான போராட்ட மாகவும் வளர்ந்திருக்கிறது.

சில இடங்களில் நிலப்பிரபுக்களுக்கு எதிரான வர்க்கப் போராட்டம் கட்டுக்கு மீறிய அளவில்போன போது அந்தப் போராட்டத்தின் தலைமையில் இருந்த முதலாளிகள் அந்த நாட்டு நிலப்பிரபுக்களுடன் சமரசமும் செய்து கொண்டார்கள். இருப்பினும் நிலப்பிரபுத்துவத்திற்கு எதிராக முதலாளி வர்க்கம் நடத்திய போராட்டத்தில் குடியானவர்களும் பண்ணையடிமைகளும் முழுமையாக ஈடுபட்ட காரணத்தால், விவசாயிகள் பண்ணையடிமை முறையிலிருந்து விடுதலை பெற்றார்கள்.

இங்கிலாந்து, பிரான்ஸ், ஜெர்மனி முதலிய மேற்கு ஐரோப்பிய நாடுகளில் நிலப்பிரபுத்துவ முறை ஒழிந்தது. நிலப்பிரபுக்களும், பண்ணையடிமைகளும் வர்க்கம் என்னும் முறையில் மறைந்தனர். பழைய வர்க்கங்கள் மறைந்து புதிய வர்க்கங்கள் தோன்றின.

நான்காவது கட்டத்தில் முதலாளித்துவ அமைப்பு தோன்றியது. குறிப்பாக மேற்கு ஐரோப்பிய நாடுகளில், அமெரிக்காவில் முதலாளித்துவ அமைப்பு முதலில் தோன்றியது. அதன் பின்னர் இதர ஐரோப்பிய நாடுகளிலும் ஜப்பானிலும் முதலாளித்துவ வளர்ச்சி ஏற்பட்டது. ஆங்கிலேயர்கள் குடியேறிய கானடா ஆஸ்திரேலியா. நியூஜிலாந்து, முதலிய நாடுகளிலும் முதலாளித்துவம் வளர்ச்சியடைந்தது.

முதலாளித்துவம் இந்த நூற்றாண்டின் தொடக்கத்திற்குள். உலகம் முழுவதிலும் தனது ஆதிக்கத்தைப் பரப்பி விட்டது.

முதலாளித்துவ அமைப்பில் புதிய வர்க்கங்கள் தோன்றின. அதில் முதலாளிகள், தொழிலாளர்கள் ஆகிய இருவர்க்கங்களும்அடிப்படை வர்க்கங்களாகும்.முதலாளித்துவ சமுதாய அமைப்பில் முதலாளிகளும்தொழிலாளர்களும் நேர்எதிரான வர்க்கங்களாகும். இவைகளுக் கிடையில் பல் வேறு இடைப்பட்ட நடுத்தர வர்க்கங்களும் தோன்றியிருக்கின்றன.

முதலாளித்துவம் தோன்றி,நிலப்பிரபுத்துவத்தை உறுதியாக எதிர்த்து நின்று போராடி, நிலப்பிரபுத்துவம் ஒழிக்கப்பட்டு முதலாளித்துவம் முழுமையாக வெற்றி பெற்ற நாடுகளில் முதலாளிகள் தொழிலாளர்கள் வர்க்க முகாம் பெரிதாகவும் இடைப்பட்ட வர்க்கங்களின் எண்ணிக்கை குறைவாகவும் இருக்கிறது.

முதலாளித்துவம், நிலப்பிரபுத்துவத்துடன் சமரசம் செய்து கொண்டுள்ள பல நாடுகளில் கிராமப்புறங்களில் பல வேறு வர்க்கப் பிரிவுகள் தொடர்ந்து நீடிக்கின்றன.

இந்தியாவில் ஆங்கிலேயர் ஆட்சி ஏற்படுவதற்குமுன் பொதுவான நிலப்பிரபுத்துவ சமூகப் பொருளாதார அமைப்பு இருந்தது. அதில் பெரு நில மன்னர்கள்,சிறு நிலமன்னர்கள், குறு நில மன்னர்கள், சிறிய பெரிய நிலவுடைமையாளர்கள், சாகுபடியாளர்கள், பண்ணையாட்கள், கைவினைஞர்கள், வணிகர்கள், சிறு வியாபாரிகள், முதலிய பல வர்க்கங்கள் இருந்தன.

அத்துடன் இந்திய சமுதாய அமைப்பில் சாதி அமைப்புகளும் இருந்தன. இந்திய சமுதாயத்தில் வர்க்க முரண்பாடுகளும் மோதல்களும் இருந்திருக்கின்றன. சாதி வேறுபாடுகளும் முரண்பாடுகளும் மோதல்களும் இருந்திருக்கின்றன.

இந்தியாவில் ஆங்கிலேயர் ஆட்சி ஏற்பட்ட பின்னர் வர்க்கங்களின் அமைப்புகளில் சில மாற்றங்கள் ஏற்பட்டன. புதிய வர்க்கங்கள் தோன்றின.

பிரிட்டிஷ் முதலாளிகள்' பிரிட்டிஷ் வர்த்தகர்கள், அவர்களுடைய தொழில் வர்த்தக அமைப்புகளுக்கு உதவிகரமாக, துணையாக இருந்த ஏஜண்டுகள் தரகர்களும் புதிதாகத் தோன்றினார்கள்.

இந்தத் தரகர்கள், பின்னர் படிப்படியாக தரகு முதலாளிகளாகவும் வளர்ந்தார்கள்.

பிரிட்டிஷ் வர்த்தகம் தொழில் ஆட்சி நிர்வாகம் ஆகியவற்றை நடத்துவதற்கு ஆங்கிலக் கல்வியைக் கற்ற நடுத்தர வர்க்கம் தோன்றியது.

இந்தியாவின் வளர்ச்சியினும் வர்த்தகம், ஆங்கிலக் கல்வி ஆகியவற்றின் காரணமாக சொந்தமாக நவீன முறையில் தொழில், வர்த்தகம் ஆகியவற்றைத் தொடங்கிய இந்திய சுதேசி முதலாளிகள் வர்க்கமும் தோன்றி வளர்ந்தது. நவீனமான பிரிட்டிஷ் வர்த்தக நிறுவனங்கள், போக்குவரத்துத்துறை, நவீன தொழில்கள் முதலியவற்றில் பணியாற்றிய நவீன தொழிலாளி வர்க்கமும் புதிதாகத் தோன்றியது.

வர்க்க நலன்களில் நவீன இந்தியத் தொழிலாளி வர்க்கம் பிரிட்டிஷ் முதலாளிகளுக்கும் இந்திய சுதேசி முதலாளிகளுக்கும் எதிராக நிற்கிறது. இந்திய தேசீய நலன்களில் நவீன இந்தியத் தொழிலாளிவர்க்கம் பிரிட்டிஷ் முதலாளிகளுக்கு எதிராக மட்டும் நிற்கிறது.

பிரிட்டிஷ் ஆட்சியின் காரணமாக இந்தியாவின் கிராமப் புறங்களிலும் வர்க்கங்களின் அமைப்புகளில் மாற்றங்கள் ஏற்பட்டன. இந்தியாவை முழுவதையுமோ அல்லது பெரும் பகுதியையோ ஆண்டு கொண்டிருந்த பெரும் நில மன்னர்கள் இல்லை. பிரிட்டிஷ் ஆட்சிக்குட்பட்ட சுதேசி மன்னர்கள் வர்க்கம் அந்நிய ஆட்சியால் தோற்றுவிக்கப்பட்டது. அத்துடன் கிராமப்புறங்களில் ஜமீன்தாரி முறையைக் கொண்டு வந்து, புதிய முறையிலான ஜமீன்தார்கள், ஜாகீர் தார்கள், ஜன்மிகள், இனாம்தார்கள் முதலிய பல பெயர்களில் புதிய நிலப்பிரபுக்கள் வர்க்கம் தோற்றுவிக்கப் பட்டது. ரயத்து வாரி பகுதிகளில் அரசு நேரடியாக நிலப் பட்டா கொடுத்து புதிய நிலவுடமையாளர் வர்க்கத்தை அந்நிய ஆட்சி உருவாக்கியது. அத்தகைய நேரடி நில உடமையாளர்களில் பல ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலத் திற்கு பட்டா உரிமையாளர்களாக உள்ள பெரிய நிலச் சுவான் வர்க்கம் உருவாக்கப்பட்டிருந்தது. அத்துடன் பணக் காரவிவசாயிகள், நடுத்தர விவசாயிகள், சிறு நில விவசாயி கள், வாரம்—குத்தகை சாகுபடி விவசாயிகள், விவசாயத் தொழிலாளர்கள் ஆகிய வர்க்கப் பிரிவுகளும் கிராமப் புறங் களில் ஏற்பட்டன.

**சுதந்திரத்திற்குப் பின்னர்**

நாடு சுதந்திரம் பெற்ற பின்னர் நமது கிராமப்புற அமைப் பில் மேலும் சில மாற்றங்கள் ஏற்பட்டன. முதலில் சுதேசி மன்னர் முறை ஒழிக்கப்பட்டன. சட்ட பூர்வமான ஜமீன் தாரி முறை ஒழிக்கப்பட்டது. பல மாநிலங்களில் நில உச்ச வரம்புச் சட்டங்கள் கொண்டு வரப்பட்டு நிலவுடமை அளவுகளில் மாற்றங்கள் ஏற்பட்டன. அத்துடன் விவசாய உற்பத்தி உறவுகளில் முதலாளித்துவ உறவுகளும் ஏற் பட்டுள்ளது.

முதலாளித்துவ உற்பத்தி உறவுகள் என்பது, முதலீடு, கூலி உழைப்பு, மார்க்கட்டிற்காக உற்பத்தி, நவீன உற்பத்திக் கருவிகள் ஆகியவைகள் அடங்கியதாகும். இந்த அம்சங்கள் இன்றைய நமது நாட்டு விவசாயத் துறையில் வந்துள்ளன. பசுமைப் புரட்சி என்னும் பெயரில் நமது நாட்டு விவசாயத் துறையில் முதலாளித்துவ உற்பத்தி உறவுகள் ஆதிக்கத் திற்கு வந்துள்ளது. இது பற்றி முந்திய அத்தியாயங் களில் விரிவாகக் கூறப்பட்டிருக்கிறது.

நிலமும் விற்பனைப் பொருளாக ஆகி விட்டது. நிலத்தின் விலையும் அதிகரித்துக் கொண்டே வருகிறது. விவசாயத் துறையில் நிலத்தின் விலை என்பது ஒரு நிலையான மூலதன மாகக் கணக்கிடலாம்.

அத்துடன் நமது நாட்டு விவசாயத்துறையில் கிணறு,

பம்புசெட்டுகள், டிராக்டர்கள், ரசாயன உரம், பூச்சி மருந்து, ஸ்பிரேயர், முதலியகருவிகளும் அவைகளுக்கான முதலீடுகளும் செயல் முறைக்கு வந்துள்ளன. இந்தக்கருவி களும் இடு பொருள்களும் இன்றைய மார்க்கெட்டிலிருந்து தான் விவசாயிகள் வாங்கவேண்டியதிருக்கிறது.

விவசாயத் தொழிலாளர்கள் பழைய பண்ணை அடிமை முறையில் இல்லாமல் சுதந்திரமான கூலிஉழைப்பாளியாக மாறியிருக்கிறார்கள். பெரும்பாலும் கூலி நிர்ணயஅடிப் படையில் விவசாய வேலைகள் நடைபெறுகின்றன.

விவசாய உற்பத்திப் பொருள்கள் அனைத்தும் மார்க் கெட்டிற்கு விற்பனைக்குச் செல்கிறது. இன்றைய முதாளித்துவ மார்க்கெட்டைச் சார்ந்தே விவசாய உற் பத்திப் பொருள்களின் விலை இருக்கிறது. அதனால் விவசாயி களின் வருமானம் என்பது முதலாளித்துவ மார்க்கெட்டில் தனது உற்பத்திப்பொருள்களுக்குக் கிடைக்கும் விலையைப் பொறுத்தே இருக்கிறது.

இத்தகைய நிலைமைகள் இந்திய கிராமப்புறங்களிலுள்ள மக்களின் வர்க்கத் தன்மையில் சில மாற்றங்களைக் கொண்டு வந்து புதிய வர்க்க உறவுகளை ஏற்படுத்தியிருக் கின்றன.

இந்திய நாட்டின் கிராமப் புறங்களில் இன்றைய நிலையில் கீழ்க்கண்டவாறு வர்க்க அமைப்பு இடம் பெற்றுள்ளது.

### 1. விவசாயத் தொழிலாளர்கள்:

இவர்கள் தான் கிராமப்புறப் பாட்டாளிகளின் அடிப்படை வர்க்கமாக இருக்கிறார்கள். விவசாயத் தொழிலாளர்கள் என்பவர்கள் எந்த விதமான சொத்துடைமையும் இல்லாமல், தங்களுடைய உழைப்பு சக்தியை மட்டுமே நம்பி வாழ்க்கை நடத்துபவர்களாவர். இன்றைய இந்திய நிலைமைகளில் விவசாயத்தொழிலாளர்களுக்கு நிரந்தரமான வேலையோ, நிர்ணயமான கூலியோ இல்லை. வியாதி, முதுமை, விபத்துக் காலங்களில் பாதுகாப்பு எதுவும் இல்லை. இவர்களுடைய உழைப்பிலும் பழைய உழைப்பு முறைகள் அதிகம் நீடிப்ப தால், உழைப்பின் உற்பத்தித் திறனும் குறைவாகவே உள்ளது. இன்றைய இந்தியாவில் விவசாயத் தொழிலாளர் களின் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது.

விவசாயத் தொழிலாளர்களின் எண்ணிக்கை அதிகரிப் பால் விவசாயத் தொழிலின் மீதான மனித அழுத்தம் அதிக மாகிறது. வேலையிழப்புகளால் பாதிக்கப்படும் இதர கிராமப் புற உதிரிப் பாட்டாளிகளும் இதில்சேர்ந்து இந்த

அழுத்தம் மேலும் அதிகமாகிறது. இந்த அழுத்தம் குறைக்கப் பட வேண்டியது அவசியமாகும். அதற்கு தொழில் வளர்ச்சி பெருக வேண்டும். புதிய வேலை வாய்ப்புகள் அதிகரிக்க வேண்டும்.

விவசாயத் தொழில் இன்னும் அதிக அளவில் இயற்கைப் பருவநிலையைச் சார்ந்திருக்கிறது. வறட்சி, வெள்ளங் களால் விவசாயத்தொழில் பாதிக்கப்படும்போது மிகவும் கடுமையாக பாதிக்கப்படுபவர் விவசாயத் தொழி லாளர்கள்தான். விவசாயத் தொழிலாளர்களுக்கு வேலை பாதிப்பு ஏற்படுகிறது.

விவசாயத்தொழிலாளர்களின் வர்க்க நலன்களில், வேலை உத்தரவாதம், ஊதிய நிர்ணயம், குடியிருப்பு முதலிய வைகள் அடங்கியுள்ளன.

விவசாயத் தொழிலாளர்களுடைய உழைப்புச் சக்தி நில வுடைமையாளர்களால் சுரண்டப்படுகிறது.

அதனால் விவசாயத் தொழிலாளர்களுக்கும் நிலவுடைமை யாளர்களுக்கும் முரண்பாடுகள் ஏற்படுகின்றன. இருப் பினும் முதலாளித்துவ உற்பத்தி உறவுகளில் உள்ள முரண் பாடுகளில் விவசாயத்தொழிலாளர்களுக்கும் முதலாளித்துவ மார்க்கட் முறைச்சுரண்டலுக்கும் இடையிலுள்ள முரண் பாடுதான் கடுமையான முரண்பாடாக, உடனடியாகத் தீர்வுகாண வேண்டிய முரண்பாடாக உள்ளது. இந்த விவசாயத்தொழிலாளர்களில் சுமார் 70சதவீதம் தாழ்த்தப் பட்டமக்கள். இவர்கள் பொருளாதாரச் சுரண்டலுக்கு மட்டுமில்லாமல் சமுதாயஇழிவுகளுக்கும் உட்படுத்தப்படு கிறார்கள்.

## 2 ஏழை விவசாயிகள்:

சொந்தநிலம் இல்லாமல் வாரம்—குத்தகைக்கு சாகுபடி செய்யும் விவசாயிகளைப் பொதுவாக ஏழை விவசாயிகள் என்று குறிப்பிடலாம். இவர்களுக்கு சொந்தமாக ஏர் மாடுகள் இருக்கும். வாரத்திற்கோ, பங்கிற்கோ குத்த கைக்கோ. நிலம்எடுத்து அதில் சாகுபடி செய்பவர்களை தனிப்பிரிவாக எடுத்துக் கொள்ளலாம். இவர்கள் தாங்கள் சாகுபடி செய்யும் நிலத்தில் வேலை செய்வது போக மீதியுள்ள நேரத்தில் கூலி வேலைக்கும் போகி றார்கள். அதேசமயத்தில் தாங்கள் சாகுபடிசெய்யும்நிலத் தில் விதைப்பு, களையெடுப்பு, அறுவடை முதலியகாலங் களில் வேறு தொழிலாளர்களையும் வேலைக்கு அமர்த்தி, அவர்களுடையஉழைப்புச் சக்தியையும்பயன்படுத்திக் கொள் கிறார்கள்.

இவர்களுக்கு தாங்கள் சாகுபடி செய்யக் கூடிய நிலத்திற்கு உத்தரவாதமும் பாதுகாப்பும், நியாயமான வாரமும் கிடைக்க வேண்டியது. அவர்களுடைய முக்கியமான வர்க்க நலனாக இருக்கிறது, இவர்களுக்கு சாகுபடியாளராக செயல்படும் போது நிலவுடைமையாளர்களின் குண இயல்பும், கூலி வேலை செய்யும்போது விவசாயத் தொழிலாளிவர்க்கத்தின் குண இயல்பும் ஏற்படுகிறது.

இந்த ஏழை விவசாயிகள் சாகுபடியாளர்களாக செயல்படும் போது இவர்களுக்கு சாகுபடிக்கு நிலம் கொடுக்கும் நிலவுடைமையாளர்களால் நிலப்பிரபுத்துவ உறவு முறையில் சுரண்டப்படுகிறார்கள். இந்த சாகுபடியாளர்களின் நலன்களைப் பாதுகாக்கும் முறையில் சாகுபடியாளர்பாதுகாப்புச் சட்டமும் நியாய வாரச் சட்டமும்கொண்டு வரப்பட்டிருக்கின்றன.

நிலப்பிரபுக்களின் நிலவெளியேற்றக் கொடுமைகளையும் வாரம் குத்தகைக் கொடுமைகளை எதிர்த்தும் நடந்துள்ள மிகப் பெரிய விவசாயப் போராட்டங்கள் காரணமாகத் தான் இந்த இரண்டு சட்டங்களும் வந்தன. இருப்பினும் இந்த இரண்டு சட்டங்களும் சாகுபடியாளர்களுக்கு சில பாதுகாப்பு உரிமைகளைக் கொடுத்துள்ளது. ஆயினும் இந்த சட்டங்கள் சரியாக அமுல் நடத்தப்படவில்லை. சாகுபடியாளர் பதிவு நிலவுடைமையாளர்களுக்கு சாதகமாகவே செய்யப்படுகிறது. அதனால் அவர்களுடைய இதர விவசாயத் தொழில் பற்றிய பிரச்சனைகள் தீரவில்லை.

நிலம், நீர்ப்பாசனம், உரம், பயிர்ப்பாதுகாப்பு, கூலி, விளை பொருளுக்குக் கட்டுபடியாகும் விலை முதலியபிரச்சனைகள் இதர விவசாயிகளுக்கு இருப்பதைப் போலவே இவர்களுக்கும் இருக்கின்றன. இதில் முதலாளித்துவ அமைப்பு முறைக்கும் இவர்களுக்கும் தான் நேரடி முரண்பாடும் மோதலும் ஏற்பட்டிருக்கிறது. இவர்களுடைய, விவசாயத்திற்கு வேண்டிய இடுபொருள்களின் விலையும் கடனுக்குரிய வட்டியும்விளை பொருள்களுக்கு கட்டுபடியாகும் விலையும் முதலாளித்துவப் பொருளாதாரத்துடன் தொடர்பு கொண்டவை. இதில் இந்தப் பிரிவுத் தொழிலாளர்கள் கடுமையாக சுரண்டப்படுவது முதலாளித்துவத்தின் மூலமாகும்.

இதனால் இவர்களுடைய வர்க்கநலன் முதலாளித்துவ ஒழிப்பிலே தான் அடங்கியிருக்கிறது. குறிப்பாக நீர்ப்பாசனவசதி, நியாய விலையில் இடுபொருள், குறைந்த வட்டியில் சுலபமான கடன் வசதி, விளை பொருளுக்குக் கட்டுபடியாகும் விலை ஆகியவற்றில்அடங்கியிருக்கிறது. இவை முதலாளித்துவ வர்க்க நலனுக்கு எதிரானது.

## 3. சிறு விவசாயிகள் :

இவர்களுக்கு சொந்தமாகக் கொஞ்சம் நிலம் இருக்கும். ஏர் மாடுகளும் இருக்கலாம். இந்த விவசாயிகள் சொந்தமாக நிலத்தில் தங்கள் குடும்பத்தோடு உழைக்கிறார்கள். ஆயினும் தங்கள் சொந்த நிலத்திலிருந்து கிடைக்கும் வருவாய்மட்டும் இவர்களுடைய குடும்பத்திற்குப் போதாது. தங்கள் சொந்த நிலத்தில் வேலை செய்தது போக மீதி நேரங்களில் கூலி வேலைக்கும் செல்கிறார்கள்.

இவர்கள் கூலி வேலைக்குச்செல்லும் போது இதரவிவாசயத் தொழிலாளர்களின் நலன்களுடன்இணைந்துசெல்கிறார்கள். தங்கள் சொந்த நிலத்தில் வேலை செய்யும் போது, நீர்ப் பாசனம், மின்கட்டணம், கடன், ரசாயனஉரம் பூச்சிமருந்து, பொறுக்கு விதை, விளை பொருளுக்கு நியாய விலை முதலிய பிரச்சனைகள் காரணமாக நிலவுடமையாளர்கள் நலன் களையும் கொண்டிருக்கிறார்கள்.

தங்களுடைய சொந்த நிலத்தில் தாங்கள் வேலை செய்வது மட்டு மின்றி மற்ற விவசாயத் தொழிலாளர்களையும் வேலைக்குஅமர்த்தி அவர்களுடையஉழைப்பைச் சுரண்டவும் செய்கிறார்கள். இவர்களுக்குச் சொந்தமாக நிலம் இருப்ப தால் சொத்துடைமை உணர்வு நிலையும் இவர்களுக்கு இருக்கிறது. தங்களுடைய சொந்த நிலவுடமையை விரிவு படுத்திக் கொள்ளவும் தங்கள் வருமானத்தைப் பெருக்கிக் கொள்ளவும் விரும்புபவர்களாக இருக்கிறார்கள். ஆனால் முதலாளித்துவ மார்க்கட் சுரண்டல் காரணமாகவும் முதலாளித்துவ பொது நெருக்கடியின் காரணமாகவும் அவர் களுடைய வாழ்க்கை நிலை முன்னேறுவதற்கு முடியாமல் இருக்கிறது. அரசாங்க நிர்வாகத்தின் மூலமும் இவர்கள் மிகவும்புறக்கணிக்கப்படும்பகுதியினராகவே இருக்கிறார்கள்.

அரசாங்க அறிவிப்புகள், பிரகடனங்கள்மூலம் சிறுவிவ சாயிகள்பற்றி அடிக்கடிபேசப்பட்டாலும், பசுமைப் புரட் சியின் அனுகூலங்களை இந்தப்பிரிவு விவசாயிகள் மிகவும் குறைவாகவே பெறமுடிகிறது. உதாரணமாக கூட்டுறவு நாணயசங்கங்கள் கிராமப்புறங்களில் பெரும்பாலும் சற்று வசதிக்காரர்கள் அல்லது அரசியல் ஆதிக்கக்காரர்கள் பிடிப்பிலேயே இருக்கிறது. அதனால் கூட்டுறவு கடன் வசதிகள் சிறுவிவசாயிகளுக்கு சிறிதளவே கிடைக்கிறது.

உரம், பூச்சிமருந்து, விதைபோன்றவைகள் வாங்குவதில் சிறிய அளவிலேயே இவர்கள் வாங்க வேண்டியதிருப்பதால் விலையில்சற்று கூடுதலாகவே கொடுக்கவேண்டியதாகிறது. இவர்களுடைய விளைபொருள்களை விற்கும்போது சில்லறையாக விற்பதால் அவர்களுக்குச் சற்று குறைவான விலையே கிடைக்கிறது. அதனால் முதலாளித்துவ மார்க்கட் சுரண்டல் அமைப்பின் பளு சற்று அதிகமாகவே சிறு

விவசாயிகளின் மீது விழுகிறது. கடன் சுமையிலும் தனியாரிடம் தான் இவர்கள் அதிகம் சார்ந்திருப்பதால் வட்டிப் பளுவின் சுமையும் இவர்களுக்குச் சற்று அதிகம்.

இவைகளின் காரணமாகவே சிறு விவசாயிகள் வர்க்கத் தன்மைகளும், வர்க்க நலன்களும் சில தனிக் கூறுகளையும் கொண்டிருக்கின்றன.

மேலே கூறப்பட்டுள்ள மூன்று பிரிவுகளும்—அதாவது விவசாயத் தொழிலாளர்கள், ஏழை விவசாயிகள், சிறு விவசாயிகள் ஆகியவர்கள் தான். கிராமப் புறங்களில் உள்ள விவசாயத் துறையில் வேலை செய்யக் கூடிய பாட்டாளி மக்களில் பெரும்பகுதியினராக உள்ளார்கள். நமது நாட்டின் மக்கள் தொகையில் ஏறத்தாழ அறுபது சதவீதம் மக்கள் இவர்களாகவே உள்ளனர்.

இவர்களோடு சேர்ந்து கிராமப்புறங்களில் உள்ள உதிரிப் பாட்டாளிகளும் கிராமப் புறங்களின் அடிப்படை வர்க்கங்களாக இருக்கின்றனர். இவர்களில் மிகப்பெரும்பாலோர் சமுதாய ரீதியில் தாழ்த்தப்பட்டவர்களாகவும் பிற்படுத்தப் பட்டவர்களாகவும் இருக்கிறார்கள்.

இந்த அடிப்படை வர்க்கங்களின் பிரச்சனைகளே நமது நாட்டின் அடிப்படை சமுதாயப் பிரச்சனைகளாக இருக்கின்றன. இந்த எழுபது சதவீதம் மக்களுக்கு அடிப்படைத் தேவைகளை—உணவு, உடை, வீடு, கல்வி ஆகிய ஆதாரத் தேவைகளைக் கொடுப்பது என்பது அரசின், சமுதாயத்தின், மிக முக்கியமான கடமையாகிறது.

## 5 கிராமப்புற உதிரிப் பாட்டாளிகள்

உதிரிப் பாட்டாளிகள் கிராமப்புறங்களிலும் இருக்கிறார்கள். உதாரணமாகக் கைத்தறி நெசவாளர்கள், பீடித் தொழிலாளர்கள், கட்டிடத் தொழிலாளர்கள், ஐந் தொழில் தொழிலாளர்கள் முதலியவர்கள் தனித் தொழில்களில் ஈடுபட்டுள்ளவர்களாக கிராமப்புறங்களிலும் இருக்கிறார்கள்.

தென்னை, பனை மரத் தொழிலாளர்கள், தனித்தொழில் பிரிவாகப் பெரும்பாலும் கிராமப்புறங்களிலேயே வாழ்ந்து வருகிறார்கள்.

விவசாயத்துடன் இணைந்த கிராமப்புறப் பாட்டாளிகள் குறிப்பாக தச்சுப் பட்டறை, கொல்லுப் பட்டறை, மற்றும் விவசாய மக்களுடன் தொடர்பு கொண்ட சேவை

அமைப்புகளில் சலவை, முடித்திருத்தம் முதலிய பணி யாற்றும் தொழிலாளர்களும் கிராமப்புற உதிரிப்பாட்டாளி களாவர்.

கிராமப்புற உதிரிப் பாட்டாளிகள் பொதுவாக உதிரி வர்க்க மாகவே இருக்கிறார்கள். அவர்களுடைய தொழில் பிரிவு களுக்கு ஏற்றவாறு அவர்களுக்குப் பல்வேறு பிரச்சனைகள் இருக்கின்றன. இருப்பினும் அவர்களுக்கு வேலைப் பாது காப்பு, ஊதிய வசதிகள், சமூகப் பாதுகாப்பு கல்வி முதலிய அடிப்படைப் பிரச்சனைகளில், சமுதாயத்தோடு, ஆட்சி அமைப்போடு சம்பந்தப்பட்டிருப்பதால் அவர் களுடைய வர்க்க நலன்களில் ஒரே தன்மை இருக்கிறது.

இந்த உதிரிப் பாட்டாளிகள் உதிரியாகப் பல்வேறு தொழில்களிலும் ஈடுபட்டிருப்பதால் இவர்கள் ஒன்று சேருவது கடினமாக இருக்கிறது. அத்துடன் இவர்கள் ஒரே முதலாளியின் கீழே ஒரே நிறுவனத்தின் கீழே இல்லை. அதனால் இவர்களுடைய வர்க்க எதிரியை குறிப்பாக யார் என்று சுட்டிக்காட்ட முடியாமல் இருக் கிறது.

முதலாளித்துவ அமைப்பே நமது நாட்டின் உதிரிப் பாட்டாளி வர்க்கத்திற்கும் பொது எதிரியாக உள்ளது.

நமது நாட்டின் முதலாளித்துவப் பாதையில் ஏகாதி பத்தியத்தின் தலையீடும் ஏக போக முதலாளித்துவத் தின் செல்வாக்குப் பதிவும் உள்ளது. எனவே ஏகாதி பத்திய பன்னாட்டுக் கூட்டு நிறுவன ஏகபோக முதலாளித் துவச் சுரண்டலுக்கு எதிராக உதிரிப் பாட்டாளி வர்க்கத்தின் எதிர்ப்பையும் கூர்மைப் படுத்த வேண்டும்.

**நடுத்தர விவசாயிகள்:**

இவர்கள் கிராமப்புறங்களில் உள்ள நடுத்தர நிலவுடமை யாளர்களாவர். இவர்களுக்கு ஐந்து ஏக்கர் பத்து ஏக்கர் வரை நிலம் இருக்கும். ஏர் மாடு, கால்நடைகள் இவர்களுக்குச் சொந்தமாக இருக்கும். இவர்களுடைய நில வருமானம், பொதுவாக இவர்களுக்கு வாழ்க்கைக்குப் போதுமான தாக இருக்கும். நல்ல பருவ நிலை, நல்ல விளைச்சல் விலை உள்ள காலங்களில் இவர்களுக்கு சில நேரங்களில் உபரியும் கூட கிடைக்கலாம்.

இவர்களும் பெரும்பாலும் தங்கள் விவசாயத்தின் நிர் வாகத்தைத் தாங்களே நடத்துவார்கள். தங்கள் நிலத் தில் தாங்களும் உழைப்பார்கள், விவசாயத் தொழிலாளர் களையும் வேலைக்கு அமர்த்தி வேலை வாங்குவார்கள். இவர்கள் நமது கிராமப்புறங்களில் ஓரளவு செல்வாக்குப்

படைத்தவர்களாகவும் இருக்கிறார்கள். சில கிராமங்களில் இவர்களே கிராம ஆதிக்கம் கொண்டவர்களாகவும் இருக்கிறார்கள்.

பிரிட்டிஷ் ஆட்சிக்காலத்தில் இவர்கள் பெரும்பாலும் சுதேசி மன்னர்கள், ஜமீன்தார்களின் சுரண்டல் முறைகளுக்கு ஆளாகியிருந்தார்கள் அந்நிய ஏகாதிபத்திய நிலப்பிரபுத்துவ சுரண்டல் முறைகளிலிருந்து விடுதலைபெற்ற பிறகு இப்போது இவர்கள் முதலாளித்துவசுரண்டலுக்கு ஆளாக்கப் பட்டிருக்கிறார்கள். முதலாளித்துவ சுரண்டல் முறைநமது நாட்டில் மேலும் மேலும் தீவிரமடைந்து வருகிறது; அதனால்ஏற்படும் பாதிப்பும் அதிகமாகிவருகிறது. அதில் இந்த நடுத்தர விவசாயிகள் பிரிவும் கடுமையாகப்பாதிக்கப் பட்டுள்ளார்கள். நீர்ப்பாசனம், கடன், வட்டிக்கட்டணம் வரி, உரம், பூச்சிமருந்து, விவசாயக்கருவிகள், எரிபொருள் விசைசக்தி, விளை பொருளுக்குக் கட்டுபடியாகும் விலை உபயோகப் பண்டங்களின் விலை உயர்வு, வாழ்க்கைச் செலவு அதிகரிப்பு ஆகிய பிரச்சனைகளில், நடுத்தர விவசாயிகள் முதலாளித்துவ சுரண்டல் முறையால் மிகவும் கடுமையாகப் பாதிக்கப்படுகிறார்கள்.

முதலாளித்துவப் பொது நெருக்கடியும், முதலாளித்துவ அரசியல் நிர்வாகச் சீர்கேடுகளும் ஊழல்கள், அரசாங்க நிர்வாகத்தின் அழுத்தங்களும் இவர்களுடைய நிலை பாட்டைக் கடுமையாகப் பாதிக்கிறது.

நடுத்தர விவசாயிகள் சொந்த நிலவுடைமையாளர்களாக இருப்பதால் இவர்களுக்கு நிலப்பற்று, சொத்துடைமைப் பற்று அதிகமாகவே உள்ளது. விவசாய வேலைகளில் இவர்கள் பெரும்பாலும் விவசாயத் தொழிலாளர்களை வேலைக்கு அமர்த்தி வேலை செய்வதால், அவர்களின் உழைப்பையும் சுரண்டுகிறார்கள். நடுத்தர விவசாயிகள் கிராமப் புறங்களில் குறிப்பிட்ட அளவில் சுரண்டும் வர்க்கமாகவும் அதே சமயத்தில் முதலாளித்துவ அமைப்பி னால் கடுமையாக சுரண்டப்படும் வர்க்கமாகவும் இருக் கிறார்கள்.

விவசாய உற்பத்தித் துறையில் நடுத்தர விவசாயிகள் ஒரு குறிப்பிடத் தக்க பங்கை ஆற்றுபவர்களாக இருக்கிறார் கள். அத்துடன் கிராமப்புற வாழ்க்கையிலும் மிக முக்கிய மான பங்கை ஆற்றுபவர்களாகவும் இருக்கிறார்கள்.

நடுத்தர விவசாயிகள் நிலவுடைமையாளர்களாக இருப்ப தால் நிலப்பற்றும், தங்கள் நிலவுடைமையை, சொத்துடைமை யை விரிவுபடுத்திக் கொள்ள வேண்டும். அதிகப் படுத்திக் கொள்ள வேண்டும் என்னும் ஆசை உள்ளவர்

களாகவும் இருக்கிறார்கள். ஆனால் இன்றைய முதலாளித்துவ சுரண்டல் முறையினால் அவர்களுடைய ஆசை நிறைவேறுவதில்லை என்பது மட்டுமல்ல, முதலாளித்துவ மார்க்கட் பொருளாதாரத்தால் நடுத்தர விவசாயிகளும் நாளுக்கு நாள் கடுமையாக சுரண்டப்பட்டு ஒட்டாண்டிகளாகிக் கொண்டு வருகிறார்கள். கடனாளிகளாகி வருகிறார்கள்.

கிராமப்புற விவசாயிகள்பட்டுள்ளகடன் பளுவில் இவர்களுடைய பங்கு மிகவும் கணிசமானஅளவில்உள்ளது. விவசாய உற்பத்தித்துறையில் தொடக்கத்திலிருந்து முடிவு வரை இவர்கள் முதலாளித்துவ அமைப்பால் சுரண்டப்படுகிறார்கள் என்று கூறலாம்.

நிலவரி, நீர்ப்பாசனவரி, மின்சாரக்கட்டணம் ஆகியவைகளின்உயர்வும், பாக்கிகளும் இவர்களுடைய மென்னியைப் பிடிக்கின்றன. மின்கட்டணஉயர்வும், டீஸல் விலைஉயர்வும், பஸ், லாரி ரயில்கட்டணஉயர்வும் உற்பத்திக்கருவிகளின் விலைஉயர்வும்விவசாயிகளின்உற்பத்திச்செலவை உயர்த்தி, நடுத்தர விவசாயிகளைச் சேற்றில் அழுத்துகிறது. ரசாயன உர விலை உயர்வும், பூச்சி மருந்துகளின் விலை உயர்வும் பொருக்கு விதைகளின் விலை உயர்வும் இவர்களின் கழுத்தை நெரிக்கிறது. அத்துடன் இந்தப் பொருள்களின் தரக்குறைவும் விவசாயிகளின் அடி வயிற்றில் அடிக்கிறது.

தொடர்ச்சியாகவும் ஒவ்வொரு வேலைக்கும் விவசாயிகள் வாங்கும் கடனுக்கு வட்டியும் அபராத வட்டியும் வட்டிக்கு வட்டியும் அவர்களுடைய கழுத்தில் மாட்டியுள்ள சுருக்கை மேலும் இறுக்கிக் கொண்டிருக்கிறது. இப்போது விவசாயிகள் பட்டுள்ள கடன் சுமையும் அதன் வட்டிச் சுமையும் அவர்களுடைய சொத்து மதிப்பையும் தாண்டிப் போய்க் கொண்டிருக்கிறது.

விவசாய உற்பத்திப் பொருள்களின் விலைதான் கடைசியாக விவசாயிகளை இப்போது முழுமையாக அழுத்திக் கொண்டிருக்கிறது. நடுத்தர விவசாயிகள் பெரும்பாலும் மார்க்கட்டிற்காகவே உற்பத்தி செய்கிறார்கள். இந்திய மார்க்கெட் இந்திய முதலாளித்துவத்தின் பிடிப்பிலும் உலக முதலாளித்துவ மார்க்கெட்டைச் சார்ந்தும் இருக்கிறது.

விவசாயிகளின் உற்பத்திப் பொருள்களின் விலை மூலம் அவர்கள் கொள்ளையடிக்கப்படுவது இதர வரி கட்டணம் வட்டி முதலியவைகளையும் மிஞ்சி விடுகிறது. அநேகமாக விவசாய உற்பத்திச்செல்வத்தில் பாதிக்கு மேல் முதலாளித்துவ சந்தை மூலம், விலையின் மூலம் சுரண்டப்படுகிறது. எனக் கூறலாம். இதனால் நடுத்தர விவசாயிகள் மிகவும்

கடுமையாக பாதிக்கப்படுகிறார்கள் என்று கூறலாம். விவசாயிகளின் விளை பொருள்களுக்குக் கட்டுபடியாகும் விலை என்பது நடுத்தர விவசாயிகளின் மிக முக்கியமான வர்க்க நலன் என்று கூறலாம்.

இதில் விவசாயிகளின் நலனுக்கும் இந்திய முதலாளித்துவ முறைக்கும் இடையில் உள்ள முரண்பாடு இன்றைய இந்திய சமுதாயத்தின் மிக முக்கியமான முரண்பாடுகளில் ஒன்றாக இந்திய முதலாளிகளுக்கும் இந்திய மக்களுக்குமிடையிலான முரண்பாட்டின் முக்கிய பகுதியாக வெளிப்பட்டு வருகிறது. இதில் நடுத்தர விவசாயிகளின் பங்கு முக்கிய இடத்தைப் பெற்றிருக்கிறது.

நடுத்தர விவசாயிகளின் குடும்பங்களில் உள்ளவர்கள்பெரும் பாலும் ஓரளவு படித்தவர்களாகவும், நவீன உற்பத்தி முறை களில் தொடர்பு கொண்டவர்களாகவும், அரசாங்கநிர்வாகத் துடன் தொடர்பு கொண்டவர்களாகவும் கூட்டுறவு பஞ்சாயத்து முதலிய அமைப்புகளுடன் மிகவும் நெருக்கம் உள்ளவர்களாகவும் இருக்கிறார்கள்.

இந்திய ஜனநாயகப்புரட்சியில் இவர்களுடைய பங்குமுக்கிய இடம் பெறுகிறது. விவசாயிகளின் இயக்கத்திற்கு நல்ல செயல் வீரர்களைக் கொடுக்கும் சக்தியைப் பெற்றிருக் கிறது.

இந்தப் பகுதி விவசாயிகளிடத்தில், இந்திய விவசாய உற் பத்தியின் முக்கியபிரச்சனைகளைப்பற்றிய உண்மையான ஞானம் அதிகப்படவேண்டும். முதலாளித்துவ சுரண்டல் முறையின் உண்மைவடிவம் அவர்களுக்குத் தெளிவுபட வேண்டும். புரட்சிகர ஜனநாயக உணர்வுநிலை அவர் களிடம் வளரவேண்டும்.

## 6 பணக்கார விவசாயிகள்:

பணக்கார விவசாயிகள் என்பவர்கள், கிராமப்புறங்களில் உள்ள வசதியான விவசாயிகளாவர். தங்கள் குடும்பத் தேவைக்கும் சற்று அதிகமாகவே நிலஉடமை உள்ளவர்கள், ஏர் மாடு கால்நடைகள் உடையவர்கள், பெரும்பாலும் தங்கள் தேவைக்கு மேல் சற்று உபரியாகவே உற்பத்தி செய் பவர்கள்; தங்கள் விவசாயத்தைத் தாங்களே நேரில் பார்வை யிட்டு விவசாயத்தைச் செய்பவர்கள், தங்கள் விவசாயத் தொழில் நிர்வாகத்தை தாங்களே நடத்துபவர்கள், தங்கள் விவசாய வேலைகளுக்கு விவசாயத் தொழிலாளர்களை வேலைக்கு அமர்த்தி வேலை வாங்குபவர்கள்.

விவசாயத் தொழிலாளர்களின் கூலி உழைப்பின்மூலமாகவே தங்கள் விவசாய வேலைகளைச் செய்து வருபவர்கள்.

இவர்கள் விவசாயத் தொழிலாளர்களின் உழைப்பைச் சுரண்டுவதன் மூலமே தங்கள் விவசாய உற்பத்தியைச் செய்து வருகிறார்கள்.

பிரிட்டிஷ் ஆட்சிக்காலத்தில் இவர்களும்கூட சுதேசி மன்னர்கள், ஜமீன்தார்களின் நிலப்பிரபுத்துவ சுரண்டலுக்கு உட்பட்டவர்கள்தான். ஆனால் நாடு விடுதலை பெற்ற பிறகு சுதேசிமன்னர் முறையும் ஜமீன்தாரி முறையும் ஒழிக்கப்பட்டபிறகு. இப்போது நேரடியான நில உடமையாளர்களாக மாறிஉள்ளார்கள். பெரும்பாலும் நமது நாட்டில் இந்த பிரிவினர் தங்கள் விவசாயத்தை நவீனப்படுத்தியிருக்கிறார்கள் என்று கூறலாம். நவீன விவசாயக்கருவிகள், ரசாயனஉரம், பூச்சிமருந்து, நவீனரக வீரிய வித்துகள் முதலியவைகளைப் பயன்படுத்துவதில் இவர்கள் முதலிடம் வகிக்கிறார்கள். பசுமைப்புரட்சியின் பலன்களை இவர்கள் நன்குபெற்றார்கள் எனக்கூறலாம். இவர்கள் கிராமப்புறமக்கள் தொகையில் ஒருசிறியபகுதி தான்என்றாலும், சுமார் இருபதுசதவீதத்திற்கு மேற்பட்ட விளைநிலம் இவர்கள் கையில் இருப்பதாக அரசு புள்ளிவிவரங்கள் கூறுகின்றன.

நில உச்ச வரம்பு சட்டங்களால் இவர்களுடைய நிலவுடமை கட்டுப்படுத்தப்பட்டபோதிலும்இவர்கள்ஓரளவு நிலவுடமையை தங்கள் கைக்குள் வைத்திருக்கிறார்கள் எனக் கூறலாம்.

கிராமப்புறங்களில் இவர்கள் இதரமக்கள் பகுதிகளில் செல்வாக்குள்ளவர்களாகவும் ஆளும் வர்க்கத்தின் அஸ்திவாரமாகவும் இருக்கிறார்கள் என்று கூறலாம்.

இந்திய நாட்டின் முதல் மூன்று ஐந்தாண்டுத்திட்டகாலங்களில் இவர்களுடைய வளர்ச்சி குறிப்பிடத்தக்கதாக இருந்தது. ஆயினும் 1970ம் ஆண்டுகளின் தொடக்கத்திலிருந்து முதலாளித்துவ நெருக்கடியின் வளர்ச்சியை ஒட்டி இவர்களுடைய நிலையும் பாதிக்கப்படத் தொடங்கியிருக்கிறது என்று தெளிவாகக் கூறலாம். மிகவும் குறிப்பாக முதலாளித்துவ மார்க்கெட் பொருளாதாரம்தான் இவர்களையும் பெரிதும் பாதித்துள்ளது.

விவசாய உற்பத்தித் துறையிலும் இடுபொருள் விளைபொருள் விலையிலும் இவர்களும் நடுத்தர விவசாயிகளைப் போலவே கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளார்கள்.

வரி, வட்டி, கட்டணங்களினாலும், விவசாயக் கருவிகள், உரம், பூச்சி மருந்து ஆகியவற்றின் விலை உயர்வாலும், விவசாய விளை பொருள்களுக்குப் போதுமான விலை இல்லாததாலும், இவர்களுக்கு விவசாயத் தொழில் லாபகரமானதாக இல்லை. வேறு உபரி, துணை தொழில்கள்

இல்லாமல் விவசாயத்தை மட்டுமே நம்பியிருக்கும் பணக்காரவிவசாயிகளும்பாதிக்கப்பட்டு கடனாளிகளாகியுள்ளார்கள் எனக்கூறலாம்.

விவசாயத்துறையில் முதலாளித்துவ மார்க்கட் சுரண்டல் காரணமாக ஏற்பட்டுள்ள பாதிப்புகளை எதிர்த்துள்ள போராட்டத்தில் இவர்களும் சேருகிறார்கள்.

முதலாளித்துவ மார்க்கட் பிடிப்பில் உள்ள இந்திய முதலாளித்துவத்திற்கும்,கிராமப்புற பணக்கார விவசாயிகளுக்கும் இடையிலுள்ள முரண்பாடு மிகமுக்கிய முரண்பாடுகளில் ஒன்றாகும். இதில் கிராமப்புற பணக்கார விவசாயிகளின் நலன்களும், இந்திய முதலாளித்துவத்தின் பொது நலன்களும் எந்த விதத்திலும் ஒத்துப் போகாது. இந்த உள் முரண்பாடு மேலும் மேலும் தீவிரமடையும். அது முதலாளித்வ ஒழிப்பிலேதான் தீரும். எனவே கிராமப்புறங்களில் உள்ள பணக்கார விவசாயிகளும் இந்திய ஜனநாயகப்புரட்சியில் பங்கு வகிக்கிறார்கள். இந்தப்பகுதி ஒரு ஊசலாட்டமான பகுதிதான் என்றாலும், ஜனநாயகப் புரட்சியில், இந்திய முதலாளித்வப் பாதைக்கு எதிரான போராட்டத்தில் இவர்களும் கட்டாயம் இணைக்கப்பட வேண்டியவர்களாகும்.

## 7. நிலப்பிரபுத்துவ மிச்ச சொச்சங்கள்:

ரயத்துவாரிபகுதிகளில்இருந்த பெரிய நிலச்சுவான்தார்கள், ஜமீன்தாரர்கள் சுதேசி மன்னர்களின் பண்ணை நிலங்கள், கோவில்கள் மடங்கள் மற்றும் மத நிறுவனங்களுக்குச் சொந்தமான நிலங்கள், உச்சவரம்புச் சட்டங்களிலிருந்து விதிவிலக்கு பெற்ற நிலவுடமையாளர்கள், பினாமி நிலவுடமையாளர்கள் முதலிய பகுதியினர், சில இடங்களில் இன்னும் குவியலாக நிலங்களை வைத்துக் கொண்டிருக்கிறார்கள். அவைகள் எல்லாம் வாரம் குத்தைகைக்கு சாகுபடி செய்யப்படுகிறது. இவையெல்லாம் நிலப்பிரபுத்வமிச்ச சொச்சங்களாகும். இவையெல்லாம் நிலச் சீர்திருத்தச் சட்டங்களின் கீழ் கொண்டுவரப் பட்டு முழுமையாக ஒழிக்கப்படவேண்டியவைகளாகும். அரசாங்கம் நிலச் சீர்திருத்தம் பற்றி எவ்வளவுதான் உரக்கக் கூவினாலும், இன்னும் இந்த நிலப்பிரபுத்வ நிலக்குவியல் நாட்டின் பல பகுதிகளில் நீடிக்கின்றன. அவைகள் எல்லாம் நிலமில்லாதவிவசாயிகளுக்கு சொந்தமாக்கப்பட வேண்டும்.

நிலவிநியோகத்தில் முழுமை பெறாமல்இன்னும் சாகுபடிக்கு லாயக்கான தரிசு நிலங்கள், ஆற்றோரப்படுகைகள், மரங்கள் வளர்ப்புக்கு லாயக்கான இடங்கள் ஏராளமாக நமது நாட்டில் இன்னும் மிச்சமிருக்கிறது. அவையெல்லாம் சரியான முறையில் நிலமில்லா விவசாயிகளுக்கும்

ஏழை விவசாயிகளுக்கும் சிறு விவசாய குடும்பங்களுக்கும், விநியோகம் செய்ய வேண்டும். நிலச்சீர் திருத்தம் முழுமைப் படுத்தப்பட வேண்டும்.

## 8. முதலாளித்துவ நிலப்பண்ணைகள்

நாட்டில் முதலாளித்துவ வளர்ச்சியை ஒட்டி, முதலாளித்வ வளர்ச்சி ஏற்பட்டுள்ள பகுதிகளில் நிலப்பண்ணை முறைகளில் சில புதிய மாற்றங்களும் ஏற்பட்டிருக்கின்றன. குறிப்பாக நகரப்புறங்களில் வளர்ச்சியடைந்துள்ள ஆலை முதலாளிகள் நவீன முறையில் விவசாயப் பண்ணைகள் பழத்தோட்டப் பண்ணைகள், கால்நடைப் பண்ணைகள் உருவாக்கியிருக்கிறார்கள். இத்தகைய விவசாயப் பண்ணைகள் பெரிய சிறிய தொழில் நகரங்களைச் சுற்றிலும் வந்துள்ளன. மற்றும் சிறிய முதலாளிகளும் கூட உதாரணமாக, கைத்தறி விசைத்தறி சிறிய மில் முதலாளிகள், தீப்பெட்டி, பட்டாசுத் தொழிற்சாலை முதலாளிகள், பனியன் கம்பெனி முதலாளிகள், விவசாயத்துடன் தொடர்பு கொண்ட அரிசி ஆலை, மாவுமில், எண்ணெய் ஆலை, சாக்கு ஆலைகள் முதலிய சிறு தொழில் நடுத்தரத் தொழில் ஆலை முதலாளிகளும் சிறிய நடுத்தர விவசாயப் பண்ணைகளை நவீன முறையில் நிறுவியிருக்கிறார்கள். இவைகளும் முதலாளித்வ நெருக்கடியினால் ஓரளவு பாதிக்கப்பட்ட போதிலும், இந்த ஆலை முதலாளிகளின் கருப்புப் பணத்தின் மூலம், இந்தப் பண்ணைகள் பாதுகாக்கப்பட்டு வளர்க்கப்படுகின்றன. இவைகள் ஒரு சிறிய பகுதியேயாகும். இதில் வேலை செய்யும் விவசாயத் தொழிலாளர்களின் வேலைப் பாதுகாப்பு, ஊதிய வசதிகள், சமூகப் பாதுகாப்பு வசதிகள் மிக முக்கிய பிரச்னைகளாகும்.

இத்தகைய முதலாளித்வப் பண்ணைகள், தமிழ் நாட்டில் சென்னை, கோவை, மதுரை, திருச்சி, சேலம், திருப்பூர், திண்டுக்கல் முதலிய நகரங்களைச் சுற்றிலும், செங்கல்பட்டு, கோவை, சேலம், அண்ணா, காமராஜர் மதுரை, மாவட்டங்களிலும் சிறிய அளவில் இடம் பெற்றிருக்கின்றன. இவைகளில் பணியாற்றும் தொழிலாளர்கள் ஸ்தாபன ரீதியிலும் திரட்டப்பட வேண்டும்.

## 9 பலவகை நிலவுடமையாளர்கள்

பிரிட்டிஷ் ஆட்சி ஏற்பட்ட பின்னர் நிலப்பட்டா முறை பழக்கத்திற்கு வந்தது. அதன் மூலம் நிலம் விற்பனைப் பொருளாக ஆக்கப்பட்டது. அதன் பின்னர் பணம் படைத்தவர்கள் நிலத்தை ஒரு சொத்தாக விலைக்குவாங்கி வைத்துக் கொள்வது என்பது பழக்கமாகிவிட்டது.

இப்போதும் கிராமப்புறங்களிலும் நகரப்புறங்களிலும் பல வேறு தொழில்களைச் செய்து கொண்டிருப்பவர்களில்

உள்ள ஓரளவு பணம் படைத்தவர்கள் அரசாங்க உத்தியோகங்களில் உள்ளவர்கள், வேறுபல வேலைகளில் உள்ளவர்கள் தங்கள் சேமிப்புகளை வைத்து நிலம் வாங்கி வைத்திருக்கும் நிலவுடைமையாளர்கள், சிறு தொழில் வியாபாரம் முதலியவைகளில் ஈடுபட்டுள்ளவர்கள், தங்கள் சேமிப்புகள் லாபத்தை வைத்து நிலத்தை வாங்கி வைத்திருக்கும் நிலவுடைமையாளர்கள் பலரும் இருக்கிறார்கள் இத்தகைய நிலவுடைமையாளர்களின் எண்ணிக்கை அண்மைக் காலத்தில் அதிகமாகியிருக்கிறது. ஒருபக்கம் நிலத்தில் நேரடியாக சாகுபடி செய்யாமல் வாரக் குத்தகைக்கு நிலத்தை விட்டுக் கொண்டிருந்தவர்கள், பல்வேறு நிலச் சட்டங்கள் வந்துள்ளதால், நிலத்தை வைத்துக் கொண்டிருக்க விரும்பாமல், அதை விற்று விட்டு நகரங்களுக்கு வேறு தொழில்களுக்கும் உத்தியோகங்களுக்கும் சென்றதும் உண்டு. மறுபக்கம் பல்வேறு தொழில்களை, செய்து கொண்டும் உத்தியோகங்களில் வேலை செய்து கொண்டும் இருந்தவர்கள், இன்னும் சிலர் பஞ்சாலை முதலிய ஆலைகளில் வேலை செய்து கொண்டிருந்தவர்கள் கூட வேலையிலிருந்து ஓய்வு பெற்ற பின்னர், தங்கள் சேமிப்புகளைக் கொண்டு நிலம் வாங்கி நவீனமுறையில் கூலி ஆள் போட்டு விவசாயம் செய்வதும் சிறிதளவில் வளர்ந்து வருகிறது. இதில் பெரும்பாலும் சிறு விவசாயிகள் தங்களுடைய நிலத்தை விவசாயம் கட்டுபடியாகாமல் விற்று விட்டு, விவசாயத் தொழிலாளர்களாக மாறியுள்ளார்கள், மேலும் மாறி வருகிறார்கள்.

இவர்கள் சில்லரை நிலவுடைமையாளர்களாக இருந்தாலும் பெரும்பாலும் நடுத்தர விவசாயிகளின் தரத்தில் சொல்லலாம். ஆனால் இவர்களுக்கு வேறுவகை வருமானங்களும் இருப்பதால் விவசாயத்தால் ஏற்படும் நஷ்டம் அவர்களை பெரிய அளவில் பாதிப்பதில்லை. கடன் இல்லாமல் சொந்தப் பண வசதிகளைக் கொண்டு, கூலி உழைப்பைக் கொண்டு விவசாயத்தை நடத்துவதால் இவர்களுக்கு விவசாயம் சிறிதளவிலாவது துணையான லாபகரமான தொழிலாகவே உள்ளது. இவர்களுக்கு வேறு பல பொருளாதார பிணைப்புகளும் இருப்பதால் விவசாயிகளுடைய இயக்கத்தில் முனைப்பாக வரமாட்டார்கள். அதே சமயத்தில் பொதுவான விவசாயிகளின் நலன்களுக்கு விரோதமாகவும் போக மாட்டார்கள். நடுநிலையாக இருந்து கொள்ளும் வாய்ப்பு இவர்களுக்கு அதிகம்.

ஜனநாயகப்புரட்சியில் செயலூக்கத்துடன் பங்குகொள்ளும் வர்க்கங்கள் மட்டுமல்லாது, நடுநிலை வகிக்கும் வர்க்கப் பகுதிகளும் கூட முக்கியமானதாகும். நடுநிலைப்பகுதிகளின் பொது ஆதரவைப் பெறுவதற்கு முயற்சிப்பதும் மிகவும் அவசியமானதாகும்.

## 10 சிறுவியாபாரிகள் மற்றும் இதரவர்த்தகப் பிரிவுகள்:

கிராமப்புறங்களில் உள்ள வர்த்தகப் பிரிவுகள் இருவகைப் பட்டதாகும். ஒன்று பொது மக்களுக்கு தேவையான விவசாயிகளுக்குத் தேவையான பண்டங்களை விற்பனை செய்யும் சிறு வியாபாரிகளாகும்.

இரண்டாவது விவசாயிகளிடமுள்ள பொருள்களை வாங்கி முதலாளித்துவ நிறுவன்ங்களுக்கு அனுப்பும் ஏஜண்டுகள், தரகர்களாகும்.

இந்த இரண்டு பிரிவுகளும் முதலாளித்துவ அமைப்பு முறையில் உள்ள உற்பத்திவினியோக முறையின் பகுதியாகும். முதலாளித்துவ முறையில் உள்ள வியாபாரமுறையே கழுத்தறுப்பு வேலையாகும். ஒருவருக்கொருவர் ஏமாற்றி மோசடி செய்து லாபம் சம்பாதிக்கும் தொழிலாகும்.

முதலாளித்துவ முறையில் வியாபாரம் என்பதே குறைந்த விலைக்கு வாங்கி அதிக விலைக்கு விற்பதாகும். குறைந்த விலைக்கு வாங்குவது என்பது பொருள் உள்ளவரிடம் ஏமாற்றி அந்த சரக்கை பல வகையில் தரத்தைக் குறைத்துக் கூறி விலையைக் குறைத்து வாங்குவதாகும். அதிக விலைக்கு வ்ற்பது என்பதும் வாங்குபவரை ஏமாற்றி விற்பனைப் பொருளைப்பற்றி உயர்த்திப் பேசி அதிக விலைக்கு விற்பனை செய்வதாகும். இரண்டிலும் ஏமாற்று தலே அடிப்படையாக அமைந்துள்ளது. விவசாயிகளுக்கு பண்டங்களை விற்பனை செய்வதிலும் விவசாயிகளிட மிருந்து அவர்களுடைய உற்பத்திப் பொருள்களை வாங்குவதிலும் அவர்கள் ஏமாற்றப்படுகிறார்கள்.

விவசாயத்திற்கு வேண்டிய இடு பொருள்களான விவசாய உற்பத்திக் கருவிகள், ரசாயன உரம், பூச்சி மருந்துகள் முதலிய பொருள்கள் மட்டுமல்லாமல், கிராமப்புற மக்களுக்குத் தேவையான அத்தியாவசியப் பண்டங்களான துணி, எண்ணெய், சர்க்கரை, வீட்டுக்கு வேண்டிய பொருள்கள், மின்சார சாதனப் பொருள்கள் முதலி யனவும். விலை ஏறிக்கொண்டே போகிறது. இதனாலும் விவசாயிகள் நாளுக்கு நாள் நஷ்டமடைந்து கொண்டி ருக்கிறார்கள். ஏழ்மையடைந்து கொண்டிருக்கிறார்கள். விவசாயிகள் வாங்கும் பொருள்களுக்கும் விற்பனை செய்யும் பொருள்களுக்கு மிடையிலான இடைவெளி விவசாயிகளுக்கு பாதகமான முறையில் நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டே வருகிறது.

கிராமப்புறங்களில் உள்ள சிறு வியாபாரிகளும் வர்த்த கர்களும் முதலாளித்துவ மார்க்கட் அமைப்பில் முதலாளி களுக்கும் விவசாயிகளுக்கும் இடையில் உள்ள ஏஜன்டு களாக தரகர்களாக, புரோக்கர்களாக இருக்கிறார்கள். இவர்கள் முதலாளித்வ அமைப்புடன் சேர்ந்த ஒட்டுண்

ணிகளாகும். முதலாளித்துவம் மறையும் போது இந்தப் பிரிவும் மறைந்து போகும். அதுவரை இந்தப் பகுதியினரை தார்மீக அளவில் நடுநிலைப்படுத்தலாம்.

## 11. முதலாளித்துவ வர்க்கம் :

முதலாளித்துவ சமுதாய அமைப்பில் முதலாளிகளும் ஆலைத் தொழிலாளிகளும் அடிப்படை வர்க்கங்களாகும். இந்தியா போன்ற நாடுகளில் முதலாளித்வவர்க்கத்திலும் பல பிரிவுகள் உள்ளன. சிறு முதலாளிகள், நடுத்தர முதலாளிகள், பெரிய முதலாளிகள், ஏக போக முதலாளிகள், ஏகாதிபத்திய அந்நிய முதலாளிகளுடன், பன்னாட்டு கூட்டு நிறுவனங்களுடன் நேரடியாகத் தொடர்பு கொண்டுள்ள இந்திய ஏகபோக முதலாளிகள் முதலிய பிரிவுகள் உள்ளன.

இந்த முதலாளித்வ பிரிவுகள் கண்ணுக்குத் தெரியாமல் இன்றைய இந்திய கிராமப்புற வாழ்க்கையின் அனைத்து அம்சங்களிலும் முதலாளித்வ சாயல்கள் படிந்துள்ளன.

இந்திய முதலாளித்வ முறையின் செயல்பாட்டில் இந்தியாவின் ஏகபோக முதலாளிகளும்,பன்னாட்டு கூட்டு நிறுவனங்களும் அதிக செல்வாக்கைச் செலுத்துகிறார்கள். ஆயினும் இந்திய முதலாளித்வம் மொத்தமாக எடுத்துக் கொண்டால் இந்தியாவை ஒரு சுயேச்சையான முதலாளித்வப் பாதையிலே இட்டுச் சென்று கொண்டிருக்கிறது. இந்த முதலாளித்வப் பாதைக்கு ஏகபோக முதலாளிகளும் பன்னாட்டு கூட்டு நிறுவனங்களும் செல்வாக்குமிக்க சக்தியாகத் திகழுகின்றன.

## 12. முதலாளித்துவப் பாதையின் முரண்பாடுகள்

இந்த முதலாளித்துவப் பாதையின் முரண்பாடுகள்தான் இந்திய விவசாயிகளை சுரண்டிக்கொழுக்கும் முக்கிய முரண்பாடாக இருக்கிறது. எனவே இந்திய விவசாயிகள் புறநிலையில் முதலாளித்வத்தால் முதலாளித்வப்பாதையால் முதலாளித்வ அரசாங்கத்தால் மிகவும் கடுமையாக பாதிக்கப்படும் வர்க்கமாக இருக்கிறது.

எனவே இந்திய விவசாயிகள், இந்திய முதலாளித்வத்தை நேரடியாக எதிர்த்துப் போராடிக்கொண்டிருக்கும் இந்தியத் தொழிலாளி வர்க்கத்திற்குத் துணையான, துணை அடிப்படை வர்க்கமாக அமைந்திருக்கிறது.

இந்திய விவசாயி வர்க்கத்திற்குள் விவசாயத் தொழிலாளர்கள், ஏழை விவசாயிகள் சிறு விவசாயிகள், நடுத்தர விவசாயிகள், பணக்கார விவசாயிகள், உதிரிப்பாட்டாளிகள், உதிரி நிலவுடைமையாளர்கள் முதலியவர்களுக்கிடையில் உள்ளமுரண்பாடுகள் சகோதர வர்க்கங்களுக்கிடையிலுள்ள முரண்பாடுகளாக, இரண்டாம் நிலையிலுள்ள முரண்பாடு

களாகப் புரிந்துகொள்ள வேண்டும். முதலாளித்வப் பாதைக்கு எதிரான முரண்பாடுகளை பிரதான முதல்நிலை முரண்பாடாகக் கொள்ளவேண்டும்.

எனவே இந்திய விவசாயிகள், ஏகாதிபத்திய தலையீடுகளையும், நிலப்பிரபுத்வத்தின் மிச்ச சொச்சங்களையும் ஏகபோக முதலாளித்வத்தின் ஆதிக்கத்தையும் எதிர்த்துப் போராடும் போது அந்த வர்க்கப் போராட்டத்தை முதலாளித்வப் பாதைக்கு எதிரான முதலாளித்வமல்லாத பாதைக்கான சோஷலிஸ திசை வழிக்கான போராட்டமாக வளர்க்க வேண்டும். அதில் அனைத்து விவசாயிகளின் பகுதிகளையும் உதிரிப் பாட்டாளிகளையும் ஒன்று திரட்டவேண்டும்.

நமது கிராமப்புறங்களில் உள்ள மேலே குறிப்பிட்டுள்ள வர்க்கப்பிரிவுகளும் வர்க்க அமைப்புகளும் நகரப்புறவர்க்கப் பிரிவுகளுடனும் வர்க்க அமைப்புகளுடனும் இணைந்தவைகளாகும்.

நமது நாட்டின் பிரதான உற்பத்திமுறை முதலாளித்வ உற்பத்தி முறையாக உள்ளது. அதில் பிரதான அடிப்படையான வர்க்கங்கள் தொழிலாளி வர்க்கமும் முதலாளி வர்க்கமும் ஆகும்.

இந்திய நாட்டின் தொழிலாளி வர்க்கம் நகரப்புறங்களில் தனியான வர்க்கமாக வளர்ந்துள்ளது. இருப்பினும் நமது நாட்டுத் தொழிலாளி வர்க்கத்திற்கு இன்னும் கிராமங்களுடனும் தொடர்பு இருக்கிறது. கிராமப்புற மனோபாவங்களும் அவர்களிடம் நீடிக்கிறது.

நமது நாட்டின் தொழிலாளி வர்க்கம் நமது ஜனநாயகப் புரட்சியில் புறநிலையில் கடைசிவரையில் உறுதியாக நிற்கக்கூடிய வர்க்கமாகும். முன்னணியில் நிற்கக்கூடிய தலைமையான வர்க்கமும் ஆகும்.

அத்துடன் நகரப்புறங்களில் சிறு வியாபாரிகள், வர்த்தகர்கள், பணியாளர்கள், படிப்பாளிகள், உத்தியோகம் பார்ப்பவர்கள், சொந்தத் தொழில் செய்பவர்கள், வக்கீல்கள், டாக்டர்கள், என்ஜினியர்கள். வல்லுநர்கள், விஞ்ஞானிகள், முதலிய பல பிரிவு நடுத்தர வர்க்கங்களும் உள்ளனர். இவர்களுள் பலவகை ஊசலாட்டங்கள் இருப்பினும் இவர்கள் ஜனநாயகப்புரட்சி இயக்கத்தில் சேர்க்கப்பட வேண்டியவர்கள்.

விவசாயிகளின் புரட்சிகர இயக்கங்கள், நாட்டின் ஜனநாயகப் புரட்சி வெற்றி பெறுவதற்கு, கிராமப்புறப் பாட்டாளிகள், நகரப்புறப் பாட்டாளிகளின் ஒற்றுமையும், கிராமப்புற நடுத்தர மக்களின் ஒற்றுமையும் மிகவும் அவசியமானதாகும். அத்தகைய ஒற்றுமைக்கான முயற்சிகள் தொடர வேண்டியதும் அவசியமானதாகும்.

★

9

# புதிய வெடிப்புகளும் போராட்டங்களும்

1945—50ம் ஆண்டுகளில் இந்திய விவசாயிகளின் போராட்டம் ஆங்கிலேய ஆட்சிக்கு எதிராகவும், இந்திய நிலப்பிரபுக்களுக்கு எதிராகவும், ஜமீன்தாரி முறைக்கும் சுதேசி மன்னராட்சி முறைக்கும் எதிராகவும், லேவாதேவிக் கொடுமைக் கெதிராகவும் மிகவும் கடுமையாக எழுந்தது. தஞ்சையில் பண்ணை அடிமை முறைக்கு எதிரான போராட்டம் முதல் தெலுங்கானா விவசாயிகளின் ஆயுதம் தாங்கிய போராட்டம் வரை எழுச்சி மிக்க போராட்டங்கள் நடந்தன. தமிழ் நாட்டில் தஞ்சை இராமநாதபுரம், தென்ஆற்காடு, சேலம், நெல்லை போன்ற பகுதிகளிலும் கேரளா, ஆந்திரா, வங்காளம், பீகார், மகாராஷ்டிரா, உத்தரப்பிரதேசம், பஞ்சாப், காஷ்மீர், மாநிலங்களிலும் எழுச்சிமிக்க விவசாயிகள் போராட்டங்கள் நடைபெற்றன.

இந்தப் போராட்டங்களின் பலனாக பலமாற்றங்களும் ஏற்பட்டன. நாடுசுதந்திரம் அடைந்தது. சுதேசி மன்னர் ஆட்சி முறை ஒழிக்கப்பட்டது. ஜமீன்தாரி முறை ஒழிக்கப்பட்டது. பல மாநிலங்களிலும் பல்வேறு நிலச்சட்டங்கள் கொண்டு வரப்பட்டன.

நாட்டின் அடிப்படை அரசியல் சட்டம் அமலுக்கு வந்தது. நாடு குடியரசு என பிரகடனம் செய்யப்பட்டது.

வயது வந்தோர் அனைவருக்கும் ஓட்டுரிமை வந்தது. வயது வந்த கிராமப்புற மக்கள் அனைவருக்கும் இந்திய வரலாற்றில் முதல் தடவையாக ஓட்டுரிமை கிடைத்தது. தாழ்த்தப்பட்டு, பிற்படுத்தப்பட்டு, ஒதுக்கப்பட்டிருந்த விவசாயத் தொழிலாளர்களுக்கெல்லாம் கிராமப்புற ஏழைகளுக்கெல்லாம் ஓட்டுரிமை கிடைத்தது. மேல் தட்டு வேட்பாளர்கள் எல்லாம் அவர்களிடம் போய் கையெடுத்துக் கும்பிட்டு ஓட்டுக்கேட்கும் காலமாக மாறியது.

பொதுத் தேர்தல்கள் முடிந்து புதிய சட்டமன்றங்களும், நாடாளுமன்றமும் அமைச்சரவைகளும் ஆட்சி அமைப்புக்களும் ஏற்பட்டன. புதிய ஐந்தாண்டுத் திட்டங்கள் போடப்பட்டன. புதிய பல அணைகள் கட்டப்பட்டன. கிராமங்களுக்கு மின்சாரம வந்தது. புதிய பாசன வசதிகள் ஏற்பட்டன. பசுமைப்புரட்சி என்னும் பெயரில் விவசாயத்தில் நவீன முறைகள் வந்தன. விவசாயிகளிடத்தில் ஒரு அமைதி ஏற்பட்டது.

1945—50 ம் ஆண்டுகளில். நடைபெற்ற மிகப்பெரிய விவசாயிகள் போராட்டங்களை வீரமுடன் நடத்திய அகில இந்திய கிசான் சபா போன்ற சுயேச்சையான விவசாயிகளின் அமைப்பு நிலைகளும் சற்று அமைதியடைந்தன.

இந்த அமைதியும் நீண்ட நாட்கள் நீடிக்கவில்லை. மூன்று ஐந்தாண்டுத்திட்டங்கள் முடிந்து நான்காவது ஐந்தாண்டுத் திட்டம் தொடங்கும் போது, 1967—ம் ஆண்டிற்குப் பின்னர் முதலாளித்வ நெருக்கடியும் சரிவும் தொடங்கியது. தொழிலாளர்களின் வேலை நிறுத்தங்களும். அதனால் ஏற்பட்ட மனித நாட்கள் நஷ்டமும் அதிகரித்தன. நாட்டில் அரசியல் நெருக்கடியும் தொடங்கியது. மத்திய ஆட்சியிலும் மாநிலங்களின் ஆட்சியிலும் ஏகபோகமாக இருந்த, இந்திய முதலாளிகளின் பிரதான அரசியல் கட்சியான இந்திய தேசிய காங்கிரஸ் கட்சி, முதல் தடவையாக 1967—ம் ஆண்டு தேர்தலில் ஒன்பது மாநிலங்களில் தோல்வியடைந்தது. 1969—ம் ஆண்டில் காங்கிரஸ் கட்சியும் இரண்டாகவும், பல வாறாகவும் உடைந்தது.

இந்திய விவசாயிகளிடம் காங்கிரஸ் கட்சியின் செல்வாக்கும் பிடிப்பும் குறையத் தொடங்கியது. தமிழ் நாட்டில் 1967—ம் ஆண்டில் காங்கிரஸ் கட்சி தோற்றது. அதன்பின்னர் அது மீண்டும் எழுந்திருக்கவே யில்லை.

தமிழகத்தில் புதிய விவசாயிகள் எழுச்சி ஏற்பட்டது. இந்திய விவசாயிகளின் புதிய எழுச்சியின் முன்னோடியாக தமிழக விவசாயிகளின் போராட்டம் தொடங்கியது.

நடுத்தர மற்றும் வசதியான விவசாயிகளின் தலைமையில் புதிய சுயேச்சையான விவசாயிகள் சங்கங்களும் தோன்றின. அகில இந்திய கிசான் சபாவின் தமிழ் நாட்டுக் கிளையான தமிழ்நாடு விவசாயிகள் சங்கம் இரண்டாக உடைந்து இரு சங்கங்களாக இருகம்யூனிஸ்ட்கட்சிகளின் தலைமையில் செயல்பட்டன. விவசாயிகளின் புதிய போராட்டத்தில் பல இடங்களில் தமிழ்நாடு கிசான் சபாவும் கலந்துகொண்டது.

## 1970 ஆம் ஆண்டுகளில்

1970—ஆம் ஆண்டுகளில் தமிழ் நாட்டில், விவசாயிகளின்

நிலைமையில் புதிய நெருக்கடிகள் ஏற்பட்டன. அந்த நெருக்கடியின் சுமைகளைத் தாங்க முடியாமல் தமிழக விவசாயிகளிடம் ஒரு புதிய வெடிப்பு தானாகவே எழுந்தது.

தமிழ் நாட்டின் நீர்ப்பாசன முறையில் மூன்று பிரிவுகள். ஒன்று கால்வாய்ப் பாசனம், இரண்டு கண்மாய்ப்பாசனம், மூன்று கிணற்றுப் பாசனம், என்பதை ஏற்கனவே அறிவோம்.

ஏரிப்பாசனத்திலும் பல ஏரிகள், கண்மாய்கள் தூர்ந்து போய் சரியாகப் பராமரிக்கப்படாததாலும் தண்ணீர்ப் பாசன பற்றாக்குறையினாலும், ஏரிகண்மாய்ப்பாசன நிலங்களிலும் கிணறுகள் தோண்டப்பட்டு, பாசனத்திற்குப் பயன் படுத்தப் பட்டது.

கிராமப் புறங்களுக்கு மின்சார வினியோகம் விஸ்தரிக்கப் பட்டு, கிணறுகளில் மின்சார பம்பு செட்டுகள் போடப் பட்டன. புதிய பல கிணறுகளும் வெட்டப்பட்டன. மின் சார பம்புசெட்டுகளும், ஆயில் என்ஜின்களும் பழக்கத் திற்கு வந்தன என்பதையும் ஏற்கனவே பார்த்தோம்.

இந்த பம்பு செட்டுகள் மூலம் பாசன வசதி செய்யப் பட்டது, விவசாயிகளின் சொந்த முயற்சியின் மூலமாகும்.

மின்சார பம்புசெட்டுகளுக்கான மின்கட்டணம், 'மினிமம்' கட்டணம், மற்றும் அதன் தொடர்பான பல பிரச்னைகள் விவசாயிகளுக்குப் பளுவாக இருந்தது. கால்வாய்ப் பாசனத் திற்குக் கட்டணம் அதிகம் இல்லை. கண்மாய்ப் பாசனத் திற்கு அதிகம் கட்டணம் இல்லை. வெறும் கூடுதல் நிலவரி மட்டும்தான். அல்லது தண்ணீர்வரி மட்டும்தான்.

ஆனால் கிணற்றுப் பாசனத்திற்கு, கிணறு வெட்ட, பம்பு செட் போட,மின் இணைப்பு வாங்க,மின் கட்டணம் கட்ட, தனி முதலீட்டு அவசியம் ஏற்பட்டது. அதற்கான பணம், அதற்கான வட்டி, மின்கட்டணச் செலவுகள் முதலியவை விவசாயிகளுக்கு அதிகப் படியான செலவுகளாயின.

இந்தச் செலவுகளைத் தாங்கமுடியாமல் விவசாயிகளுக்கு மின் கட்டணத்தைக் குறைக்க வேண்டும் என்னும் கிளர்ச்சி தொடங்கியது. இந்தக் கிளர்ச்சியின் தொடக்கத்தில் இதை பணக்கார விவசாயிகளின் போராட்டம் என்றும், ஏர் ஓட் டும் விவசாயிகளின் போராட்டமல்ல,கார் ஓட்டும் விவசாயி களின் போராட்டம் என்றும் கூறப்பட்டது. ஆனால் இந்தப் போராட்டம், விவசாயத்தில் ஏற்பட்டுள்ள ஆழ்ந்த நெருக் கடியின் வெளிப்பாடாகவே இருந்தது.

கிணற்றுப் பாசனத்திற்கான மின்சாரப் பம்புசெட்டுகளுக் காக மின் கட்டணத்தை மாநில அரசு உயர்த்தியது. இந்த

மின் கட்டண உயர்வைக் கண்டித்து ஒரு ஆட்சேபணை இயக்கமாகவே தமிழகத்தில் விவசாயிகள் போராட்டம் தொடங்கியது. இந்தப் போராட்டம் மேட்டுநிலப் பகுதி விவசாயிகளிடம் வேகமடைந்தது.

கோவை மாவட்டத்தில் தொடங்கி, பெரியார், சேலம், வட ஆற்காடு, தென் ஆற்காடு, திருச்சி, மதுரை, காமராஜர் நெல்லைமாவட்டப்பகுதிகளில் விரிவு பெற்றது.

இந்த விவசாயிகள் இயக்கம் பின்னர் ஸ்தாபன வடிவமும் பெற்றது. கட்சி சார்பற்ற விவசாயிகள் சங்கமாக கோவை மாவட்டத்தில் ஒரு விவசாயிகள் சங்கம் தொடங்கியது. அதற்கு திரு நாராயணசாமி நாயுடு தலைவராக இருந்தார். இந்த விவசாயிகள் சங்கம் மின் கட்டண உயர்வை எதிர்த்து இயக்கத்தைத் தொடங்கினார்கள். அதன் பின்னர் படிப்படியாக இந்த இயக்கத்தின் வளர்ச்சியை ஒட்டி விவசாயிகளின் இதர கோரிக்கைகளும் வெளி வந்தன. விவசாயிகளின் கடன்களை ரத்து செய்ய வேண்டும், விவசாயிகளின் விளை பொருள்களுக்குக் கட்டுப் படியாகும் விலை வேண்டும் என்பது போன்ற அடிப்படையான கோரிக்கைகளும் எழுப்பப்பட்டன.

இந்த விவசாயிகளின் போராட்டங்கள் பல இடங்களில் ஒன்றுபட்ட போராட்டங்களாகவும் உருவாயின. எல்லா விவசாயிகள் சங்கங்களும் ஒன்றுபட்டு நடத்தும் இயக்கமாகவும் பல இடங்களில் நடைபெற்றது. விவசாயிகளின் கூட்டு இயக்கம் என்னும் கருத்தும் வலுவாயிற்று.

மாநாடுகள், பேரணிகள் முதலிய வடிவங்களில் விவசாயிகளின் இயக்கங்கள் வளர்ச்சி பெற்றன.

விவசாயிகளின் முக்கிய கோரிக்கைகளும் குறிப்பாக மின் கட்டணம் குறைக்கப்பட வேண்டும், விவசாயிகளின் அனைத்துக் கடன்களையும் ரத்து செய்ய வேண்டும், விளைபொருள்களுக்கு கட்டுபடியாகும் விலை வேண்டும் என்பது போன்ற கோரிக்கைகளும் விவசாயிகளின் பலவேறு வகையிலான இயக்கங்களும் கிளர்ச்சிகளும்; விவசாயப் பொருளாதாரத்தின் ஆழ்ந்த நெருக்கடியின் வெளிப்பாடுகளாகவே தோன்றின எனக் கூறலாம்.

முதலாளித்வ மார்க்கட் பொருளாதாரத்தின் காரணமாக விவசாய உற்பத்திச் செலவுகள் அதிகரித்துள்ளன. கிணற்றுப் பாசன விவசாயிகள் கிணற்றுக்கும் பம்புசெட்டுகளுக்குமாக அதிக முதலீடு செய்ய வேண்டியதாகியுள்ளது, அதற்கான கடனும் வட்டிப்பளுவும் அவர்கள் மீதான கூடுதல் பளுவாகும். ஏற்கனவே விவசாயம் செய்வதற்காக வாங்கப்பட்ட குறுகியகால கடன்கள் பயிர்க்கடன்கள் போக கிணறு

பம்பு செட்டுகளுக்கான கடன் இந்த விவசாயிகளைக் கடுமையாக அழுத்திக் கொண்டிருந்தது.

விவசாயிகளின் விளைபொருளுக்கு முதலாளித்வ மார்க்கட் மூலமே விலை ஏற்படுகிறது. அரசு மூலம் சில சமயம் விலை நிர்ணயம் செய்யும்போது குறைவாகவே நிர்ணயம் செய்யப்படுகிறது. இதில் முதலாளித்துவ மார்க்கட் கொள்ளை விவசாயிகளை அழுத்தியுள்ளது.

இந்த நெருக்கடியின் காரணமாக, விவசாயிகளுக்கு தாங்க முடியாத சுமை ஏற்படுகிறது. அதன் முதல் வெடிப்பாக தமிழகத்தில் பம்பு செட் விவசாயிகளிடத்தில் போராட்டம் வெடித்தது.

**அரசின் கொள்கை:**

அரசிடம் விவசாயத் தொழில் சம்பந்தமாக ஒரு திட்ட வட்டமான விவ்சாயிகளுக்கு சாதகமான கொள்கை இல்லை.

நிலப்பிரபுத்துவ மிச்ச சொச்சங்கள் இன்னும் நீக்கப்பட வில்லை. சாகுபடியாளர்களுக்கு முழுமையான பாதுகாப்பிற்கு உத்தரவாதமில்லை.

விவசாயத் தொழிலாளர்களுக்கு சமூகப் பாதுகாப்பு அளிப்பதற்கான கொள்கை இல்லை.

விவசாயத்திற்கு மிகவும் அவசியமான நீர்ப்பாசன உத்திரவாதம் இன்னும் சரியாக ஏற்படவில்லை. ஒரு பக்கம் வெள்ளமும் மறுபக்கம் வறட்சியும் தொடருகிறது. அரசுக்கு ஒரு சரியான நதி நீர்ப்பங்கீட்டுக் கொள்கை இல்லை.

கிணற்றுப் பாசனம் ஒரு தனிப் பிரச்னையாகும். அது தமிழகத்தில் அதிகம். குடிதண்ணீருக்கும், பாசனத்திற்கும் நிலத்தடி நீரைப் பயன்படுத்துவது தமிழ் நாட்டில் பருவ நிலைக்கு ஏற்ப, ஏற்பட்ட ஒரு பழக்கமாக இருக்கிறது. அதில் நிலத்தடி நீரைப் பாதுகாக்கும முறையில் தான் தமிழகத்தில் ஏராளமான நீர் நிலைகள் உண்டாக்கப்பட்டுள்ளன. இந்த நீர்நிலைகளைப் பாதுகாக்கவும் பராமரிக்கவும் அரசிடம் எந்தக் கொள்கையும் இல்லாததால் அவைகள் எல்லாம் நாச மடைந்து கிடக்கின்றன.

மறுபக்கம் கிணற்றுப் பாசனத்தில் கிணறுகள் வெட்டுவது அதைப்பராமரிப்பது, பம்பு செட்டுகள்போடுவதுஅவற்றைப் பராமரிப்பது என்பது விவசாயிகளின் தனிப் பொறுப்பிலேயே விழுந்துள்ளன. இதில் அரசின் உதவி எதுவும் இல்லை. கடன் கொடுக்கப்பட்டது ஆனால் அதற்கு வட்டி அதிகம். மின்சாரம் கொடுக்கப்பட்டது. ஆனால்

அதற்குக் கட்டணம் அதிகம். கால்வாய்த் தண்ணீருக்கும் கண்மாய்த் தண்ணீருக்கும் கட்டணம் இல்லை. வெறும் நீர் வரிமட்டும் தான் ஆனால் கரண்டு (பம்பு செட்) தண்ணீருக்கு மட்டும் கட்டணம் என்பது பாரபட்சமானது மட்டுமல்ல, அது ஒரு கொடுமையின் மட்டத்திற்கும் உயர்ந்து விட்டது. அதனால் விவசாயிகள் மின்சார கட்டணத்தைச் செலுத்த முடியாத அளவு நிலமை கஷ்டமாகிவிட்டது.

உரம், பூச்சி மருந்து விவசாயக் கருவிகள் முதலியவற்றின் விலை உயர்ந்து கொண்டே போகிறது. பம்பு செட்டுகளின் பராமரிப்பு செலவுகளும் அதிகரித்துக் கொண்டே இருக்கின்றன. இவைகளின் விலையைப் பற்றி அரசுக்கு ஒரு கொள்கை இல்லை. இதில் முதலாளித்துவ மார்க்கட் பொருளாதாரத்தின் காட்டு தர்பார்தான் நடந்து வருகிறது.

அரசின் கடன் கொள்கையும் விவசாயிகளின்பால் மனிதாபிமானம் கொண்டதாக இல்லை. கடனுக்கு அதிக வட்டி, அபராத வட்டி, வட்டிக்கு வட்டி ஆகியவை சேர்ந்து அரசும் கூட்டுறவு அமைப்புகளும் ஈட்டிக்காரனுக்கு வாரிசு போல ஆகிவிட்டன. விவசாயிகள் கடன் பளுவைக் குறைப்பதற்கு அரசிடம் ஒரு சரியான கொள்கை இல்லை.

விவசாயிகளின் விளை பொருளுக்கான விலைபற்றியும் அரசிற்கு ஒரு சரியான கொள்கை இல்லை. விளை பொருள்கள் அனைத்தும் முதலாளித்துவ மார்க்கட்டில் சூறையாடப் படுகின்றன.

மொத்தத்தில் அரசின் கொள்கை முதலாளித்துவ சுரண்டல் முறைக்கு சாதகமாகவே அனைத்து அம்சங்களிலும் இருந்தது. அரசு மிகவும் தெளிவாக முதலாளித்துவ வர்க்க அரசாகவே செயல்பட்டு வருகிறது. அது சாராம்சத்தில் விவசாயிகளைக் கொடுமையாகச் சுரண்டும் அரசாக, விவசாயிகளுக்கு விரோதமான அரசாகவே செயல்பட்டு வருகிறது.

**அரசின் அடக்குமுறைக் கொள்கை:**

அரசின் விவசாயக் கொள்கைகள் விவசாயிகளுக்கு சாதகமாக இல்லை என்பது மட்டுமல்ல, விவசாயிகளைக் கொடுமையாக அடக்கி ஒடுக்கும் கொள்கையாகவே இருந்து வந்தது. தொடர்ந்தும் இருந்து வருகிறது.

அதில் காங்கிரஸ், திமுக, அதிமுகஆட்சிகளில்அடிப்படையான வேறுபாடுகள் அதிகம் இல்லாமல்தான் இருந்திருக்கிறது. காங்கிரஸ்கட்சியின் மத்திய, மாநில ஆட்சிகளில் தான் விவ

சாயத் தொழில் பற்றிய அடிப்படைக் கொள்கை வகுக்கப் பட்டது. தமிழகத்தில் 1967—ம் ஆண்டிற்குப் பின்னர் ஏற் பட்ட திமுக, அதிமுக அரசுகளும் அதே அடிப்படைக் கொள் கையைத்தான் பின்பற்றி வந்திருக்கின்றன.

1967—ம் ஆண்டில் தமிழ் நாட்டில் காங்கிரஸ் கட்சியின் தோல்விக்கும் திமுகவின் வெற்றிக்கும் விவசாயிகள்தான் பெரும்பாலும் காரணமாக இருந்தார்கள். அதேபோல 1977 தேர்தலில் திமுகவின் தோல்விக்கும் அதிமுகவின் வெற்றிக்கும் அந்தவிவசாயிகளே காரணமாக இருந்தார்கள். அதிமுக அரசும் விவசாயிகளின் அடிப்படைப்பிரச்னையைத் தீர்க்கவில்லை. விவசாயிகளை ஏமாற்றிவிட்டது. இப்போது உரிய காலம் வரும் என்று விவசாயிகள் காத்துக் கொண்டி ருக்கிறார்கள் என்று கூறலாம்.

1970-ம் ஆண்டுகளில் விவசாயிகளின் போராட்டங்கள்தீவிர மடைந்தன என ஏற்கனவே குறிப்பிடப்பட்டிருக்கிறது.

மின்கட்டண உயர்வை எதிர்த்து மாநிலம் தழுவிய. போராட்டம் எழுந்தது. விவசாயிகளின். மறியல் போராட் டம் நடைபெற்றது. பல்லாயிரக்கணக்கான விவசாயிகள் கைது செய்யப்பட்டு சிறைகளில் வைக்கப்பட்டார்கள். தமிழ கத்தின் சிறைகள் எல்லாம் நிரம்பி வழிந்தன. விவசாயிகள் பல இடங்களில் பம்பு செட்டுகளுக்கான மின்கட்டணத் தைச் செலுத்த மறுத்தார்கள். அதன்காரணமாக அரசு பம்பு செட்டுகளுக்கான பியூஸ்கட்டைகளைப்பிடுங்க உத்தர விட்டது. 'பியூஸ்' கட்டைகளைப் பிடுங்கவிட மாட்டோம் என்று விவசாயிகள் பல இடங்களில் அரசாங்க உத்தரவு களை எதிர்த்தார்கள்.

கடன் பாக்கிகளையும் விவசாயிகளால் கட்டமுடியவில்லை. கடன் பாக்கிகளை வசூலிக்க அரசும் கடுமையான உத்தரவு களைப்போட்டது. விவசாயிகள் கட்டாயக் கடன் வசூல் முறைகளைக் கடுமையாக எதிர்த்தார்கள்.

விவசாயிகளுக்கும் அரசுக்கும் ஒரு பெரிய மோதலே ஏற்பட் டது என்று கூறலாம்- விவசாயிகளின் பேரணிகள், மறியல் கள், கூட்டுக் கிளர்ச்சிகள் மின்கட்டணம். கடன் கட்ட முடி யாமல் மறுத்தல், மாட்டு வண்டி மறியல் முதலிய பலவித வெடிப்புகள் தோன்றின.

கட்சிச் சார்பற்ற சுயேச்சையான விவசாயிகள் சங்கங்கள், இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி வழிகாட்டி வரும் தமிழ்நாடு விவசாயிகள் சங்கம் (அகில இந்திய கிசான் சபையுடன் இணைக்கப்பட்டது) ஆகியவிவசாயிகள் சங்கங்கள் விவசாயி கள் போராட்டத்தின் கிளர்ச்சியில் முன் நின்றன, இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி மற்றும் காங்கிரஸ் கட்சியிலிருந்து பிரிந்து

வந்த பலரும் விவசாயிகளின் போராட்டத்திற்கு ஆதரவு கொடுத்தனர்.

தமிழக விவசாயிகளின் போராட்டம் 1972-ம் ஆண்டில் உச்சத்திற்குச் சென்றது. மாநிலம் முழுதும் பந்த் பொது வேலை நிறுத்தம் நடைபெற்றது. அப்போது மாநில ஆட்சியின் தலைவர்கள் விவசாயிகளின் போராட்டத்தை இரும்புக்கரம் கொண்டு அடக்குவோம், இது ஏர் ஓட்டும் விவசாயிகள் போராட்டமல்ல, கார் ஓட்டும் விவசாயிகள் போராட்டம் என்று குறிப்பிட்டார்கள்.

இந்த விவசாயிகள் போராட்டத்தில் சில வசதி படைத்த பணக்கார விவசாயிகளும் நடுத்தர விவசாயிகளும் இருந்ததை அவர்கள் சுட்டிக் காட்டினார்கள். ஆனாலும், நாட்டின் முதலாளித்துவப் பொருளாதாரமும், முதலாளித்துவ மார்க்கட் சுரண்டல் முறையும், மத்திய அரசின் முதலாளித்துவப் பாதைக்கான கொள்கைகளும் கிராமப்புறப் பணக்கார விவசாயிகளையும் பாதித்து, அவர்களுக்கும் வீழ்ச்சி ஏற்பட்டிருக்கிறது என்னும் உண்மை விவரம் முழுதும் தெளிவுபடாமல் இருந்தது.

விவசாயிகளின் பந்த் போராட்டத்தின் போது முழு அளவில் போலீஸ் அடக்குமுறை ஏவி விடப்பட்டது. கோவை, சேலம், வட ஆற்காடு, இராமநாதபுரம், திருநெல்வேலி மாவட்டங்களில் விவசாயிகளின் மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்யப்பட்டு 16பேர் வரை கொல்லப்பட்டார்கள். போலீஸ் மட்டுமல்லாமல், ஆளும் கட்சியின் பேரால் குண்டர்படைகளும் விவசாயிகளைத் தாக்கினார்கள். சாலைமறியலில் வந்த விவசாயிகளின் மாட்டு வண்டிகள் உடைக்கப்பட்டன. மாடுகள் கூட சில இடங்களில் குத்திக் கொல்லப்பட்டன.

இந்த அடக்கு முறைக் கொடுமைக்கு மாநிலம் முழுவதும் கடுமையான கண்டனம் ஏற்பட்டது. மாநில அரசுக்கு எதிரான மக்கள் கிளர்ச்சியாக வளர்ந்தது. இதே காலத்தில் சிம்சன், ஆவடி டாங்கி தொழிற்சாலை முதலிய பல தொழிலாளர் போராட்டங்களும் வெடித்தன. தொழிலாளர் போராட்டங்களுக்கும் விவசாயிகளின் போராட்டங்களுக்கும் ஒரு இயல்பான இணைப்பு ஏற்பட்டிருந்தது.

இவ்வாறு மாநிலம் முழுவதிலும் விவசாயிகள், தொழிலாளர்கள், மாணவர்கள், ஆசிரியர்கள் முதலிய பல பகுதி மக்களுடைய கிளர்ச்சி வலுவடைந்து, அது தமிழகத்தில் ஆட்சிப் பொறுப்பில் இருந்த திமுக விற்கும் ஒரு அரசியல் நெருக்கடியை உண்டாக்கியது. விவசாயிகளின் பால் திமுகவிற்கு ஒரு சரியான கொள்கை இல்லாமல்

இருந்தது அக்கட்சியின் நெருக்கடிக்குமேலும் தூபமிட்டது. திமுக இரண்டாக உடைந்தது. அதன் பின்னர் சமயம் பார்த்து மத்திய ஆட்சியில் இருந்த இ.காங்கிரஸ் ஆட்சியும் தங்கள் அரசியல் ஆசைகளையும் வைத்து திமுக ஆட்சியை 'டிஸ்மிஸ்' செய்தது. அன்றைய அரசியல் நெருக்கடியின் சூழ்நிலையில், மத்திய அரசின் ஜனநாயக விரோத நடவடிக்கைக்கு மக்களிடம் குறிப்பாக விவசாயிகளிடம் எதிர்ப்பு இல்லாமல் போய்விட்டது. குறிப்பிட்ட விவசாயிகள் பகுதியிடம் மத்திய அரசு தங்களைக் காப்பாற்றும் என்றும் சில பிரமைகள் இருந்தன. மத்திய அரசின் கொள்கைகள்தான் விவசாயிகளின் நெருக்கடிக்குக் காரணம் என்பது போதுமான அளவில் விவசாயிகளுக்கிடையில் தெளிவு படாமல் இருந்தது. இருப்பினும் தமிழகத்தில் ஏற்பட்ட விவசாயிகளின் போராட்டத்தின் அலை இந்தியா முழுவதிலும் பிரதிபலிப்புகளை ஏற்படுத்தியது. குறிப்பாகக் கடன்நிவாரணம், விவசாயிகளின் விளைபொருளுக்குக் கட்டுபடியாகும் விலை முதலிய பிரச்னைகளில் விவசாயிகளிடம் பொதுவான அதிருப்தி அலையும் வீசிக் கொண்டிருந்தது. இதுவும் சேர்ந்துதான் 1977-ம் ஆண்டில் மத்திய ஆட்சியில் இ. காங்கிரஸ் கட்சியின் வீழ்ச்சிக்கும் காரணமாக அமைந்தது எனக் கூறலாம்.

கொடுமையான பொருளாதார நெருக்கடிக்கும்: அரசின் அடக்குமுறைக்கும் ஆளான விவசாயிகள் தமிழகத்தின் ஆளும்கட்சியின் மீதும் எதிர்ப்பு கொண்டிருந்தார்கள். அதேசமயத்தில் அதிமுக தலைமை விவசாயிகளின் பிரச்னைகளைத் தீர்ப்பதாக வாக்குறுதி கொடுத்தது. விவசாயிகளுக்கு ஏற்பட்டிருந்த அதிருப்தி, அதிமுகவின் வாக்குறுதிகள் ஆகியவை அதிமுகவின் தேர்தல் வெற்றிக்கு 1977—ம் ஆண்டில் உதவின. ஆயினும் வெற்றி பெற்ற பின்னர் அதிமுக ஆட்சித் தலைமை வாக்குறுதியை சரியாக நிறைவேற்றவில்லை. உயர்மட்டக் குழு அமைத்து. சில சலுகைகளை அறிவித்தது. அத்துடன் விவசாயிகளை சிறிய விவசாயிகள் பெரிய விவசாயிகள் எனவும் பிரிவினை செய்ய முயன்றது.

திமுகவிலிருந்து உடைந்து பிரியும் போதும், அதிமுக எனத் தனிக்கட்சி தொடங்கியபோதும், மற்றும் விவசாயிகள் தொழிலாளர்கள் போராட்டங்களின் போதும்: அதிமுக கட்சித் தலைமை எடுத்த நிலை வேறு. அது மக்களுக்கு ஆசையூட்டும் வாக்குறுதிகளாக இருந்தன. ஆனால் அவர்கள் ஆட்சிப்பொறுப்பிற்கு வந்தபோது அந்தத் தலைமை தனது முதலாளித்துவ ஆதரவான வர்க்ககுணத்தைக்காட்டி விடுகிறது.

1972 ஆம் ஆண்டில் விவசாயிகளின் போராட்டம் உச்சத்திற்குச் சென்று திமுக ஆட்சித்தலைமை இரும்புக்கரம் என்று பேசிய போது அன்று திமுகவில் முக்கிய பொறுப்பில்

இருந்த எம்.ஜி.ராமச்சந்திரனைப் போன்றவர்கள் விவசாயிகள் போராட்டத்திற்கும் விவசாயிகளின் பிரச்னைகளுக்கும் எதிரான நிலைதான் எடுத்தார்கள் என்பது, பின்னர் ஏற்பட்ட அரசியல் நிகழ்ச்சிகளில் மறைந்துவிட்டது. மக்களின் கவனமும் உணர்வுநிலையும் அந்த நேரத்தில் ஏற்பட்ட பிரச்சினைகள் மீதே அதிகமாக இருந்தது.

## புதிய ஆட்சியின் அணுகு முறை

1977–ஆம்ஆண்டில்மத்தியிலும் மாநிலத்திலும்புதிய ஆட்சிகள் ஏற்பட்ட போதிலும் விவசாயிகளின் பிரச்னைகள் தொடர்ந்தன. விவசாயிகளின் பிரச்னைகளைப் பற்றி பரிசீலனை செய்வதற்கு என மாநில அளவில் உயர் மட்டக்குழு அமைக்கப்பட்டது.

பொதுவாக நாட்டில் தொழிலாளர், விவசாயிகள் பிரச்னைகள் எழும்போதும் இதே போல வேறு எந்த வகை அரசியல் பொருளாதார, சமூகப் பிரச்னைகள் பற்றி விவகாரங்கள் ஏற்படும் போதெல்லாம் விசாரணைக் கமிட்டிகள், கமிஷன்கள், குழுக்கள் போடுவதும், நீடித்த விசாரணைகள் நடத்துவதும்,அறிக்கைகள் சமர்ப்பிப்பதும், சில சீர் திருத்தங்கள், நிவாரணங்கள் அறிவிப்பதும், அரசாங்க நிர்வாக முறையின் பகுதியாகும்.

அதே சமயம், இத்தகைய அரசாங்கக் குழுக்களின் அதிகாரங்கள், அதிகார எல்லைகள் குறைவானது தான் என்றாலும் அவைகள் மூலம் சில உடனடி நிவாரணங்கள் கிடைக்கச் செய்வதற்கு அத்தகைய குழுக்களைப் பயன் படுத்திக் கொள்வதும் அத்தகைய குழுக்களால் பலன் இருக்காது என்று கருதும் போது அவைகளிலிருந்து விலகிக் கொள்வதும் புரட்சிகரப் பாட்டாளிவர்க்க இயக்கத்தின் கடமையாக இருந்து வருகிறது.

மாநில அரசு அமைத்த உயர் மட்டக் குழுவில் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் ஆதரவுள்ள தமிழ் நாடு விவசாயிகள் சங்கமும், விவசாயத் தொழிலாளர் சங்கமும் அங்கம் வகித்து சிறந்த பல ஆலோசனைகளை எடுத்துக் கூறியது. அந்த உயர் மட்டக் குழுவும் பல ஆலோசனைகளை அரசுக்கு வழங்கியது. இந்தக் குழுவின் முடிவுகள் பரிந்துரைகள் தான். எனவே அவைகளைசெயல்படுத்துவது அரசிற்குக் கட்டாயமில்லை.

அந்தமுறையில் அரசு சீர்திருத்த நடவடிக்கைகளின் பெயரில் இரண்டொரு நடவடிக்கைகளை எடுத்தது.

மின் கட்டணப் பாக்கிகளை ரத்து செய்யும்படி விவசாயிகள் கேட்ட கோரிக்கையை அரசு ஏற்கவில்லை. பாக்கி

களைத் தவணை முறையில் செலுத்துவதற்கு உத்தர விட்டது.

கடன்களைத் தள்ளுபடி செய்வதற்கு விவசாயிகள் கேட்ட கோரிக்கைகளை அரசு நிறைவேற்ற மறுத்து, சில பகுதி விவசாயிகளுக்கு கூடுதல் அபராத வட்டியை ரத்து செய்தும், சிறிய விவசாயிகளின் சில பகுதியினருக்கு பாக்கிகளை ரத்து செய்தும், சில பகுதி விவசாயிகளுக்கு கடன் திருப்பி செலுத்தும் தவணைகளை அதிகப் படுத்தியும் சில நிவாரண நடவடிக்கைகளை அரசு எடுத்தது.

விவசாயிகளின் விளை பொருள்களுக்குக் கட்டுபடியாகும் விலை பற்றி அரசு சரியான நடவடிக்கை எதுவும் எடுக்க வில்லை.

இந்த உயர் மட்டக் குழுவின் பரிந்துரைகளும், அரசாங்க நடவடிக்கைகளும் விவசாயிகளின் அடிப்படைப் பிரச்னை களுக்குத் தீர்வு காணவில்லை.

மின் கட்டண பாக்கியை விவசாயிகளால் கட்ட முடிய வில்லை. அதிமுக அரசு பெரும் 'போலீஸ்' படையைக் குவித்து விவசாயிகளை கிராமங்களிலிருந்து வெளியேற்றி போலீஸ் ஆயுத பலத்துடன் மின் இணைப்புகளைத் துண்டிப்பது, கடன் வரி பாக்கிகளை வசூலிக்க ஜப்தி நடவடிக்கைகளை எடுப்பது போன்ற வன்முறைக் கொடுமை களை வஞ்சகமான முறையில் விவசாயிகளுக்கு எதிராக ஏவிவிட்டது.

இராமநாதபுரம் மாவட்டம், அண்ணா மாவட்டம், பெரியார், திருச்சி, தென் ஆற்காடு மாவட்டங்கள் போன்ற பகுதிகளின் போலீஸ் மற்றும் அதிகாரிகளின் வன்முறைகள் துப்பாக்கிப் பிரயோகங்கள், தடியடிகள், பொய் வழக்குகள் போடப்பட்டு விவசாயிகள் அடக்கு முறைகளுக்கு ஆளாக்கப் பட்டனர்.

மக்களை சமாதானப் படுத்தும் வகையில் சில சீர்திருத்த அறிவிப்புகள், ஒன்றுபட்டுப் போராடும் விவசாயிகள் பகுதிகளைப் பிரித்து, அவர்களுடைய ஒற்றுமையை உடைப்பது, விவசாயிகளைப் பிரித்து தனிமைப்படுத்தி அவர்கள் மீது அடக்கு முறையை ஏவிவிட்டு கொடுமைப் படுத்துவது, முக்கிய தலைவர்களை சிறைப்படுத்தி விவசாயிகளின் உணர்வுகளை மழுங்கடிப்பது, விவசாயிகள் சங்கங்களையும், தலைமைகளையும வஞ்சகமாகப்பிரித்து சூழ்ச்சி செய்வது, போலியான சங்கங்களை உருவாக்கி அவைகளின் பிரதிநிதிகளை வைத்து சர்க்கார் உத்திரவு களுக்கும் திட்டங்களுக்கும் அவர்களுடைய ஒப்புதல் வாங்கி விவசாயிகளின் அமைப்புகளைப் பிரிப்பது, போன்ற

அணுகும் முறைகளை அதிமுக அரசு கையாண்டிருக்கிறது. அதன் காரணமாக விவசாயிகள் இயக்கம் தாற்காலிக மாக சற்று அமைதிபட்டிருக்கிறது. ஆனால் இந்த அமைதி நீடிக்கும் என்று கூற முடியாது..

அதிமுக அரசின் கொள்கை விவசாயிகள் சம்பந்தமாக மட்டுமல்லாமல், தொழிலாளர்கள், நெசவாளர்கள், ஆசிரியர்கள், அரசு ஊழியர்கள் முதலிய மக்கள் பகுதி களின்பால் உள்ள அணுகும் முறையும் இதே போல் தான் இருந்துள்ளது.

முதலாளித்துவ வர்க்க அரசுகளின் சூழ்ச்சிகளையும் வஞ்சக முறைகளையும் புரிந்து கொண்டு ஒன்றுபட்ட அமைப்பு களையும் இயக்கங்களையும் உருவாக்குவதற்கான வகை யில் விவசாயிகளின் உணர்வு நிலையை உயர்த்தவேண்டும்.

அரசின் சூழ்ச்சிகளை விவசாயிகள் மறந்து விடவில்லை. அவர்களுக்கு வாய்ப்பு வரும்போது அவர்களுடைய சொந்த வழியில்செயல்பட்டு, தங்கள் உணர்வுகளை வெளிப் படுத்தியுள்ளார்கள்.

1980-ஆம் ஆண்டில் நடைபெற்ற பாராளுமன்றத்தேர் தலில், அதிமுக கட்சியை தமிழகத்தில் பெரும்பாலான இடங்களில் தோற்கடித்தார்கள். விவசாயிகளின் அதிருப்தி யே அதிமுகவின் தோல்விக்குக் காரணமாக இருந்தது.

1980-ல் மத்தியில் ஆட்சிக்குவந்த இ.காங்கிரஸ் ஆட்சி தனது யதேச்சாதிகார முறையில் தனது சொந்த அரசியல் லாபம் கருதி அரசியல் சந்தர்ப்பவாத முறைகளில் அதிமுக ஆட்சியை 'டிஸ்மிஸ்' செய்தது. அது அதிமுக மீது அடித்தட்டு மக்களுக்கு சற்று அனுதாபத்தை உண்டாக்கியது.

அத்துடன், இருகம்யூனிஸ்ட் கட்சிகளின் வலியுறுத்தலுக் குட் பட்டு, அதிமுக கட்சித்தலைமை விவசாயிகளின் கோரிக்கைகளை நிறைவேற்ற — குறிப்பாக 'ரிசர்வ்' வங்கி மறுத்தாலும் மாநில அரசின் சொந்த நிதியிலிருந்து ஈடு கட்டி விவசாயிகளின் எல்லாக் கடன்களையும் ரத்து செய்வதாக வாக்குறுதி கொடுத்து விவசாயிகளின் தலைவர் களின் ஆதரவைப் பெற்று வெற்றி பெற்றது.

வெற்றி பெற்ற பின்னர் விவசாயிகளுக்குக் கொடுத்த வாக் குறுதிகளைக் காற்றில் விட்டுவிட்டது. அதேசமயத்தில் விவ சாயிகளின் இயக்கத்தைப் பலவீனப் படுத்துவதற்கும் தொடர்ச்சியான வஞ்சகச் சூழ்ச்சிகளைச் செய்தது. விவ சாயிகள் இயக்கத்திலும் அமைப்புப்பணிகளிலும் சோர்வை உண்டாக்கும் முயற்சிகளையும் அது தொடர்ச்சியாக முயற் சிகளைச் செய்து கொண்டு வந்தது.

விவசாயிகளின் பிரச்னைகளை வெறும் சங்க மட்டத்தில் மட்டுமல்லாமல் அரசியல் மட்டத்திற்கும் உயர்த்த வேண்டும் என்னும் உணர்வும் விவசாயிகளிடம் வளர்ந்து வருகிறது.

தமிழகத்தில் தொடங்கிய விவசாயிகளின் வெடிப்பு இதர மாநிலங்களிலும் பல்வேறு வடிவங்களிலும் பரவியது. கேரளத்தில் மிளகு, தேங்காய் போன்றவைகளுக்கு நியாய விலை வேண்டும் என்று கிளர்ச்சி கிளம்பியது. ஆந்திரா கர்நாடக மாநிலங்களில் பெரிய அளவில் விவசாயிகளின் பேரணிகள் நடைபெற்றன. மகாராஷ்டிரத்தில் விவசாயிகளின் போராட்டம் உச்சத்திற்குச் சென்றது. குஜராத், மத்தியப்பிரதேசம், பஞ்சாப், அரியானா, உத்தரப்பிரதேசம், பீகார் மாநிலங்களிலும் விவசாயிகளின் எழுச்சிப்பேரணிகள் நடைபெற்றன.

எல்லா விவசாயிகள் சங்கங்களின் சார்பில் அனைத்து சங்க அனைத்துக்கட்சி விவசாயிகள் பேரணிகள், டில்லியில் மத்திய ஆட்சியின் கவனத்திற்குக் கொண்டு வரும் முறையில் நடத்தப்பட்டது.

அரசியல் கட்சிகளும் விவசாயிகளின் முக்கிய பிரச்னைகளை தங்களுடைய கொள்கைப் பிரச்சாரத்தில் எடுத்துக்கொண்டுள்ளன.

குறிப்பாக இடதுசாரி ஜனநாயக எதிர்க்கட்சிகளின் கூட்டங்களில் விவசாயிகளின் அடிப்படைப் பிரச்னைகள் பலவும் எடுத்துக்கொள்ளப் பட்டிருக்கின்றன.

விவசாயிகளின் பிரச்னைகளை வெறும் பொருளாதார கோரிக்கைப் பிரச்னைகளாக மட்டுமல்லாமல், சமுதாயப் பிரச்னைகளாக ஜனநாயகப் பிரச்னைகளாக எடுத்து அவைகளை அரசியல்மட்டத்திற்கும் உயர்த்துவதற்கான கடமைகளையும் வகுத்துக் கொள்ள வேண்டும்.

இந்தியாவில்முதலாளித்துவ அமைப்புமுறையும் முதலாளித்துவக் கட்சிகளின் ஆட்சி முறையும் நீடிக்கும் வரையிலும் இந்திய விவசாயிகளின் அடிப்படையான பிரச்னைகள் அவர்களின் அடிப்படையான அரசியல் பொருளாதார சமுதாயப் பிரச்னைகள், அவர்களுடைய கல்விகலாச்சாரப் பிரச்னைகள் தீராது.

இதில் எந்தக்கட்சிகள், எந்தத் தலைவர்கள் ஆட்சிப்பொறுப்பில் இருந்தார்கள் என்பதைக் காட்டிலும் எந்தப் பாதையில் நாம் சென்றிருக்கிறோம், என்ன கொள்கைகளைக் கடைப்பிடித்திருக்கிறோம் என்பது முக்கியமானதாகும்.

நமது நாட்டின் ஆட்சிப் பொறுப்பில் இருந்த பலரும் தனிப் பட்ட வாழ்க்கை முறையில் மனிதாபிமான முறையில் இருந்து வந்திருக்கிறார்கள். எனினும் அவர்களுடைய ஆட்சியின், அந்தக்கட்சிகளின் கொள்கைகளும் நடை முறையும் முதலாளித்துவ வர்க்கத்தன்மை கொண்டவைகளாகவே இருந்திருக்கின்றன.

விவசாயப் பொருளாதாரம் நாட்டின் முதலாளித்துவப் பொருளாதாரத்தின் ஒரு பகுதியாக இருக்கிறது. அது நீடிக்கும் வரை விவசாயிகளின் ஜனநாயக உரிமைகள் பாதுகாக்கப்படுவது சாத்தியமில்லை என்பதையும் நாடுவிடுதலை அடைந்த நாற்பதாண்டுக்கால அனுபவம் நமக்கு தெளிவாகவே எடுத்துக் காட்டியுள்ளது.

எனவே இந்த அனுபவங்களையும் கணக்கில் எடுத்து நமது எதிர்காலக் கடமைகளை வகுத்துக்கொள்ள வேண்டும். விவசாயிகளின் கிராமப்புறப் பாட்டாளிகளின் கோரிக்கைகளுக்கான போராட்டங்களையும். முதலாளித்துவப் பாதையை மாற்றி இந்திய வழியில் சோஷலிஸத்தை அமைப்பதற்கான போராட்டத்தையும் இணைப்பதையும் நமது கடமையாக வகுத்துக்கொள்ள வேண்டும்.

★

# 10

# விவசாயிகள் இயக்கமும் அமைப்பு நிலைப் பணிகளும் புதிய கடமைகளும்

இன்றைய கிராமப்புறப் பாட்டாளிகளின் எதிர்காலம், முதலாளித்துவப் பாதையின் வழியில் இல்லை. சோஷலிஸ திசை வழியில் தான் இருக்கிறது. அதற்கு கிராமப்புறப் பாட்டாளிகள் தயாராக வேண்டும்.

முதலில் கிராமப்புறப் பாட்டாளிகளான விவசாயிகள், விவசாயத் தொழிலாளர்கள், உதிரிப் பாட்டாளிகள் ஆகிய பிரிவுகளின் வர்க்க ஸ்தாபனங்கள் உருவாக்கப்பட வேண்டும். அவை பலப்படுத்தப்பட வேண்டும்.

இரண்டாவதாக விவசாயிகளின், விவசாயத் தொழிலாளர்களின், கிராமப்புற உதிரிப் பாட்டாளிகளின் கோரிக்கைகளைத் தொகுத்து அந்தக் கோரிக்கைகளை நிறைவேற்றுவதற்கான இயக்கத்தைத் தொடர்ச்சியாக நடத்த வேண்டும்.

மூன்றாவதாக கிராமப்புறப் பாட்டாளிகளின் எல்லாப் பிரிவுகளையும் சேர்த்து அவர்களுடைய பொது கோரிக்கைகளுக்காகவும், கிராம பொது நலன்களுக்கான கோரிக்கைகளையும் தொகுத்து, அவைகளை நிறைவேற்றுவதற்கான தனி இயக்கங்களையும் கூட்டு இயக்கங்களையும் நடத்த வேண்டும்.

நான்காவதாக, கிராமப்புறப் பாட்டாளிகளின் எல்லாப் பிரிவு மக்களையும் தேசிய சர்வ தேசியப் பொதுப் பிரச்னைகளில் ஒன்று திரட்டப் பாடுபட வேண்டும்.

ஐந்தாவதாக விவசாயிகளை, விவசாயத் தொழிலாளர்களை, கிராமப்புற உதிரிப் பாட்டாளிகளின் நாட்டுப் பற்றையும் அரசியல் உணர்வு நிலையையும் உயர்த்தி சோஷலிஸ திசை வழியில் நாட்டைத் திருப்புவதற்கான பொது இயக்கத்தில் கொண்டு வர வேண்டும்.

ஆறாவது, இத்தகைய அமைப்பு நிலை மற்றும் இயக்கப் பணிகளில் முன் நின்று பணியாற்றும் தகுதியை உருவாக்க, கிராமப்புற இளைஞர்களுக்குப் பயிற்சி கொடுத்து, நாட்டிற்காகவும், நாட்டு மக்களுக்காகவும் தங்களை முழுமையாக அர்ப்பணித்துக் கொள்ளக் கூடிய பல்லாயிரக் கணக்கான தொண்டர்களை, செயல் வீரர்களை, ஊழியர்களை, உருவாக்க வேண்டும். அதற்கான பயிற்சி முகாம்கள், படிப்பு முகாம்கள், தொடர்ச்சியாக நடத்துவதற்கான அமைப்புகளையும் உருவாக்க வேண்டும்.

இந்தக் கடமைகளைப் பற்றி விரிவாகப் பார்க்கலாம்.

## 1. வர்க்க ஸ்தாபனங்கள் அமைப்பது பற்றி:

கிராமங்கள் தோறும் விவசாயிகளுக்கு விவசாயிகள் சங்கங்களும், விவசாயத் தொழிலாளர்களுக்கு விவசாயத் தொழிலாளர் சங்கங்களும், இதர கிராமப்புறப் பாட்டாளிகளுக்கு அவரவர்களுடைய தொழில்களின் அடிப்படையில் சங்கங்களும் அமைக்கவேண்டும்.

இப்போது சில இடங்களில் இவ்வாறு சங்கங்கள் இருக்கின்றன. சங்கங்கள் இல்லாத இடங்களில் சங்கங்களை உருவாக்க வேண்டும். இருக்கும் இடங்களில் அவைகளைப் பலப்படுத்த வேண்டும். முறையாக செயல்படுத்த வேண்டும். இப்போதெல்லாம் பல வேறு தலைமைகளிலும் கூட சங்கங்கள் உள்ளன. அரசியல் கட்சிகள் தலைமையிலும், சுயேச்சையான முறையிலும் கூட சங்கங்களும் அணிகளும் இருக்கின்றன. அப்படிப்பட்ட இடங்களில் நமது சங்கங்களின் முன் முயற்சியில் கூட்டு நடவடிக்கைகளுக்கும் செயல்பாடுகளுக்கும் நாம் முயற்சி எடுக்க வேண்டும். பாட்டாளி மக்களின் ஒற்றுமை என்பது நமது கொள்கையாக செயல்படுத்த வேண்டும். அது வெறும் உத்தியல்ல.

விவசாயிகள் சங்கங்களையும், விவசாயத் தொழிலாளர் சங்கங்களையும், கிராமப்புற உதிரிப் பாட்டாளிகளின் சங்கங்களையும், விரிவான முறையிலான வர்க்க ஸ்தாபனங்களாக வளர்க்க வேண்டும். ஜனநாயக முறையில் செயல்படுத்த வேண்டும். தொடர்ச்சியான செயல்பாடுகளை வளர்க்க வேண்டும். சங்க வேலைகளில் அதிகபட்சமாக அந்தந்த மக்கள் பிரிவினரையும், அதில் குறிப்பாக இளைஞர்களையும், பெண்களையும் அதிகமாக சங்கப் பணிகளில் இயக்கங்களில் பங்கு கொள்ளச் செய்ய வேண்டும்.

ஒவ்வொரு கிராம சங்கமும் அந்தந்த அமைப்பின் அஸ்திவாரமாகும். எனவே அந்த அடிப்படை அமைப்பு பலமடைந்தால்தான், அல்லது பலமாக இருந்தால்தான்

அந்த சங்கங்கள் பலமாக இருக்கின்றன என்று பொருளாகும். கிராம சங்கங்கள் பெயரளவில் உள்ள சங்க அமைப்பாக இருக்கக் கூடாது.

முதலாவதாக கிராம சங்கங்களின் உறுப்பினர்கள் அதிகமாக சேர்க்கப்பட வேண்டும். ஆண்டு தோறும் ஒரு மாதத்தில் சங்கத்திற்கு உறுப்பினர் சேர்ப்பதை ஒரு இயக்கமாக நடத்த வேண்டும். இரண்டாவதாக உறுப்பினர் சேர்த்தல் முடித்த பின்னர் ஆண்டு தோறும் அந்த உறுப்பினர்களின் ஆண்டுப் பேரவைக் கூட்டங்களை நடத்த வேண்டும். அந்த ஆண்டுப் பேரவைகளை சற்று விரிவாகவும் விளம்பரமாகவும், எல்லா உறுப்பினர்களுக்கும் பொது மக்களுக்கும் செய்தி செல்லுமளவிற்கு நல்ல முறையில் நடத்த வேண்டும்.

ஆண்டுப் பேரவைக் கூட்டத்தில் ஆண்டறிக்கை சமர்ப்பிக்க வேண்டும். அந்த ஆண்டறிக்கை சங்க நிர்வாகக் குழுவால் தயாரிக்கப்பட வேண்டும். சாத்தியப் பட்டால் அந்த ஆண்டறிக்கை வரவு-செலவு, தீர்மானங்கள் ஆகியவற்றை அச்சிட்டுக் கொடுத்தல் நல்லது. அந்த ஆண்டறிக்கைகள் சங்கத்தின் வரலாறாகும். அந்தந்த கிராம மக்களின் வரலாற்றில் ஒரு பகுதியாகும்.

நமது நாட்டில் சிறு தெய்வங்களும் சிறு கோவில்களும் லட்சக்கணக்கில் உள்ளன. பெரிய கோவில்கள் நாடு முழுவதிலும் ஆயிரக்கணக்கில் உள்ளன. இவைகளில் திருவிழாக்கள், பொங்கல் விழாக்கள் நடைபெறுகின்றன. அவைகளில் மக்கள் திரளாக்க கூடுகிறார்கள். அதேபோல் நமது சங்கங்களின் ஆண்டுப் பேரவைக் கூட்டங்களை சிறு விழாக்களைப்போல் கிராம விழாக்களைப்போல், நடத்த வேண்டும்.

இந்த ஆண்டுப் பேரவைகளின் நிகழ்ச்சி நிரல்கள் முன் கூட்டித் தயாரித்து அறிவிக்க வேண்டும். ஊரில், அந்தந்தப் பாட்டாளி மக்கள் பகுதியில், செல்வாக்கும் பொது சேவை உணர்வும் உள்ள ஒருவரை சங்கத்தலைவராகக் கொண்டு வர வேண்டும்.

நிகழ்ச்சி நிரலில், தலைவர் உரை, ஆண்டறிக்கை, வரவு—செலவுக்கணக்கு, புதிய நிர்வாகிகள் தேர்வு, தீர்மானங்கள் முதலியவை இடம் பெறவேண்டும். பகுதி மக்கள், கிராம மக்களின் பிரச்னைகள் கோரிக்கைகளை தீர்மானங்களாகக் கொண்டுவர வேண்டும். ஆண்டறிக்க விவாதங்களிலும் தீர்மானங்களை உருவாக்குவதிலும் சங்க உறுப்பினர்கள் தங்கள் பங்கை அதிகமாகச் செலுத்த முயல வேண்டும். ஒவ்வொரு சங்கத்திலும் சங்க உறுப்பினர் பட்டியல், நிகழ்ச்சிக் குறிப்பேடுகள், வரவு செலவுக் கணக்குகள்,

தீர்மானங்கள் கோப்புகள் முதலியவை கட்டாயம் இருக்க வேண்டும். அவைகளை முறையாகக் கொண்டு வர வேண்டும்.

சங்கப் பேரவைக்கூட்டத்தில் தேர்ந்தெடுக்கப்பட்ட சங்க நிர்வாகக்குழு மாதந்தோறும் கூடி சங்கப் பணிகளைத் தொடர வேண்டும்.

இத்தகைய நடை முறை விவசாயிகள் சங்கம், விவசாயத் தொழிலாளர் சங்கம், இதரகிராமப்புறப் பட்டாளிகள் சங்கங்கள் அனைத்திற்கும் பொருந்தும்.

இந்த சங்கங்களை உண்மையான வெகு ஜன அமைப்புகளாக உருவாக்குவதும், அவைகளை ஜனநாயக முறையில் செயல்படுத்துவதும், நமது அடிப்படையான கடமையாகும். வெகுஜனங்களுடைய அமைப்புகளிலும் அதன் இயக்கங்களிலும் அந்த வெகுஜனப்பகுதிகளை ஈடுபடுத்துவது என்பது அவர்களுடைய வர்க்க உணர்வையும் ஜனநாயக உணர்வையும் உயர்த்துவதற்கு மிகவும் அவசியமானதாகும்.

அடிப்படை கிராம சங்கங்களை உருவாக்குவது மிகவும் கடினமான வேலை. தொழிற்சாலைகளில் தொழிலாளர்களின் அடிப்படை சங்கங்கள் ஓரளவு உருவாகியுள்ளன. அத்தகைய தொழிலாளர் சங்கங்களை உருவாக்குவதற்கு, வழிகாட்டி ஒழுங்கு படுத்துவதற்கு தொழிற்சங்கச் சட்டம் இருக்கிறது. ஒவ்வொரு சங்கமும் செயல்படுவதற்கான மாதிரி விதிகள் இருக்கின்றன. அம் மாதிரி விதிகளின் அடிப்படையில் ஒவ்வொரு சங்கமும் தங்கள் சங்கத்திற்கான செயல்பாட்டு அமைப்பு விதிகளை அமைத்துக்கொண்டு அந்த அமைப்பு விதிகளை வழிகாட்டியாகக் கொண்டு செயல்படுகின்றன. இந்த அமைப்பு விதிகள், சங்கத்தின் அமைப்புப் பேரவைக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டு, சங்கமும், அமைப்பு விதிகளும் தொழிற்சங்க சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்படுகின்றன.

இந்த அமைப்பு விதிகளில், சங்கத்தின் நோக்கங்கள், நிர்வாகம், நிர்வாகிகள் தேர்தல், அவர்களின் செயல்முறை, நிதி வரவு செலவுக்கணக்கு, ஆண்டுப் பேரவைக்கூட்டம், பொது நிதிவரவு முறையும் செலவு செய்யும் முறையும் இவ்வாறு விதிகள் அமைக்கப்பட்டு, அந்த விதிகள் தொழிற்சங்கங்களின் செயல்பாட்டிற்கு வழிகாட்டுகின்றன.

இத்தகைய தொழிற்சங்கமாதிரி அமைப்பு விதிகளை வழிகாட்டியாகக் கொண்டும் விவசாயிகள் சங்கம், விவசாயத் தொழிலாளர் சங்கங்களின் அகில இந்திய அமைப்புகளின் வழிகாட்டுதல்களைக் கொண்டும் கிராம சங்க அமைப்புகளை அமைத்துக்கொள்ளலாம்.

இருப்பினும் தொழிற்சங்க அமைப்புகளின் இயக்கஅனுபவத்தையும், விவசாயிகள் இயக்க அனுபவத்தையும் விவசாயத் தொழிலாளர் சங்க இயக்க அனுபவத்தையும் வைத்துப் பார்க்கும்போது, இந்த அடிமட்டவர்க்க ஸ்தாபனஅமைப்புகளை உருவாக்குவதிலும்,அவைகளை ஜனநாயக முறையில் செயல் படுத்துவதிலும், அவைகளை உண்மையான வெகுஜன இயக்கமாக வளர்ப்பதிலும் மிகவும் கடுமையான கஷ்டங்கள்இருக்கின்றன. இருப்பினும் இந்தக் கஷ்டங்களை கட்டாயம் சமாளித்து, அடிப்படை வர்க்க ஸ்தாபனங்களை உருவாக்குவது மிகவும் அவசியமாகும். அதற்குக் குறுக்கு வழி கிடையாது. இது புரட்சிகர இயக்கத்தின் அடிப்படைக் கடமையாகும்.

இத்தகைய முக்கியமான கடமையை நிறைவேற்றுவதில் நமக்கு உள்ள மிகமுக்கியமான இடையூறு நமது அடிப்படை வர்க்கங்களின் விவசாயிகள் தொழிலாளர்களின் பின்தங்கிய நிலையாகும் கல்விகலாச்சார வளர்ச்சியில் பின்தங்கிய நிலையாகும். ஆயினும் நமது நாட்டுமக்களுக்கு நமது பாரம் பரியப் பெருமையான மரபுவழிக்கலாச்சாரச் செழுமை காரணமாக நமது நாட்டு மக்களுக்கு மிகவும் உயர்ந்த அளவில் பொது அறிவு இருக்கிறது. உயர்ந்த மட்ட அனுபவ அறிவு இருக்கிறது, அது நமக்குரிய மிகப்பெரிய சொத்தாகும். அதைப் பயன்படுத்தி நமது அடிப்படை அமைப்புகளை உருவாக்க வேண்டும்.

தொழிலாளி விவசாயிகளின் அடிப்படை அமைப்புகளை உருவாக்குவதில் முக்கிய அம்சம், அதற்குரிய நிர்வாக ஊழியர்களைப் பயிற்றுவிப்பதாகும். அத்துடன் மிகவும் அதிகமான அளவில் பொறுமை விடாமுயற்சி தியாக உணர்வு அர்ப்பணிப்பு அவசியமாகும்.அத்தகைய சிறந்த பண்புகளையும் நமது இளைஞர்களுக்கிடையில் வளர்க்கவேண்டும்.

கிராமப்புறங்களில் வர்க்க அமைப்புகளை உருவாக்குவதில் இன்னும் அதிகமான கஷ்டங்கள் உள்ளன.இதில் உள்ள மற்றொரு முக்கிய இடையூறு சாதி அமைப்புகளும், சாதிவேறுபாட்டு பாகுபாட்டு உணர்வுகளுமாகும். நமது நாட்டின் சாதி மத அமைப்புகள் நமது நாட்டு மக்களின் ஒற்றுமைக்கு இடையூறுகளாக உள்ளன. சாதிப்பாகுபாடுகளையும் வேறுபாடுகளையும் சாதிக்கொடுமைகளையும் எதிர்த்து நமது விவசாயிகள் இயக்கமும் விவசாயத் தொழிலாளர் இயக்கமும் தொழிலாளர் இயக்கமும் மிகவும் கடுமையான முயற்சிகளைச் செய்திருக்கின்றன.

நமது சமுதாயத் தீங்குகளான சாதிப்பாகுபாடுகளையும் வேறுபாடுகளையும் கொடுமைகளையும் எதிர்த்துப் போராடி அடித்தட்டு மக்களை ஒற்றுமைப்படுத்துவதில் நமது வர்க்க ஸ்தாபனங்களுக்கு மிக முக்கியமான கடமை இருக்கிறது, பங்கு இருக்கிறது.

ஒரு கிராமத்தில் வர்க்க ஒற்றுமையின் அடிப்படையில் வர்க்க அமைப்புக்களை வலுவாகக் கட்டுவதில் நாம் வெற்றி பெற்றுவிட்டால், அங்கு சாதி வேறுபாடுகள், பாகுபாடுகள், கொடுமைகளை நீக்கி விடமுடிகிறது.

எனவே கிராமப்புறங்களில் விவசாயிகள் சங்கங்களையும் விவசாயத் தொழிலாளர் சங்கங்களையும் இதர கிராமப்புற பாட்டாளிகளின் சங்க அமைப்புகளையும் உருவாக்குவது என்பது, அந்த மக்கள் பகுதியினரின் கோரிக்கைகளுக்காகப் போராடுவது மட்டுமல்ல, வர்க்க அமைப்புகளின் வளர்ச்சி, கிராமப்புறப் பாட்டாளிகளை கல்வி கலாச்சாரப்பின்தங்கிய நிலையிலிருந்தும், சாதி மத மூடப்பழக்க வழக்கங்களிலிருந்தும் விடுவிக்கப்படுவதற்கும், கிராமப்புற மக்களுக்கிடையில், அவர்களுடைய வாழ்க்கையில் ஜனநாயக மறுமலர்ச்சி ஏற்படுவதற்கும் உதவுகிறது, ஊக்கமூட்டுகிறது.

இந்தப் பேரவைக் கூட்டங்கள், சம்பந்தப்பட்ட கிராமப்புறப் பாட்டாளி மக்களின் பொருளாதார கோரிக்கை இதர கோரிக்கைகளைப் பற்றி எடுத்துக் கூறி தீர்மானங்கள் நிறைவேற்றக் கூடியதாக மட்டுமல்லாமல், சாதி மத இன மொழி வேறுபாடுகள் இன்றி அனைவரும் ஒன்றுகூடிக் கலந்து பேசி, தங்கள் வாழ்க்கையின் எதிர் காலத்தைப் பற்றி சிந்திக்கும் பேரவைக் கூட்டங்களாக அவைகளை வளர்க்க வேண்டும்.

கிராமப்புறப் பாட்டாளி மக்களின் சங்கங்களின் ஆண்டுப் பேரவைக் கூட்டங்கள், தொழில், வேலை, கிராம வளர்ச்சி வாழ்க்கை நலன்களின் அடிப்படையில் சாதி மத மொழி இன வேறுபாடுகளின்றி ஒன்றுபட்டு நிற்கும் வர்க்கங்களின் கூட்டாக, பொருளாதார அரசியல் கோரிக்கைகளை முழங்குவதுடன், கலை விழாக்களும், விளையாட்டுப் போட்டிகளும், சிறுவர் சிறுமியர், மாதர்கள், இளைஞர்கள் பங்கு கொள்ளும் பல்வேறு நிகழ்ச்சிகளையும் இணைத்து அதை ஒரு மக்கள் விழாக் கூட்டமாக வளர்க்க வேண்டும். இதன் மூலம் அனைத்து உழைக்கும் மக்களின் ஒற்றுமையின் சின்னங்களாக சங்கங்கள் வளரும்.

## 2. கோரிக்கைகள் தொகுப்பது பற்றி

விவசாயிகள், விவசாயத் தொழிலாளர்கள், இதர கிராமப்புறப் பாட்டாளிகளின் தொழில், வேலை மற்றும் வாழ்க்கை நிலையை உயர்த்துவதற்கான கோரிக்கைகளைத் தொகுத்து, அவர்களுடைய சங்கங்களின் மூலம் அவர்களுடைய கோரிக்கைகளுக்கான இயக்கத்தை தொடர்ச்சியாக நடத்துவது என்பது வெகுஜன இயக்கத்தின் அடிப்படையாகும். இதில் பகுதி வாரியான கோரிக்கைகளும் உள்ளன. பொது கோரிக்கைகளும் உள்ளன. இவைகளை இணைக்க வேண்டும்.

விவசாயிகளுக்கும் விவசாயத் தொழிலாளர்களுக்கும் விவசாயத் தொழில் அடிப்படையான தொழிலாகும். அத்துடன் நிலத்துடன் தொடர்பு கொண்ட இதர பாட்டாளிகளின் நலன்களும் விவசாயத் தொழிலின் வளர்ச்சியுடன் இணைந்திருக்கின்றன.

எனவே கிராமப்புறப் பாட்டாளிகளின், குறிப்பாக விவசாயிகள் விவசாயத் தொழிலாளர் சங்கங்களின் பிரச்னைகளும் கோரிக்கைகளும் ஓரளவு இணைந்ததாகும். அகில இந்திய விவசாயிகள் சங்கம் தொடங்கும்போது ஒரே அமைப்பாகத் தான் தொடங்கியது. ஆனால் நாடு விடுதலை பெற்ற பின்னர் விவசாயத்துறையில் ஏற்பட்டுள்ள மாற்றங்களை ஒட்டி விவசாயத் தொழிலாளர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது. அவர்களுடைய சில நலன்களும் பிரச்னைகளும் தனியாக வளர்ச்சி பெற்றிருக்கின்றன. அதனால் விவசாயத் தொழிலாளர் சங்கம், பாரதீய கேத் மஸ்தூர் சங்கம் என்ற பெயரில் இந்திய விவசாயத் தொழிலாளர் சங்கமும் ஆரம்பிக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது. அதனடிப்படையில் தமிழ் நாட்டிலும் மாநில அளவிலும், மாவட்டங்களிலும், கிராமப்புற மட்டம் வரையிலும் விவசாயத் தொழிலாளர் சங்கங்களும் அமைக்கப்பட்டிருக்கின்றன. எனவே விவசாயிகள், விவசாயத் தொழிலாளர்கள் ஆகியோர்களின் கோரிக்கைகளைப் பிரித்தும், இணைத்தும் பரிசீலனை செய்யலாம்.

**விவசாயிகளின் அடிப்படையான பிரச்னைகளும் கோரிக்கைகளும்:**

1. நிலம்: நாடு விடுதலை அடைந்து நாற்பது ஆண்டுகளுக்கு மேல் கடந்து விட்ட போதிலும் இன்னும் சில இடங்களில் நிலக்குவியல் பிரச்னை தீரவில்லை. கோவில்கள், மடங்கள், அற நிலையங்கள் என்னும் பெயரிலும் இன்னும் பல நிலப்பிரபுக்களின் கைகளில் உச்ச வரம்புச் சட்டத்திற்கு மாறாக பினாமியாகவும் நிலம் இருந்து கொண்டிருக்கிறது. நாடு முழுவதிலும் இத்தகைய நிலத்தின் அளவு மொத்த விளை நிலத்தில் பதினைந்து முதல் இருபது சதவீதம் வரை இருக்கும். இந்த நிலம் இன்னும் வாரம், குத்தகை அடிப்படையில் மிகப் பெரும்பாலும் சாகுபடி செய்யப்படுகிறது. இதில் இன்னும் பல லட்சக்கணக்கான வாரம், குத்தகைக்கு சாகுபடி செய்யும் விவசாயிகள் இருக்கிறார்கள். இவர்களுக்கும் இவர்கள் சாகுபடி செய்யும் நிலத்தில் முழு உரிமை கிடைக்க வேண்டும்.

சாகுபடிக்கு லாயக்கான தரிசு புறம்போக்கு நிலங்கள் இன்னும் பல லட்சம் ஏக்கர் இருக்கிறது. அத்துடன் ஆற்றோரம், சாலையோரம், ரயில் பாதை ஓரங்களில் மரங்கள் வளர்ப்பதற்கு லாயக்கான தரிசு நிலங்களும் இருக்கின்றன. இவற்றையெல்லாம், சாகுபடிக்கும், மரங்கள்

வளர்ப்பதற்கும் நிலமில்லாத விவசாயிகளுக்குக் கொடுக்கப் படவேண்டும் சற்று விரிவான அளவில் சாகுபடிக்கு லாயக்கான இடம் குவிந்து இருந்தால் அந்த இடங்களில் சர்க்கார் பண்ணைகளையோ, விவசாய சேவை நிலையப் பண்ணைகளையோ அமைக்கலாம்.

இத்தகைய நிலப்பிரச்னைக்கு தீர்வு காண வேண்டியது மிகவும் அவசியமான, அவசரமான பிரச்னைகளில் ஒன்றாகும். சுதந்திர நாட்டில் இத்தகைய நிலப்பிரபுத்துவ திட்டுகள் கரும்புள்ளிகளாகும்.. நாட்டின் வளர்ச்சிக்கு இடையூறாக உள்ள சில தடைகளாகும். ஜனநாயகத்தின் தொடர்ச்சியான வளர்ச்சிக்கு இடையூறானதாகும்.

ஏற்கெனவே இருந்த சுதேச மன்னராட்சி முறை, ஜமீன் தாரி முறை ஒழிக்கப்பட்டு, நில உச்ச வரம்புச் சட்டம் கொண்டு வரப்பட்டு பெரும் அளவில் நில விநியோகம் ஆகியுள்ளது. மேலும் நிலத்தில் நேரடியாக சாகுபடி செய்ய முடியாமலும், சாகுபடி வேலை கட்டுப்படியாகாமலும்; கட்டுப்படியாக சிறிய நில உடைமைகளை நீடித்து வைத்துக் கொள்ளமுடியாமலும் நில மாற்றங்கள் ஏராளமாக ஏற்பட்டு வருகின்றன. இதனால் பல இடங்களில் பழங்குடி மக்களின் நிலம் பறி போயிருக்கிறது.'

எனவே நில உடமை எல்லா மாநிலங்களிலும் ஒரே சீராக அமைக்கவும், சிறு, நடுத்தர நில உடமைகளுக்குப் பாது காப்புக் கிடைக்கும் வகையில் சீரான நிலச்சீர்திருத்த முறைகள் கொண்டு வரப்பட வேண்டும்.

விவசாயத்தைத் தொழிலாக அறிவித்து பாதுகாப்புக் கிடைக்கச் செய்ய வேண்டும்.

## 2. நீர்ப்பாசனம்:

நமது நாட்டின் விவசாயத்தில் நீர்ப்பாசனம் மிக முக்கியமான பிரச்னைகளில் ஒன்றாகும். இது பற்றி ஏராளமான கோரிக்கைகள் உள்ளன. நீர்த்தேக்கங்கள், அணைகள், பாசன ஏரிகள், குளங்கள், கண்மாய்கள், பாசனக் கிணறுகள், கால்வாய்கள் முதலியவை பற்றி ஏராளமான பல பிரச்னைகள் உள்ளன. இவை சம்பந்தமாக அந்தந்த கிராமத்தில் தனிப் பிரச்னைகளும் கோரிக்கைகளும் உள்ளன.

நமது நாட்டின் பொதுப் பணித்துறை பழமை மிக்கதாகும். இவைகளுடன் நமது நாட்டின் நதிகளை இணைப்பதும் ஒரு பிரச்னையாக ஒரு முக்கிய கோரிக்கையாக எழுந்துள்ளது.

நமது நாட்டில் அவ்வப் போது ஏற்படும் பருவ நிலை மாற்றங்களும் நமது நீர்ப்பாசன நிலையுடன் இணைந்த

தாகும். பருவ நிலை காரணமாக ஏற்படும் கஷ்டங்களை சமாளித்து நமது நீர்ப்பாசன வசதிகளைப் பாதுகாக்க வேண்டும். புதிய வசதிகளை அபிவிருத்தி செய்ய வேண்டும். வளர்க்க வேண்டும்.

முதலாவதாக நீர்ப்பாசனத்திற்கான நீண்ட காலத் திட்டங்களில் நமது நாட்டில் நதிநீர் இணைப்பிற்கான திட்டங்களைத் தொடர்ந்து வற்புறுத்த வேண்டியது அவசிய மாகும். நாட்டிலுள்ள அனைத்து நதிகளையும் இணைப்ப தற்கு இமயம் முதல் குமரி வரையிலுமான நதிநீர் இணைப்பிற்கு திட்டமிட்டு, அதை கட்டம் கட்டமாக நிறைவேற்றலாம்.

நமது நதிகளை இணைத்து விட்டால், நமது பாசன வசதியைப் பெருக்கி, உணவு உற்பத்தியைப் பன் மடங்கு அதிகரித்து, இந்தியாவைப்போல் பத்து இந்தியாவிற்கு சோறு போடலாம். நதிநீர் இணைப்பு மூலம் நீர் மின் நிலையங்களை பெரும் அளவில் கொண்டு வர, வாய்ப்பு ஏற்படும். அதன் மூலம் ஏராளமான அளவில் மின்சாரத்தை உற்பத்தி செய்து. இந்தியாவைப் போல் பத்து இந்தியாவிற்கு மின்சாரம் வினியோகம் செய்யலாம் என்று நிபுணர்கள், பொறி இயல் வல்லுநர்கள் கூறுகிறார்கள் என்பதைக் குறிப்பிட்டுள்ளோம். எனவே இந்தக் கோரிக்கை பற்றி தொடர்ந்து மக்களுடைய உணர்வு நிலையை உயர்த்த வேண்டும்.

இந்தியா முழுவதற்குமான மொத்தமான நதிநீர் இணைப்புத் திட்டத்தின் முதல் கட்டமாக தென் மாநிலங்களின் நதிகளை இணைக்க உடனடி முயற்சிகளைச் செய்யலாம். குறிப்பாக மகாநதி, கோதாவரி நதிகளை தெற்கில் உள்ள காவிரி, வைகை, தாமிரபரணியுடன் இணைக்க முயற்சிகள் மேற்கொள்ளலாம். பின்னர். படிப்படியாக இமயத்தின் நதிகளை இணைக்க முயற்சிகள் மேற்கொள்ளலாம்.

இன்று இந்திய நாட்டில் பல கோடிக்கணக்கான பேருக்கு, போதுமான வேலை இல்லை. அதனால் இந்த உழைப்பு சக்தியெல்லாம் வீணாகிறது. இந்த உழைப்பு சக்தியைப் பயன்படுத்தி, நமது நாட்டின் சொந்தத் தொழில் நுட்பத் திறனையே பயன்படுத்தி இந்த மகத்தான திட்டத்தை நிறைவேற்ற முடியும்.

நமது நாட்டின் தண்ணீர் சக்தி மிகவும் வலுவானது. காவிரியைச் சோழ மன்னர்கள் குடகு வரை சென்று தவமிருந்து அம்மலைக் கடவுள்களிடமிருந்து சோழ நாட்டிற்குக் கொண்டு வந்ததாக, பகீரதன் என்னும் சூரிய குல மன்னன் இமயத்திற்குச் சென்று கடும் தவமிருந்து கங்கையை பாரத பூமிக்குக் கொண்டு வந்ததாக, கங்கையின் பிரவாக

வேகத்தை பூமி தாங்காது என்னும் காரணத்தால், ஆதி சிவனே தனது தலை முடியால் கங்கையின் வேகத்தைத் தணித்ததாக நமது நாட்டுக் கதைகள் கூறுகின்றன.

இந்தப் புண்ணிய நதிகளை இணைத்து மகா புண்ணியத்தை உண்டாக்கலாம். இந்திய விவசாயிகளின் முதல் கோரிக்கையாக, முழு மொத்தமான கோரிக்கையாக நதிநீர் இணைப்பு கோரிக்கையை முன் வைப்பதற்கான காலம் பக்குவமடைந்து வருகிறது. எனவே அதை வலியுறுத்திக் கூற வேண்டியது அவசியமாகும்.

இரண்டாவதாக நமது நாட்டின் பாரம்பரியமான மரபுச் செல்வமாக உள்ளது நமது நாட்டின் பழம் பெருமை மிக்க கால் வாய்களும் ஏரிகுளம் கண்மாய்களுமாகும். நமது நாட்டின் பழைய நீர்த்தேக்கங்கள், பழைய கால்வாய்களுடன், புதிய நீர்த் தேக்கங்கள், புதியகால்வாய்கள் வந்திருக்கின்றன. ஏற்கனவே கட்டப்பட்டுள்ள அணைக் கட்டுகள் போக புதிய அணைக் கட்டுகள் கட்ட திட்டமிடலாம். அதற்கான கோரிக்கைகளை முன் வைக்கலாம். தமிழகத்தைப் பொறுத்தவரை, நாம் பெரும்பாலும் அதிகமான அளவில் ஆற்று நீரைப்பயன் படுத்தி வருகிறோம். அநேகமாக தமிழகத்தில் பாயும் பெரிய ஆறுகள் நடுத்தர ஆறுகள் அனைத்திலும் அணைகள் கட்டியுள்ளோம். அத்துடன் தமிழகத்திலுள்ள சிறிய ஓடைகள் முதல் அத்தனை ஆறுகளிலும் குறுக்கணைகள் கட்டி, ஏரிகள் குளங்கள், கண்மாய்கள் போன்ற சிறிய நடுத்தர நீர் நிலைகளை நிர்மாணித்துள்ளோம்.

ஆனால் தமிழகத்திலும் இதர சில மாநிலங்களிலும் உள்ள பழைய நீர் நிலைகள், ஏரி, குளம், கண்மாய் கால்வாய்கள் பலவும் பல ஆண்டுகளாகப் பழுது பார்க்கப்படாமல் புறக்கணிக்கப்பட்டு, தூர்ந்து போயிருக்கின்றன. பாழடைந்தும் கிடக்கின்றன. அவற்றைப் பழுது பார்க்கவும், பராமரிக்கவும் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும்.

தமிழ்நாட்டில் அநேகமாக ஏரி, குளம் இல்லாத ஊர் இல்லை. அவைகளைப் பராமரிப்பதில் பாதுகாப்பதில் முழு அளவில் பயன் படுத்துவதில், நமது கிராம விவசாய சங்கங்கள், விவசாயத் தொழிலாளர் சங்கங்கள், முழு கவனம், முதல்கவனம் செலுத்த வேண்டும்.

கால்வாய்ப் பாசனப்பகுதிகளில் கால்வாய்களைப் புதுப்பித்து நவீனப் படுத்துவதற்கான கோரிக்கைகளை முன் வைக்க வேண்டும்.

ஒவ்வொரு ஏரி, குளம், கண்மாயையும் குறிப்பிட்டு அதை ஆழப்படுத்தவும், கரைகளை பலப்படுத்தவும், பராமரிக்க

வும் கோரிக்கைகளை முன் வைத்து இயக்கம் நடத்த வேண்டும். இந்த இயக்கங்களில் அதிக பட்சமான அளவில் மக்களைத் திரட்ட வேண்டும்.

மூன்றாவதாக கிணற்றுப் பாசனம் தமிழகம் போன்ற மாநிலங்களில் முக்கிய இடம் பெறுகிறது. இதில் பெரும் பாலும் மின்சார பம்பு செட்டுகள், ஆயில் என்ஜின்கள் இணைக்கப்பட்டிருக்கின்றன. பாசனத்திற்கு மட்டுமல்லாமல், குடிதண்ணீருக்கும் நிலத்தடி நீரைப் பயன்படுத்துவது இந்தியாவில் பண்டையப் பழக்கங்களில் ஒன்றாகும்.

இன்றைக்கு இந்தக் கிணற்றுப் பாசன முறைக்கு புதிய பெரிய அபாயம் ஏற்பட்டிருக்கிறது. கிணறுகள் மூலம் குடி தண்ணீர் எடுக்கும் முறைக்கும் அபாயம் ஏற்பட்டிருக்கிறது. குறிப்பாக நிலத்தடி நீர்மட்டம் குறைந்து கொண்டே இருக்கிறது. பல இடங்களில் நீர் ஊற்று. இல்லாமல் போகும் அபாயம் ஏற்பட்டு வருகிறது.

நீர் ஊற்றுகளைப் பாதுகாப்பது ஒரு முக்கியமான கோரிக்கையாகிவிட்டது. அதற்கு மேல் மட்டத்தில் உள்ள நீர் நிலைகளைப் பாதுகாக்கவேண்டும். நமதுகுளங்கள், ஊருணிகள், தடாகங்கள் முதலியவைகளைப் பாதுகாப்பதற்கான கோரிக்கைகளை முன் வைத்து அவற்றை நிறைவேற்ற வேண்டும்.

பாசனக் கிணறுகளுக்கு மின் இணைப்பு கொடுப்பதில் அரசின் வியாபாரப் போக்கு லாபநோக்கம் நீக்கப்பட வேண்டும். பம்பு செட்டு பாசன நிலங்களுக்கு மின் கட்டணத்தை நீக்கிவிட வேண்டும்.

கால்வாய்ப்பாசனத்தில், ஏரி குளம் கண்மாய்ப்பாசனத்தில் அரசு எவ்வாறு நிலவரி மட்டும் வாங்குகிறதோ அதே போல், அரசின் மக்கள் நலத்திட்டங்களின் பகுதியாக மின் இணைப்பு வசதிகளும் இருக்க வேண்டும்.

மேலும் மின் இணைப்பு, மின்சப்ளை, பராமரிப்பு ஆகியவைகளில் பல கொடுமைகள் நீடிக்கின்றன. அந்தக் கொடுமைகளை நீக்கவும், மின் இணைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்யவும். விவசாயிகள் சங்கங்கள் கோரிக்கைகளை முன் வைத்து விவசாயிகளைத் திரட்டவேண்டும்.

எல்லாவற்றிற்கும் மேலாக கிணறுகளின் நீர் ஊற்றுகளை, அதாவது நிலத்தடி நீர் ஊற்றுகளைப் பாதுகாப்பது ஒரு முக்கியமான மிக முக்கியமான பிரச்னையாக உள்ளது. அதற்கான தீவிரமுயற்சிகள் உடனடியாக எடுக்கவேண்டும். அதற்கு கசிவு நீர்க்குட்டைகள் என்னும் பெயரில் அரசு சில

திட்டங்களை உருவாக்கி உள்ளது; சில இடங்களில் இத்தகைய கசிவு நீர்க்குட்டைகள் வெட்டப்பட்டிருக்கின்றன.

ஆனால் தமிழகத்தைப் பொறுத்தவரையில் ஏராளமான எண்ணிக்கையில், லட்சக்கணக்கில் என்று கூட கூறலாம், நீர் நிலைகள் இருக்கின்றன என்பதை நாம் ஏற்கெனவே குறிப்பிட்டுள்ளோம். தமிழ் நாட்டில் ஊர்தவறாமல் பல குளங்கள், ஊரணிகள், குட்டைகள், பொய்கை, — தடாகங்கள் உள்ளன. கோவில் தவறாமல் குளங்கள் உள்ளன. அத்துடன் பாசன ஏரிகள் குளங்கள் கண்மாய்கள் உள்ளன. அவைகள் எல்லாம் பாசனம், குடிநீர், குளிப்பதற்கு, கால் நடைகள் குடிக்க, குளிப்பாட்ட பயன்படுவதுடன், சுற்றுப்புற சூழலைப் பாதுகாக்கவும், நிலத்தடி நீர் ஊற்றுகளைப் பாதுகாக்கவும் பெருக்கவும் பயன்படுகின்றன.

எனவே இந்த லட்சக்கணக்கான நீர் நிலைகளை ஆழப்படுத்தி பழுதுபார்த்து பராமரிக்க ஒரு பெரிய விரிவடைந்த திட்டத்தை தயாரித்து அதை நிறைவேற்ற வேண்டும். நமது நீர்நிலைகளைப் பழைய நிலைக்கு கொண்டு வருவதன்மூலம்தான் நிலத்தடி நீர் ஊற்றுகளைப் பாதுகாக்க முடியும்.

தமிழகத்தில் உள்ள ஒவ்வொரு ஏரி, குளம், கண்மாய்களுக்கும், ஊரணிகள், தெப்பக்குளங்களுக்கும் வரத்துக் கால் வடிகால்கள், மடைகள், கலுங்குகள் இருக்கின்றன. அவற்றில் பலவும் பாழடைந்துகிடக்கின்றன. அவையனைத்தையும் பழுது பார்த்து சீரமைக்க வேண்டும். இதில் மக்கள் ஒத்துழைப்பையும் நாடவேண்டும். சமுதாயத்தின் கூட்டு முயற்சிகளையும் பயன்படுத்தி நமது நீர் நிலைகளை உயிர்ப்பிக்க வேண்டும்.

## 3. கடன்:

விவசாயிகளின் கடன் பளு நீண்ட நெடுநாள் பிரச்சனையாக நீடித்து வருகிறது. இன்று கடன் வழங்கும் முறைகளில் நவீன முறைகள் வளர்ச்சி பெற்றிருக்கின்றன.

முன்பெல்லாம் விவசாயிகளுக்கு தனியார் லேவாதேவிக்காரர்கள் மூலமாகத்தான் கடன் கிடைத்தது. அந்தத்தனியார் கந்து வட்டிக்காரர்கள் கொடுமையான முறையில் வட்டி வாங்கிவந்தனர். இந்த கந்துவட்டிக்காரர்கள் விவசாயிகளுக்குக் கொடுமையான வட்டிக்குக்கடன் கொடுத்து, விவசாயிகளின் நிலத்தை அடமானமாகப் பெற்று கடைசியில் கடனைத் திருப்பிக்கொடுக்க முடியாமல் விவசாயிகள் நிலத்தை இழந்திருக்கிறார்கள். இத்தகைய கொடுமையான வட்டியை எதிர்த்தும் இழந்த நிலத்தை மீண்டும் பெறுவதற்

கும் ஏழை, நடுத்தர விவசாயிகள் சேலம், தருமபுரி, வடஆற்காடு, போன்ற மாவட்டங்களிலும், நாட்டின் இதர பல வேறு பகுதிகளிலும் விவசாயிகள் கடுமையானபோராட்டங்களை நடத்தியிருக்கிறார்கள்.

நாடு விடுதலை பெற்றபின்னர், விவசாயிகளின் கடன்வசதிக்காக கூட்டுறவுத்துறை வளர்க்கப்பட்டது. கூட்டுறவு நாணய சங்கங்கள். வங்கிகள்மூலம் விவசாயிகளுக்குக் கடன் கிடைத்தது. ஆனால் இந்தக் கூட்டுறவு அமைப்புகளிலும் வட்டிவிகிதம் படிப்படியாக உயர்த்தப்பட்டது. கடன் வாங்கும் விவசாயிகளிடம் பல்வேறு பிடித்தங்களும் செய்யப்பட்டு: விவசாயிகளின் பணத்தைக் கொண்டே விவசாயிகளுக்கு அதிக வட்டிக்குக்கடன் கொடுக்கும் மறைமுகக் கொள்ளையும் இந்திய அரசின் பொதுக் கொள்கை மூலம் கொண்டுவரப்பட்டது.

இப்போது விவசாய உற்பத்தியில் ஏற்பட்ட பாதிப்பு, உற்பத்திச் செலவு அதிகரிப்பு, விளை பொருளுக்குக் கட்டுபடியாகும் விலையில்லாத காரணம் ஆகியவைகளால் விவசாயிகள் வாங்கிய கடனைத் திருப்பிக் கொடுக்க முடியாமல் கடனும்வட்டியும் கூடுதல் வட்டியும், அபராத வட்டியும் அதிகரித்துக்கொண்டே போய், இப்போது அது விவசாயிகளுக்குத் தாங்கமுடியாத பளுவாக வளர்ந்து விட்டது.

எல்லா விவசாயிகளின் எல்லாக் கடன்களையும் ரத்துசெய்ய வேண்டும். சுலபமான முறைகளில் மிகக் குறைவான வட்டியில் விவசாயிகளுக்குப் புதிய கடன்கள் கிடைக்கவேண்டும் என்னும் கோரிக்கை வலுவாக வரத் தொடங்கியிருக்கிறது. இந்தப் பிரச்சனைமீது பல போராட்டங்களும் நடந்துள்ளது அரசும் பல அரைகுறை நடவடிக்கைஎடுத்துள்ளது. ஆயினும் பிரச்னைகள் தீரவில்லை.

கடன்களை ரத்து செய்யவேண்டும் என்னும் கோரிக்கை கூட்டுறவு இயக்கத்திற்கு. இப்போதுள்ள கூட்டுறவு அமைப்புகளுக்கு எதிரானது என்னும் பிரச்சாரமும் கிளப்பிவிடப்பட்டுள்ளது. இந்தப் பிரச்சாரம் பொய்யானதாகும், மோசடித்தனமானதாகும். விவசாயிகளுக்கு விரோதமானதாகும். விவசாயிகளின் கடன் ரத்து செய்யப்படவேண்டும் என்று கோரும்போது, விவசாயிகளின் கடன் பளுவின் சுமையை அரசாங்கம் எடுத்துக்கொள்ள வேண்டும் என்பதாகும்.

அத்துடன் இன்றைய கூட்டுறவு அமைப்பில் ஏராளமான ஊழல்கள், நிர்வாகச் சீர் கேடுகள், தேவையற்ற சுமைகள் இருக்கின்றன. கூட்டுறவு அமைப்புகளின் சீர் கேடுகளைப் பற்றி பல விசாரணைகளில் தெரிய வந்துள்ளன. இதில் இடைத்தரகு சிக்கல்களும் சுமையை அதிகரித்துள்ளது.

கூட்டுறவு அமைப்புகளின் இந்த சுமைகளை எல்லாம் கூட விவசாயிகள்தான் சுமக்க வேண்டியதிருக்கிறது. எனவே விவசாயிகளின் இன்றைய கடன் சுமையை நீடிக்கவும், சுலப மான முறையில் விவசாயிகளுக்கு புதிய கடன் வசதிகள் கிடைக்கவும் வட்டி விகிதத்தைக்குறைக்கவும், அபராத வட்டி முறையை ரத்து செய்யவும், கூட்டுறவு அமைப்பு களை சீராகவும் ஜனநாயக முறையிலும் செயல்படவுமான கோரிக்கைகளை முன் வைக்க வேண்டும்.

## 4. விவசாயக் கருவிகள்:

முன்பெல்லாம் விவசாயிகள் தங்களுக்குத் தேவையான விவ சாயக் கருவிகளை காடுகளிலிருந்து மிகவும் குறைவான கட்டணத்தில் எடுத்து வந்தார்கள். இப்போது அதற்கு அனு மதியும் இல்லை. காடுகளும் இல்லை. அத்துடன் நவீன விவ சாயக் கருவிகளும் நடை முறைக்கு வந்து விட்டன.

விவசாயக்கருவிகளுடன் கால்நடைகளும் முக்கியமான உற் பத்தி சக்தியாகும். கால்நடை வளர்த்தல் பாதுகாத்தல் மிக முக்கியமானதாகும். அதைத் தனியாக எடுத்துக் கொள்ள லாம்.

விவசாயக்கருவிகள் விவசாயிகளுக்கு மலிவான விலையில் சுலபமாகக் கிடைப்பதற்கான கோரிக்கைகளையும் முன் வைக்க வேண்டும். கிராமந்தோறும் விவசாயக்கருவிகளை விற்பனைக் கூடங்கள் ஏற்படுத்தி விநியோகம் செய்யலாம்.

## 5. உரம்:

ரசாயனஉரத்தின் உபயோகம் அதிகரித்து வருகிறது. அதே சமயத்தில் முதலாளித்துவ மார்க்கட்டில் ரசாயன உரத்தின் விலையும் அதிகரித்து வருகிறது இயற்கை. உரங்களின் அளவு குறைந்து வருகிறது. அதனால் நிலத்தின் தரமும் குறைந்து கொண்டு வருகிறது.

இயற்கை உரம் அதிகமாகக் கிடைப்பதற்கு கால் நடைகள் வளர்ப்பு அதிகமாக வேண்டும். காடுகள் மரங்கள் பாதுகாக் கப்பட வேண்டும். வளர்க்கப்பட வேண்டும்.

இயற்கை உரங்களும் ரசாயன உரங்களும் சீரான முறையில் நிலத்திற்குச் சேரவேண்டும். இந்தப் பிரச்சனை வளர்ச்சி யடைந்த நாடுகளிலும் ஏற்பட்டிருக்கின்றன.

இயற்கை உரங்களை அதிகப் படுத்தவும், ரசாயன உரங்கள் மலிவான விலையில் கிடைக்கவும், போக்குவரத்து வசதிகள் சுலபமான முறையில் கிடைக்கவும் கோரிக்கைகளை முன் வைத்து, விவசாயிகள் சங்கங்கள் முயற்சிகள் மேற்கொள்ள வேண்டும்.

### 6. பயிர் பாதுகாப்பு :

பயிர் பாதுகாப்பிற்கு பூச்சி மருந்து அடிப்பது இப்போது முக்கியப் பழக்கமாக நடை முறைக்கு வந்திருக்கிறது.

பன்னாட்டு கூட்டு நிறுவனங்களும் பெரு முதலாளித்துவ உற்பத்தியாளர்களும் திட்டமிட்டு மருந்துகளின் தரத்தைக் குறைத்தும், விலையை உயர்த்தியும் மோசடி நடத்தி வருகிறார்கள்.

மருந்துகளின் தரத்தை உயர்த்தவும், விலைகளைக் குறைக்கவும், சரியான மருந்துகள் கிடைக்கவும், ஏற்பாடுகள் வேண்டும். அத்துடன் பயிர் காப்பீட்டு (இன்ஷுரன்ஸ்) உதவிகள் உத்திரவாதப்படுத்த வேண்டும்.

### 7. விதைகள்:

விவசாய ஆராய்ச்சிப் பண்ணைகள் மூலம் புதிய பல ரகமான விதைகள் உற்பத்தி செய்யப்படுகின்றன. நமது நாட்டின் ஆராய்ச்சிப் பண்ணைகள் விவசாயக் கல்லூரிகள் பல்கலைக் கழகங்கள் மிகச் சிறந்த பணிகளை ஆற்றி வருகின்றன. இந்த வகையில் நாம் பெரிய அளவில் சாதனைகள் புரிந்துள்ளோம். அதன் சாதனைகளின் பலன்களும் குறிப்பிட்ட அளவில் விவசாயிகளுக்குக் கிடைத்துள்ளன. நமது நவீன விவசாயப் பண்ணைகளின் சாதனைகள் விவசாயிகளுக்கு அறிமுகமாவதற்கும், விவசாயிகளுக்கு அவைகளின் பலன்கள் கிடைப்பதற்கும் முயற்சிகள் மேற்கொள்ள வேண்டும்.

மறுபக்கத்தில் பல்வேறு தானியங்கள், நவ தானியங்கள் செடி, கொடி, புல், பூண்டு வகைகளில் பழைய பல ரகங்கள், இனக் கூறுகள் அழிந்து கொண்டிருக்கின்றன. இது மிகவும் அபாயகரமானதாகும். அதுவும் இயற்கைச் சூழல் சமநிலைத் தன்மையைப் பாதிக்கிறது. அத்துடன் பழைய தாவர உயிரினங்கள் அழிவது அபாயகரமானதாகும். நிலத்தின் தன்மையையும் பாதிக்கும்.

எனவே பழைய இனங்களைப் பாதுகாக்க வேண்டியதும் புதிய இனங்களை உருவாக்க வேண்டியதும், அவைகளை இணைந்து செய்ய வேண்டியதும் நமது ஆராய்ச்சி நிலையங்களின் கடமையாகும்.

### 8. விவசாயிகளின் விளை பொருளுக்குக் கட்டுப் படியாகும் விலை:

விளை பொருளுக்கு விலை என்பதுதான் விவசாயிகள் சம்பந்தப்பட்ட மிக முக்கியமான பிரச்சனையாகும்.

விலையின் மூலம் தான் விவசாயிகள் முதலாளித்துவ மார்க்கட்டில் கொள்ளையடிக்கப் படுகிறார்கள். இன்றைய முதலாளித்துவ மார்க்கட் பன்னாட்டு கூட்டு நிறுவனங்கள், பெரு முதலாளிகளின் ஆதிக்கப் பிடிப்பில் இருக்கிறது.. இந்த மார்க்கட் கொள்ளை மூலம் தான் விவசாயிகள் கடுமையாகச் சுரண்டப் படுகிறார்கள். இந்த சுரண்டலை எதிர்த்து நடத்த வேண்டிய போராட்டம்தான் விவசாயி களின் முக்கிய பிரதானமான போராட்டமாக இன்றைய கால கட்டத்தில் அமைந்திருக்கிறது. இந்தக் கோரிக்கைக் கான போராட்டத்தில் விவசாயிகளின் உணர்வு நிலையை உயர்த்த வேண்டியது அவசியம். இது பற்றி விவசாயி களுக்கு விவரங்கள் எடுத்துக் கூறி விளக்கப் பிரச்சாரம் செய்ய வேண்டியது விவசாயிகள் சங்கங்களின் முக்கிய பணியாகும்.

விவசாயிகளின் விளை பொருள்களுக்குக் கட்டு படியாகும் விலையை நிர்ணயிக்க வேண்டியதும், அந்த விலை விவசாயிகளுக்குக் கிடைப்பதற்கு உத்திரவாதம் செய்ய வேண்டியதும் அரசாங்கத்தின் பொறுப்பாகும். இன்றைய அரசாங்கத்தின் கொள்கை முதலாளித்துவக் கொள்கையாக இருக்கிறது, எனவே விளைபொருளுக்குச் சரியான விலை பற்றிய போராட்டம் மிகவும் கடுமையானதாகும். அதற்கு விவசாயிகள் சங்கங்கள் மாநில அளவிலும் அனைத்திந்திய அளவிலும் தயாராகவேண்டியது மிகவும் அவசியமாகும்.

## 9. கால்நடை வளர்த்தல்

கால் நடை வளர்த்தல், பராமரித்தல் விவசாயத்துடன் இணைந்த மிக முக்கியமான தொழிலாகும். பெரியகால் நடைப் பண்ணைகள் மாட்டுப் பண்ணைகள், ஆட்டுப் பண்ணைகள் கோழிப் பண்ணைகள் பன்றிப் பண்ணைகள் பெருக்குதல் வளர்த்தல் ஒரு முக்கியமான தனிப்பிரிவாகவும் நிறுவப் பட்டிருக்கின்றன. அதே சமயத்தில் விவசாயி களின், விவசாயத் தொழிலாளர்களின், கிராமப்புறப் பாட்டாளிகளின் துணைத் தொழிலாகவும் கால் நடை வளர்ப்பு நடை பெறுகிறது. இதில் பால், மாமிசம், ரோமம், தோல், போன்ற பொருள்களின் உற்பத்தியைப் பெருக்குவது அந்தப் பண்ணைகளின் நோக்கமாக உள்ளது.

அதே சமயத்தில் கால் நடைகள் மூலம் கிடைக்கும் உரம் மிக முக்கியமானதாகும். அது நிலத்திற்கு மிகவும் அவசிய மானதாகும். அதைத் திட்டமிட்டு அபிவிருத்திசெய்து பாது காத்துப் பயன் படுத்தவேண்டும்.

நமது நாட்டு விவசாயத்தில் குதிரைசக்தி கிடையாது. காளைமாட்டு சக்திதான் பயன்படுத்தப்படுகிறது. உழுதல், மாம் அடித்தல், வண்டி இழுத்தல், கதிர் அடித்

தல் முதலிய பல வகைத் தொழில்களுக்கும் மாடுகளை நாம் பயன்படுத்துகிறோம். எனவே மாட்டு சக்தி நமது நாட்டு விவசாயத்தில் மிக முக்கியமான உற்பத்தி சக்தியாகும்.

கால் நடைகளைப் பராமரிப்பதில் அரசிற்கு முக்கிய கடமை இருக்கிறது. இதில் விவசாயிகளின் நலன்களைப் பாது காக்க விவசாயிகள் சங்கங்கள் முன் வர வேண்டும்.

## 10 காடு வளர்த்தல் :

காடு வளர்த்தல். மரம் வளர்த்தல் இயற்கைச் சூழலைப் பாது காத்தல் என்பது பொதுப் பிரச்சனை என்றாலும், விவசாயத்துடன் மிகவும் நெருக்கமானதாகும். தோட்டம் வளர்த்தல் விவசாயத்தின் ஒரு பகுதியாகும். பழமரங்கள் வளர்த்தல், தழைகளுக்கும், விவசாயக் கருவிகளுக்கும் அவசியமான மரங்களை வளர்த்தல் விவசாயத்துறையின் ஒரு பகுதியாகும். இதில் விவசாயிகளுக்கு உதவி செய்ய ஊக்கமூட்ட, அரசு ஆவன செய்ய, மக்களுடைய முன் முயற்சிகளை ஊக்குவிக்க விவசாயிகள் சங்கங்கள் உரிய கோரிக்கைகளை எடுத்துக் கொள்ள வேண்டும்.

## 11 வரி :

வரிக் கொடுமை விவசாயிகளை தொடர்ந்து பாதிக்கும் ஒரு கொடுமையாகும், நிலவரி இப்போதெல்லாம் செஸ்ஸுடன் சேர்த்து இருமடங்குக்குமேல உயர்த்தப்பட்டு விட்டது. பல கிராமங்களில் வரிபாக்கிகள் வட்டியுடன் சேர்த்து விவசாயிகளின் கழுத்துக்குச் சுருக்காக வந்து கொண்டிருக்கிறது.

நில வரியை முழுமையாக ரத்து செய்து விட்டாலும் அதனால் அரசுக்கு பெரிய பாதிப்பு எதுவும் ஏற்பட்டு விடாது. மேலும் இந்த வரிகளை வசூலிப்பதற்கு அரசிற்கு வரிவருவாய் அளவுக்கு செலவும் ஆகிறது. எனவே நில வரியை முற்றிலுமாக ரத்து செய்யவேண்டும் என்னும் கோரிக்கையை படிப்படியாகக் கொண்டு வரலாம்.

அதற்கு முன்பாக, வரிபாக்கிகளைத் தள்ளுபடி செய்ய வேண்டும். வரி வசூலிப்பதில் வன் முறைகள் கட்டாயமாக நிறுத்தப்பட வேண்டும். செஸ்களை நிறுத்த வேண்டும். தவறான முறையில் வரிவிதிப்பு செய்வதை நிறுத்த வேண்டும். ஜப்திகள் தடை செய்யப்பட வேண்டும் என்னும் கோரிக்கைகளை முன் வைக்க வேண்டும்.

## 12. விவசாய சேவை நிலயங்கள்:

ஒவ்வொருபிளாக்கிலும்அரசுத்துறையில்விவசாயப்பண்ணை

கள், கால்நடைப்பண்ணைகள் அமைக்கப்படவேண்டும். அவைகள் விவசாயிகளுக்கு முன்னுதாரணமாக அமைய வேண்டும். அந்தப்பண்ணைகளில் விவசாயிகளுக்கு வேண்டிய உழவு கருவிகள், உரம், பூச்சிமருந்து, உரம் தெளிக்கும் வேலைக்குழுக்கள், மருந்து தெளிக்கும் பணிக்குழுக்கள் டிராக்டர், டெம்போ, நவீன விதைகள், ஆராய்ச்சிப் பிரிவுகள், பயிற்சிப் பிரிவுகள் கொண்டதாக அந்த சேவைப் பண்ணைகள் அமைக்கப்பட வேண்டும்.

அந்த விவசாயப் பண்ணையை சுற்றிலும் உள்ள கிராமங்களில்உள்ள விவசாயிகள், அந்த அரசுப்பண்ணையில் தங்கள் பெயரை நிலத்தின் அளவைப்பதிவு செய்து கொள்ள வேண்டும். அந்த விவசாயிக்குத் தேவையான உழவு வேலைகள், உரமிடுதல், பூச்சி மருந்து தெளித்தல் முதலிய வேலைகளை விவசாய சேவையாக அந்த அரசுப்பண்ணை செய்ய வேண்டும். அறுவடையின் போது அந்த சேவைக்குரிய கட்டணங்களை தான்யமாகவோ, பொருளாகவோ பணமாகவோ விவசாயிகள் கட்டிவிடலாம்.

விவசாயிகளின் விளை பொருளுக்குக் கட்டுபடியாகும் விலை நிர்ணயம் செய்து இந்த சேவை நிலையங்களே விளை பொருள்களை வாங்கிக் கொள்ளலாம்.

இத்தகைய சேவை, நிலையங்கள் மூலம் விவசாயிகளுக்கு உழவு, உரமிடுதல், பூச்சிமருந்து தெளித்தல், அறுவடை முதலிய வேலைகளில் செலவு குறையும். வேலை எளிதாகும் உரிய கட்டணங்களைச் செலுத்தி விடலாம். காலத்தில் வேலைகளை முடிக்கலாம்.

இத்தகைய அரசுத்துறை விவசாய சேவை நிலையங்கள் கூட்டுப்பண்ணை முறைக்கு முதல் கட்டமாக அமையும். இத்தகைய அரசுத்துறை விவசாயசேவை நிலையங்களைக் கொண்டுவர, மத்தியமாநில அரசுகள் அவ்வளவு சுலபமாக ஏற்காது. சோஷலிஸ திசை வழியில் இத்தகைய முறைகள் நடைமுறைக்கு வரும். இருப்பினும் இக்கருத்துக்களை விவசாயிகளிடம் எடுத்துக்கூறி, விவசாயசங்க கோரிக்கைமாநாடுகளில் வைத்து விவசாயிகள் மற்றும், கிராமப்புற மக்களின் கருத்துக்களைத் திரட்ட வேண்டும். இத்துறையில் தனியார் சேவை நிலையங்களையும் ஊக்குவிக்கலாம்.

## 13. விவசாயத் தொழிலாளர்களின் அடிப்படையான கோரிக்கைகளும் பிரச்சனைகளும்:

விவசாயத்தொழிலாளர்களின் அடிப்படையானகோரிக்கை, பிரச்சனைகள் பற்றி அகிலஇந்திய விவசாயத் தொழிலாளர் சங்கம் (பாரதீய கேத் மஸ்தூர் சங்கம்) முன்வைத்திருக்கிறது.

நமது நாட்டு விவசாயத் தொழிலாளர்கள் கிராமப்புறங்களின் அடிப்படை வர்க்கமாகும். அவர்களுக்குப் போதுமான வேலை, ஊதியம், வீட்டு மனை வசதிகள், சமூகப்பாதுகாப்பு கல்வி, கலாச்சார வசதிகள் இல்லாமல் இருக்கிறார்கள். சில இடங்களில் விவசாயத் தொழிலாளர்கள் பெரும்பாலும் தாழ்த்தப்பட்ட மக்களாக, பிற்படுத்தப்பட்ட மக்களாக இருக்கிறார்கள். அவர்கள் சமூகரீதியில் இன்னும் பின் தங்கியிருக்கிறார்கள். இன்னும் சில இடங்களில் சமூக. வேறுபாடுகள், பாகுபாடுகள், கொடுமைகள் நீடிக்கின்றன. இந்த சமூகக் கொடுமைகளை பாகுபாடுகளை வேறுபாடுகளை எதிர்த்து நாம் உறுதியாகப் போராட வேண்டியது அவசியம்.

## 1. வேலை

விவசாயத் தொழிலாளர்களுக்கு, நமது நாட்டின் பெரும்பாலான இடங்களில் போதுமான வேலை இல்லை. நமது நாட்டு விவசாயத் தொழிலும் போதுமான வேலை கொடுக்கும் நிலையில் இல்லை. உத்திரவாதமான நீர்ப் பாசனமும், இரு சாகுபடியும் தொடர்ந்து நடைபெறுமானால் விவசாயத் தொழிலாளர்களுக்கு ஓரளவுக்கு வேலை கிடைக்கும். அந்த நிலையை எட்டுவதற்கு நாம் வெகு தூரம் செல்ல வேவண்டியதிருக்கிறது. இருப்பினும் விவசாயத் தொழிலாளர்களுக்கும் ஏழை, மற்றும் சிறு விவசாயிகளுக்கும் போதுமான வேலை கிடைக்க துணை தொழில்களை அபிவிருத்தி செய்ய வேண்டும். நமது நிலத்திற்கு நீர்ப்பாசன வசதி கிடைப்பதற்கு முன்னுரிமை கொடுக்கப்படவேண்டும்.

நதி நீர் இணைப்பு, கண்மாய்கால்வாய் பராமரிப்பு ஆகிய வேலைகள் நடைபெறுமானால் விவசாயத் தொழிலாளர்களுக்கான வேலை வாய்ப்பை அதிகரிக்கலாம். அதற்கான ஸ்தல கோரிக்கைகளைப் பற்றியும் முடிவு செய்ய வேண்டும்.

## 2. கூலி

விவசாயத் தொழிலாளர்களுக்கு குறைந்த பட்ச கூலிக்கு உத்தரவாதம் செய்ய வேண்டும். அத்துடன் விவசாயத் தொழிலாளர்களுக்கும் ஏழை மற்றும் சிறிய விவசாயிகளுக்கும் கிராமப்புற உதிரிப் பாட்டாளிகளுக்கும் அத்தியாவசியப் பண்டங்கள் மலிவான விலையில் பொது விநியோகத்தின் மூலம் கிடைப்பதற்கு உத்திரவாதம் செய்ய வேண்டும்.

## 3. வீட்டுமனை

நமது நாட்டு விவசாயத் தொழிலாளர்களின் மிக முக்கிய

மான பிரச்சனைகளில் ஒன்று வீட்டு மனை பற்றியதாகும். இன்னும் மிகப் பெரும்பாலான விவசாயத் தொழிலாளர் குடும்பங்களுக்குச் சொந்தமான வீட்டு மனை இல்லை. இது பற்றியெல்லாம் அரசு பல அறிவிப்புகள், விளம்பரங்கள் செய்தபோதிலும், பெரும்பாலான விவசாயத் தொழிலாளர் வீட்டுப்பிரச்சனை இன்னும் தீர்க்கப்படாமல் இருக்கிறது.

அந்தந்த கிராமங்களிலும் மாவட்டங்களிலும் விவசாயத் தொழிலாளர் சங்கங்கள் விவசாயத் தொழிலாளர்களுக்கு வீட்டு மனைபற்றி குறிப்பிட்டு கோரிக்கைகளை முன் வைத்து முயற்சிகள் எடுக்கவேண்டும்.

## 4. சமூகப் பாதுகாப்பு

சமூகப் பாதுகாப்பு பிரச்சனைகள் என்பது விவசாயத் தொழிலாளர்களுக்கு, வேலையில்லாத காலத்திற்குப்பாது காப்பு, விபத்துக்களால் அல்லது இயற்கை விளைவுகளால் வேலையிழப்பு, வேலை பாதிப்பு ஏற்படும் போது பாது காப்பு, வயோதிக காலத்தில் முழுமையான பாதுகாப்பு, பெண்களுக்கு பிரசவகாலத்தில் தகுந்த பாதுகாப்பு முதலியவைகளாகும். இத்தகைய சமூகப் பாதுகாப்பு நமது நாட்டு விவசாயத் தொழிலாளர்களுக்கும் இதர கிராமப்புற உதிரிப்பாட்டாளிகளுக்கும் அறவே இல்லை. அதற்குப் பெரும்பாலும் அரசே பொறுப்பு எடுக்கவேண்டும்

இது பற்றிய கோரிக்கைகளை விவசாயத் தொழிலாளர் சங்கங்கள் அரசிடம் கிளப்ப வேண்டும்.

## 5. சமூகக்கொடுமைகளை எதிர்த்து:

விவசாயத் தொழிலாளர்கள் மீது குறிப்பாக கிராமப்புற ஏழை எளிய மக்கள் மீது இழைக்கப்படும் சமூகக் கொடுமைகளுக்கு எதிராக வெறும் சட்டங்கள் மட்டும் போதாது. இதை அனைத்து மக்களுடைய ஜனநாயக இயக்கமாக மனித உரிமை இயக்கமாக நடத்தவேண்டும்.

## இதர கிராமப்புறப் பாட்டாளிகளின் கோரிக்கைகளும் பிரச்சனைகளும்

விவசாயத் தொழிலாளர்களைப் போலவே இதர கிராமப் புறப் பாட்டாளிகளுக்கும் வேலைப் பாதுகாப்பு குறைந்த பட்ச கூலி, அத்தியாவசியப் பண்டங்கள் கிடைக்க ஏற்பாடு வீட்டு மனை, சமூகப் பாதுகாப்பு வசதிகள் முக்கிய கோரிக்கைகளாகும். அத்துடன் ஒவ்வொரு தொழிலுக்கும் உரிய தனிப் பிரச்சனைகளும் உள்ளன.

மீனவர்களுக்கு வலை, கட்டு மரம் மீன் விற்பனை ஏற்பாடு,

மீன்பிடித் துறைமுகங்கள் நிறுவுதல், விசைப் படகு முதலியவை பற்றிய தனிப் பிரச்சனைகள் இருக்கின்றன.

கைத்தறி நெசவுத் தொழிலாளர்களுக்கு, நூல் விலை, கூலி உற்பத்திக் கருவிகள், துணி விற்பனை முதலியவை பற்றிய பிரச்சனைகள் உள்ளன.

தென்னை, பனை மரத் தொழிலாளர்களுக்கு தொழில் பாதுகாப்பு, சமூகப் பாதுகாப்பு முதலிய பிரச்னைகள் உள்ளன.

இதே போல, கட்டிடத் தொழிலாளர்கள், ஐந்தொழில் தொழிலாளர்கள், மண்பாண்டத் தொழிலாளர்கள் முதலிய பல்வேறு பிரிவு தொழிலாளர்களுக்கும் தனிப் பிரச்சனைகளும் பொதுப் பிரச்சனைகளும் இருக்கின்றன.

அந்தந்த தொழிலாளர் பிரிவுக்குரிய சங்கங்கள் தங்கள் பேரவைக் கூட்டங்களில் தொழில் மற்றும் வேலை பற்றிய பல்வேறு பிரச்சனைகளையும் விவாதித்து, தொகுத்து அந்த கோரிக்கைகளை நிறைவேற்றுவதற்கான முயற்சிகளை மேற் கொள்ள வேண்டும். இயக்கங்களை நடத்த வேண்டும்.

### 3. பொதுக் கோரிக்கைகள்:

விவசாயிகள், விவசாயத் தொழிலாளர்கள், இதர கிராமப் புறப் பாட்டாளிகளின் தனித்தனியான கோரிக்கைகளும் கிராமத்தின் பொது கோரிக்கைகளுக்காகவும் சங்கங்கள் இயக்கங்கள் நடத்தத் தயாராக வேண்டும்.

குறிப்பாக, அத்தியாவசியப் பண்டங்களான அரிசி, துணி, சர்க்கரை, மண்ணெண்ணெய், சமையல் எண்ணெய் மருந்து முதலிய பொருள்கள் நியாயமான விலையில் பொது விநியோகத்தின் மூலம் கிராம மக்கள் அனைவருக்கும் கிடைப்பதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும். ஏற்கெனவே சில இடங்களில் பொது விநியோகக் கடைகள் இருக்கின்றன. அந்தக் கடைகள் போதுமானவைகளாக இல்லை, அவற்றில் பண்டங்கள் சீராக விநியோகம் செய்யப்படவில்லை. போதுமான அரிசி, துணி மற்றும் இதர பொருள்கள் கொடுக்கப்படுவதில்லை. எடை குறைவு. காலத்தில் கொடுப்பதில்லை. முதலிய முறை கேடுகளும் புகார்களும் இருக்கின்றன. இந்தக் குறைகளை எதிர்த்துப் போதுமான கடைகள், போதுமான பொருள்கள் சீரான விநியோகம் ஆகியவைகளுக்காக முயற்சிக்க வேண்டும்.

அதே போல் குடி தண்ணீர், சுகாதார வசதி, வைத்திய வசதி, கிராமப் பஞ்சாயத்துப் பிரச்சனைகள், வரி, பஸ் கட்டணம் மற்றும் பஸ் போக்குவரத்து வசதிகள், கல்வி வசதி குறிப்பாக ஆரம்பக் கல்வி வசதிகள், பொது

கோரிக்கைகளுக்காகவும், கிராமப்புற மக்களின் பொது நலன்களுக்காகவும் முக்கிய கோரிக்கைகளை வைத்து நமது வர்க்க ஸ்தாபனங்கள் பல முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும். இந்தப் பொதுக் கோரிக்கைகளுக்காக எல்லா சங்கங்களும் சேர்ந்து கூட்டு இயக்கங்களையும் நடத்த வேண்டும்.

இதில் குறிப்பாக கிராமப்புற ஏழைகளுக்குப் போதுமான கல்வி வசதி கிடைப்பதற்கான முயற்சிகளைச் சங்கங்கள் மேற்கொள்ள வேண்டும். இன்னும் நமது நாட்டின் மக்கள் தொகையில் 60—70 சதவீதம் பேர் எழுத்தறிவு இல்லாமல் இருக்கிறார்கள் என்று அரசாங்க புள்ளி விவரங்கள் கூறுகின்றன. இவர்களில் பெரும்பாலோர் கிராம மக்கள் என்பதில் சந்தேகமில்லை.

எனவே கிராம மக்கள் அனைவருக்கும் குறைந்த பட்சம் ஆரம்பக்கல்வி கிடைக்கவும் உயர்கல்வி பெறுவதற்கான தனி உதவிகள் கிடைக்கவுமான கோரிக்கைகளையும் சங்கங்கள் முன்வைத்து அவைகளை நிறைவேற்றுவதற்கு முயற்சிக்க வேண்டும். சங்கங்களே முன் முயற்சி எடுத்து இரவுப் பள்ளிகள், ஆரம்பப் பள்ளிகள் நடத்தலாம்.

## 4. விவசாயத் தொழிலை ஒரு தொழில்துறையாக அறிவித்தல்.

பஞ்சாலை, சர்க்கரை ஆலை, என்ஜினியரிங், கெமிக்கல் தொழில் முதலிய பலவகைத் தொழில்கள் தொழிற்சாலைகளைப் போலவே விவசாயத்தொழிலையும் ஒரு நவீன எந்திரத் தொழிலாக அங்கீகரிக்க வேண்டும்.

ஒரு நவீனத்தொழிலில் அதன் நிதிநிர்வாக அமைப்பில், நிலம் கட்டிடம், எந்திரங்கள், விசைசக்தி மூலப்பொருள் முதலிய வற்றிற்கான நிலையான மூலதனம், உழைப்பாளர்களுக்கும் ஊழியர்களுக்குமான ஊதியம் முதலியனவற்றிற்கான மூலதனம், மூலப்பொருள் சேமிப்பு செய்பொருள் சேமிப்பு வசதிகள் அதற்கான நிதிவசதி, உற்பத்திப்பொருளுக்கான அடக்கவிலை, லாபம், மொத்தவிலை ஆகிய பாதுகாப்புகள் உள்ளதைப்போல விவசாயத்தையும் தொழிலாக அறிவித்து அதில் நிலம், நீர்ப்பாசன ஏற்பாடு, கிணறு பம்பு செட்டு, கால்நடைகள், கட்டிடங்கள், எந்திரங்கள், கருவிகள், போக்குவரத்து சாதனங்கள், இடுபொருள்கள், உரம், பூச்சி மருந்துகள், தொழிலாளர் ஊதியம், நிர்வாகச் செலவுகள், விளைபொருள், சேமிப்பு வசதிகள், விளைபொருள், அதன் அடக்கவிலை, விவசாய நிர்வாகம், சாதனங்கள், கருவிகள் பராமரிப்பு செலவு, லாபம், உற்பத்திப் பொருளின் மொத்த விலை உத்திரவாதம் ஆகியவைகளுக்கான சட்டபூர்வமான ஏற்பாடு செய்யவேண்டும்.

**5. விவசாய விளைபொருள்களை ஆதாரப்பட்ட சிறுதொழில்கள்.**

இத்தகைய தொழில்கள் கிராமப்புறங்களில் தொடங்கி அவைகளை விரிவு படுத்த வேண்டும்.

அரிசி ஆலைகள், மாவு மில்கள், எள், கடலை, தேங்காய் முதலியவை பிழியும் எண்ணெய் ஆலைகள், பருத்தி அரவை ஆலைகள், மரம் அறுவை மில்கள், சிறிய சர்க்கரை ஆலைகள், கால்நடை தீவனம்— கோழித் தீவனம் தயாரித்தல், பால் சேகரித்தல், பால் கடைதல், பால் பொருள் தயாரித்தல், செங்கல் தொழில், சவ்வரிசி சேமியா தயாரித்தல், கருங்கல் தொழில், மீன் பதனிடுதல், காய்கறிகள் பதனிடுதல், பழங்கள் பதனிடுதல், அட்டை தயாரித்தல் முதலிய இரண்டாம் நிலையிலான சிறிய தொழில்கள் கிராமப்புறங்களில் முன்னுரிமை கொடுத்து வளர்க்கப்படவேண்டும். அதற்கான கோரிக்கைகளை முன்வைத்து கிராமப்புற அபிவிருத்திக்கு முக்கிய இடம் கொடுக்கப்படவேண்டும்.

**6. கிராமப்புற வாழ்க்கையை நவீனப்படுத்துதல்:**

நகரங்களைப் போலவே கிராமப்புற வாழ்க்கையை நவீனப் படுத்த வேண்டும். வீட்டுவசதி, கழிப்பிடங்கள், பாதுகாக்கப்பட்ட குடி தண்ணீர், சுகாதாரம், வடிகால், சாலைவசதி, போக்குவரத்துவசதி, பொழுதுபோக்கு வசதிகள், விளையாட்டு அரங்குகள், நாடகம் சினிமா அரங்குகள், கல்வி முக்கியமாக ஆரம்பக்கல்வி, உணவு விடுதிகள், பொருதங்கு மிடங்கள் சுற்றுலா வசதிகள், முதலியவைகள் பெருகவும், கிராமப்புற வாழ்க்கை நவீனமயமாக்கவுமான கோரிக்கைகள் முன்வைத்து நிறைவேற்றப்பட வேண்டும்.

**6. விவசாயத் தொழில் பயிற்சி:**

விவசாயத் தொழிலில் பணியாற்றும் தொழிலாளர்கள், ஊழியர்களின் உற்பத்தித்திறனை உயர்த்துவது மிகவும் அவசியம். குறைந்த பட்சக் கூலியை நிர்ணயிப்பதுடன், வேலை நேரம், வேலை அளவு, ஆகியவற்றையும் தீர்மானிக்க வேண்டும். அதை செயல்படுத்த வேண்டும். எல்லா வகையான விவசாயவேலை, மேல்பார்வை, மருந்து, உரம், விதை முதலியவை பற்றி நுட்பங்கள் சாகுபடி முறைபற்றிய பயிற்சி, விவசாயிகளுக்குக் கொடுக்க வேண்டும். அதற்கான பயிற்சிப் பள்ளிகள் நடத்தப்பட வேண்டும்.

**7. நாட்டு பன்னாட்டு-பொதுப்பிரச்சனைகள்:**

விவசாயிகள், விவசாயத்தொழிலாளர்கள், கிராமப்புற பாட்டாளிகள் என்றால், கிராமப்புறங்களிலேயே அடங்கிக் கிடக்கும் சிறைவாசிகள் அல்ல. நமது நாட்டு விவசாயமும்

இதர கிராமத் தொழில்களும் நாட்டுடன் இணைந்தவை. இந்தத்தொழில்களில் சம்பந்தப்பட்டிருப்பவர்கள் பல் வேறு மாநிலங்களிலும் இருக்கிறார்கள்.

நமது கிராமப்புற விவசாயிகளும், விவசாயத் தொழிலாளர் களும் கிராமப்புறப் பாட்டாளிகளும், நாட்டின் நிர்வாகத் தின் கீழ் உள்ளவர்கள். அரசியல் உரிமை வாக்குரிமை பெற் றவர்கள். பல்வேறு வகைகளில் வரி செலுத்துபவர்கள். எனவே அவர்களுக்கு இத்த நாட்டுப் பிரச்சனைகளில் அக் கறை இருக்க வேண்டும். அக்கறை மட்டுமல்ல, அதிக கவன மும் இருக்க வேண்டும்.

இந்திய நாட்டின் அரசியலிலும் அரசியல் பிரச்சனைகளிலும் ஜனநாயகப் பிரச்னைகளிலும் விவசாயிகளும் தொழிலாளர் களும் கிராமப்புறப் பாட்டாளிகளும் தலையிட வேண்டும். அப்பிரச்சனைகள் மீது தங்கள் செல்வாக்கைச் செலுத்த வேண்டும். நாட்டின் அரசியல் நிகழ்ச்சிகளையும் ஜனநாயக செயல்பாடுகளையும் தங்களுக்குச் சாதகமாகத் திருப்புவ தற்கு முயற்சிக்க வேண்டும்.

நமது நாட்டின் மிக முக்கியமான தேசியப்பிரச்சனைகளில் ஒன்று நமது நாட்டின் ஒற்றுமையும் ஒருமைப்பாடுமாகும். நமது நாடு ஒன்றுபட்டு இருந்தால்தான் நமது நாட்டின் சுதந்திரத்தையும் அரசுரிமையையும் பாதுகாக்க முடியும்.

நமது நாட்டில் அநேகம் சாதிகள், அநேகம் மதங்கள், மொழிகள், இனங்கள் இருக்கின்றன. அவைகளுக்கிடையில் வேறுபாடுகளும் இருக்கின்றன: இந்த வேறுபாடுகளிலும் ஒற்றுமை காண்பதுதான் நமது நாட்டின் நேர் ஆக்க நிலை வளர்ச்சியாக பண்பாக இருந்திருக்கிறது.

அதேசமயத்தில் நமது ஒற்றுமையின்மை காரணமாக நமக்கு பாதிப்புகளும் ஏற்பட்டிருக்கின்றன.

இந்தியநாடு ஆங்கிலேய ஆட்சியில் அடிமைப்பட்டுக் கிடந்த போது, நமது விடுதலைப் போராட்டத்தில் நாம் ஒற்றுமை கண்டோம். அந்த ஒற்றுமையை இப்போது நமது சுதந்திரத் தைப் பாதுகாப்பதில், நமது ஜனநாயகத்தை வளர்ப்பதில், நமது முன்னேற்றத்திற்கான முயற்சிகளில், நாம் வளர்க்க வேண்டும்.

இந்திய ஒற்றுமையை வளர்ப்பதில் நமது கிராமப்புற மக்க ளுக்கு அதிகம் கடமை பங்கு இருக்கிறது. விவசாயிகளும் விவசாயத் தொழிலாளர்கள், இதர கிராமப்புறபாட்டாளி களும் தங்கள் ஒற்றுமையின் மூலம் தங்களுடைய பிரச்சனை களுக்கு தீர்வுகாண்பதுடன், நாட்டின் பிரச்சனைகளுக்குத் தீர்வகாண உதவவும் முடியும்.

நாட்டின் ஒற்றுமையைக் குலைத்து, நாட்டின் சுதந்திரத்திற்கும் அரசுரிமைக்கும் அபாயம் விளைவிக்கும் ஏகாதிபத்திய சக்திகள், வகுப்பு வாத சக்திகள், நமது நாட்டின் நிலையான ஆட்சியை நிலை குலைக்க முயற்சிக்கிறார்கள். இந்தத்திய சக்திகளின் சதி வேலைகளுக்கு இந்திய முதலாளித்துவ நிர்வாகம் இடமளிக்கிறது.

ஏகாதிபத்தியச் சக்திகள் பன்னாட்டு கூட்டுநிறுவனங்களின் சுரண்டலைப்பாதுகாத்துக் கொள்வதற்காக, இந்திய அரசியலை பலவீனப்படுத்தி தனக்குச்சாதகமாக வைத்துக் கொள்ள விரும்புகிறது.

பன்னாட்டு கூட்டுநிறுவனங்களின் ஏகபோக முதலாளிகளின் கூட்டுக்கொள்ளையினால், உலக முதலாளித்துவ மார்க்கட் சுரண்டலால் பாதிக்கப்பட்டுள்ள விவசாயிகளும் இதர கிராமப்புற மக்களும் ஏகாதிபத்திய சக்திகளின் பொருளாதார சுரண்டலையும் அரசியல் தலையீடுகளையும் எதிர்த்து நிற்க வேண்டும். அதற்கான கோரிக்கைகள் தேசிய கோரிக்கைகளாகும். அத்தகைய தேசிய கோரிக்கைகளிலும் கிராமப்புற மக்களின் வர்க்கஸ்தாபனங்கள் முன் நிற்கவேண்டும்.

நாட்டின் சுதந்திரம் இறையாண்மை ஜனநாயகம், ஒற்றுமை, ஒருமைப்பாடு, அந்நியத் தலையீடுகளை எதிர்த்தல் முதலிய பொதுவான தேசீய அரசியல் பிரச்சனைகளில் மட்டுமல்லாமல், நாட்டின் பொதுத்துறை வளர்ச்சி தொழில் முன்னேற்றம், விவசாய வளர்ச்சி, கல்விவளர்ச்சி பொது சுகாதாரம், உடற்பயிற்சி, தொழில் நுட்ப வளர்ச்சி, விஞ்ஞான வளர்ச்சி, சுற்றுலா வளர்ச்சி, முதலிய, தேசீய பொருளாதார கலாச்சார வளர்ச்சி பற்றிய பிரச்சனைகளிலும் கிராமப்புற வர்க்க ஸ்தாபனங்கள் கவனம் செலுத்த வேண்டும்.

அத்துடன் இந்தியாவின் நலன்களோடும், பாரம்பரியத்தோடும் இணைந்த பல பன்னாட்டுப் பிரச்சனைகளும் உள்ளன.

முக்கியமாக இந்திய நாட்டிற்கும் இந்திய மக்களுக்கும் உலகசமாதானம் மிகவும் அவசியம். ஆயுதக் குறைப்பு அணுகுண்டு ஒழிப்பு முதலிய முக்கிய உலகசமாதானத்திற்கான கோரிக்கைகள் இந்து மகாசமுத்திரம் அமைதி மண்டலமாக்குதல் முதலிய கோரிக்கைகள் இந்தியமக்களின் நலன்களுக்குகந்தவைகளாகும்.

இந்திய நாட்டிற்கும் இதர வளர்ச்சியடைந்த நாடுகளுக்கும் இடையில் நல்லுறவு நட்புறவு, பொருளாதார, வர்த்தக உறவுகள் கலாச்சார உறவுகளை வளர்த்துக் கொள்வது மிகவும் அவசியமும்; நமது நாட்டின் நலன்களுக்கு உகந்ததுமாகும்.

அதே போல இந்தியாவிற்கும் இதர வளர்முக நாடுகளுக்கு மிடையில் நல்லுறவை நட்புறவை, அரசியல். பொருளா தார கலாச்சார உறவுகளை வளர்த்துக் கொள்வதும் நமது நாட்டின் நலன்களுக்கு நல்லதாகும்.

இத்தகைய சமாதான நட்புறவு இயக்கங்களை பலப் படுத்துவதில், நமது கிராமப்புற வர்க்க ஸ்தாபனங்கள் விவசாயசங்க,விவசாயத் தொழிலாளர் சங்க,இதர கிராமப் புறப் பாட்டாளி வர்க்க அமைப்புகள் பங்கு கொள்ள வேண்டும்.

உலக முழுவதிலும் எல்லா நாடுகளிலும் உள்ள உழைக்கும் மக்கள் தங்கள் நலன்களுக்காக சுதந்திரம், சமத்துவம் ஜன நாயகம் சமாதானம், சமுதாய முன்னேற்றம் ஆகிய லட் சியங்களுக்காகப் போராடும் போது அவர்களுக்கு ஆதரவு தெரிவிப்பதும் உலக அளவில் உழைக்கும் மக்களின் ஒற்றுமைக்காகப் பாடுபடுவதும் நமது நாட்டுவிவசாயிகள், விவசாயத் தொழிலாளர்கள், இதர கிராமப்புறப் பாட்டாளிகளின் கடமையாகும்.

இவ்வாறு நமது கிராமப்புற வர்க்க ஸ்தாபனங்கள் நாட்டின் தேசிய சர்வ தேசியப் பிரச்சனைகளிலும் இதர நகரப்புற பாட்டாளிகள் நடுத்தர மக்கள் இதர ஜனநாயகப் பகுதிகளுடன் சேர்ந்து நிற்க வேண்டும்.

சாதி, மத, மொழிச் சண்டைகளுக்கு கிராமப்புறப் பாட்டாளி மக்கள் எந்த விதத்திலும் இடம் கொடுத்து விடக் கூடாது. இந்தப் பிரச்சனைகளில் நமது கிராமப்புற வர்க்க ஸ்தாபனங்கள் மிகவும் உஷார்த் தன்மையோடு இருந்து உழைக்கும் மக்களின் ஒற்றமையைப் பாதுகாக்க வேண்டும்.

### 5. நாட்டு மக்களின் பொது அரசியல் இயக்கத்தில் கிராமப்புறப் பாட்டாளி மக்களை இணைக்க வேண்டும்.

நாடு விடுதலை பெற்று நாற்பதாண்டுக்காலத்திற்கும் அதிக மாகியும், நாடு கடைப்பிடித்த முதலாளித்துவ பாதை நம்மை பல வித முரண் பாட்டிலும் மோதலிலும் கொண்டு போய் விட்டிருக்கிறது. நமது நாட்டின் முதலாளித்துவப் பாதை நமது நாட்டின் குறிப்பான அடிப்படைப் பிரச்சனை களைத் தீர்க்க வில்லை. குறிப்பாக நமது விவசாயப் பிரச்சனையை கிராமப்புற மக்களின் நலன்களை நட்டாற் றில்— நடுவழியில் விட்டுவிட்டது.

இந்திய நாட்டின் ஜன நாயகப் புரட்சி முற்றுப் பெறாமல் நடுவழியில் நின்று விட்டது.. எனவே இப்போதைய முதலாளித்துவப் பாதையை மாற்றி சோஷலிஸ திசை

வழியில் நாட்டைக் கொண்டு செல்வதற்கான புதிய அணி சேர்க்கை அமைவது அவசியமாகும் அத்தகைய அரசியல் அணியில் இந்திய விவசாயிகள், விவசாயத் தொழிலாளர்கள், இதர கிராமப்புறப் பாட்டாளி வர்க்கங்களும் அவர்களின் வர்க்கஸ்தாபனங்களும் ஒன்று சேர வேண்டும்.

அதற்கான முறையில் கிராமப் புறபாட்டாளிகள் அரசியல் தெளிவு பெற வேண்டும். அதற்காக விவசாயிகள், விவசாயத் தொழிலாளர்கள் இதர கிராமப்புறப்பாட்டாளிகளுக்கு அரசியல் பயிற்சி கொடுத்து அவர்களுடைய அரசியல் உணர்வு நிலையை உயர்த்த வேண்டும்.

ஏற்கெனவே நமது நாட்டு மக்கள் தங்கள் சொந்த அனுபவத்தின் மூலம், ஆட்சியை மாற்றிக் கொண்டுவந்துள்ளார்கள் இந்திய நாட்டின் தலைமையான அரசியல் கட்சியாக முன்பு இந்திய தேசிய காங்கிரஸ் கட்சி இருந்தது. 1947—ம் ஆண்டில் இந்திய நாடு சுதந்திரம் பெற்றபோது பிரிட்டிஷ் ஆட்சியாளர்களிடமிருந்து இந்திய தேசிய காங்கிரஸ் கட்சி தலைவர்களிடம் தான் ஆட்சி மாறியது. தேசிய காங்கிரஸ் கட்சி இந்திய முதலாளித்துவத்தின் முதன்மையான அரசியல் கட்சியாகும். ஆனால் நாடு சுதந்திரம் பெற்று இருபது ஆண்டுகளில், பல மாநிலங்களில் காங்கிரஸ் கட்சியின் ஆட்சி மாறியது 1967—ம் ஆண்டில் எட்டு ஒன்பது மாநிலங்களில் காங்கிரஸ் கட்சி தோற்று வேறு கட்சிகள் ஆட்சிக்கு வந்தன.

தமிழகத்திலும் 1967—ம் ஆண்டில் காங்கிரஸ் கட்சியின் ஆட்சிமாறியது. அதன் பின்னர் தமிழகத்தில் மீண்டும் காங்கிரஸ் ஆட்சி வரவேயில்லை.

1967—ம் ஆண்டிற்குப்பின் நமது நாட்டின் அரசியலில் நெருக்கடியின் கீரல் வெளிப்படத் தொடங்கிவிட்டது. 1969—ம் ஆண்டில் நமது நாட்டின் வலுவான முதலாளித்துவக் கட்சியான இந்தியதேசிய காங்கிரஸ்கட்சி இரண்டாக உடைந்தது. அதன் பின்னர் ஆட்சியில் நீடித்த இ. காங்கிரஸ் கட்சி தனது ஆட்சியைப் பாதுகாத்துக்கொள்ள 1975—ம் ஆண்டு ஜூன் மாதத்தில் அவசர நிலையைப் பிரகடனம் செய்ய வேண்டிய அளவிற்குச் சென்றது .

1977—ம் ஆண்டில் நாடு விடுதலை பெற்ற முப்பது ஆண்டுகளில் நாட்டின் மத்திய ஆட்சியிலிருந்தே காங்கிரஸ் கட்சியை மக்கள் தூக்கி எறிந்து விட்டார்கள்.

மீண்டும் வேறு மாற்று இல்லாததால் 1980ஆம் ஆண்டில் இ. காங்கிரஸ் ஆட்சி மத்தியில் ஏற்பட்ட போதிலும், பல மாநிலங்களில் இ. காங்கிரஸ் கட்சி வெற்றிபெற

வில்லை. 1987-ம் ஆண்டில் பெரிய அளவில் மத்திய ஆட்சியிலேயே அரசியல் நெருக்கடி ஏற்பட்டுள்ளது.

இந்திய நாட்டில் இப்போது ஏற்பட்டுள்ள அரசியல் பொருளாதார சமுதாய நெருக்கடியை இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியின் முதலாளித்துவ ஆட்சியால் தீர்க்கமுடியாது.

ஒரு புதிய மாற்றம் நாட்டில் ஏற்பட வேண்டும் என்று மக்கள் விரும்புகிறார்கள் அந்த அரசியல் அணியில் தொழிலாளர்கள் விவசாயிகள் நிற்க வேண்டும். அதில் நமது கிராமப்புற விவசாயிகளும் விவசாயத் தொழிலாளர்களும் இதர கிராமப்புறப் பாட்டாளிகளும் ஒன்று சேரவேண்டும். அந்தப் புதிய அரசியலை வளர்க்க வேண்டும்.

கிராமப்புற பாட்டாளிகளை அரசியல் படுத்த அதற்கான பிரச்சார முறை வளர்க்கப்பட வேண்டும். படிப்பகங்கள் நூல் நிலையங்கள் உருவாக்கப்பட வேண்டும். அரசியல் கூட்டங்கள் அதிகமான அளவில் நடத்த வேண்டும். கிராம மக்களின் கல்வித் தரத்தை உயர்த்த வேண்டும்.

கிராமப்புறப் பாட்டாளிகளை அவர்களுடைய வர்க்க ஸ்தாபனங்கள் மூலம் படிக்க வைக்க வேண்டும்.

### 9. பல ஆயிரக்கணக்கான செயல் வீரர்களைத் தயாரிக்க வேண்டும்:

இன்று கிராமப்புற விவசாயிகள் விவசாயத் தொழிலாளர்கள். இதர கிராமப்புறப் பாட்டாளிகளுக்கு சங்கம் அமைத்து, கோரிக்கைகளைத் தொகுத்து அரசியல் படுத்தி வழி காட்ட வேண்டுமானால், அந்தப் புரட்சிகரப்பணியில் தங்களை அர்ப்பணித்துக் கொள்ளும் பல ஆயிரக்கணக்கான கிராமப்புற இளைஞர்கள் வேண்டும்.

அந்த பல்லாயிரக்கணக்கான இளைஞர்களுக்கு பல துறைப் பயிற்சி கொடுக்கப்பட வேண்டும். அவர்களுக்கு நமது நாட்டின் விவசாயத் துறை வரலாற்றைப் பற்றி, நமது நாட்டின் விவசாயிகளின் போராட்ட வரலாற்றைப் பற்றி, இன்றைய விவசாயப் பொருளாதாரத்தைப் பற்றி, இன்றைய ஆட்சி நிர்வாகத்தைப் பற்றி, விஞ்ஞான சோஷலிஸக் கருத்துக்களைப் பற்றி, விவசாயிகளின், விவசாயத் தொழிலாளர்களின் இதர கிராமப்புறப் பாட்டாளிகளின் வர்க்க ஸ்தாபனங்களை அமைப்பது பற்றி, அவைகளை வழி நடத்துவது பறறி, போதிப்பது மிகவும் அவசியமாகும். அத்துடன் நமது இளைஞர்களுக்கு உடல் பயிற்சியும் மிகவும் அவசியமாகும்.

கிராமங்கள் தோறும் கிராமப்புற இளைஞர்களுக்கு

அரசியல் கல்விப் பயிற்சியும் உடற்பயிற்சியும், அமைப்பு நிலைப் பயிற்சியும் கொடுக்க வேண்டும்.

தொடர்ச்சியான பயிற்சி முகாம்கள் மூலம் நமது கிராமப் புற வர்க்க ஸ்தாபனங்களில் முன்னணியில் உள்ள ஊழியர் களுக்குப் பயிற்சி கொடுக்க வேண்டும்.

இந்த மகத்தான கிராமப்புற மக்களின் புரட்சிகரமான சேவைக்குப் பல்லாயிரம் பயிற்சி பெற்ற இளைஞர்கள் தங்களை அர்ப்பணித்துக் கொள்ள முன் வரவேண்டும்.

## 10. நாட்டின் புதிய அரசியல் மாற்றங்கள்

1987—ம் ஆண்டில் தொடங்கிய மக்களியக்கம், ஒரு ஆட்சி மாற்றத்திற்கான இயக்கமாக வளர்ந்தது. 1989-ம் ஆண்டில் நடை பெற்ற பொதுத் தேர்தலில், மத்தியில் இ. காங்கிரஸ் ஆட்சிமாற்றப்பட்டது வி.பி.சிங் தலைமையில், ஜனதாதளம் அஸ்ஸாம் கணதந்திர பரிஷத், தெலுங்கு தேசம், திராவிட முன்னேற்றக் கழகம், காங்கிரஸ் (எஸ்) முதலிய கட்சிகள் சேர்ந்த தேசிய முன்னணி என்னும் பெயரில் ஒரு புதிய கூட்டாட்சி ஏற்பட்டது. இந்தக் கூட்டாட்சிக்கு இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி இந்தியக் கம்யூனிஸ்ட்(மார்க்ஸிஸ்டு)பார் வேட் பிளாக், புரட்சிகர சோஷலிஸ்ட் கட்சி ஆகிய இடது சாரிக் கட்சிகள் ஆதரவு கொடுத்தன. தேர்தலில் மற்றொரு முக்கிய கட்சியாக வெளிப்பட்ட பாரதீய ஜனதாக்கட்சியும் தேசீய முன்னணி ஆட்சிக்கு ஆதரவு கொடுத்தது. பாராளு மன்றத் தேர்தல்களுக்கு முன்னரும் பின்னரும் நடந்த பல சட்டமன்றத் தேர்தல்களிலும் பல ஆட்சி மாற்றங்கள் ஏற்பட்டன.

முக்கியமான பல மாநிலங்களிலும் முக்கியமான காங்கிரஸல்லாத வேறு பல கட்சிகளும் ஆட்சிக்கு வந்தன. அஸ்ஸாமில் அஸ்ஸாம் கணதந்திர பரிஷத் கட்சி ஆட்சிக்கு வந்தது. மேற்கு வங்கத்தில் இடது சாரி அணி ஆட்சி ஏற்பட்டுள்ளது. ஒரிஸா, பீகார், உத்திரப் பிரதேசம், அரியானா முதலிய மாநிலங்களில் ஜனதாதள் ஆட்சி ஏற்பட்டது. மத்தியப் பிரதேசம், இமாசலப்பிரதேசம் ஆகிய மாநிலங்கள் பாரதீய ஜனதாக்கட்சி ஆட்சி ஏற் பட்டது. ராஜஸ்தான், குஜராத் மாநிலங்களில் ஜனதா தளம் பாரதீய ஜனதாக்கட்சியின் கூடாட்சி ஏற்பட்டது. தமிழ் நாட்டில் திமுக ஆட்சி ஏற்பட்டது. கேரளாவில் இடது சாரி ஜனநாயக முன்னணி ஆட்சி, ஏற்பட்டது. ஆந்திரப் பிரதேசம் கர்நாடகா, மகாராஷ்டிரம் ஆகிய மாநிலங்களில் இ. காங்கிரஸ் கட்சியின் ஆட்சி,

நாட்டின், அநேகமாக, எல்லா முக்கிய அரசியல் கட்சி களும் ஒரு பக்கம் ஆளும் கட்சிகளாகவும் அதே சமயத்தில்

மறுபக்கம் எதிர்க் கட்சிகளாகவும் ஆக்கப்பட்டிருக்கின்றன. நாடு முழுவதிலும் மத்தியிலும் மாநிலங்களிலும் ஒரு கட்சி ஆட்சி—காங்கிரஸ் கட்சியின் ஆட்சி என்பது மாறி விட்டது. புதிய அரசியல் நிலை உருவாகி வருகிறது. அது எதிர் காலத்தில் எத்தகைய அரசியல் உறுதி நிலையை அடையும் என்பதை பொறுத்திருந்து பார்க்க வேண்டும்.

நாட்டின் இன்றைய அரசியல் நிலை தயிர் கடைவதைப் போல் இருக்கிறது. பால் தயிராகி, தயிர் கடைசலில் இருக்கிறது.

காசும் பிறப்பும் கை பேர்த்து
வாச நறுங்குழல் ஆய்ச்சியர் மத்தினால்
ஓசை படுத்தத் தயிரரவம் கேட்டிலையோ

என்று ஆண்டாள் பாசுரங்களில் கூறப்பட்டிருப்பதைப் போல் நாட்டின் அரசியல் நிலைமையில் தயிரரவம் கேட்கிறது. எப்போது எப்படி வெண்ணெய் திரளும் என்று இப்போதே கூற முடியாது. எனினும் தயிரைக் கடையக் கடைய வெண்ணெய் திரளும். அது முதலில் துளியாகத் தோன்றும். பின்னர் அதைக் கையை விட்டு உருட்டி உருண்டையாக்க வேண்டும்.

இதில் விவசாயிகள் மற்றும் கிராமப்புற மக்களின் பங்கு மிகவும் முக்கியமானதாக உள்ளது.

இந்த நிலைமையில் 1989 இறுதியில் மத்தியில் ஏற்பட்ட தேசீய முன்னணி அரசு வி.பி.சிங் தலைமையில் ஒரு புதிய திசையில் செல்லத் தொடங்கியது.

முதலாவதாக நாட்டின் முக்கியமான எல்லா அரசியல் பிரச்சனைகளிலும் குறிப்பாக காஷ்மீர், பஞ்சாப், ராமஜன்ம பூமி-பாப்ரிமஸ்ஜீத் பிரச்சனை, வடகிழக்கு மாநிலங்களின் பிரச்சனைகள், இலங்கைத் தமிழர் பிரச்சனை, மத்திய மாநில அரசு உறவுகள், தேசீய ஒருமைப்பாடு முதலிய பல பிரச்சனைகளிலும் எல்லா முக்கிய அரசியல் கட்சிகளுக்கிடையிலும், முக்கியமாக சம்பந்தப்பட்ட அரசியல் கட்சிகளுக்கிடையிலும் அடிப்படையான கோட்பாடுகளைப் புறக்கணித்து விடாமல் கருத்தொற்றுமையை உருவாக்கி அப் பிரச்சனைகளுக்கு தீர்வு காண்பதற்கான முயற்சி எடுக்கப்பட்டது. இது ஒரு புதிய ஜனநாயக மரபை உண்டாக்குவதாகும்.

இரண்டாவதாக, நமது நாட்டின் மிக முக்கியமான அரசியல் மற்றும் அடிப்படை ஜனநாயகப் பிரச்சனை மத்திய மாநில அரசுகளின் உறவுகள் பற்றியதாகும்.

நாடு விடுதலை பெற்ற பிறகு, சுதேசி மன்னர் ஆட்சி முறை,

ஜமீன் தாரி முறை ஒழிக்கப்பட்டு, படிப்படியாக மொழி வழி மாநிலங்கள் ஏற்பட்டன. இது விவசாயிகளும் கிராமப் புற மக்களும் நேரடியாக அரசியல் நிர்வாகத்தில் ஆட்சியில் பங்கு கொள்ளும் வாய்ப்பை அதிகப் படுத்தியது. படிப் படியாக மொழி வழி மக்கள் மாநில ஆட்சி அனுபவங்கள் மூலம் தேசிய இனங்களாகவும் பரிணமித்துக் கொண்டிருக் கின்றன.

மாநில அரசுகளின் அரசியல் அதிகாரம், நிதி அதிகாரம், மொழி வழி மக்களின் கலாச்சார வளர்ச்சி, மொழி வளர்ச்சி ஜனநாயக வளர்ச்சி ஆகிய பிரச்சனைகள், மத்திய அரசின் அதிகாரங்களுடன் இணைந்து மத்திய அரசு-மாநில அரசு களின் அதிகார வரம்பு, அவைகளுக்கிடையில் உள்ள உறவு கள் பற்றிய பிரச்சனையாக எழுந்துள்ளது.

இதில் இதுவரை, இடதுசாரிக் கட்சிகள் மற்றும் பல ஜன நாயக இயக்கங்களும் கட்சிகளும் பல நல்ல ஆலோசனை களை முன் வைத்தும், மத்தியில் இருந்த இ. காங்கிரஸ் கட்சியின் ஆட்சி மத்திய— மாநில அரசுகளின் உறவுபற்றி ஒரு சரியான தீர்வுக்கு முன்வரவில்லை. மேலும் மேலும் அதிகமாக மத்தியில் அதிகாரத்தைக் குவித்து எதேச்சாதி கார வழியிலேயே சென்றது.

அநேகமாக மாநிலங்களில் அமைந்த எல்லாமாற்றுக்கட்சி அரசுகளையும் மத்தியில் இருந்த இ.காங்கிரஸ் ஆட்சி, பதவி நீக்கம் செய்திருக்கிறது. இ. காங்கிரஸ் கட்சியின் மாநில அரசுகளையும் இஷ்டத்திற்கு தலைமைகளைமாற்றி ஆட்சி களை மாற்றியிருக்கிறது. மாநில அரசுகளின் சட்டமன்றங் களுக்குரிய அதிகாரத்தைக் கொடுக்கவில்லை விரிவுபடுத்த வில்லை.

தேசிய முன்னணி அரசு முதல்தடவையாக மத்தியஅரசு— மாநில அரசுகளின் உறவுகளை வளர்க்க புதிய முயற்சிகளை எடுத்தது. மாநில அரசுகள் சம்பந்தப்பட்ட பிரச்சனைகளில் மாநில அரசுகளைக் கலந்தே முடிவுஎடுத்தது, மத்திய அரசுக் கும் மாநில அரசுகளுக்கும் இடையில்எழும் பிரச்சனைகளுக் கும், மாநில அரசுகளுக்கிடையில் எழும் பிரச்சனைகளுக்கும் அவ்வப்போது விவாதித்து தீர்வுகாண மத்திய மாநில அரசு கூட்டுக் குழுக்களைப் புனரமைத்து செயல் படுத்தியது.

மூன்றாவதாக விவசாயிகள் விவசாயப் பொருளாதாரம் பற்றிய பிரச்சனைகளைப்பற்றி முதல் தடவையாகஒருதீவிர மான அடிப்படையான மாற்றத்தைக் கொண்டுவந்தது. ஒன்று. விவசாயிகளின் கிராமப்புற மக்களின் நீண்டநாள் கோரிக்கை கடன் ரத்து பற்றியதாகும். பத்தாயிரம் ரூபாய் வரையிலான விவசாயிகள் மற்றும் கிராமப்புற ஏழைகளின்

கடன்களை ரத்துசெய்து மத்திய அரசு அறிவித்தது. இது விவசாயிகளின் நீண்ட நாள் போராட்டத்தின் மிகப்பெரிய வெற்றியாகும். இந்த அறிவிப்பு கிராமப்புற ஏழைகளுக்கு மிகப்பெரிய நிவாரணத்தைக் கொடுத்திருக்கிறது. இதை அமுல் நடத்துவதில் சில குறைகள் இருக்கலாம். ஆனால் அவைகளை ஒழுங்குபடுத்துவதில் விவசாயிகள் சங்கங்களும் இயக்கங்களும் விழிப்புடன் தங்கள் பங்கை ஆற்றவேண்டும்.

இரண்டு: விவசாயத்துறைக்கு அதிக முக்கியத்துவம் கொடுத்து பட்ஜட்டில், திட்டச்செலவுகளில் நிதி நிறுவன உதவிகளில் 50 சதவீதம் வரை ஒதுக்குவது என்று தேசிய முன்னணி அரசு அறிவிப்பு செய்துள்ளது, இது பழைய நிலையிலிருந்து மாறியுள்ள புதிய திருப்பமாகும். விவசாய உற்பத்தி என்பது நிலம், காடு, மலை, கால்நடைகள் பராமரிப்பு முதலியவைகளிலிருந்து வரும். விளைபொருள், மரம் கல், கனி, பால், முட்டை, மாமிசம், தோல் முதலியன முதல் நிலை உற்பத்தியாகும். இந்த முதல் நிலை உற்பத்தி நாட்டின் பொருளாதாரத்தின் அடிப்படை ஆதாரமாகும். அதைப் பலப்படுத்த வேண்டியதும் விரிவுபடுத்த வேண்டியதும் மிகவும் அவசியமாகும்.

மூன்று: விவசாயிகளின் விளைபொருள்களுக்கு நியாய விலைபற்றிய கோரிக்கை நீண்டநாளைய கோரிக்கையாகும் தொழில்களில் உற்பத்தியாகும் பொருள்களுக்கு, உற்பத்திச் செலவு, அடக்கவிலை லாபம் அடிப்படையில் விலை நிர்ணயம் விலை உத்திரவாதம் இருப்பதைப்போல் விவசாயத் தொழில் மூலம் உற்பத்தியாகும் பொருள்களுக்கும் நியாய விலை அல்லது கட்டுபடியாகும் விலை கிடைக்கவேண்டியது மிகவும் அவசியமாகும். அதுபற்றியும் வி. பி. சிங் அரசு பரிசீலனையில் எடுத்துக் கொண்டது.

நான்கு: நிலச்சீர்திருத்தம் பற்றி பாக்கியுள்ள பிரச்சனைகளையும் பரிசீலனை செய்து ஒரு சீரான நிலச் சீர்திருத்த முறையை நாடுமுழுவதிலும் கொண்டுவருவதற்கு வி.பி.சிங் அரசு முயற்சி எடுத்துக்கொண்டது.

ஐந்து: விவசாயத் தொழிலை நவீனத் தொழில் என்று அறிவிக்க வேண்டும். அதற்குரிய கவனம், நிதி உதவி, வங்கி உதவி, பாதுகாப்பு முதலிய ஏற்பாடுகள் இருக்க வேண்டும். என்பது பற்றியும் அறிவிப்புகள் செய்தது.

ஆறாவதாக தொழிலாளர் பிரச்சனையில் தொழிலாளர்களுக்கு நிர்வாகத்தில் பங்கு என்னும் கருத்தை சட்டபூர்வமாக சட்டத்தின் பகுதியாக கட்டாயமாகக் கொண்டுவந்ததும், வேலை செய்யும் உரிமையை அரசியல் சாசன உரிமையாகக் கொண்டு வந்ததுமாகும்.

வேலையில்லாத் திண்டாட்டம் நாட்டை பாதித்துக்கொண்

டிருக்கும் மிக முக்கியமான பிரச்சனையாகும் அதிலும் கிராமப்புறமக்கள்தான் அதிகமாகப் பாதிக்கப்பட்டுள்ளார்கள். வேலை செய்யும் உரிமையை அரசியல் சட்டபூர்வமான. உரிமையாக்க வேண்டும் என்பது இளைஞர் இயக்கங்களின் நீண்ட நாளைய முக்கியமான கோரிக்கையாகும். அது இப்போது சட்டத்தில் இடம் பெற்று விட்டது. அது செயல் படுத்துவதற்கான நடைமுறைகளை உண்டாக்குவது அடுத்து செய்ய வேண்டிய வேலையாகும்.

ஐந்தாவதாக வானொலி தொலைக்காட்சி அமைப்புகளை ஒரு சுயேச்சையான அமைப்புகளாகக்கொண்டுவந்ததாகும்.

வானொலியும் தொலைக்காட்சியும் அரசுக்குச் சொந்தமான ஒரு வலுவான பிரச்சார சாதனமாகும். இதை இ. காங்கிரஸ் ஆட்சி நடந்தபோது தங்களுடைய சொந்தக் கட்சி அமைப்பின் பிரச்சார சாதனமாகப்பயன் படுத்தியது. அதை ஒரு சுயேச்சையான அமைப்பாக பிரச்சார பாரதி அமைப்பைக் கொண்டு வந்தது.ஒரு ஜனநாயக நடவடிக்கையாகும். இதை வி.பி.சிங் தலைமையிலான தேசிய முன்னணி அரசு வாக்குறுதியை நிறைவேற்றி அமுலுக்குக் கொண்டு வந்தது.

ஆறாவதாக தேசிய ஒருமைப்பாட்டுக் குழுவை மீண்டும் கூட்டி தேசிய ஒற்றுமை மதச்சார்பின்மை ஆகிய கொள்கைகளை வலியுறுத்தி அதில் கருத்தொற்றுமையைக் கொண்டு வருவதற்கு முயற்சி செய்ததாகும். தேசீய ஒற்றுமை, ஒருமைப்பாடு, மதச்சார்பின்மை என்பது நமதுநாட்டின் அடிப்படை தேசீயக் கொள்கையாகும் அதை உறுதியாக நிலை நாட்டுவது நமது அடிப்படைக் கொள்கை வழியாகும்.

ஏழாவதாக வி.பி.சிங் அரசு, மண்டல் குழு அறிக்கையை செயல் படுத்துவதற்கு ஆணையிட்டது. அதன் மூலம் பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு மத்திய அரசு வேலைகளில் 27 சதவீதம் ஒதுக்கீடு செய்யப்பட்டது.

பிற்படுத்தப் பட்ட மக்களுக்கு அரசுப் பணிகளிலும்,கல்வி நிலையங்களிலும் இதரதுறைகளிலும் ஒதுக்கீடு செய்து கொடுக்க வேண்டும் என்பது பிற்படுத்தப்பட்ட மக்களது நீண்ட நாள் கோரிக்கையாகும்.

ஏற்கெனவே தாழ்த்தப்பட்ட மக்களுடைய கிளர்ச்சி, முயற்சி, டாக்டர் அம்பேத்கார் போன்ற சமூகச் சீர்திருத்தவாதிகளின் கடுமையான முயற்சி காரணமாக தாழ்த்தப்பட்ட மக்களுக்கும் மலை வாழ் பழங்குடி மக்களுக்கும் அரசு அலுவலகங்களில் கல்வி நிலையங்களில், சட்ட மன்றங்கள் பாராளு மன்றங்களில் இட ஒதுக்கீடு அரசியல் சட்டத்தின் அங்கமாக இடம் பெற்றிருக்கிறது.

அரசுப்பணிகளில் பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு தமிழ் நாடு, கேரளா, ஆந்திரப்பிரதேசம், கர்நாடகம், பீகார் முதலிய மாநிலங்களிலும் இட ஒதுக்கீடு உள்ளது.

மத்திய அரசிலும் பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு இட ஒதுக்கீடு இருக்க வேண்டும் அது 27 சதவீதமாக இருக்கலாம் என்பது மண்டல் கமிஷன் பரிந்துரையாகும்.

பிற்படுத்தப்பட்டவர்கள் என்பது சமூக ரீதியிலும் கல்வி ரீதியிலும் பிற்படுத்தப்பட்டவர்கள் என்பதாகும். இதில் பொருளாதார நிலைக்கு இடமில்லை. பொருளாதார நிலையில் அவ்வப்போது நிலை மாற்றங்கள் ஏற்படுகின்றன, எனவே அதைப் பின்தங்கிய நிலைக்கு அடிப்படையாக எடுத்துக் கொள்ளமுடியாது.

சமுதாய ரீதியிலும்; கல்வி ரீதியிலும் பின்தங்கிய நிலை ஒதுக்கப்பட்ட நிலை என்பது நமது நாட்டில் இருக்கும் சாதீய அமைப்புகளினால் ஏற்பட்ட தீய விளைவுகளில் ஒன்றாகும். இந்த ஏற்றத் தாழ்வு நிலை பாகுபாடு, இன்றைய நிலையில் எந்த நிலையிலும் ஏற்றுக் கொள்ள முடியாதது மட்டுமல்ல, அனுமதிக்க முடியாததுமாகும். இது ஒரு சமூக நீதிபற்றிய பிரச்சனையாகும்.

சமுதாய சமத்துவம், சமூகநீதி என்பது நமது நாட்டில் சாதி அமைப்புகளும், சாதீய ஏற்றத் தாழ்வுகளும் பாகுபாடுகளும் ஏற்பட்ட நாட்களிலிருந்தே எழுப்பப்பட்ட பிரச்சனையாகும். ஏற்றத் தாழ்வுகளும் பாகுபாடுகளும் ஏற்பட்ட நாட்களிலிருந்தே அதற்கு எதிரான கிளர்ச்சிகளும் நமது நாட்டில் தொடர்ச்சியான வரலாறாக இருந்திருக்கிறது.

வேதங்களில் சாதிகளைப் பற்றிய குறிப்புகள் இல்லை. பின்னால் வந்த உபநிடதங்கள், மனுஸ்மிருதிகளில் சாதி அமைப்பு முறைகளும் சட்டதிட்டங்களும் வகுக்கப்பட்டன. அப்போது வேறுபாடுகள் பாகுபாடுகள் உண்டாக்கப்பட்டன. வர்ணாசிரம தர்மத்தின்படி நான்கு வருணங்கள், நான்குவகை சாதிப் பிரிவுகள் ஏற்படுத்தப்பட்டன

பிராமணர், க்ஷத்திரியர், வைசியர், சூத்திரர் என்று. மனித சாதி பிரிக்கப்பட்டது. இந்த நான்கிலும் சேர்க்கப்படாமல், ஒதுக்கப்பட்டு தாழ்த்தப்பட்டவர்களாக பஞ்சமர்கள் கருதப்பட்டார்கள்.

உபநிடதம் முதலிய நூல்கள், பிராமணர்களே உயர்ந்தவர்கள் என்றும், அவர்களுக்கே மோட்சத்தில் இடம் உண்டு என்றும் அதிலும் பிராமண. ஆண்களுக்கே மோட்சத்தில் இடம் உண்டு என்றும் பிராமணப் பெண்

களும் சூத்திரர்களுக்கு ஒப்பானவர்களே என்றும் எழுதி வைத்து பிராமணர் எல்லா உரிமைகளையும் சலுகைகளையும் பெற்றனர்.

பிராமணர்களுடையஇந்த மேலாதிக்கத்தை ஏற்கமறுத்தும், தங்களுக்கும் சம உரிமையும், சுவர்க்கத்தில் இடம் இருக்க வேண்டும் என்றும் க்ஷத்திரியர்கள் போராடினர். இவ்வாறு பிராமணர்களுக்கும் க்ஷத்திரியர்களுக்கும் நடந்த போராட்டங்கள் ஆயிரம் ஆண்டுகளுக்கு மேல் நமது நாட்டில் நடந்திருக்கிறது என்று கூறப்படுகிறது

கடைசியில் க்ஷத்திரியர்களையும் உயர்வானவர்கள் என்று ஏற்று அவர்களுக்கும் சுவர்க்கத்தில் இடம் உண்டு வீரசுவர்க்கம் உண்டு என்று பிராமணர்கள் சம்மதித்து இருவரும் அதாவது பிராமணர்களும் க்ஷத்திரியர்களும்சமரசம் செய்து கொண்டு, க்ஷத்திரியன் அரசனாகவும்,பிராமணன் அமைச்சனாகவும் சேர்ந்து இருந்து சமுதாயத்தின் மீது ஆதிக்கம் செலுத்தினார்கள் என்பதைப் பல கதைகள் மூலம் அறியலாம்.

பரசுராமன் என்னும் பிராமணன், க்ஷத்திரியவம்சத்தையே அழித்துத் தனது மேலாதிக்கத்தை நிலைநாட்ட முயன்றான் என்றும் கடைசியில் இராமன் என்னும் க்ஷத்திரியனிடம் தோல்வியடைந்து தனது சக்தி முழுவதையும் இராமனிடத்தில் ஒப்படைத்துவிட்டு வனம் சென்று விட்டான் என்றும் ஒரு கதை கூறுகிறது.

கம்பன் தனது ராமாவதாரக் கதையில் கூறுகிறான் இராமன் மிதிலையில் சீதையை மணம் முடித்து அனைத்து பரிவாரங்களுடன் அயோத்திக்குத் திரும்பிக் கொண்டிருக்கிறான். அப்போது பரசுராமன் எதிர்ப்பட்டு:

''உலகெலாம் முனிவர்க்கு ஈந்தேன்
உறுபகை ஒடுக்கிப் போந்தேன்
அலகில் மாதவங்கள் செய்து ஓர்
அருவரை இருந்தேன்''

**இதன்பொருள்:**

உலகையெல்லாம் வென்று முனிவர்களாகிய பிராமணர்களுக்குக் கொடுத்தேன் எங்களுக்கிருந்த பகையை எல்லாம் அடக்கி ஒடுக்கி எங்களது மேலாதிக்கத்தை நிலை நாட்டி விட்டு மேலும் பல தவங்கள் செய்து மலையின் உச்சியில் இருந்தேன். அப்போது உனது வலிமையைக் கேள்விப்பட்டு உன்னையும் எதிர்க்க எனது விஷ்ணு தனுசுடன் வந்திருக்கிறேன் என்று பரசுராமன் ராமனிடம் எதிர் நின்று கூறுகிறான்.

இராமன் உடனே அந்த வல்லமை மிக்க விஷ்ணுதனுசைத் தனது கையில் வாங்கி யாராலும் வளைக்க முடியாத அந்த வில்லை வளைத்து நாண் ஏற்றி விட்டான்.

தொடுத்து விட்ட நாணுக்கு இலக்கு வேண்டும். தனியே விட்டு விட முடியாது. அம்பைத் தொடுத்து ராமன். பரசு ராமனிடம் கூறுகிறான்: ''பூதலம் முழுவதிலும் உள்ள அரசர்களையெல்லாம் வென்று அடக்கி விட்டாய். இப்போது என் முன்னால் என் அன்புக்கு முன்னால் நிற்கிறாய்.. உன்னை நான் அடக்கவேண்டும். என்றாலும் நீ வேதத்தைப் பயின்ற வல்லமை மிக்க பிராமணனின் மைந்தன். எனவே உன்னைக் கொல்லக் கூடாது.ஆயினும் எனது அம்பிற்கு இலக்கு வேண்டும், அதைக் காட்டு'' என்று இராமன் கேட்கிறான். இராமனுடைய வெற்றியும் பரசு ராமனின் தோல்வியும் நிச்சயமாகி விட்டது. எனவே பரசு ராமன் பணிந்து ''உனது அம்புக்கு, எனது தவ வலிமையை இலக்காக்குகிறேன் என்று கூற,இராமனுடைய கணை பரசு ராமனுடைய வல்லமையை எடுத்துக் கொண்டு போய் விடுகிறது. என்று கூறி தனது விஷ்ணுதனுசு என்னும் வலிய வில்லை நீட்டுகிறான்.இராமன் அந்த வில்லை வாங்கி,

''பூதலத்தரசை எல்லாம் பொன்று வித்தனை என்றாலும்
வேதவித்தாய மேலோன் மைந்தன் நீ! விரதம் பூண்டாய்
ஆதலின் கொல்லல் ஆகாது அம்பிது பிழைப்பது என்றால்
யாது இதற்கு இலக்கம் ஆவது? என்று கேட்கிறான்.

எய்த அம்பு இடை பழுது எய்திடாமல் என்
செய்தவம் யாவையும் சிதைக்கவே எனக்
கை அவன் நெகிழ்ந்தனன் கணையும் சென்று அவன்
மையறு தவம் எலாம் வாரி மீண்டதே

இவ்வாறு இராமன் எய்த கணை பரசுராமனின் தவவலிமை அனைத்தையும் வாரிக் கொண்டு சென்றது. என்று கம்பன் கூறுவதைக் காணலாம். தனது வலுவை இழந்த பரசு ராமன் என்னும் பிராமணன்,

எண்ணிய பொருளெலாம் இனிது முற்றுக
மண்ணிய மணி நிற வண்ண வண் துழாய்க்
கண்ணிய யாவர்க்கும் களை கண் ஆகிய
புண்ணிய விடை'' எனத் தொழுது போயினான்.

தனது சக்தியனைத்தையும் கொடுத்து விட்டு இராமனை வணங்கி விடை பெற்றுக்கொண்டு போய் விட்டான் என்று கதை கூறுகிறது.

இனி, விஸ்வாமித்திரன் என்னும் க்ஷத்திரியன் கடும் தவம் செய்து பஞ்சபூதங்களை வென்று அத்தனை வல்லமை மிக்க சக்திகளையும் பெற்று பிராமணர்களையெல்லாம் வென்று

கடைசியில் வசிஷ்டன் என்னும் பிராமணத் தலைவனையும் சந்தித்தான். வசிஷ்டன் விஸ்வாமித்திரனின் வல்லமையை ஏற்று அங்கீகரித்து, வாராய் பிரம்ம ரிஷியே'' என்று கட்டி அணைத்து சமமாக ஏற்றுக் கொண்டான் என மற்றொரு கதை கூறுகிறது.

பின்னர் ஏற்பட்ட வரலாற்று நிகழ்ச்சி. க்ஷத்திரிய குலத்தில் பிறந்த கௌதம புத்தர், மகாவீரர் ஆகியோர், வேத விளக்கங்களை, சாதிச் சம்பிரதாயங்களை வருணாசிரம தர்மத்தை நிராகரித்து அனைவரும் ஒன்று என்று அறிவித்து சங்கம் அமைத்து சமபந்தி சாப்பாடுகளை நடத்தி மடங்களை அமைத்து பெரிய நாடு தழுவிய இயக்கங்களையே நடத்தினர். அவையே, புத்தம் என்றும் சமணம் என்றும் பெரும் சமயங்களாக ஏற்பட்டு அவற்றில் பெருவாரியான மக்கள் திரண்டனர்.

புத்தம், சமணம் போன்ற சமயக் கருத்துக்களுக்கு, நமது நாட்டின் தன வணிகர்கள், வைசியர்கள் பேராதரவு கொடுத்ததாகப் பல கதைகள் மூலம் தெரியவருகிறது.

தமிழில் ஐம்பெரும் காப்பியக் கதைகளிலிருந்தும் பல செய்திகள் கிடைக்கின்றன.

சிலப்பதிகாரக் கதையில், சோழனுடைய அரசசபையில் பல பெருநில, குறுநில, சிறுநில, மன்னர்களும் பெறமுடியாத மாலையை தனவணிகன் கோவலன் வாங்கி மாதவியைப் பெறுகிறான் மதுரையில் பாண்டியனுடைய அரசசபையில் கோப்பெருந்தேவியின் சிலம்புக்கு ஈடாக தனது சிலம்பை ஆதாரம் காட்டி, கோவலனைக் கள்வன் இல்லை என்று நிரூபித்து, அரசியல் பிழைத்தோருக்கு அறத்தைக் கூற்றாக்கி ஒரு தனவணிகமாது, மன்னனை வீழ்த்தி, மதுரையைத் தீக்கிரையாக்கி வானவீதி வழியாக மோட்சத்தை அடைந்ததாகக்கதை கூறுகிறது.

சீவக சிந்தாமணியின் சீவகன் அரசனுக்கு மகனாகப்பிறந்து, வணிகன் வீட்டில் வளர்ந்து, வித்தியாதரப் பெண் மற்றும் அரசகுலப்பெண்கள், வைசிய குலப்பெண்கள் எட்டுப்பேரை மணந்து அரசகுலத்தையும் வைசியகுலத்தையும் சம அந்தஸ்து கொடுத்து, வணிக வைசிய குலத்தையும் அரச குலத்திற்கு சமமாகக் கொண்டு வருகிறான்.

இந்தக் கதைகள் எல்லாம் அன்றய சமுதாயப் பின்னல்களை வெளிப்படுத்துகிறது என்பதில் சந்தேகம் இல்லை. இவையெல்லாம் தாழ்த்தப்பட்ட குலங்களை உயர்த்துவதற்குள்ள போராட்டங்களின் வெளிப்பாடுகளாகும்.

தனவணிகனும் கணிகைக்கும் பிறந்த மணிமேகலை பெரிய தத்துவ ஞானியாகப் புகழ் பெற்று, சமயக்கணக்கர்களை

வாதிட்டு, தனது சமயக்கருத்துக்களை பரப்பியதாகக்கதை கூறுகிறது.

வைதீக சமயங்களும் வருணாசிரமதர்மங்களும். புத்தம் சமணத்தின் தாக்குதல்களால், அடிப்படை ஆட்டம் கண்டது. இந்த அபாயங்களுக்குப் பின்னர் வைதீக சமயங்களின் உத்திகள் மாறின. சைவ, வைணவ சமயங்கள் புதிய உத்திகளை மேற்கொண்டு புதிய இயக்க வழிகள் வெளிப்பட்டன. பக்தி இயக்கம் தோன்றியது,

பகவத் கீதை பிறந்தது. அதன்படி பக்தி செலுத்தியவன், பகவானிடத்தில் சரணாகதியடைந்தவன் முக்திஅடைவான் விடுதலை பெறுவான். மோட்சத்தை அடைவான் என்று கீதை கூறியது. அதன்படி பக்தி இயக்கம் வளர்ந்தது. பரவியது. மக்களை ஈர்த்தது.

பக்தி இயக்கத்தை பலவேறு பிரிவுகளைச் சேர்ந்த மகான்களும் பக்தர்களும் முன்னெடுத்துச் சென்றதாகப் பல கதைகளும் கூறுகின்றன. தமிழகத்தில் பல வேறு வகுப்புகளை, பிரிவுகளைச் சேர்ந்தவர்களும் பெண் பாலர் உள்பட பல நாயன் மார்களும் ஆழ்வார்களும் ஆச்சாரியார்களும் சமயகுரவர்களும் தோன்றி சாதி வேறுபாடுகள் இன்றிபக்தியைப் பரப்பி இந்து சமயத்தைப் பாதுகாத்து பரப்பினார்கள். சங்கரர், ராமானுஜர், மத்துவர் போன்ற பெரிய தத்துவ ஞானிகள் பக்தி இயக்கத்திற்கு தளம் அமைத்தனர். கீதைக்கு விளக்கம் செய்தனர், நந்தனார். திருப்பாணாழ்வார் போன்ற தாழ்த்தப்பட்ட இனத்தைச் சேர்ந்த மகான்களும் பக்தி இயக்கத்தின் தலைமையில் இருந்தனர்.

சாதி இரண்டொழிய வேறில்லை என்று ஔவை எடுத்துக் கூறினார்.

குகனோடு ஐவரானோம், குன்று சூழ்வான் மகனோடு அறுவரானோம், நின்னோடு எழுவரானோம் என்று வீடணனிடத்தில் ராமன் கூறியதாகக் கம்பர் கூறுகிறார்.

கர்ணன் தன்னைப் பலரும் இழிகுலத்தான் எனக் கூறிய போது, தனது திறமையையும் ஆற்றலையும் காட்டப் போராடியதாக பாரதக் கதை கூறுகிறது.

பக்தி இயக்கத்திற்குப்பின் வந்தசித்தர்களும் திருமூலர்முதல் வடலூர் வள்ளலார் வரை ஒன்றே குலம் ஒருவனே தேவன் என்னும் கருத்தைப் பரப்பினர்.

சாதி வேறுபாடுகளையும் பாகுபாடுகளையும் எதிர்த்து தேசீய விடுதலை இயக்கத்தின் தீவிரவாதிகள் குரல் கொடுத்தார்கள். தீண்டாமையை ஒழிக்கவும், ஆலயப்பிரவேசம் நடத்தவும் இயக்கங்கள் நடைபெற்றன. காந்திஜி அரிஜன்

பத்திரிகை நடத்தினார். தீண்டாமையைப் போக்கப் பாடு பட்டார்.

பாபா சாகேப் டாக்டர் அம்பேத்கர் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு இழைக்கப்பட்ட கொடுமைகளை எதிர்த்து, அவர்களுடைய மனித உரிமைகளுக்காகக் கடுமையாகப்போராடினார்.

அடித்தட்டு மக்களின் அரசியல் விடுதலைக்காகவும். பொருளாதார உயர்வுக்காகவும், சமூக சமநீதிக்காகவும் இந்தியக் கம்யூனிஸ்ட்இயக்கம் தொடக்கம்முதல் தீவிரமாகப் போராடியது. சாதீய இழிவுகளுக்கும் ஏற்றத்தாழ்வுகளுக்கும் பாகுபாடுகளுக்கும் எதிராகத் தொழிலாளர்களையும் விவசாயிகளையும், முற்போக்கு எண்ணங்களைக் கொண்ட படிப்பாளிகளையும் ஒன்று திரட்டியது.

பாரதி தனது கவிதைகளில், சாதிப்பாகுபாடுகளை தீவிரமாகச் சாடினார், சாதி மதங்களைப் பாரோம் என்றார். எல்லோரும் ஓர் குலம்,எல்லோரும் ஓர் இனம், எல்லோரும் இந்திய மக்கள், எல்லோரும் இந்நாட்டு மன்னர். என்று பாரதி பாடினார.

பார்ப்பானை ஐயரென்ற காலமும் போச்சே, வெள்ளைப் பரங்கியைத்துரையென்ற காலமும் போச்சே என்றும் எங்கும் சுதந்திரம் என்பதே பேச்சு நாம் எல்லோரும் சமமென்பது உறுதியாச்சு என்றும்.

எல்லோரும் ஒன்றென்னும் காலம் வந்ததே பொய்யும் ஏமாற்றும் தொலைகின்ற காலம் வந்ததே என்றும் பாரதி சுதந்திரப் பள்ளுப்பாட்டு பாடினார்

சாதிகள் இல்லையடி பாப்பா— குலத் தாழ்ச்சி உயர்ச்சி சொலல் பாவம் என்று பாப்பாப்பாட்டு பாடினார் பாரதி.

நான்கு வகுப்பும் இங்கொன்றே-- இந்த
        நான்கினில் ஒன்று குறைந்தால்
வேலை தவறிச் சிதைந்தே— செத்து
        வீழ்ந்திடும் மானிடச்சாதி.

சாதிக் கொடுமைகள் வேண்டாம்— அன்பு
        தன்னில் செழித்திடும் வையம்
ஆதரவுற்றிங்கு வாழ்வோம்—தொழில்
        ஆயிரம் மாண்புறச் செய்வோம்

அறிவைவளர்த்திட வேண்டும்— மக்கள்
        அத்தனை பேருக்கும் ஒன்றாய்
சிறியரை மேம்படச் செய்தால்—பின்பு
        தெய்வம் எல்லோரையும் வாழ்த்தும்

என்று ஊருக்கு நல்லது சொல்வேன் என்று முரசு கொட்டி பாரதி நமக்கு அறிவுறுத்துகிறார்.

தமிழகத்தில் இந்திய தேசீய காங்கிரஸ் கட்சிக்குள் இருந்த சாதிப் பாகுபாட்டை எதிர்த்து பெரியார் காங்கிரஸை விட்டு வெளியேறி சுயமரியாதை இயக்கத்தைத் தொடங்கினார். சாதிப்பாகுபாடுகளை எதிர்த்துப் போராடினார். சமூக சீர்திருத்தங்களுக்காகப் பாடுபட்டார். இதே கருத்துக்காக கேரளம், கர்நாடகம், ஆந்திரம், வங்காளம் முதலிய மாநிலங்களிலும் சமூகசீர்திருத்த இயக்கங்கள் நடைபெற்றுள்ளன.

பெரியாரைத் தொடர்ந்து அண்ணா அவர்களும் ஒன்றே குலம் ஒருவனே தேவன் என்று கூறி சமூக சீர்திருத்த இயக்கங்கள் மூலம் திராவிட இயக்கத்தை வளர்த்தார்.

வகுப்புவாரி பிரதி நிதித்துவம் என ஜஸ்டிஸ் கட்சியார் கொண்டு வந்தபோது பிராமணர்களுக்கு எதிராக இதர மேல்சாதி இந்துக்களுக்கு அரசு உத்தியோகங்கள் பங்கு வேண்டும் என்று வாதாடி சட்டங்கள் கொண்டுவந்தனர்.

இவ்வாறு சாதிசமத்துவம் சமூக நீதிக்காக தொடர்ந்து போராட்டங்கள் நடந்து கொண்டே இருந்தது.

ஆங்கிலேயர் ஆட்சியின்போது தேசீய காங்கிரஸ் மகாசபை முதலில் இந்தியர்களுக்கு அரசாங்க உத்தியோகங்களில் இடம் வேண்டும் என்னும் கோரிக்கையைத்தான் முன்வைத்தார்கள்.

அன்றைய சென்னை மாகாணத்தில், அரசாங்க உத்தியோகங்களில் அனைவருக்கும் பங்கு வேண்டும் என்னும் முறையில்தான் பிராமணர்— பிராமணர் அல்லாதார் என்னும் பிரச்சனை ஏற்பட்டு வகுப்பு வாரி பிரதிநிதித்துவம் ஏற்பட்டது.

தாழ்த்தப்பட்ட மக்களுக்கு தனிப் பிரதிநிதித்துவம் வேண்டும் என்று பர்பா சாகேப் டாக்டர் அம்பேத்கார் கேட்டு வற்புறுத்தினார்.

1947—ம் ஆண்டு சுதந்திரம் பெற்றோம். 1950— ஆண்டில் அரசியல் சட்டம் அறிவிக்கப்பட்டது. பாரத நாட்டின் வரலாற்றில் முதல் முறையாக சட்டப்படி அனைவரும் சமம், வயது வந்தோர் அனைவருக்கும் வாக்குரிமை என்று அரசியல் சட்டத்தின் மூலம் அறிவிக்கப்பட்டது.

அரசியல் சட்டப்படி மத்திய அரசுப் பணிகளில், சட்டமன்றங்கள் பாராளு மன்றங்களில் தாழ்த்தப்பட்ட மக்களுக்கும் மலைவாழ் பழங்குடி மக்களுக்கும் தனி ஒதுக்கீடுமூலம் பிரதி

நிதித்துவம் கொடுக்கப் பட்டது. இந்த ஒதுக்கீடு இருபது ஆண்டுகளுக்கு என்று கூறப்பட்டது. இன்னும் போதுமான முன்னேற்றம் இல்லாத காரணத்தால் இந்த ஒதுக்கீட்டுக் காலம் மேலும் நீடிக்கப்பட்டிருக்கிறது.

இதற்கிடையில் பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கும் அரசாங்க உத்தியோகங்களில் இட ஒதுக்கீடு வேண்டும் என்னும் கோரிக்கை எழுந்தது.

1977—ம் ஆண்டு இது பற்றி விசாரணை நடத்தி பரிந்துரை செய்யுமாறு திரு:மண்டல் என்பவர் தலைமையில் ஒரு குழு அமைக்கப்பட்டது. அதற்கு மண்டல் குழு என்று பெயர். அக்குழு பிற்படுத்தப்பட்டவர்களுக்கு அரசுப் பணிகளில் 27 சதம் ஒதுக்கீடு செய்ய வேண்டும்என்று பரிந்துரை செய்தது.

இந்த அறிக்கையை 1980—ம் ஆண்டு ஆட்சிக்கு வந்த இந்திராகாந்தி அரசு கிடப்பில் போட்டுவிட்டது. 1985—ம் ஆண்டு ஆட்சிப் பொறுப்பிற்கு வந்த ராஜீவ்காந்தி அரசும் மண்டல்குழு அறிக்கை பரிந்துரையை அமலாக்கவில்லை.

1989—ம் ஆண்டு ஆட்சிக்கு வந்த வி. பி. சிங் தலைமையிலான அரசு 1990—ம் ஆண்டில் மண்டல் குழு பரிந்துரையை அமுலாக்க உத்தரவிட்டது.

அப்போது சில மேல் சாதிகளைச்சேர்ந்த ஆதிக்க சக்திகளும் முதல் வகுப்பு அதிகாரிகளின் கூட்டத்தில் உள்ள ஆதிக்க சக்திகளும் சேர்ந்து கூட்டாகச்சதிசெய்து இட ஒதுக்கீட்டு உத்தரவுக்கு எதிராக வட மாநிலங்கள் சிலவற்றில் கலகம் செய்தார்கள்.

பாரதீய ஜனதாக்கட்சியின் தலைவர் எல். கே. அத்வானி தலைமை மக்களுடைய கவனத்தை திசை திருப்புவதற்காக, ராமஜன்ம பூமி பிரச்சனையை தீவிரப்படுத்தி ராமருக்கு கோவில் கட்ட வேண்டும். என்று ரதயாத்திரை, கார் சேவை, செங்கல் சேகரிப்பு இயக்கத்தைத் தொடங்கினர்.

குஜராத்தில் தொடங்கப்பட்ட ரதயாத்திரை பீகாருக்கு வந்தடைந்தது. ராமஜன்மபூமி பாப்ரிமஸ்ஜீத் பிரச்சனை காரணமாக பதட்ட நிலை இந்து முஸ்லிம் வகுப்பு மோதல் அபாயம் ஏற்பட்டது.பீகார் மாநிலத்தில் பாரதீய ஜனதாக் கட்சித்தலைவர்கைதுசெய்யப்பட்டார்.அதைத்தொடர்ந்து பாரதீய ஜனதாக்கட்சி வி.பி. சிங் அமைச்சரவைக்குக் கொடுத்த ஆதரவை விலக்கிக் கொண்டது. பாராளுமன்றத்தில் முதலாவது பெரிய அரசியல் கட்சியாக உள்ள இ. காங்கிரஸ் கட்சி தனது அரசியல் சூழ்ச்சி மூலம் ஜனதாகட்சியில் உள்ள கருத்து வேற்றுமை பதவி ஆசைகளைப் பயன்படுத்தி அக்கட்சியைப் பிளந்தது. வி. பி. சிங் அமைச்சரவை பெரும்பான்மை இழந்து 1990 நவம்பர் 7-ம்தேதி ஆட்சிப்பொறுப்

யிலிருந்து விலகிக் கொண்டது. அதன்பின் இ. காங்கிரஸ் ஆதரவில் ஒரு சிறுபான்மைக்குழுவின் ஆட்சி ஏற்பட்டது. இந்த ஆட்சிக்கு சோந்த ஆள் பலமும் இல்லை. கொள்கை பலமும் இல்லை.

மீண்டும் இந்திய மக்களுக்கு முன்பாக சில கொள்கைப் பிரச்சனைகள் முன் நிற்கின்றன. நிர்வாக முறையில் ஜன நாயக வழிமுறைகள், மத்திய மாநில அரசுகளின் சீரான உறவு முறை, விவசாயத் தொழிலுக்கும் விவசாயிகளுக்கும் உரியநியாயம் வழங்குதல், வேலை செய்யும் உரிமை, தொழி லாளர்களுக்கு நிர்வாகத்தில் பங்கு, பிரச்சார சாதனங் களில் சுய உரிமை, மதச்சார்பின்மை, வகுப்பு ஒற்றுமை சமூக நீதி தேசிய ஒற்றுமை ஒருமைப்பாடு முதலிய அடிப் படை கொள்கைப் பிரச்சனைகள் நாட்டு மக்கள் முன்பு நிற்கின்றன.

இந்த அடிப்படைக் கொள்கைகளைச் செயல்படுத்தும் முறை யில் நாட்டில் சமுதாய மாற்றமும் அரசியல் மாற்றமும் ஏற் பட வேண்டும். இதில் தேசிய முன்னணிக் கட்சிகளும் இடது சாரிக்கட்சிகளும் சேர்ந்து நின்று செயலாற்றும் வாய்ப்பு கள் ஏற்பட்டிருக்கிறது.

இது இரண்டாவது கட்ட விடுதலைப் போராட்டமாகும் இதில் பெருவாரியாக விவசாய மக்களும் கிராமப்புற மக்க ளும் தொழிலாளர்களும், நடுத்தரமக்களும் பங்கு பெறச் செய்ய வேண்டும்.

இதில் தாழ்த்தப்பட்ட மக்கள், பழங்குடிமக்கள், பிற்படுத்தப் பட்டமக்கள், சிறுபான்மைமக்கள் முதலிய ஒடுக்கப்பட்ட மக்கள் அனைவரையும், அரசியல் பூர்வமாகவும் நாட்டின் ஒற்றுமை ஒருமைப்பாட்டை முன் நிறுத்தியும் ஒன்றுதிரட்ட வேண்டும்.

இந்தச் செய்தியை வீடுதோறும் மக்களிடம் கொண்டு செல்ல வேண்டும்.

☆

# 11

# முடிவுரை

நமது நாட்டின் விவசாயிகள், விவசாயத்தொழிலாளர்கள் இதர கிராமப்புறமக்கள், இந்த நாட்டின் மக்கள் தொகையில் எண்பது சதவீதம் பேர்களாகும். இவர்களில் பெரும்பாலோர் இன்று வறுமைக்கோட்டின் கீழே வாழ்கிறார்கள்.

''பாரதநாடு பழம் பெரும் நாடு நீர் அதன் புதல்வர் இந் நினைவகற்றாதீர்'' என்று பாரதி ஆணையிட்டான். நாம் பாரதமக்கள். நமது மக்களில் எண்பது சதவீதம் பேர் வறுமைக்கோட்டின் கீழே உள்ள நமது கிராமப்புற மக்களாகும். நமது பாரத நாடு எல்லா வளங்களையும் பெற்றிருக்கிறது, வற்றாத ஆறுகளும், வளமானபூமியும் கடுமையாக உழைக்கும் பாட்டாளிகளையும் கொண்டநாடு. இருப்பினும் வறுமையால் வாடும் மக்களை நிறையப்பெற்றிருக்கிறோம்.

செல்வத்தின் உச்சத்திற்குச் செல்லும் வாய்ப்புகளைப் பெற்றிருக்கிறோம். ஆயினும் வறுமையின் அடி ஆழத்தில் உள்ள பெரும்பாலான மக்களைக் கொண்டிருக்கிறோம். நாடு விடுதலை பெற்ற பின்னர் நாற்பது ஆண்டுகளில் பத்து மடங்கு நமது செல்வத்தைப் பெருக்கி இருக்கிறோம். ஆயினும் வறுமையினால் வாடும் மக்களின் எண்ணிக்கையும் அதிகரித்திருக்கிறது.

இந்த நாடு அறிவின் உச்சிக்குச் சென்றிருக்கிறது. ஆயினும் நாட்டின் பெரும்பாலான மக்கள்அறியாமையின் அடி ஆழத்தில் வீழ்ந்து கிடக்கிறார்கள்.

சிறந்தபடிப்பாளிகளைவிஞ்ஞானிகளை ,பொறியியல் வல்லுநர்களை, நிபுணர்களை, ஆராய்ச்சியாளர்களை. கணக்கர்களை, கணிதமேதைகளை, ஆலை நிர்வாகிகளை, டாக்டர்களை உண்டாக்கியதில் உலகில் சோவியத்யூனியனுக்கும் அமெரிக்காவிற்கும் அடுத்தபடியாக பாரதநாடு உலகில் மூன்றாவது இடத்தைப் பிடித்திருக்கிறது.

ஆயினும் உலகில்உள்ள எழுதப்படிக்கத் தெரியாத மக்களில் பாதிப்பேர் இந்த நாட்டில் தான் இருக்கிறார்கள்.

ஓதாமல் ஒருநாளும் இருக்க வேண்டாம் என்று கூறிய மூதாட்டி பிறந்த இந்த புண்ணிய பூமியில் தான் இன்னும் கல்வி அறிவில்லாத மக்கள் அறுபது சதவீதத்திற்கும் மேல் இருக்கிறார்கள். அவர்களில் பெரும்பாலோர் கிராமப்புறங் களில் இருக்கிறார்கள்.

தத்துவ ஞானத்தில் தலைசிறந்த பாரத நாட்டில் மூட நம்பிக்கைகளும் நிறைந்து விளங்குகின்றன.

நம்முடைய சிந்தனையில் கிராமப்புறமக்கள் முதலிடம் பெற வேண்டும். அவர்களுடைய உழைப்பிற்கு முதலிடம் கிடைக்கவேண்டும்.

கிராமப்புற மக்களை நாம், ஏழைகளாய், பஞ்சைகளாய், பராரிகளாய், பரிதாபத்திற்குரியவர்களாய், தட்டு ஏந்தி. மதிய உணவு கேட்பவர்களாய், சிப்பாய்களைக்கண்டு அஞ்சு பவர்களாய், ஊர்க்காவலர்களைக்கண்டு கைகட்டி நிற்பவர் களாய், முழத்துண்டு இல்லாதவர்களாய், ஒட்டிய வயிறும், கூன் விழுந்த முதுகும், குழிவிழுந்த கண்களையும் கொண்ட வர்களாய்க் காணக்கூடாது.

கடும் உழைப்பாளர்களாய், எண்ணற்ற வயல் வெளிகளை யும் ஆலைகளையும் தொழிற்சாலைகளையும் உண்டாக்கிய வர்களாய், உயர்ந்த கோபுரங்களையும் ஆழமான அணை களையும் ஏரிகளையும் குளங்களையும் கட்டியவர்களாய், மண்ணைப்பிசைந்து மாளிகைகள் கட்டுபவர்களாய், உலகில் பசியைப் போக்குபவர்களாய், மாந்தரின் மானத்தைக்காப் பவர்களாய், அறிவுச்சுடரை ஏற்றுபவர்களாய், வீரம் மிக்க வர்களாய், உள்ளத்தில் உறுதிகொண்டவர்களாய் அளப் பறிய பொது அறிவு கொண்டவர்களாய், தங்கள் சொந்த அனுபவத்தின் மூலம் புரட்சிக்குத் தயாராகிக் கொண்டிருக் கும் மகத்தான சமுதாயப் புரட்சியின் போர்வீரர்களாய் நமது கிராமப்புற மக்களைக்காண வேண்டும்.

காட்டு விலங்குகளை எதிர்த்துப் போராடி வெற்றி கண்ட கிராமப்புறமக்களை நாட்டு விலங்குகளான கூண்டும் கூட் டத்தை எதிர்த்துப் போராட வழிகாட்ட வேண்டும்.

வயல்களில் விளை நிலங்களில் பயிரோடு வளர்ந்த களை களைக் களைந்து பழக்கப்பட்ட, கிராமப்புறபாட்டாளி மக்கள் சமுதாய முன்னேற்றத்திற்குக் குறுக்கே உள்ள களை களை நீக்குவதற்கு உதவ வழி காட்ட வேண்டும்.

பாரதநாடு தனது நீண்ட பயணத்தில் எத்தனையோ கொடுங்கோல் அரக்கர்களைக் கொன்று மாய்த்து மக்க ளுக்கு மகிழ்ச்சியைக் கொண்டுவந்திருக்கிறது. எத்தனையோ

ஆண்டான்களின் கொடுமைகளை எதிர்த்துப் போராடி வெற்றி கண்டிருக்கிறது. எத்தனையோ தன்னகங்காரம் பிடித்த மூர்க்கர்களை, முரட்டுக்காளைகளை அடக்கி மக்களுக்குச் சேவை செய்ய வைத்திருக்கிறது.

எத்தனையோ கொடுங்கோல் மன்னர்களை வீழ்த்தி விழுங்கி பாரத நாடு ஆனந்தக் கூத்து ஆடியிருக்கிறது.

நல்லறம் பாடிய மன்னனை வாழ்த்தி
நயம் புரிவாள் எங்கள் தாய்— அவர்
அல்லவராயின் அவரை விழுங்கிப் பின்
ஆனந்தக்கூத்திடுவாள்—என்று பாரதிபாடுகிறார்.

எத்தனையோ படையெடுப்புகள், வெள்ளங்கள்,பஞ்சங்கள் கடல் பொங்குதல்களைக் கடந்து சிறந்த தத்துவ ஞானக் கருத்துக்களை, உலகம் வியக்கும் சாகாவரம் பெற்ற இதிகாசங்களை, காவியங்களை, கணித நூல்களை, அரசியல் பொருளாதார, அறிவியல் கருத்துக்களை உயிர்த்துடிப்பு மிக்க அற்புதமான சிலைகளை, உயர்ந்த கோபுரங்களை உலகுக்கு அளித்து பாரதநாடு பெருமை பெற்றது.

ஆங்கிலேயர் ஆட்சி வன்மைமிக்கதாக இருந்தது. சூரியனே அஸ்தமிக்காத பிரிட்டிஷ் சாம்ராஜ்யம் என்று ஆங்கிலேயர்கள் தங்களைப்பற்றி பெருமையடித்துக் கொண்டார்கள். அந்த ஆங்கிலேயர்கள் தங்கள் ஆயுதங்களால் வர்த்தகத்தால், தங்கள் தொழில் வலிமையால், நிர்வாகத்திறமையால், ராஜதந்திர பிரித்தாளும் சூழ்ச்சியால் இந்தியாவில் தங்கள் ஆட்சியை அமைத்தார்கள். இந்தியமக்களை அடிமைப்படுத்தினார்கள். அந்த ஆங்கிலேயர்களுக்கு இந்திய நாட்டைக்கைப்பற்றுவதற்கு நூறு ஆண்டுகளாயிற்று. நாட்டை முழுமையாகப் பிடித்து நிலையான ஆட்சியை ஏற்படுத்தியதாகக் கூறி தொண்ணூறு ஆண்டுகளுக்கு மேல் இந்தத் திருநாட்டில் அவர்கள் ஆட்சியில் நீடிக்க முடியவில்லை.

இந்தியராணுவம் ஆங்கிலேயர் ஆட்சிக்கு எதிராக ஆயுதம் தாங்கிய கலகத்தைச் செய்தது. இந்திய இளைஞர்கள் வேலாயுதத்தையும் சூலாயுதத்தையும், துப்பாக்கியையும் வெடிகுண்டுகளையும் எடுத்து அந்நிய ஆட்சியை எதிர்த்துப் போராடினார்கள். இந்திய விவசாயிகள் வரி கொடுக்க மாட்டோம் என்று உரத்தகுரல் கொடுத்து வானம் பொழியுது பூமி விளையுது உனக்கு ஏன் வரிப்பணம் என்று சிந்து பாடினார்கள். அறிவாளிகள், படிப்பாளிகள், ஆங்கிலேய நிர்வாகத்தை எதிர்த்தார்கள். வர்த்தகர்கள் போட்டிக் கப்பல் ஓட்டினார்கள். அரசியல் சாசனம் உங்களுக்கு எழுதத் தெரியுமா எனக் கேட்ட ஆங்கிலேய ஆளுநருக்கு 24 மணி

நேரத்தில் ஓரே எடுப்பில் அரசியல் சட்டத்தை எழுதி அந்த ஆங்கிலேயன் முகத்தில் வீசினார்கள். தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் செய்தார்கள். மீனவர்கள் துடுப்புகளைத் தூக்கினார்கள். விவசாயிகள் தங்கள் நுகத்தடிகளையும் முளைக்கம்புகளையும் தூக்கினார்கள், அறவழியில் நின்ற சான்றோர்கள் காந்திவழியில் அகிம்சா போராட்டங்களை நடத்தினார்கள்.

இந்தியர்கள் அமைதியானவர்கள். அசைவில்லாதவர்கள், அடிமைப்புத்தியுள்ளவர்கள், எழுச்சியில்லாதவர்கள், ஏழ்மை மிக்கவர்கள், தூக்கம் நிறைந்தவர்கள், சுறுசுறுப்பு இல்லாதவர்கள் என்றெல்லாம், ஐரோப்பிய எழுத்தாளர்கள் சிலர் நூல் எழுதிக் கேலி செய்தார்கள்.

ஆனால் நமது நாட்டு மக்கள், தர்மத்தின் வாழ்வதனை சூது கவ்வும், தர்மம் மீண்டும் வெல்லும், இன்று கட்டுண்டோம் பொறுத்திருப்போம் காலம் வரும். அப்போது எங்கள் காண்டீபம் பதில் சொல்லும் என்று எழுச்சி பெற்று அந்நிய ஆட்சியைத் துரத்தினார்கள்.

நாடு விடுதலைபெற்றபின்னர் ஒவ்வொரு பத்தாண்டிலும் ஒரு அரசியல் மாற்றத்தைக் கண்டிருக்கிறது; நமது பாரத நாடு.

எனவே இன்றைய முதலாளித்துவ சுரண்டல் முறையும் பன்னாட்டு கூட்டு நிறுவனங்களின் கொட்டமும், கறுப்புப் பணத்தின் கடத்தல் பணத்தின் ஊழல்களும் சூதாட்டங்களும் நீண்ட நாள் நீடிக்காது. பிக்பாக்கெட் திருடர்களும், கொள்ளைக் கூட்டத்தலைவர்களும் நாட்டை நீண்ட நாள் ஆளமுடியாது.

இன்றைய தொழிலாளர்களின் வேலை நிறுத்தங்களும் போராட்டங்களும் அதிகரித்து வருகின்றன. கிராமப்புற மக்கள், பழங்குடி மக்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், கலைஞர்கள், பட்டதாரிகள், வழக்கறிஞர்கள். டாக்டர்கள், பேராசிரியர்கள், தொழிலாளர்கள், சிறுதொழில் முனைவோர்கள், தொழில் வினைஞர்கள், இப்படி சமுதாயத்தின் பல பகுதி மக்களும் தங்கள் உரிமைகளை கோரிக்கைகளைக் கேட்டுத் தெருவிற்குவருகிறார்கள். மறியல் நடத்துகிறார்கள். உண்ணாவிரதங்கள் இருக்கிறார்கள். சாலைகளை மறிக்கிறார்கள். சிறைகளை நிரப்புகிறார்கள். ஆட்சியாளர்களின் பொய்யும் ஏமாற்றும் மக்களை ஏமாற்ற முடியவில்லை.

பாரத மக்களின் காலப் பயணம் தொடருகிறது. இந்தியக் கம்யூனிஸ்ட் இயக்கம் முன்னுக்கு வரத் தொடங்கியிருக்கிறது.

இந்தியக் கம்யூனிஸ்ட் இயக்கம் இந்தியாவில் பிறந்து வளர்ந்த அறுபதாண்டுக் காலத்தில் இருபது ஆண்டு காலம் தடை செய்யப்பட்டிருந்தது. அக்கட்சியின் மீது ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்திலும் சரி, நாடு விடுதலை பெற்ற பின்னரும் சரி, கொடிய அடக்குமுறை, சிறைத் தண்டனை, சித்திர வதை, தூக்கு மேடைகள், அத்தனையும் கடந்து இன்று நாட்டில் ஒரு மாற்று சக்தியாய், முதலாளித்துவ சக்திகளுக் குப் பதிலாக பாட்டாளி வர்க்க மாற்று சக்தியாகவளர்ந்து கொண்டிருக்கிறது.

இந்தியநாட்டில் தொழிலாளர்களுக்கு முதல்முதல் சங்கம் அமைத்து, அகில இந்திய தொழிற் சங்க காங்கிரஸ் என்னும் முதலாவது தொழிலாளர் அமைப்பை உருவாக் கியதில் முன்னணியில் நின்றவர்கள் கம்யூனிஸ்டுகள்.

இந்திய நாட்டில் ஆங்கிலேயர் ஆட்சியில் இந்தியர்களுக் கும் ஆங்கிலேயர்களுக்கும் சம உரிமை வேண்டும் என்று காந்தீயத் தலைமையில் இந்திய தேசீய காங்கிரஸ் மகா சபை தீர்மானம் போட்டுக் கொண்டிருந்த போது பரிபூரண சுதந்திரம் வேண்டும் என்னும் தீர்மானத்தை முதல் முதல் கொண்டு வந்தவர்கள் இந்தியக் கம்யூனிஸ்டு கள்.

இந்திய நாட்டில் முதல் முதல் விவசாயிகளுக்கு சங்கம் வைத்துப் போராடியவர்கள், அகில இந்தியகிசான் சபை யை உருவாக்கியவர்கள் இந்தியக் கம்யூனிஸ்டுகள்.

சாதி மத இன மொழி வேறுபாடுகளைத் தாண்டி இந்தியா வின் நகர்ப்புறப் பாட்டாளிகளையும் கிராமப்புறப் பாட்டாளிகளையும் வர்க்க அடிப்படையில் ஒன்று படுத்தியவர்கள் இந்தியக் கம்யூனிஸ்டுகள்.

இந்திய நாடு விடுதலை பெற்ற பின்னர் சோஷலிஸ திசை வழிதான் சிறந்தது என்பதற்கு முன்னோடியாக விஞ்ஞான சோஷலிஸக் கருத்துக்களை முதல் முதல் இந்தியாவில் பரப்பியவர்கள் இந்தியக் கம்யூனிஸ்டுகள்.

இந்திய நாடு விடுதலை பெற்ற பின் இந்தியக் குடியரசின் அரசியல் சட்டப் படி முதல் பொதுத் தேர்தல் நடந்த போது, இந்தியாவிலேயே மிக அதிகமாக ஓட்டு வாங்கி பாராளு மன்றத்திற்கு வெற்றி பெற்றுச் சென்ற முதல் இருவர் கம்யூனிஸ்டுகள். மூன்றாவது இடம் பெற்றவர் அன்றைய பாரதப் பிரதமர் நேரு.

நாடு விடுதலை பெற்ற பின்னர், இந்திய தேசீய காங்கிரஸிற்கு அடுத்தபடி முதல் முதல் ஒரு மாநிலத்தில்

கேரளத்தில் இரண்டாவது பொதுத் தேர்தலின் போதே ஆட்சிப் பொறுப்பிற்கு வந்தவர்கள், இந்தியக் கம்யூனிஸ்டுகள்.

இந்தியாவிலேயே முதல் முதலாவதாக நிலப்பிரபுத்துவம் முற்றிலுமாக ஒழிக்கப்பட்டது. கேரள மாநிலத்தில் கம்யூனிஸ்டுகள் ஆட்சியில்,

இன்று இ.காங்கிரஸ் தமைமைக்குப் பதிலாக அல்லது வேறு ஒரு முதலாளித்துவத் தலைமைக்குப் பதிலாக, ஒரு தொழிலாளி விவசாயி கூட்டணியின் இடது சாரி ஜன நாயக மாற்றணியின் தலைமை என்னும் கருத்தை முன் மொழிந்துள்ளது கம்யூனிஸ்டு இயக்கம்.

கடந்த அறுபது ஆண்டுகளாக கம்யூனிஸ்ட் இயக்கத்தின் மீது சொல்லாத அவதூறு இல்லை. பேசாத வசைச் சொல் இல்லை. கம்யூனிஸ்டுகளை அந்நிய ஏஜண்டுகள் என்றார்கள். ஏகாதிபத்தியத்தின் கைக்கூலிகள் என்றார்கள். கம்யூனிஸ தத்துவம் அந்நிய தத்துவம் என்று கூறினார்கள். சுதந்திரப் போராட்டத்தில் தங்களை அர்ப்பணித்துக் கொண்டிருந்த கம்யூனிஸ்டுகளை, காட்டிக் கொடுத்தவர்கள் என்று வசை பாடினார்கள்.

கட்சியை நடத்துவதற்கு உங்களுக்குப் பணம் ஏது என்று கம்யூனிஸ்டுகளைக் கேட்டார்கள். கம்யூனிஸ்டுகள் சிரிக்கத் தெரியாத முசுடுகள் என்றும் கலைரசனை இல்லாத முண்டங்கள் என்றும், சோறா மானமா என்று கேட்டால் சோறு தான் என்று கூறுபவர்கள் கம்யூனிஸ்டுகள் என்றும் பேசினார்கள். கடைசியாக கம்யூனிஸ்டுகளை அமெரிக்கக் கைக்கூலிகள் டாலர் வாங்கிகள் என்று பேசினார்கள். அப்படிப் பேசியவர்கள் காங்கிரஸ் கட்சிக்குக் கையடக்கமாகப் போய் விட்டார்கள்.

அத்தனை அவதூறுகளையும் அடக்கு முறைகளையும் தாங்கி நின்று கம்யூனிஸ்டு இயக்கம் வீர நடை போட்டுக் கொண்டு வருகிறது.

கம்யூனிஸ்டுகள் இந்தியாவின் எதிர் காலத்தோடு இணைந்தவர்கள். கம்யூனிஸ்டுகள் இல்லாமல் இந்தியாவின் எதிர் காலம் இல்லை.

இந்தியாவின் விவசாயிகள், விவசாயத் தொழிலாளர்கள், இதர கிராமப்புறப் பாட்டாளிகள், கம்யூனிஸ்ட் இயக்கத்தைத் தழுவி நின்று, இந்தியப் பாட்டாளி வர்க்கத்தின் அங்கமாய், உலகப் பாட்டாளி வர்க்கப் பேரியக்கத்தின் ஒரு பகுதியாய், பாரதத் திரு நாட்டை புரட்சிகரமாக மாற்றி

அமைக்க, புதிய சமுதாயத்தை நிர்மாணிக்க முன் வர வேண்டும்.

இந்தியப் பாட்டாளி வர்க்கப் பேரியக்கம், கிராமப்புறப் பாட்டாளிகளை நோக்கி புதிய வேகத்தோடு அடியெடுத்து முன் செல்லட்டும்.

இந்தியப் புரட்சி வெல்லட்டும். இந்தியாவில் புதிய சமுதாய மறுமலர்ச்சி விரிந்து பரவட்டும். இந்திய கிராமங்களும் கிராமப்புறப் பாட்டாளிகளும் புதிய ஒளியில் வெளிச்சம் பெறட்டும். பாரத தேசம் உலகிற்கே ஒரு புதிய வழியைக் காட்டட்டும்.

★

# கி. ராஜநாராயணன் நூல்கள்

| | |
|---|---|
| கோபல்லபுரத்து மக்கள் | 50—00 |
| (1991 ஆம் ஆண்டிற்கான சாகித்ய அக்காதெமி பரிசு பெற்ற நாவல்) | |
| மக்கள் தமிழ் வாழ்க | 12—00 |
| நாட்டுப்புறக் கதைகள் | 20—00 |
| கிடை குறுநாவலும் பன்னிரண்டுசிறுகதைகளும் | 25—00 |
| அப்பாபிள்ளை அம்மாபிள்ளை | 12—00 |
| பிஞ்சுகள் | 11—00 |
| வேட்டி | 16—00 |
| தமிழ்நாட்டு கிராமியக் கதைகள் | 12—00 |
| தாத்தா சொன்ன கதைகள் | 35—00 |
| கதவு | 15—00 |
| கு. அழகிரிசாமி கடிதங்கள் | 15—00 |
| கி. ராஜநாராயணன் கடிதங்கள் | 30—00 |
| கோபல்ல கிராமம் | 25—00 |
| ராஜநாராயணீயம் (விமர்சனக் கட்டுரைகள்) | 12—00 |
| மாந்தருள் ஒரு அன்னப்பறவை | 8—00 |
| கரிசல் கதைகள் | 35—00 |
| நாட்டுப்புறக்கதைகள்—ஒரு பன்முகப் பார்வை | 35—00 |
| கரிசல் காட்டுக் கடுதாசி (இரண்டு பாகமும்) | 35—00 |

கிளை முகவரி;

அன்னம் புத்தகமையம்
9, சௌராஷ்டிராசந்து
மேலமாசி வீதி
மதுரை—1

## 'அன்னம்' புதிய நூல்கள்

| | |
|---|---|
| *புதுக்கவிதையின் தோற்றமும் வளர்ச்சியும்*<br>*—வல்லிக்கண்ணன்* | *55—00* |
| *கடை*<br>*—தேனி சீருடையான்* | *18—00* |
| *பாலையில் ஒரு சுனை*<br>*—இன்குலாப்* | *30—00* |
| *சாசனம்*<br>*—கந்தர்வன்* | *14—00* |
| *நவீனம்*<br>*—சுப்ர பாரதிமணியன்* | *18—00* |
| *காதுகள்*<br>*— எம். வி. வெங்கட்ராம்* | *35—00* |
| *பொம்மைகள் உடைபடும் நகரம்*<br>*— கோணங்கி* | *35—00* |

'கிராமப்புறப் பாட்டாளிகளை நோக்கி...' என்னும் தலைப்பில் எழுதப்பட்டிருக்கும் இப்புத்தகம் தோழர் அ. சீனிவாசனின் மார்க்சிய சிந்தனையில் கனிந்த பழம். முடிவுரை நீங்கலாகப் பத்து அத்தியாயங்களில் இந்திய விவசாயத்தின் வளர்ச்சியையும், இன்றைய நெருக்கடியையும், விவசாயிகளின் அவல நிலையையும் அவர் விரிவாக ஆராய்ந்திருக்கிறார்.

பண்டைத் தமிழகத்தின் நிலவளம், ஆங்கிலேயர் ஆட்சியில் விவசாயத்தின் வீழ்ச்சி, விவசாயிகளின் உரிமைப் போராட்டங்கள், காங்கிரஸ் நிலச் சீர்திருத்தங்கள், பசுமைப் புரட்சியின் விளைவுகள் கிராமப்புறங்களில் வர்க்கக் கட்டமைப்பு மாற்றங்கள் ஆகிய அத்தியாயங்கள் சிந்தனையைத் தூண்டுகின்றன.

விவசாயிகள் இயக்கமும் புதிய கடமைகளும்என்னும் கடைசி அத்தியாயம் விவசாய இயக்கத்தின் ஊழியர்களுக்கு வழி காட்டுகிறது.

இந்த நூல் கல்லூரி மாணவர்களுக்குக் கருத்துச் சுரங்கம்; விவசாய இயக்க ஊழியர்களுக்கு இன்றியமையாத கையேடு.

பேராசிரியர் **நா. தர்மராஜன்**